LC
N50.3
101995

# MADRAS GOVERNMENT ORIENTAL SERIES

Published under the authority
of the
Government of Madras

*General Editor :*
T. CHANDRASEKHARAN, M. A., L. T.,
Curator, Government Oriental Manuscripts Library,
Madras.

No. LXXII

# அநுபவ வைத்திய முறை

Vol. III

செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள்.

செப்பனிட்டு முடித்த நாள்

சரிபார்க்கும்
ஓ.பா.எ.
கையொப்பம்.

ஆராய்ச்சி
உதவியாளர்
கையொப்பம்.



It is hoped that the publication of most of the important manuscripts will be completed within the next four years.

Some of the manuscripts taken up for publication are represented by single copies in the Library and consequently the mistakes that are found in them could not be corrected by comparing them with other copies. The editor has, however, tried his best to suggest correct readings. The wrong readings are given in round brackets and correct readings have been suggested in square brackets. When different readings are found, they have been given in the foot-notes except in the case of a few books in which the correct readings have been given in the footnote or incorporated in the text itself.

The Government of Madras have to be thanked for financing the entire scheme of publication although there is a drive for economy in all the departments. My thanks are due to the members of the Expert Committee who spared no pains in selecting the manuscripts for publication. I have also to thank the various editors, who are experts in their own field, for readily consenting to edit the manuscripts and see them through the press. The various presses that have co-operated in printing the manuscripts in the best manner possible also deserve my thanks for the patience exhibited by them in carrying out the corrections made in the proofs.

The present work is based on a single paper manuscript in the Government Oriental Manuscripts Library, bearing R. No. 1902. The size of the manuscript is $10\frac{1}{4} \times 8\frac{1}{2}$ inches. The work contains 124 pages having 34 lines in a page.

This manuscript explains in prose and poetry the process of preparing various medicinal oils, powders, tablets, etc. for a number of diseases.

This is one of the manuscripts presented to this Library by Sri Palaniswami Kaunder of Puliyampatti, Palani taluk, Madura district, in the year 1949—50.

Reference is to be made to the good work done by Sri V. R. Kalyanasundaram, Pandit of this Library, for going through the press copy and reading through the proof.

Government Oriental Manuscripts Library, Madras. 13—3—1951.

T. CHANDRASEKHARAN,
*General Editor,*
*Madras Govt. Oriental Series.*

---

# ANUBHAVA VAIDDIYA MURAI

CRITICALLY EDITED

BY


**Dr. C. N. KUPPUSWAMI**, H.P.I.M.,
*Professor of Siddha, College of Indian Medicine.*

AND

**Dr. V. S. PARVATHI**, L.I.M.,
*College of Indian Medicine, Madras.*



GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY MADRAS

1951

Price Rs. 5-0-0

Archives Library

Printed at the Rathnam Press, Madras-1

# INTRODUCTION

The Government of Madras took up for consideration the question of publication of the various manuscripts in different languages on subjects like Philosophy, Medicine, Science, etc., early in May 1948. Important Manuscripts Libraries in the Madras Presidency were requested to send a list of unpublished manuscripts with them for favour of being considered by the Government for publication. The Honorary Secretary of the Tanjore Maharaja Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, alone complied with this request. This list as well as a similar list of unpublished manuscripts in the Government Oriental Manuscripts Library, Madras, were carefully examined and a tentative selection of manuscripts suitable for publication was made. The Government in their Memorandum No. 34913/48-10, Education, dated 4-4-1949, constituted an Expert Committee with the Curator of the Government Oriental Manuscripts Library, Madras, as the Secretary, for the final selection of manuscripts suitable for printing and for estimating the cost of publication.

The following are the members of the Committee:—

1. Sri T. M. Narayanaswami Pillai, M.A., B.L.,
2. ,, R. P. Sethu Pillai, B.A., B.L.,
3. ,, C. M. Ramachandra Chettiar, B.A., B.L.,
4. ,, R. Krishnamoorthy, (Kalki).
5. Dr. N. Venkataramanayya, M.A., Ph.D.,
6. Sri M. Ramanuja Rao Naidu, M.A., L.T.,
7. ,, V. Prabhakara Sastri.
8. ,, N. Venkata Rao, M. A.,
9. ,, H. Sesha Ayyangar.
10. ,, Masthi Venkatesa Ayyangar, M.A.,

11. Sri M. Mariappa Bhat, M.A., L.T.,
12. Dr. C. Achyuta Menon, B.A., Ph.D.,
13. ,, C. Kunhan Raja, M.A., D. Phil.,
14. ,, A. Sankaran, M.A., Ph.D., L.T.,
15. Sri P. S. Rama Sastri.
16. ,, S. K. Ramanatha Sastri,
17. Dr. M. Abdul Haq, M.A., D.Phil. (Oxon),
18. Afzul-ul-Ulama Hakim Khader Ahamed,
19. Sri P. D. Joshi,
20. ,, S. Gopalan, B.A., B.L.,
21. ,, T. Chandrasekharan, M.A., L.T.,

With the exception of Sri Masthi Venkatesa Iyengar, and Dr. C. Kunhan Raja, the above members continued to be members of the Expert Committee for 1950-51 also to which the following gentlemen were included in Govt. Memo. No. 7297-E/50—3, Edn., d/-19-5-'50 and Govt. Memo. No. 15875-E/50-4, Edn., d/7-9-'50.

1. Dr. A. Chidambaranatha Chettiar, M.A., Ph.D.,
2. Sri S. Govindarajulu, B.A., B.L., LL.B., Bar-at-law,
3. Capt. G. Srinivasamoorthy, B.A., B.L., M.B., & C.M.
4. Dr. Muhammad Hussain Nainar, M.A., Ph.D.,
5. Sri T. V. Subba Rao, B.A., B L.,
6. Principal, College of Indian Medicine, Madras.

The members of the Committee formed into Sub-Committees for the various languages, Sanskrit, Tamil, Telugu, Kannada, Malayalam, Mahrathi and Islamic Languages. They met during the month of May, 1949, at Madras and Tanjore to examine the manuscripts and make a selection. The recommendations of the Committee were accepted by the Government in G. O. No. Mis. 2745 Education, dated 31-8-1949, and they decided to call these publications the "MADRAS GOVERNMENT ORIENTAL SERIES," and appointed the Curator, Government Oriental Manuscripts Library, Madras, as the General Editor of the publications.



The following manuscripts have been taken up for publication during 1949-50.

"A" FROM THE GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY, MADRAS.

TAMIL

1. Kappal Sāttiram.
2. Anubhava Vaiddya Muṟai
3. Āttāṉakōlāhalam
4. Upadēśa Kāṇḍam
5. Cōlan Pūrva Paṭṭayam
6. Koṅga Dēśa Rājākkaḷ
7. Sivajñāṉa Dīpam

TELUGU

1. Auṣadha Yogamulu
2. Vaidya Nighaṇṭu
3. Dhanurvidyā Vilāsamu
4. Yoga Darśana Viṣayamu
5. Khaḍga Lakṣaṇa Śiromaṇi

SANSKRIT

1. Viṣanārāyaṇīyam—Tantrasārasaṅgraha
2. Bhārgava Nāḍikā
3. Hariharacaturaṅgam
4. Brahmasūtravṛtti—Mitākṣarā
5. Nyāyasiddhānta Tattvāmṛtam

## MALAYALAM

1. Garbha Cikitsā
2. a. Vāstulakṣaṇam
   b. Silpaviṣayam
3. Mahāsāram
4. Kaṇakkusāram
5. Kriyākramam
6. Kaṇakkusāram-Bālaprabōdham.

## KANNADA

1. Lōkōpakāra
2. Raṭṭamata
3. Aśvaśāstram
4. Vividha Vaidya Visayagalu
5. Saṅgītaratnākara
6. Sūpaśāstra.

## ISLAMIC LANGUAGES

1. Jamil-Al-Ashya
2. Tibb-E-Faridi
3. Tahqiq-Al-Buhran
4. Safinat-Al-Najat

---

## "B" FROM THE TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY, TANJORE

## TAMIL

1. Sarabhēndravaidya Muṟai (Diabetics)
2. Do (Eyes)
3. Agastiyar 200
4. Koṅkaṇarśarakku Vaippu
5. Tiruchirrambalakkōvaiyār with Padavurai
6. Kālacakram
7. Tāḷasamudram
8. Bharatanāṭyam
9. a. Pāṇḍikēli Vilāsam Nāṭakam
   b. Purūrava Cakravarti Nāṭakam
   c. Madana Sundara Vilāsa Nāṭakam
   d. Percy Macqueen's Collection in the Madras University Library on Folklore.
10. Rāmaiyaṉ Ammāṉai
11. Tamiḻ Pāṭalkaḷ including Paṭṭiṇattār Veṇbā and Vaṇṇaṅkaḷ

## TELUGU

1. Kāmandakanītisāramu
2. Tāḷadaśāprāṇapradīpikā
3. a. Raghunātha Nāyaka Abhyudayamu
   b. Rājagōpāla Vilāsamu
4. Rāmāyaṇamu by Kaṭṭa Varadarāju

## MAHRATHI

1. Nāṭyaśāstra Saṅgraha
2. a. Book of Knowledge
   b. Folk Songs.
   c. Dārā Darun Vēṇi Paddhati
   d. Aśvāsa Catula Dumaṇi
3. a. Pratāpasimhendra Vijaya Prabandha
   b. Sarabhēndra Thīrthāvaḷi
   c. Lāvaṇi
4. Dēvēndra Kuṟavañji
5. Bhakta Vilāsa
6. Slōka Baddha Rāmāyaṇa

## SANSKRIT

1. Aśvaśāstra with Tricolour Illustrations
2. Rājamṛgāṅka
3. Cikitsāmṛtasāgara

4. Āyurvedamahodadhi
5. Gīta Govinda Abhinaya
6. a. Coḷacampū
   b. Sāhendra Vilāsa
7. Dharmākūtam - Sundara Kāṇḍa
8. Jātakasāra
9. Viṣṇutattvanirṇaya Vyākhyā
10. Saṅgīta Darpaṇa
11. Bījapallava

During 1950, only the Sub—Committees for TAMIL, TELUGU and KANNADA met in the month of July 1950 at Madras.

The following books were taken up for publication in the various languages in 1950–51.

### TAMIL

1. Daṭcanāyaṇār-Vaidya-Aṭṭavaṇai.
2. Vaiddiyak Kalañciyam.
3. Anubhavavaiddiyam. V. 3.

### TELUGU

1. Saivācārasaṅgrahamu.
2. Anubhava Vaidyamu.
3. Abhinayadarpaṇamu.

### SANSKRIT

1. Ārogyacintāmaṇi.
2. Tatvasāra with Ratnasāriṇi.
3. Sutrārthāmṛta Lahari.
4. Ratnadīpikā Ratnaśāstram.

### MALAYALAM

1. Aśvacikitsa.
2. Phalasārasamuccaya.

### KANNADA

1. Vaidya Sāra Saṅgraham.

## PREFACE

As stated by our erudite poet Kavi Subrahmanya Bharati in his well known poem beginning with—

"செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே"

it is quite natural for a true Tamilian to be filled with delight and gratification when he happens to sing or write about the greatness of the Tamil-nad. And the more happy he would feel over an opportunity to unearth a hidden treasure of Tamil literature and bring it to the public notice for the first time.

It is well known that the Tamil-nad is an ancient land and has been famous for her civilization from time immemorial. Siddhas and Rsis enriched the mother land by various literary contributions. It was the Siddhas who did very good service not only to the Tamil land but also to the world at large, by leaving behind a legacy of numerous works on Saiva Philosophy, Grammar and so on. The Siddhas have also invented the science of medicine in order to help the devotees to keep themselves in good health and thus to make themselves fit to work hard for eternal salvation.

Many of those books were destroyed by white ants, fire and water and some were taken away by foreigners. Even among those that have escaped the ravages of time the works which have so far been destined to see the light of the day are only a few.

The doctors who were handling the Siddha—medicines noted down their experiences on palm-leaves and called those books Handbook or கையேடு medical and called those books Handbook or கையேடு medical magazine or வைத்தியக் களஞ்சியம் and medical experiences or அனுபவவைத்திய முறை. Those books

were regarded by them as their treasure and when deposited in public libraries, they are to be considered a national treasure. The Curator of the Government Oriental Manuscripts Library, Madras, and the Honorary Secretary of the Serfoji's Sarasvathi Mahal Library, Tanjore, are fortunately bringing them to the notice of the public by printing them.

The present work Anubhava Vaiddiyam now selected for publication will serve as a good hand book both for the doctor and the layman for curing minor as well as major diseases. This will be more useful to the poor folk who cannot afford to have costly medicines. With the aid of this book they themselves can prepare the medicines in their homes and can treat minor ailments while the majore disorders can be attended to by doctors who are well versed in the seience dealt with in this book.

The doses of drugs which this work prescribes for diseases may not suit the persons of the present generation since the health of the modern man strikes a sorry contrast with that of his predecessors. So the doctors should adminster medicines according to the physique of the patient.

Thanks are due to Sri T. Chandrasekbaran' M.A., L.T, the Curator, Goverment Oriental Manuscripts Library. Madras, who kindly afforded me an opportunity to serve the motherland by way of editing this work. Thanks are also due to the press authorities who co-operated whole-heartedly to bring out this edition as perfectly as possible.

Madras; }
24-2-1951. }

C. N. KUPPUSWAMY
V. S. PARVATHI.

# முன்னுரை

" செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே "

என்று கவிபாரதியார் கூறியது போல, செந்தமிழ் நாட்டின் சிறப்பையோ அல்லது அதன் கலையின் பெருமையையோ கேட்கினும், படிக்கினும், எழுதினும், எத்தகைத் தமிழனுக்கும், ஓர் இன்பமும், ஓர் மனக்கிளர்ச்சியும், தன்னையறியாமலே எழுதல் இயற்கையேயாம். அதனினும் இன்பம், மறைந்து கிடந்த தமிழனின் அருமையான நூல்களை வெளியிடுவதாம்.

தமிழ்நாடோ, எந்நாட்டிற்கும் முற்பட்டது. எல்லாக் கலையிலும் சிறந்ததாகத் தலை நிமிர்ந்தநாடு. இந்நாட்டின் சித்தர்கள் மக்களுக்காகச் செய்த தொண்டுகள் பலவாம். அவற்றுள் கடவுள் வழிபாட்டிற்காகச் செய்த பசு பதி பாச விளக்கமாகிய சைவசித்தாந்தமும், இவ்வழிபாட்டைக் கடைப்பிடித்து முழுநிலையை அடையவேண்டி உயிரை வளர்க்கும் பொருட்டாகச் செய்த மருத்துவமும் சாலச் சிறந்தனவாம்.

இத்தமிழ் நாட்டுச் சித்தர்கள் நூல்கள் பலவற்றுள் சில செல்லுக்கு இரையாயின. சில நெருப்புக்கும் நீருக்கும் இரையாயின. சில நாட்டை விட்டு வெளியேறின. எஞ்சிக்கிடக்கும் சிலவற்றில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளன சிலவே. வெளியிடாதன பல உள.

சித்தர் மருத்துவத்தைக் கையாண்ட மருத்துவர்கள் பலர், அவரவர் ஆண்டு அனுபவித்த பலன்களை, கையேடு எனவும் களஞ்சியமெனவும், அனுபவமுறையெனவும் பெயரிட்டு எழுதி வைத்தனர். இவ்வாறாக அவர்கள் எழுதிவைத்த நூல்கள் பல. அவைகளும் தமிழ்நாட்டின் செல்வங்களே யாகும். இச்செல்வங்களைச் சென்னை இறையாளர் கீழ்த்திசைக்கலை நூல் நிலையத் தலைவர் அவர்களும், தஞ்சை சரபோஜி மன்னனின் சரஸ்வதி மகாலின் தலைவர் அவர்களும் அச்சிட்டு வெளியாக்கி வருகிறார்கள்.

இவர்களால் அச்சிடப்பட்டு வெளியாகி வரும் புத்தகங்களுள் சென்னையில் அச்சிட்ட இந்நூல் "அனுபவ வைத்தியம்" என்னும் பெயர் கொண்டு வெளியிடப்படுகிறது. இந்நூலில் சிறுமுறைகளும் பெருமுறைகளும் அடங்கியுள்ளன. சிறு முறைகள், குடும்பத்தில் உண்டாகும் சிறுநோய்களுக்கு வீட்டிலேயே செய்து வழங்கக் கூடிய அளவில் இருக்கின்றன வாகையால் செலவின்றி அந்நாளில், வீட்டில் பாட்டி செய்யும் மருத்துவம்போல் செய்து கொள்ள முடியும். பெருமுறைகள் மருத்துவர்களுக்குப் பெரிதும் பயன்படும்.

இக்காலத்து மக்களின் உடல்நிலை மிகவும் குன்றியுள்ள தால், இந்நூலில் கூறியுள்ள மருந்துகளின் அளவு பொருந்தா தாகையால், மருத்துவர்கள் அவைகளை வழங்குங்கால், நோயின் வன்மையையும் நோயாளியின் உடல் வன்மையையும் அறிந்து அளவிட்டு மருந்துகளை வழங்கவேண்டும்.

இந்நூலை, நாங்கள் வெளியிடும் வாய்ப்பைத் தந்த, சென்னை அரசினர் கீழ்த்திசைக்கலைநூல்நிலையத் தலைவர் திருவாளர் சந்திரசேகரன் அவர்கட்கும்; அழகாக அச்சிட்டு வெளியாக்கிய அச்சுக்கூடத் தலைவர் அவர்கட்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

சென்னை,
24—2—1951.

**க. நா. குப்புசாமி.**
**வ. ச. பார்வதி.**

## விஷய அட்டவணை

பக்கம்

அகத்தியர் குழம்பு ... 119
அகநஞ்சுப் பொருள்கள் 64
அகுவைக்கு ... 222
அக்கிக்கு ... 231
அக்கினிகுமாரன் ... 206
அக்கினி மந்தத்திற்கு ... 12
அசீரண சுரத்திற்கு 74, 117
அசுவகந்தி கிருதம் ... 100
அசுவகந்தி சூரணம் ... 131
அடி தள்ளினதற்கு ... 126
அண்ட தைலம் ... 114
அண்டவாதத்திற்கு 44, 47, 48, 132, 221
அண்டவாயுவுக்கு 8, 47, 48
அதிக உஷ்ண வாயுவுக்கு 54
அதிசாரக்கடுப்புக்கு 22, 186
அதிசாரத்திற்கு 32, 33, 35, 151, 152
அதிசாரத்துக்குக் குடிநீர் 19
அத்தி சுரத்துக்கு 165, 230
அந்தக சன்னிக்கு ... 136
அந்தர வாயுவுக்கு 48, 161
அமிர்த சஞ்சீவி குளிகை 91
அமுத லேகியம் 126, 133
அரக்குத்தைலம் ... 69
அருவைக்கட்டிக்கு ... 188
அரையாப்புக்கு 1, 4, 43, 46, 169
அரோசகத்திற்கு 8, 169
அறுகு நெய் ... 108
அனலுக்கு ... 164

பக்கம்

அனல் கழிச்சலுக்கு ... 154
அனுமந்த சஞ்சீவி மாத்திரை ... 91
அஷ்டகுன்ம கோடரி ... 50
அஷ்டசந்தன வகை ... 170
அஷ்ட சூரணம் ... 15
ஆசனப் பவுத்திரத்துக்கு 167
ஆசனப் புண்ணிற்கு ... 6
ஆடாதொடைத் தைலம் 114
ஆணிப் புண்களுக்குக் காரம் ... 9
ஆம சூலைக்கு ... 145
ஆறாத புண்ணுக்கு 2, 8, 62
ஆறாத புண் மருந்து முறிவுக்கு ... 8
ஆறாதபுண் வீக்கத்திற்கு 42
ஆனந்த சூரணம் ... 97
ஆனந்தபைரவி ... 207
இசிவு சன்னிக்கு ... 58
இஞ்சிச் சூரணம் ... 130
இஞ்சி ரசாயனம் ... 210
இஞ்சி லேகியம் ... 15
இடிவல்லாதகி லேகியம் 121
இடுப்புப்பிடிக்கு ... 170
இடுப்பு வலிக்கு 170, 197
இடு மருந்து முறிய ... 18
இந்திராணித் தைலம் ... 113
இரசகந்தபாஷாண முறிவுக்கு ... 204
இரசகற்பூரக்கட்டு ... 19
இரச முறிவுக்கு ... 204

பக்கம்

இரணங்களுக்கு 4, 8, 125
இரத்த மூலத்திற்கு ... 150
இரத்தம் வடிகின்ற புண்ணிற்கு ... 4
இரத்தம் விழுதலுக்கு 7, 10, 16, 185
இரத்தக் கடுப்புக்கு 126, 154
இரத்த காசத்திற்கு 75, 230
இரத்தக் கிராணிக்கு ... 33
இரத்தங் கக்கலுக்கு ... 12
இரத்தாதி சாரத்துக்கு 232
இராஜபிளவைக்கு ... 10
இருமலுக்கு 17, 20, 61, 92, 108, 182, 186, 213, 215, 227, 229, 230, 231, 232
இலகு பஞ்சாக்கினி தைலம் ... 111
இலவணாதி சூரணம் ... 131
இழி கண்ணுக்கு ... 179
இளைப்புக்கு ... 92
இறைவனூர் சூரணம் ... 128
ஈசுவரி சூரணம் ... 126
ஈரல் வலிக்கு 64, 124, 171
ஈளைக்கு 108, 186, 230, 231, 232
உச்சிப்பிளவைக்கு ... 10
உடம்பு நோய்க்கு ... 229
உடம்பெரிவுக்கு ... 54
உடம்பெல்லாம் உண்டாகும் திமிரலுக்கு ... 201
உடல் வீக்கத்திற்கு ... 20
உண்டி பிடித்தலுக்கு மாற்று ... 203

பக்கம்

உதர வாயுவுக்கு ... 161
உப்பிசத்திற்கு ... 230
உப்பிச வாயுவுக்கு ... 7
உலோக செந்தூரம் ... 206
உளைமாந்தைக்கு ... 229
உள்கிரந்திக்கு ... 148
உள்மூச்சுக்கு ... 229
உள் மூலத்திற்கு ... 150
உன்மத்தத்திற்கு ... 103
உஷ்ணத்துக்கு ... 164
உஷ்ண வாயுவுக்கு 35, 54, 156
ஊது காமாலைக்கு ... 159
ஊமைக்கு 177, 178
எட்டுவகை சன்னிக்கு ... 200
எமதண்ட தைலம் ... 112
எரி குடலுக்கு ... 145
எரி குன்மத்துக்கு 50, 142, 187
எரிபித்த சன்னிக்கு ... 135
எரிவுக்கு ... 16
எலிக்கடிக்கு 12, 75, 92, 198
எலும்புருக்கி நோய்க்கு 165
ஏந்தலுக்கு (வாத ரோகத்திற்கு) ... 200
ஏலாதி சூரணம் 128, 130, 214
ஏலாதி மாத்திரை 21, 68
ஐயச் சூலைக்கு ... 147
ஐவகை சன்னி நோய்களுக்கு ... 199
ஒருதலை வலிக்கு 79, 174
ஒருவிதை வாதத்துக்கு 48



பக்கம்

ஓரண்ட வாதத்திற்கு ... 221
கடிகளுக்கு மேல்பூச்சு... 39
கடி விஷத்திற்கு ... 177
கடுக்காய்ச் சூரணம் 129, 216
கடுக்காய் லேகியம் ... 99
கடுப்புக்கு ... 232
கட்டிகளுக்கு 4, 4, 155
கட்டிவிப்புருதிக்கு ... 42
கணச்சூட்டுக்கு ... 24
கண்டமாலைக்கு 1, 2, 4, 10, 77
கண்டவிப்புருதிக்கு ... 42
கண்ணுக்கு மை ... 83
கண் நோய்களுக்கு 82, 83, 178, 224
கண் புகைச்சலுக்கு ... 82
கண் பூவுக்கு ... 83
கதலி கிருதம் ... 97
கந்தக சிந்தாமணிச் சூரணம் ... 97
கபாட மாத்திரை ... 151
கபாலசூலைக்கு ... 160
கபால பித்தத்திற்கு ... 174
கரப்பானுக்கு 18, 166
கரப்பான் வீக்கத்திற்கு 125
கருங்கிரந்திக்கு ... 148
கருங்குட்டத்திற்கு ... 152
கருங்கோடிச் சூரணம்... 119
கருத்த அக்கர சுரத்திற்கு ... 73
கருத்த சீத சுரத்திற்கு... 73
கருவங்கச் செந்தூரம் ... 95
கருவங்க பஸ்பம் 21, 95
கலிங்காதி லேகியம் ... 213

பக்கம்

கலைக்கொம்பு பற்பம் ... 14
கல்லடைப்புக்கு 40, 170
கல்லுக்கட்டுக்கு ... 232
கழலைக்கு ... 4
கழல் வாதத்திற்கு ... 139
கழிச்சலுக்கு ... 193
கற்பூராதி சூரணம் ... 131
கற்பூராதி தைலம் ... 121
கற்றாழை நாற்றத்திற்கு 175
கன்னக் கிரந்திக்கு 150, 160
காச இருமலுக்கு ... 75
காசத்துக்கு 76, 92, 161, 162
காதடைப்புக்கு ... 81
காதில்சீழ் விழிதலுக்கு 171
காதில் நீர் வடிதலுக்கு... 81
காது இரைச்சலுக்கு ... 171
காதுக்குக்கீழ் உண்டாகும் வீக்கத்திற்கு ... 64
காது மந்தத்திற்கு ... 171
காது வலிக்கு 80, 122, 126, 171
காமாலைக்கு 67, 125, 127, 196, 212, 213
காய்ச்சலுக்கு 70, 196
கார்போக மெழுகு ... 121
கார்போகவரிசிச்சூரணம் 132
கால் குடைச்சலுக்கு ... 7
கால், கை வெற்றிப்போதலுக்கு ... 165
கால்புற்றுக்கு ... 167
கிரகணிவகைகளுக்குப் பஞ்சகோல கிருதம்... 32
கிரந்திக்கு 4, 6, 43

பக்கம்

கிரந்திப்புண்ணுக்கு 1, 10, 182
கிரந்தி மேக சூலைக்கு ... 43
கிராணிக்கு 126, 128, 186, 232
கிரிப்புழுவிழ ... 25
கீல் வாதத்திற்கு ... 139
குக்கில் கிருதம் ... 96
குக்கில் சுத்தி ... 36
குக்கில் நெய் ... 36
குடல் பிடிப்பு வாதத்திற்கு ... 57
குடல்வாத குன்மம் ... 142
குடல் வாதத்திற்கு ... 46
குட்டங்களுக்கு 4, 24, 62, 217, 219
குண்டுபட்ட காயத்துக்கு ... 3
குதிரை வலிப்புக்கு ... 161
குத்திருமலுக்கு ... 109
குத்துக்காயத்துக்கு ... 3
குலை நோவுக்கு 64, 124
குலைப்புண்ணுக்கு ... 1
குழந்தைகளின் இழுப்புக்கு ... 90
குழந்தைகளின் கணைக்கு 90
குழந்தைகள் கிராணிக்கு 151
குழந்தை வைத்தியம் ... 90
குளவிக்கடிக்கு ... 7
குளிர் குலைப்புக்கு ... 195
குளிருக்கு ... 70
குளிர் சன்னிக்கு ... 136
குளிர் சுரத்துக்கு 7, 69, 71
குளிர் வருவதற்கு ... 23

பக்கம்

குன்ம சூலைக்கு ... 147
குன்மத்துக்கு 7, 49, 50, 51, 131, 188, 189
கூழ்மாண்ட கிருதம் ... 98
கூழ்மாண்ட செந்தூரம் 215
கூஷ்பாண்ட ரசாயனம் 209
கூஷ்மாண்ட சர்க்கரை... 214
கூஷ்மாண்ட லேகியம்... 15
கெண்டைக்கு ... 157
கெற்பக்கிராணிக்கு ... 49
கெற்பசுரோணிதக் கட்டிக்கு ... 145
கெற்பசூலைப்புண்ணிற்கு ... 18
கெற்பமுண்டாக ... 65
கெற்பவிப்புருதிக்கு 3, 129, 175, 188
கெற்பிணிகள் சுரத்திற்கு 122
கைஎரிப்புக்கு மாற்று ... 203
கைகால் குறைந்த குட்டத்திற்கு ... 61
கைகால் நரம்பு இசிவுக்கு ... 58
கைகால் பிடிப்புக்கு ... 44
கைகால் முடக்கு வலைக்கு 4, 45
கை குடைச்சலுக்கு ... 7
கைப்பிளவைக்கு ... 172
கொடிப்பவுத்திரத்திற்கு 31, 167
கொடிப்பிளவைக்கு ... 10
சகல கட்டிகளுக்கும் 18, 175
சகல கழிச்சலுக்கும் 36, 192
சகல கிரந்திக்கும் 148, 159



பக்கம்

சகல குன்மத்திற்கும் ... 186
சகல சன்னிக்கும் 87, 135
சகல சுரத்துக்கும் ... 11
சகல தோஷங்களுக்கும் 13, 134
சகல பருக்களுக்கும் ... 76
சகல பீனிசங்களுக்கும்... 81
சகல மாந்தத்திற்கும் ... 181
சகல மேகங்களுக்கும் ... 42
சகல ரோகத்திற்கும் 213, 216
சகல வயிற்றுக்கடுப்புக்கும் ... 184
சகல வயிற்றுவலிக்கும்... 189
சகல வாதத்திற்கும் 215, 220
சகல வாந்திக்கும் ... 143
சகல விஷத்திற்கும் 94, 124
சஞ்சீவித் தைலம் ... 59
சடைக் கிரந்திக்கு ... 147
சதையடைப்புக்கு ... 170
சத்தி குன்மத்துக்கு 49, 141, 187, 189, 213
சத்தி குன்ம வாயுவுக்கு 55
சத்தி-விக்கலுக்கு ... 168
சந்திரகாந்த் தைலம் ... 111
சந்திர சூரணம் ... 214
சந்தனாதி சூரணம் 51, 107
சந்தனாதித் தைலம் ... 220
சன்னிபாத சுரத்திற்கு ... 74
சரபாக்கினி சூரணம் ... 129
சர்த்தி பண்ண ... 26
சர்வாங்க வாதங்களுக்கு 9
சலக்கழிச்சலுக்கு ... 33
சலமண்டலி கடிக்கு ... 88
சளியீடுக்கு ... 230

பக்கம்

சன்னிக் காதடைப்புக்கு 198
சன்னிக்கு 10, 13, 14, 84, 85, 96, 118, 123, 196, 197, 200, 219
சன்னி சுரத்திற்கு 75, 87
சன்னி தோஷத்திற்கு ... 70
சன்னி நோயில் பல்கிட்டிவிடின் 86, 198
சன்னியில் நினைவில்லாததற்கு ... 200
சன்னியில் வாய்குளறுகிறதற்கு ... 137
சாதம் செரியாமைக்கு ... 50
சாதிலிங்கக்கட்டு ... 19
சாதிலிங்க பற்பம் 20, 95
சாதிலிங்க மாத்திரை ... 26
சித்திரமூல கிருதம் ... 217
சித்திரமூல லேகியம் 101, 105
சித்திராதி சூரணம் ... 128
சிந்தாதி லேகியம் ... 104
சிராய்ப் பீனிசத்திற்கு ... 127
சிலந்தி முதலிய கட்டிகளுக்கு 17, 172
சிலேட்டும சன்னிக்கு ... 195
சிலேட்டுமத்துக்கு ... 230
சிலேத்தும சுரத்திற்கு 73, 118, 195
சிக விடங்களுக்கு ... 77
சிவதை லேகியம் ... 23
சிவதைவேர்ச் சூரணம்... 25
சிறு காஞ்சொரி லேகியம் 80
சிறு சிரங்குகளுக்கு ... 176
சிறுநாக்குக் கரைவதற்கு 227
சீதக்கடுப்புக்கு 126, 153

பக்கம்

சீதக் கழிச்சலுக்கு ... 32
சீத சன்னிக்கு ... 135
சீத சுரத்திற்கு ... 116
சீதத்துக்கு ... 81
சீதம் விழுதலுக்கு 125, 185
சீத மேகத்திற்கு ... 144
சீத வாத சுரத்திற்கு ... 118
சீதள இருமலுக்கு ... 149
சீதள ஈளைக்கு ... 149
சீந்தில் சர்க்கரைச் சூரணம் ... 102
சீயடைப்புக்கு ... 170
சீழ் மூலத்திற்கு ... 150
சீழ் விழுகின்ற புண்ணிற்கு ... 4
சீழ் விழுதலுக்கு ... 7
சுக சன்னிக்கு 12, 124, 137, 199
சுகபேதி எண்ணெய் ... 18
சுக்கிரப்படுவானுக்கு ... 178
சுடரெண்ணெய் ... 125
சுணங்காத விப்புருதிக்கு 42
சுரத்தில் காணும் வீக்கத்திற்கு ... 197
சுர வெதுப்பிற்கு ... 71
சுரத்திற்காணும் நீர் வேட்கைக்கு ... 134
சுரத்திற்கு 70, 72, 124, 125, 196
சுரத்தின்மேல் வயிற்றுக் கடுப்புக்கு ... 184
சுரத்தில்மேற்காணும் இருமலுக்கு ... 69
சுரத்தின் வரலாறு ... 194

பக்கம்

சுவாச காசத்திற்கு 75, 127
சுவாசத்துக்கு ... 230
சுழி கண்ணுக்கு .... 178
சுழிக்கணையின் குறி ... 91
சுழிக்கணையின் குணம்... 91
சுருளித் தைலம் ... 113
சூசிக வாயுவுக்கு ... 51
சூட்டுக்கடுப்புக்கு ... 164
சூதக வலிக்கு ... 184
சூதக வாயுவுக்கு 34, 37, 177
சூலைக்கட்டுக்கு 23, 183
சூலைக்கு 4, 9, 43, 50, 145
சூலை நோய்க்கு ... 5
சூலைப் புண்ணிற்கு ... 5
செங்கத்தாரி எண்ணெய் 113
செத்த பிள்ளை விழ ... 170
சேதுபந்தன குளிகை ... 15
சேத்துமக் கழிச்சலுக்கு 154
சேத்தும குன்மத்திற்கு 140
சேத்தும வாந்திக்கு ... 143
சொரிக்கு 175, 176
சோகை வீக்கத்துக்கு 7, 67, 127, 159
தடிப்புக்கு ... 176
தம்பனத்துக்கு ... 11
தன்வந்திரி எண்ணெய் 181
தலை கனத்திற்கு ... 72
தலை வலிக்கு 57, 230
தலைவலி வாயுவுக்கு ... 80
தாக சுரத்திற்கு ... 71
தாகத்திற்கு ... 87
தாந்திரிக சன்னிக்கு ... 136





பக்கம்

தாபாக்கினி சூரணம் ... 129
தாமிர செந்தூரம் ... 207
தாமிர பற்பம் ... 20
தாமிரபூபதி மாத்திரை 207
தாளிசப்பத்திரி குளிகை 107
தாளிசப்பத்திரிச் சூரணம் 104, 214
தாளிசப்பத்திரி வடகம் 106
திப்பிலிக் களிம்பு ... 184
திமிர் வாதத்துக்கு 44, 45, 138
திரிமேக சன்னிக்கு ... 137
திருகு சன்னிக்கு ... 199
திருமேனிப்புழுவுக்கு ... 27
துடை வாதத்திற்கு ... 139
துடைவாழை ... 10
துர்நீர்களுக்கு ... 14
துர்மாமிசக்கட்டுக்கு ... 232
தேகக்குடைச்சலுக்கு ... 7
தேமலுக்கு ... 176
தேள் கடிக்கு 17, 230
தொந்த சுரத்திற்கு 74, 117
தோஷ சுரத்திற்கு ... 117
நகப்பிளவைக்கு ... 172
நசுவணிப் புண்ணுக்கு... 177
நடுக்கு சுரத்திற்கு ... 72
நஞ்சு முறிய ... 8
நஞ்சு விழ ... 16
நரம்புப்பிடிப்புக்கு ... 58
நரிக்கடிக்கு ... 94
நரைநோவுக்கு ... 231
நல்லபாம்பு கடிக்கு ... 77
நவபஞ்ச பாஷாண மிருதம் ... 133

பக்கம்

நாட்பட்ட சுரத்திற்கு ... 70
நாய்க்கடிக்கு 7, 88, 94
நாரிகேள தைலம் ... 112
நாவல் நெய் ... 102
நாவுலர்ந்து போனதற்கு 17, 201
நான்காமுறைக் காய்ச்சலுக்கு 10, 66, 201, 226
நினைவு அறிவில்லாமைக்கு மாற்று ... 203
நீரடைப்பிற்கு 13, 23, 40, 98, 157, 170, 223
நீரிழிவுக்கு 11, 16, 24, 37, 164, 191, 194
நீர்க்கடுப்புக்கு 16, 41, 162, 163, 165
நீர்க்கட்டுக்கு ... 232
நீர்க்கிருச்சிர வகைக்கு... 38
நீர்ச்சுருக்குக்கு 16, 164
நீர் பீனிசத்துக்கு ... 82
நீலகண்ட மாத்திரை ... 208
நெஞ்சுக்கட்டுக்கு ... 229
நெஞ்சு நோவுக்கு ... 230
நெஞ்சுப்பிளவைக்கு ... 61
நெல்லிக்காயெண்ணெய் 112
நேத்திர வாயுவுக்கு ... 79
நேர்வாள மாத்திரை ... 26
நோய்களுக்குத் தகுந்த உணவுப் பொருள்கள் 190
பக்கப்பிளவைக்கு ... 172
பசியில்லாமைக்கு ... 217
பஞ்சலவண சூரணம் ... 132
பஞ்சாக்கினி தைலம் ... 58

பக்கம்

படர்தாமரைக்கு ... 166
படுவனுக்கு ... 172
பயித்தியத்திற்கு 51, 103
பயோதர தைலம் ... 115
பரங்கிப்பட்டை சூர்ணம் 98, 213
பல் குடைச்சல் வாயுவுக்கு 79
பல் நோய்களுக்கு ... 77
பல் புழுவிழ ... 79
பல்லரணைக்கு ... 79
பல்லீறு கரைதலுக்கு ... 7
பல் வலிக்கு 7, 10, 77, 176
பவுத்திரப் புண்ணுக்கு 6
பவுத்திரத்திற்கு 3, 9, 31, 168, 215
பழுத்த அரையாப்புக்கு 169
பாண்டு குன்மத்திற்கு ... 142
பாண்டுவுக்கு 34, 125, 232
பாததாமரைக்கு ... 166
பாம்பு கடிக்கு ... 93
பாம்பு கடியாமலிருக்க... 93
பாயச கிருதம் ... 139
பாரிச வாதத்திற்கு .... 138
பாரிச வாயுவுக்கு 7, 157
பாஷாணங்களுக்கு முறிவு ... 172
பித்தக் கழிச்சலுக்கு ... 154
பித்தக் கிராணிக்கு ... 150
பித்த குன்மத்திற்கு 140, 141
பித்த சன்னிக்கு 134, 135
பித்த சுரத்திற்கு 70, 73, 116, 118, 195
பித்த சூலைக்கு ... 145
பித்த சேத்தும சன்னிக்கு 136

பக்கம்

பித்தத்துக்கு 11, 17, 19, 52, 53, 131
பித்த பயித்தியத்திற்கு... 52
பித்த பாண்டுக்கு 54, 67, 157
பித்தப்படைக்கு ... 166
பித்த மேகத்திற்கு ... 144
பித்தவாத சன்னிக்கு ... 136
பித்தவாத சேத்தும சன்னிக்கு ... 135
பித்த வாந்திக்கு ... 143
பித்த வாயுவுக்கு ... 155
பிப்பிலாதி சூரணம் ... 132
பிரசவத்திற்கு ... 14
பிரமானந்த வயிரவ மாத்திரை ... 76
பிராரியத்திற்கு 23, 41, 162
பிரமைக்கு ... 102
பிரலாப சன்னிக்கு ... 137
பிரவீச்சுக்கு ... 173
பிரவீச்சு வலிப்புக்கு ... 173
பிளவைக்கு ... 2
பிளேக்குக்கு ... 127
பிள்ளை எளிதில் பெற ... 77
பிள்ளைகளுக்குண்டாகும் மாந்தத்திற்கு ... 180
பிள்ளை குறுக்கே விழுந்திறந்தால் ... 24
பிள்ளை தரிக்க 16, 171
பிள்ளைபெறமாட்டாதார்க்கு ... 66
பிள்ளைபெற்ற சன்னிக்கு 86
பிள்ளை பெற்றவள் காயலுக்கு ... 66





பக்கம்

பிள்ளை பெற்றவள் மண்டைக்குத்தலுக்கு ... 87
பிள்ளைபெற்று மறுபடியும் பிள்ளை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு ... 178
பிள்ளைபெற்று வயிற்றில் சீழ் பிடிப்பதற்கு ... 167
பிள்ளை வயிற்றில் மரித்தால் ... 65
பிள்ளை விழ ... 66
பிறந்த பிள்ளைகள் தக்காமல் போய்விடச் செய்யும் நோய்க்கு ... 65
பீலிகைக்கு ... 165
பீனிசத்திற்கு 82, 123, 160, 162, 176, 202, 203
புண்களுக்கு 1, 42, 62
புண்ணில் சதைகரைய... 3
புண்ணில் சீழ்கரைய ... 3
புழுவெட்டு முதலியவற்றால் மயிர் உதிர்ந்ததற்கு ... 17
புளியிலைக் குழம்பு ... 105
புறகிரந்திக்கு ... 148
புறநஞ்சுப் பொருள்கள் 63
புஷ்கராதி சூரணம் ... 129
பூசணி ரசாயனம் 210, 211
பெரிய வண்டு கடிக்கு... 63
பெருஞ்சிரங்குகளுக்கு ... 176
பெரு மூத்திரத்திற்கு ... 157
பெரும் பாட்டிற்கு 40, 61
பெருவயிற்றுக்கு ... 222

பக்கம்

பெரு வியாதிக்கு 60, 170
பெருவியாதியின் குணம் 169
பேதி (சிந்தாமணிக்கட்டு) 22
பேதிக்கு 27, 106, 127
பேய்க்கடிக்கு ... 94
பேய்க்கு ... 123
பைத்திய சன்னிக்கு ... 137
பொருவயிறுக்கு ... 157
போசன குளிகை ... 56
போசன சஞ்சீவி ... 56
மகா ரசாயனம் ... 209
மகாவாதி கிருதம் ... 100
மகாவிஷமுஷ்டித் தைலம் 110
மகுடாதி சூரணம் ... 130
மகோதரத்திற்கு 60, 122, 140
மசக்கைக்கு ... 172
மடிவாதத்துக்கு ... 222
மண்டை இடிக்கு .... 174
மண்டை கிறுகிறுப்புக்கு 174
மண்டை நோய்க்கு 84, 202
மண்டை பீனிசத்திற்கு 202
மதி மயக்கத்திற்கு 102, 178
மது மேகத்திற்கு ... 38
மந்தத்திற்கு ... 32
மந்தாரகாசத்துக்கு 198, 229
மந்தார வாயுவுக்கு ... 155
மயக்கத்திற்கு 53, 176
மயிர் வளர ... 716
மருந்தீட்டுக்கு 13, 172
மலச்சல அடைப்புக்கு 40, 223
மலட்டுப்பூச்சிக்கு ... 65
மலச்சலக் கட்டுக்கு 12, 21, 124

பக்கம்

மாடு குதிரைகளுக்கு வஞ்சிப்புண்களுக்கு... 10
மாதுளைச் சூரணம் ... 130
மாந்தத்திற்கு ... 89
மார்பில் ஆணிக்கு 61, 172
மாலைக் கண்ணுக்கு ... 83
முக சன்னிக்கு 79, 137
முக மங்குக்கு ... 80
முக வாதத்திற்கு ... 87
முடக்குச் சூலைக்கு ... 146
முதியார்கூந்தல் தைலம் 218
முயல் நெய் ... 108
முயல் வலிப்புக்கு 161, 173
முலைக் குத்துப் பிளவைக்கு ... 61
முலைப்பவுத்திரத்திற்கு 174
முழங்கால் கடுப்புக்கு ... 44
முழங்கால் வாதத்துக்கு 44, 221
முளைக்கு ... 3
மூக்கடைப்பிற்கு ... 176
மூக்கில் இரத்தம் விழுதற்கு 9, 175, 231
மூக்குமாதேவிக்கு ... 160
மூத்திர கிருச்சிரத்திற்கு 192
மூத்திரக் கட்டுக்கு ... 124
மூலக் கடுப்புக்கு 10, 125, 154
மூலக்கரப்பானுக்கு ... 166
மூலக்கிராணிக்கு 19, 151
மூலத்துக்கு 18, 27, 29, 31, 149 150
மூலபேதிக்கு ... 217
மூல முளைக்கு 29, 31.

பக்கம்

மேக எண்ணெய் ... 42
மேகக்கரப்பானுக்கு ... 167
மேகக் கிரந்திக்கு ... 147
மேகங்களுக்கு 38, 143, 192
மேக சன்னிக்கு 198, 199
மேக நீரிழிவுக்கு ... 38
மேகநீர்க் குட்டத்திற்கு 61
மேகவெட்டைக்கு 38, 41
மேகவெள்ளைக்கு ... 39
மேலேப்பத்திற்கு ... 168
மேல்நோக்கிய வியாதிக்கு ... 220
மேல்நோக்கும் வாயுவுக்கு ... 157
மேற்சுவாசத்திற்கு ... 72
யோனிப்புற்றுக்கு ... 167
யோனியில் நீரொழுகலுக்கு ... 38
ரசசெந்தூரம் ... 205
ரசமுறிவுக்கு மாற்று ... 203
ரணங்களுக்கு ... 191
ரத்தக்கிராணிக்கு ... 186
ரத்த பீனிசத்திற்கு ... 203
ரத்தம் விழுதலுக்கு ... 125
லவங்காதி ரசாயனம் ... 21
லிங்கப்புற்றுக்கு ... 167
வங்காரசஞ்சீவி ... 206
வங்குக்கு ... 176
வண்டு கடிக்கு 62, 75
வயிறு கழிதலுக்கு ... 36
வயிற்றுக்கடுப்புக்கு 7, 126, 152, 185, 186, 197



பக்கம்

வயிற்றுக் கடுப்புக் காய்ச்சலுக்கு ... 153
வயிற்றுக்கட்டிக்கு 60, 188
வயிற்றுக்கழிச்சலுக்கு... 49
வயிற்று நோய்களுக்கு... 39
வயிற்றுப் பொருமலுக்கு 183
வயிற்று வலிக்கு 10, 12, 17, 60, 188, 223
வரண் மூலத்திற்கு ... 150
வலி குன்மத்துக்கு 49, 141, 189
வலிப்புகளுக்கு ... 173
வலியுடன் வயிறு கழிதற்கு ... 35
வறட்சி இருமலுக்கு ... 109
வாத குன்மத்திற்கு ... 140
வாதக் கழிச்சலுக்கு ... 154
வாதக்கரப்பானுக்கு ... 166
வாத சயத்திற்கு ... 75
வாத சன்னிக்கு 134, 895, 199, 208
வாத சிலேட்டும சுரத்திற்கு ... 74
வாத சுரத்திற்கு 7, 73, 115, 118, 194
வாத சூலைக்கு 37, 146
வாத சேத்தும சன்னிக்கு 135
வாதத்துக்கு 11, 41, 57, 138, 182
வாத நீருக்கு ... 76
வாதநோய்க்கு 19, 113
வாத பாண்டுவுக்கு ... 158
வாத பித்த சுரத்திற்கு 74, 117

பக்கம்

வாத பித்த சேத்தும சன்னிக்கு ... 135
வாத மேக சூலைக்கு ... 146
வாத வலிக்கு ... 53
வாத வாந்திக்கு ... 142
வாத வெட்டைக்கு ... 165
வாந்திக்கு 53, 66, 106, 127, 189, 190
வாயால் எடுத்தலுக்கு... 50
வாயால் ரத்தம் விழுகிறதற்கு 175, 231, 232
வாயிதழ் கோணுதலுக்கு 57
வாயுக் கழிச்சலுக்கு ... 34
வாயு சூலைக்கு ... 55
வாயுப் பிடிப்புக்கு ... 156
வாயுவுக்கு 11, 17, 20, 55, 56, 57, 155, 182, 183, 197, 215
வாயுத்திரட்சிக்கு ... 155
வாய்ச்சூலைக் கட்டுக்கு ... 204
வாய்ச் சூலைக்கு ... 147
வாய்ச்சூலைப் புண்ணிற்கு 18
வாய்திறவாத சன்னிக்கு 87
வாய்ப் புண்ணிற்கு ... 57
விகார சன்னிக்கு ... 136
விக்கலுக்கு 9, 18, 66, 131, 190, 195, 231
விடத்திற்கு 12, 88, 92, 123
விடாச்சுரத்திற்கு ... 72
விப்புருதிகளுக்கு 10, 41
விரியன் பாம்பு கடிக்கு 76, 93
விரேசனங்களுக்கு 9, 223
வில்வாதி லேகியம் 120, 212

| | பக்கம் |
|---|---|
| விழுந்த நா புறள | ... 9 |
| விஷ சுரத்திற்கு | ... 117 |
| விஷ பாகத்திற்கு | ... 232 |
| விஷ பாண்டுக்கு | 127, 159 |
| விஷ பேதிக்கு | ... 34 |
| விஷ முஷ்டித் தைலம் | 59, 109 |
| வீக்கத்துக்கு | 59, 64, 127 |
| வீச்சுகளுக்கு | ... 161 |
| வீரிய விருத்திக்கு | ... 11 |
| வெடி சூலைக்கு | ... 10 |
| வெட்டுக்காயத்துக்கு | 3, 62 |
| வெட்டைக்கு | 16, 23, 39, 53, 164 |
| வெண் குட்டத்துக்கு | 24, 43, 152 |
| வெப்புப்பாவைக்கு | ... 183 |
| வெள்வங்க பற்பம் | ... 95 |
| வெள்ளி பற்பம் | ... 94 |
| வெள்ளைக்காசத்துக்கு | ... 231 |
| வெள்ளைக்கு | 16, 23, 162, 163 |
| வெள்ளைப்பாஷாண பற்பம் | ... 68 |
| வெள்ளை விழுதலுக்கு | 7, 107 |
| வெள்ளெழுத்துக்கு | 84, 150 |
| க்ஷயத்துக்கு | 22, 148, 161, 162, 211 |


உ

ஸ்ரீராமஜெயம்.

# அனுபவ வைத்திய முறைகள்

## கண்டமாலைகளுக்கு

புங்கம்வேர், ஆயில்பட்டை, தாதுவளைவேர், கழற்சிவேர், வெள்ளறுகு, நிலஆவரைவேர், சங்கங்குப்பிவேர், அவுரிவேர், வகைக்கு பலம் ஒன்று, சுக்கு, மிளகு, அப்பக்கோவைக்கிழங்கு வெள்வெங்காயம், கருங்குங்கிலியம், வாய்விளங்கம், கடுகு, வெந்தயம், திப்பிலிமூலம், கண்டுபரங்கி, வகைக்கு பலம் ஒன்று, சிற்றரத்தை பலம் ஐந்து, திப்பிலி பலம் எட்டு, இவைகளை இடித்து, மூன்று படி நல்லெண்ணெயிலிட்டு காய்ச்சி கடுகு பதத்தில் வடித்து இரண்டு விராகனிடை காலை மாலை கொள்ளவும். பத்தியம் காக்கவும்.

## அரையாப்பு, கண்டமாலை, கட்டிகள், புண்ணுகளுக்கு

கொடிவேலி, சிறுகளா, சங்கு, ஆடுதின்னாப்பாளை, இவற்றின் வேர், வகைக்கு பலம் ஒன்று, இவற்றின் சாற்றிலரைத்து ஒன்பது உருண்டை செய்து, ஒரு உருண்டை இரு வேளையாக குழியில் புளியந்தணலுண்டாக்கி நாலரை நாள் புகை போடவும். பத்தியம் :—மோருஞ்சோறும், வெங்காயமும் சாப்பிடவும். இருபத்தைந்து நாள் பத்தியம்.

## சூலைப்புண்ணுக்கு

இரசம் பலம் மூன்று, காரீயம், வெள்ளைப்பாஷாணம், சாதிலிங்கம், துத்தம், துருசு, கௌரிபாஷணம், வகைக்கு பலம் ஒன்று, நாபி பலம் இரண்டு, இவைகளைப் பொடித்து, தீபத்தின் மேல் வைத்துச் சூடாக்கிய ஓட்டில் சிறிது பொடியை போட்டுக் கட்டவும். இப்படி மூன்றுநாள் கட்ட வீக்கம் கரையும். கைகண்டது.

## கிரந்தி புண்ணுக்கு

வெள்ளைக்குங்கிலியம், கார்போக அரிசி, மனிதன் எலும்பு, வகைக்கு விராகன் இரண்டு, வெங்கக்கல்பொடி விராகன் நான்கு,

கந்தகம் விராகன் ஒன்று, ஆகப்பொடித்து, வெங்கலவட்டி லிட்டு சிறிது நல்லெண்ணெய் கூட்டி செம்புக்குவளையால் அரைத்து களிம்பு செய்து போடவும்.

## ஆராத புண்ணுக்கு

இரசம், காரீயம், மிளகு, கடுகு, கருங்குங்கிலியம், எருக்கு கரி, வகைக்கு பலம் மூன்று, துத்தம், வெள்ளைபாஷாணம், கந்தகம், வகைக்கு பலம் ஒன்று, இவைகளை பொடித்துப் புண்களுக்குப் புகைபோடவும்.

## மேற்படி புண்ணுக்கு

பருத்தியிலை, வேப்பம்பட்டை, ஆலம்பட்டை, தவசி முருங்கைவேர், நாயுருவிவேர், கிளுவைவேர், கருஞ்சீரகம், ஓமம், சுக்கு, திப்பிலி, வெள்ளைவெங்காயம், சிறுகீரைவேர் ஓர் அளவுகூட்டி இடித்து நல்லெண்ணெயிலிட்டு காய்ச்சி புரையோடு புண்களுக்கு சீலையில் நனைத்து வைக்கவும். வாய் விரிந்த புண்ணுக்கு எண்ணெயை பஞ்சில் துவைத்துப் போடவும். உள்வினையற, விழும்பிச்சாறும், சிறுநீரும் சேர்த்துச் சாப்பிடவும். விழும்பியிலையையும் சாமையரிசியையும், களிகிண்டி சாப்பிடவும். புளிம்பிரண்டை, சமூலமிடித்து களிகிண்டி நல்லெண்ணெய் வெல்லம் சேர்த்து உண்ணவும். கருஞ்சூரைப் பட்டையை இடித்து வீக்கத்திற்கு வைத்துக் கட்டவும்.

## பிளவைக்கு

ஊமச்சியைக் கொண்டு வந்து அதன் சதையை எடுத்து விளக்கெண்ணெய் சேர்த்து அரைத்துக் கட்டவும். பின்பு சிறுகாஞ்சொறிக்கொழுந்து, மகிழங்கொழுந்து, கல்லுப்பு இவை சேர்த்து அரைத்துப் புண்ணிற்கு காலை மாலை கட்டவும்.

## கண்டமாலைக்கு

அரிதாரத்தை நீலநிறமாகச் சுட்டு நீரிலரைத்து சீலையி லூட்டி திரியேற்றப் புண்ணும், சீழும் மாறும். கழலைகரையாமல் புண்ணாகாமல் கட்டியாயிருந்தால அந்த கழலையை அறுத்து திரிபோடவும். மூன்று அல்லது நான்கு நாள் சென்றபிறகு செம்புண்ணானல் வெள்ளைக்குங்கிலியம், படிகாரம், மயில் துத்தம், பொன்மெழுகு, வகைக்கு விராகன் ஒன்று, பொடித்து



சிறிது நல்லெண்ணெயிட்டுக் காய்ச்சி தண்ணீரில் விட்டு எடுத்து வெண்கலவட்டிலில் போட்டு செம்புக்குவளையால் அரைத்துக் களிம்பு செய்து துணியில் தடவிப் புண்ணுக்குப் போடவும். மறுநாள் புளியந்தழையையவித்த தண்ணீரில் கழுவவும்.

## கெற்பவிப்புருதிக்கு

கோவைக்கிழங்கைத்துருவித்து ஓர் பிடி, குருவைஅரிசி அவ்வளவு சேர்த்து இடித்து வெள்ளாட்டுப்பால் விட்டுக் களிகிண்டி மூன்று நாள் கொள்ளவும். பீர்க்கம் விதை இருபது, நீரில் அரைத்துக் குடிக்கவும்.

## பவுத்திரத்திற்கு

பெருங்காயம் விராகன் எட்டு, கோரோசனை, இந்துப்பு, சாதிக்காய், கிராம்பு, வகைக்கு பலம் நான்கு, கொடிவேலிவேர் பட்டை விராகன் பதினாறு, செங்கத்தாரிபட்டை விராகன் பதினாறு, இவற்றை அரைத்து எண்ணெயிலிட்டு பதமாய்க் காய்ச்சி சிறங்கையளவு கொள்ள, இருபது நாழிகையில் ஆணி கழன்று விழும். ஆவாரங்கொழுந்தைப் புண்ணின்மேல் வைத்துக்கட்டி வரவும். நான்கு வகை பௌத்திரமும் தீரும்.

## புண்ணில் சீழ் சதைகரைய

நாயுருவிச்சாம்பலும், சுண்ணாம்பும், சேர்த்து அரைத்து புண்ணில் தடவவும். எரிந்தால் தண்ணீர் விடவும். மூன்று நாள் போட வேண்டும்.

## வெட்டு, குத்து, குண்டுபட்ட காயத்துக்கு

கழற்சிக்கொழுந்தை நல்லெண்ணெய் விட்டு அரைத்து வெதுப்பிக் கட்டவும். வலி, நோய் நீங்கும். கைகண்டது.

## கெற்பவிப்புருதிக்கு

அப்பக்கோவைக்கிழங்கு, கொல்லன்கோவைக்கிழங்கு, குருவையரிசி ஓர் அளவாகக் கொண்டு சேர்த்து இடித்து களிகிண்டித் தின்னவும்.

## முளைக்கு

பருத்திப்பஞ்சுவை வேலிபருத்திப்பாலால் அரைத்து பஞ்சில் துவட்டிப் புண்ணிற்போட, முளை கரையும். புழு விழும். கைகண்டது.

## இரணங்களுக்கு

பாவட்டஇலை அல்லது விழிம்பியிலையை விளக்கெண்ணெய் தடவி, வாட்டி புண்ணின்மேல்போட்டுக் கட்டவும். புரையடங்கும். வீக்கம் வற்றும்.

## கழலைக்கு

பூவரசங்கொழுந்தை அரைத்துக் கட்டவும். அழுந்தும் அல்லது உடையும்.

## சீழ் விழுகின்ற புண்ணிற்கு

பெரும்பியிலையை விளக்கெண்ணெயில் வதக்கிக் கட்டவும்.

## இரத்தம் வடிகின்ற புண்ணிற்கு

பொடுதலையிலையை விளக்கெண்ணெயில் வதக்கிக் கட்டவும்.

## அரையாப்பு, கண்டமாலை, கட்டிகளுக்கு

தாதுவளைவேர், அப்பக்கோவைக்கிழங்கு, நஞ்சுண்டான்வேர், நீர்முள்ளிவேர், அமுக்கிரான்வேர், காரிண்டின்வேர், சுக்கு, மிளகு, வாய்விளங்கம், கடுகு, அரத்தை, ஓமம், வெந்தயம், வகைக்கு பலம் ஒன்று, திப்பிலிமூலம் பலம் இரண்டு, பரங்கிப்பட்டை பலம் இரண்டு, இவைகளை இடித்து மூன்று படி நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி கடுகுபதத்தில் வடித்து ஒரு விராகனிடை வீதம் உள்ளுக்குக் கொடுத்து, புண்ணின் மேலும் பூசவும்.

## கிரந்தி, சூலை, கைகால் முடக்குக்கு

சுத்தித்த குக்கில், சுத்தித்த பரங்கிப்பட்டை, வகைக்கு பலம் ஆறு, சுத்தித்த கந்தகம் பலம் ஒன்று, சூரணித்துக் கொள்ளவும். இதனில் ஒரு சிட்டிக்கை அளவு காலை மாலை சாப்பிடவும்.

## குட்டங்களுக்கு

கடுகு, திரிபலை, சாரணைவேர், ஊமலாத்திப்பட்டை, அமுக்கராங்கிழங்கு, பிறப்பங்கிழங்கு, நறுக்குமூலம், தாதுவளைவேர், சிறுதேக்கு, ஓமம், வாய்விளங்கம், செவியம், சீரகம், இலவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, பூலாங்கிழங்கு, ஆனைதிப்பிலி, சங்கம்



பட்டை வகைக்குப் பலம் ஒன்று. இவைகளை ஆற்று வெள்ளத் தண்ணீரிலிட்டு ஐந்து நாள் ஊரவைத்து பிழிந்த கிஷாயத்தில் வெள்ளெருக்கின்சாறு, கரிப்பான்சாறு, ஆயில்சாறு, மேற்படி பட்டைச்சாறு சேர்த்து அதில், பரங்கிப்பட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, கருஞ்சீரகம், ஓமம், பெருங்காயம், வகைக்கு விராகன் மூன்று, இவற்றை இளவறுப்பாக வறுத்து சூரணித்து, கலக்கி; தோலா தலைமயிர், குடல், நீக்கிய கோழிக்குள் வைத்துக்கட்டி யந்திரங்கட்டி தொங்கவிட்டு மூடி, தீபாக்கினியாக முப்பது நாழிகை எரித்து இரண்டு படி கிஷாயமிருக்கையில் இறக்கி, கோழியை எடுத்து எலும்பு நீக்கி, உலர்த்திச் சூரணித்து, வெருகடியளவு தேனில் இருபத்தைந்து நாள் கொள்ள, குஷ்டம், சூலைநோய் தீரும்.

## சூலை நோய்க்கு

பரங்கிப்பட்டை சூர்ணம், கோதுமைமா சரியிடை, தண்ணீர் விட்டுப் பிசைந்து, அதனை, ஒரு சட்டியில் சதுரக்கள்ளியை பொடியாக நறுக்கி இரண்டு படி தண்ணீரில் போட்டு அச்சட்டிக்கு வேடுகட்டி அதன்மேல் மேற்படி மாவை வைத்து பிட்டு வேகவைப்பது போல் அவித்து, எடுத்துச் சாப்பிடவும். இவ்வாறு நான்குநாள் கொள்ளவும். கைப்பு, புளி, கடுகு, பூசணிக்காய் ஆகா.

## சூலைப் புண்ணிற்கு

கந்தகம், விராகனிடை ஐந்து, வெள்ளை குங்கிலியம் விராகனிடை பத்து, பொடித்து பத்து குன்றியிடை வெள்ளீயத்தை உருக்கி அதில் இரசம் மூன்று விராகன் விட்டுக்கிண்டி, எடுத்து பொடித்து, மேற்கூறிய இரண்டையும் சேர்த்து அரைத்து, ஆறு பங்கு செய்து மூன்றுநாள் ஆறு வேளை புகை போடவும். பத்தியம் கொள்ளவும். நான்கு நாளைக்கு ஒரு தரம் தலை முழுகுதல் வேண்டும். இரண்டு மணி நேரம் தண்ணீரில் குளித்தல் நன்று.

**வேறு**:—காரீயம், இரசம் விராகன் முக்கால், துத்தம், துரிசு, வெள்ளைப்பாஷாணம், மிளகு, கடுகு விராகன் பதிமூன்று, கருங்குங்கிலியம் பணவிடை பதினாறு, அரிதாரம், பணவிடை ஐந்து, கவுரிபாஷாணம் விராகன் ஐந்து, மேற்படி காரீயத்தை உருக்கி இரசத்தை விட்டு முரித்து எடுத்து மற்றவைகளையும் சேர்த்து கையாந்தகரைச்சாறு, ஊமத்திலைச்சாறு, பருத்தியிலைச்சாறு

வேலிப்பருத்தியிலைச்சாறு. இவைகளில் ஒவ்வொரு சாற்றிலும் ஒவ்வொரு நாழிகை அரைத்து ஒன்பது பாகமாகக் கொண்டு புகைபோடவும். பத்தியம்: பழஞ்சோறு, உப்பு, வெங்காயம், விளக்கெண்ணெய். தண்ணீரில் முழுகவும். மாற்று, வெல்லம் கொள்ளவும்.

## ஆசனப் புண்ணிற்கு

துத்தம், துருசு, சவுக்காரம் இம்மூன்றையும் வேலிப்பருத்திச்சாற்றில் அரைத்துப் போடவும். நாராயணஞ்சுருளியிலையும், தினையரிசியும் இடித்து களிகிண்டி பசுவின் நெய்யும் கருப்புக் கட்டியும் சேர்த்துக் கொண்டு அதனை வெந்நீரில் குளித்த பின் சாப்பிடவும். துத்திப்பட்டையிலை, பொடுதலையிலை, வெங்காயம் இவற்றைச் சேர்த்து இடித்து காடியில் மூன்று நாள் கொள்ளவும். ஆறு நாள் பத்தியமாக இருக்கவும். தும்பைச்சாறும் வெங்காயச்சாறும் கூட்டி ஐந்து நாள் கொள்ளவும். கஸ்தூரி மஞ்சள் பலம் இரண்டு, கடுக்காய், தானிக்காய் வகைக்கு பலம் இரண்டு, இவற்றைச் சூரணித்து லேகியம் செய்து சாப்பிடவும்.

## கிரந்தி ரோகத்துக்கு

ஏலம், கிராம்பு, கோஷ்டம், அதிமதுரம், கருஞ்சீரகம், கார்போகஅரிசி, கடுகுரோகிணி, செங்கத்தாரிப்பட்டை, சதகுப்பை, தாளிசபத்திரி, சிறுநாகப்பூ, கற்கடகசிங்கி, தேவதாரம், சிற்றரத்தை, கூகைநீறு வகைக்கு விராகனிடை ஏழு, இவைகளைச் சூரணித்து, தேன்விட்டுப் பிசைந்து கொட்டைப்பாக்களவு இரண்டு வேளையும் உட்கொள்ள, மேகவாதம், காசம், வாய்வு கட்டி, கவுசை, குட்டம், வாதம், க்ஷயம், தம்பனதோஷம், சூலை, குன்மம், கைகால் முடக்கம், வலிப்பு, கிரந்தி, ஆருதபுண், இவைகள் தீரும். மேற்படி பொடியை புகைபோட்டுப் புண்வாய்க்கு ஆறு நாள் பிடிக்க பவுத்திரமும் தீரும்.

## பவுத்திரப் புண்ணுக்கு

நிலாவரை சமூலசூரணம், கம்பரிசிமாவு இரண்டும், கலந்து வெருகடியளவு இருபது நாள் உட்கொண்டு புண்வாய்க்கு வேப்பங்கொழுந்தாகிலும் புங்கங்கொழுந்தாகிலும் வைத்து கட்டி வரவும்.



## குளிர் சுரத்துக்கு

தும்பைவேர், கொத்தமல்லி இவைகளைத் தட்டிக் கிஷாயமிட்டு இரு வேளை கொள்ளவும்.

## வெள்ளை, இரத்தம், சீழ் விழுதலுக்கு

புளியிலையும், ஈரவெங்காயமும் சேர்த்து இடித்துப் பிழிந்து கொள்ளவும்.

## குன்மம், பாரிசவாயு, உப்பிசவாயுவுக்கு

ஓமம் விராகனிடை ஒன்று, வெந்நீரில் போட்டு ஒரு மண்டலம் உட்கொள்ளவும்.

## வாதசுரத்துக்கு, கால்கை தேகக் குடைச்சலுக்கு

அறுபது வருடம் சென்ற வேப்பம்பட்டை மேற்புரணி சீவியது, கொத்தமல்லி, சுக்கு, மிளகு இவைகளை இடித்துத் தண்ணீர் விட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சி மூன்று நாள் கொள்ளவும்.

## நாய் கடி

பெருமரத்துத்தழையை அரைத்துப் பூசிக்கொள்ளவும்.

## குளவி கடி

வெடிகொட்டைச் சாற்றைப் பிழிந்து பூசிக்கொள்ளவும்.

## பல் வலிக்கு

தாதராசமூலம் இடித்துக் கிஷாயமிட்டு வாய்கொப்பளிக்கவும்.

## வயிற்றுக்கடுப்புக்கு

மதமத்துத்தழையைச்சாறு பிழிந்து பதினாறு துளி எருமைத் தயிரில் கொள்ளவும்.

## பல்லீறு கரைதலுக்கு

ஊஞ்சமரத்துப் புல்லுருவிப்பட்டையை தாம்பூலத்துடன் சேர்த்து அடக்கிக்கொண்டு வரவும்.

## சோகை வீக்கத்துக்கு

நீர்முள்ளிவேர், மேற்படி கொழுந்து கையாந்தகரை சமூலம், கடுக்கொட்டைக்கரந்தைவேர், பெருமுட்டைப்பீநாறி சமூலம், கடுக்

காய், செங்கல்கிட்டம் நூறு வருஷம் சென்றது, நல்லகாரைவேர், வெள்ளைச்சாரடைவேர் இவைகளை ஓர் அளவாகக் கொண்டு இடித்து முறைப்படி கிஷாயம் வைத்துக்கொள்ளவும். அரை ஆழாக்கு அளவு காலை மாலை கொடுக்கவும். கடும் பத்தியம் காக்கவும். பாண்டு, காமாலை தீரும்.

## அண்டவாயுவுக்கு

வெள்ளுள்ளித்திரி, மிளகு, வெட்பூலாந்தழை சரிகூட்டி வெந்நீரில் அரைத்து மூன்று நாள் ஆறு வேளை கொள்ளவும். புளி, புகை, போகம் நீக்கவும்.

## அருசிக்கு

சிறுகுறிஞ்சான் இலையை மென்று தின்ன நாவிற்கு ருசி உண்டாகும்.

## இரணங்களுக்கு

குடசப்பாலையிலையைத்தட்டிப் பசுவின்நெய்யிலிட்டுக்காய்ச்சி புண்களுக்கு மேல் பூசவும்.

## புண்களுக்கு

கொட்டைத்தழையும், ஈரவெங்காயமும் சேர்த்து அரைத்துப் புண்மேல் பூசவும்.

## ஆறாத புண்ணிற்கு

அரிதாரத்துடன் தேங்காய்ப்பாலும், நல்லெண்ணெயும் கூட்டிக் காய்ச்சும்போது நெல்லிக்காய் கந்தகத்தைப் பொடித்துப்போட்டு காய்ச்சி திப்பியை ஒருகுன்றி அளவு காலை மாலை சாப்பிட்டு, எண்ணெயைப்பூசி, சிறிது நேரங்கழிந்த பின் எருமைச்சாணியிட்டு தேய்த்துக்கழுவிக் குளிக்கவும்.

## மேற்படி மருந்திற்கு முறிவு

கச்சந்திரா சமூலம் பிடி ஒன்று, மிளகு, வெள்ளுள்ளி, வகைக்கு விராகனிடை மூன்றுஞ் சேர்த்து வதக்கி மிளகு வெடிக்கும்போது ஒரு படி நீர்விட்டு கால் படியாகக் காய்ச்சி கொடுக்கவும்.

## நஞ்சு முறிய

லிங்கத்துக்கு பருத்திவேர்கஷாயமும், நாபிக்கு சிறுகீரை வேர் கஷாயமும், பாஷாணத்துக்கு, நீலிவேர் மிளகு கஷாயமும்



அரிதாரத்துக்கு நீலிவேர், சிறுகீரைவேர், சிறுநெருஞ்சிவேர், மிளகு கஷாயமும் கொடுக்க முறியும்.

## விரேசனங்களுக்கு

வசம்புகஷாயத்தில் முள்ளிக்காயளவு பசுவின் வெண்ணெய் சேர்த்துக் கொடுத்தாலும், வசம்பை அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுத்தாலும் தீரும். மோரில் எலுமிச்சம் பழம் பிழிந்து கொடுத்தாலும் பேதி கட்டும். பழையதுணியைச் சுட்டுப்பொடித்து மோரில் கலக்கிக் கொடுத்தால் நிற்காத பேதி களும் நிற்கும்.

## விக்கலுக்கு

விழும்பிவேர், அழிஞ்சிவேர், சந்தனம் இவற்றை பசுவின் பாலிலரைத்து நாக்கில் தடவ நிற்கும்.

## விழுந்த நாவுபிறள

சீரகம், ஏலம், சர்க்கரை இவற்றை மூலைப்பாலிலரைத்து நாக்கில் தடவ விழுந்த நாக்குப்பிறளும.

## மூக்கில் இரத்தம் விழுதற்கு

நெல்லிப்பருப்பை அரைத்து உச்சியிலிட்டுத் தேய்க்கவும்.

## ஆணிப்புண்களுக்குக்காரம்

வெள்ளைப்பாஷாணம், பச்சைகற்பூரம், இந்துப்பு, பெருங்காயம் வகைக்கு விராகனிடை ஒன்று, காகிதத்தில் இவைகளை வைத்துச் சுருட்டிச் சுட்டுப் பொடித்துத் தேனில் குழப்பி சீலையில் தடவிப்போட ஆணி கழன்று விழும்.

## பவுத்திரம், சூலை, சர்வாங்கவாதங்களுக்கு

சாதிலிங்கம் கழஞ்சு ஒன்று, கருங்குங்கிலியம் பலம் ஒன்று, இவற்றைப் பருத்தியிலைச்சாற்றிலரைத்து ஒன்பது குளிகை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொண்டு சுடுகஞ்சி குடித்த பின் புளியஞ்சிரா தணலாக்கி அதனில் ஒரு மாத்திரையிட்டு, புகையை முகம் தவிர மற்ற பாகங்களில் படும்படிக் காட்டவும். பத்தியம்: கைப்பு, புளிப்பு நீக்கி பதினொன்று நாள் வெந்நீரில் முழுகவும். பன்னிரண்டாம் நாள் விளக்கெண்ணெய் இட்டு முழுகவும்.

## இராஜபிளவை, கண்டமாலை, விப்புருதி, வெடிசூலை, துடைவாழை, கிரந்திப்புண், உச்சிப்பிளவை, கொடிப்பிளவை, சன்னி, (மாடு, குதிரை)களுக்கு வஞ்சிப்புண்கள் இவைகளுக்கு

கருப்பூமத்தைவேர், பட்டை விராகனிடை நான்கு, நெல்லிக்காய் கந்தகம் விராகன் இரண்டு, கௌரிபாஷாணம், பொன்னரிதாரம் விராகனிடை ஒன்று, இவற்றை வேப்பெண்ணெயில் அரைத்துத் துணியிலூட்டிக் கால்படி வேப்பெண்ணெயில் சுடர்த் தைலம் வாங்கி பஞ்சிலூட்டிப் போடவும், கைகண்டது.

## நான்காமுறைக் காய்ச்சலுக்கு

பெருமரத்துப் பட்டை, சுக்கு, திப்பிலி, வெண்காயம், மிளகு, கஷாயமிட்டு, மூன்று வேளை கொள்ளவும்.

## புண்களுக்கு

வெள்ளைக்குங்கிலியம், மயில்துத்தம் ஓரிடைகூட்டி சரி சேர்த்து நல்லெண்ணெயிலுருக்கி தண்ணீரில் விட்டு பின்பு வேறு தண்ணீரில் களிம்பாகப் பிசைந்து சிறுவர் முதல் எல்லாப் புண்களுக்கும் போடவும்.

## பல் வலிக்கு

கண்டங்கத்தரிப்பழத்தை வேண்டிய அளவு கொண்டு வந்து அதனிடைக்கு உப்பை அரைத்துக் கூட்டி புடமிட்டு எடுத்து அதனைக் கொண்டு பல்தேய்த்துக் கொப்பளிக்கவும். சிறு அம்மான் பச்சரிசியும், கல்லுப்பும் சேர்த்து மெல்லவும்.

## வயிற்று வலிக்கு

பச்சைக் கருவேப்பிலையை அரைத்துச் சுண்டைக்காயளவு கொள்ளவும்.

## மூலக்கடுப்பு, சிதம் ரத்தம் விழுதலுக்கு

கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி இவற்றை பசுவின் வெண்ணெயிலிட்டுக் காய்ச்சி அதில் சுண்டைக்காயளவு கருவேப்பிலையை அரைத்துப் பிசைந்து கொடுக்கவும்.



## வாயுவுக்கு

கடுக்காய், நெல்லிப்பருப்பு, சுக்கு, மிளகு, ஏலம் இவற்றைக் கஷாயமிட்டு மூன்று வேளை கொள்ளவும்.

## வாதத்துக்கு

மஞ்சள், வசம்பு, வெள்ளுள்ளி, கடுகு, வெந்தோன்றிக் கிழங்கு இவற்றைச் சதுரக்கள்ளிச்சாறு விட்டரைத்துப் பற்றுப் போடவும்.

## வீரிய விருத்திக்கு

கற்கண்டு, பேரீச்சம்பழம் இவற்றை தேன் விட்டரைத்து லேகியம் செய்து சிங்கிபற்பம் பணவிடை சேர்த்துக் கொள்ளவும்.

## சகல சுரத்துக்கும்

ஆடாதொடை, பேய்ப்புடல், சீந்தில், பற்படாகம், கண்டங்கத்திரி, நிலவேம்பு, சுக்கு இவற்றைக் குடிநீர் வைத்து தேன் சேர்த்துக் கொள்ளவும்.

## நீரிழிவுக்கு

(1) கொன்றைப்பட்டை, ஆலாந்தளிர், கல்மதம், இவற்றை முலைப்பாலிலரைத்துக் கொள்ளவும்.

(2) கொன்றைவேர், ஆவாரைத்தளிர், கல்மதம் இவற்றைப் புளித்த மோரிலரைத்துக் கொள்ளவும்.

(3) ஆகாயக்கருடன்தழை, ஈரவெங்காயம், சீரகம் இவற்றை எருமைமோரிலரைத்துக் கொள்ளவும்.

(4) தேற்றான்விதை, கடுக்காய், ஆவரைவேர் இவற்றை பசுவின் மோரிலரைத்துக் கொள்ளவும்.

(5) விளாம்பிசின் மேற்படி அனுபானத்துடன் கொள்ளவும்.

## பித்தத்துக்கு

சீரகம், சுக்கு, பேய்ப்பீர்க்கு, சீந்தில், பற்படாகம், கொத்தமல்லி இவற்றைக் கஷாயமிட்டுக் கொள்ளவும்.

## தம்பனத்துக்கு

சாதிக்காயும் அரசங்கொழுந்தும் அரைத்து மூன்று நாள் கொள்ளவும்.

## அக்கினி மந்தத்திற்கு

பத்து பழமிளகாயை பசுவிநெய்யிலிட்டுக் காய்ச்சி மிள காயை நீக்கி, நெய்யை சாதத்தில் விட்டுச் சாப்பிடவும்.

## வயிற்று வலிக்கு

கறியுப்பை அடைக்காய் மணியென்ற கொட்டைக் கரந்தைச் சாற்றிலரைத்துப் புடமிடவும். இந்தப்படி பன்னிரண்டு புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும். இதனில் ஒருகுன்றி அளவு காலை மாலை பிரண்டைச்சாற்றில் கொடுக்க வயிற்றுவலி குன்மம் போம்.

## விஷத்துக்கு

(1) எட்டிப் பழத்தின் வெள்ளைச்சதை, வேம்பின்பருப்பு, மிளகு இவற்றையொரு சாளரைத்து வெற்றிலைச்சாற்றில் குன்றியளவு கொள்ளவும். இதனையே கண்ணுக்குக் கலிக மிட்டுக் கடிவாயில் தடவவும்.

(2) கானகமென்ற ஈசுரமூலி, உரிகாய்க்கொடிவேர் இவ்விரண்டையும் சிறு நீரிலரைத்துக் கொள்ளவும்.

## சுக சன்னிக்கு

வெள்ளைக்குன்றிவேரை பாலிலரைத்துக் கொள்ளவும். நீலி வேர் அடுப்பு ஒட்டரை இவற்றைத் தண்ணீரில் அரைத்துக் கொள்ளவும்.

## இரத்தம் கக்கலுக்கு

சாதிச்செடிரசம் கொள்ள இரத்தம் கக்கல் நிவர்தியாம்.

## விஷத்துக்கு

முள்முருங்கைச்சாற்றில் வசம்பு, பெருங்காயம், மிளகு இவற்றை அரைத்துச் கடிவாயில் தேய்க்க விஷம் கக்கிவிடும். இந்துப்பு, சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி, பெருங்காயம், திப்பிலி, இவற்றை எருக்கம்பாலில்லரைத்து நசியமிடவும்.

## எலி கடிக்கு

(1) கையாந்தகரைச்சாற்றை தலையில் தேய்க்கவும். பழுத்த யிலையை அரைத்து உடல் முழுமையும் பூசி கழுத்தளவு தண் ணீரில் நின்று உள்ளுக்கு ஒரு எலுமிச்சம்பழம் அளவும் சாப் பிடவும்.



(2) ஆம்பல்கிழங்கு, உரிக்காய்க் கொடிவேர் இவற்றைக் கஷாயமிட்டு அதில் ஒட்டடை கழஞ்சு நான்கு சேர்த்து நெய் யில் இட்டுக் காய்ச்சி இறுத்து மூன்று வேளை கொள்ளவும்.

## ம[க]ருந்திட்டுக்கு

மலைமுருங்கைத்தழை, அழிஞ்சில்தழை இவற்றை யறைத்து பசுவின்பாலில் கொள்ளவும்.

## சன்னிக்கு

அவித்த கோழிமுட்டையின் மஞ்சட்கரு, பூநாகபஸ்பம், சங்கிநாயகம் இவை சேர்த்துக் காய்ச்சி எடுத்த தைலத்துடன் வேப்பெண்ணெய் கலந்து உள்ளுக்குக் கொடுத்தும் மேலுக்குப் பூசியும்வர சன்னி போம்.

## சகல தோஷங்களுக்கும்

தங்கம், வெள்ளி, முத்து, பவளம், கஸ்தூரி, குங்குமப்பூ, கோரோசனை, சிற்றேலம், உருத்திராக்ஷம், இலுப்பைப் பருப்பு வில்வவேர், கோஷ்டம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், வேப்பம் பருப்பு, வசம்பு, திப்பிலி, மான்கொம்பு, தேற்றாங்கொட்டை, சங்கு, ஆமையோடு, நாயுருவிவேர், சாரணைவேர், மயிலிறகு, அதிமதுரம், பூநாகம், அகில், சந்தனம், இவைகளை முலைப் பாலில் அரைத்து தேன்சேர்த்து மத்தித்து நாவிற்றவளமிடவும். கிளிமூக்குக் கிழங்கைத்தட்டி ஆணுக்குவலது நாசியிலும் பெண் ணுக்கு இடது நாசியிலும் நசிய மிடவும். முசிருமுட்டையும் கரளகத்தின் வேருந் தட்டிக் கண்களில் கலிகமிடவும்.

## நீரடைப்பிற்கு

தென்னை, கமுகு, பனை, இவற்றின் இளவேர் எலிப் புழுக்கை, சிறுநெருஞ்சி, வெள்ளரிவிதை, இவற்றைக்காடியி லரைத்து நாபியில் தேய்க்க உடனே மூத்திரம் இறங்கும். வெடியுப்பு வெண்காரம் இவற்றைப் பொடித்து இளநீரிற் கொண்டாலும் நீரிறங்கும்.

## மல ஜலக் கட்டுக்கு

பாச்சாணையிடித்துப் பிழிந்த இரசத்துடன் கருப்புக்கட்டி சேர்த்துக்கொடுக்கவும்.

## துர்நீர்களுக்கு

வீரம், பூரம், தேன்மெழுகு, இவற்றை உருக்கித் திரியாகச் செய்து கொளுத்தி வியர்வைபிடித்து உடனே பசுவின்பால் கொடுக்கவும். இருபது நாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும். புளி, மிளகாய் நீக்கவும். படை முதலியனவும் போம்.

## கலைக்கொம்புபற்பம்

உளுந்துப்பொடியில் சுத்திசெய்து கற்றாழைமடலுக்குள் வைத்துப் புடமிட்டுக் கொள்ளவும். பின்பு மீண்டும் மூன்று கற்றாழைச்சாற்றில் அரைத்து மூன்று புடமிட நல்ல பற்பமாகும்.

## பிரசவத்திற்கு

(1) இந்துப்பு, சுக்கு, சிறுதேக்கின்வேர், இவற்றைக் காடியிலரைத்துப் பால்சேர்த்து நாபியிற்றடவ உடனே செத்த பிள்ளை பிறக்கும்.

(2) ஊமத்தன்விதையை யரைத்து நல்லெண்ணெய் சேர்த்து சிரசில்தேய்க்கவும்.

(3) நாயுருவிவிதையை தண்ணீரிலரைத்து யோனி மத்தியில் வைக்கவும்.

(4) எட்டிக்கொட்டையை தண்ணீரிலரைத்து நாபியில் தடவவும்.

(5) பன்றிக்கொம்பை உரைத்து கண்ணிற் கலிக்கமிடவும்.

(6) யானை அத்தியை பூனை முலைப்பாலில் குழைத்து கண்ணில் போடவும்.

## சன்னிக்கு

சிற்றரத்தை, அமுக்கனுன்கிழங்கு, தேவதாரம், கடுகுரோகணி, சன்னிநாயகம், செவ்வியம், கோஷ்டம், வசம்பு, காவிக்கல், மஞ்சள், அதிமதுரம், குறுந்தொட்டிவேர், கோரைக்கிழங்கு, சுக்கு, மிளகு, திப்பிலி, பீனறிப்பட்டை, சாஸ்திரபேதி, இருவேலி, விலாமிச்சம்வேர், சந்தனம் அகில், புளியிலையீர்க்கு இவைகளைச் சூரணித்து முலைப்பாலும் ஆமணக்கெண்ணெயும் சேர்த்துப் பிசைந்து சிரசிற்றளமிட சகல சன்னிகளும் தீரும்.



## கூஷ்மாண்ட லேகியம்

பெரியபூசனிக்காய் உள்கசடும் மேற்றோலும் நீக்கி, காயைச் சுரண்டி எடுத்துத் திருகி நீர் வடித்தது பலம் பத்து நெய்யிலி விட்டு வதக்கி தேன் நிறமாக, வரும்போது கற்கண்டு பலம் நான்கு, கரும்புவெல்லம் பலம் பன்னிரண்டு இவற்றைப் பாகுசெய்து கூட்டி அதில் கொத்தமல்லி, சீரகம், சுக்கு, மிளகு, ஏலம், இலவங்கம், பச்சிலை வகைக்குத் தோலா பத்து சூரணித்துப்போட்டுக் கிண்டி லேகிய பதத்தில் பசுவின் நெய்படி வேண்டுமாயின் சிறிது விட்டுக் கிண்டி இறக்கித் தேன்படி கால் விட்டுக் கிளறி வைத்துக்கொண்டு சாப்பிடவும்.

## சேதுபந்தன குளிகை

சாதிக்காய், அதிவிடையம், வில்வக்காய்ச் சதை, ஓமம், நாவல் மாம்பருப்பு, சீரகம், கிராம்பு, திப்பிலி, கருஞ்சீரகம், பட்டைச்சதை இவைகளை வெள்வெங்காயச்சாற்றிலரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி தேன், மோர், தயிர் இவற்றில் ஒன்றில் கொள்ளவும். வயிற்றுப்போக்கு நிற்கும்.

## இஞ்சி லேகியம்

இஞ்சிச்சாறு படி ஒன்று, மாதுளம்பழச்சாறு படி எட்டு சேர்த்து அதில் வெல்லம் பலம் பத்து போட்டுப் பாகுசெய்து அதில் ஏலம், இலவங்கப்பட்டை, பச்சிலை, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், விளால்அரிசி, கொடி வேலிவேர், செவியம், ஆமணக்கின்வேர், கருஞ்சீரகம், நற்சீரகம், இரும்புப்பொடி இவை வகைக்கு கழஞ்சு மூன்று சேர்த்து இவைகளை எலுமிச்சம்பழரசத்தில் மூன்று நாள் ஊற வைத்து பொற்றலை, கையாந்தகரைச்சாற்றில் மூன்று சாமமரைத்து உலர்த்திச் சூரணித்துப் போட்டுக் கிளறி நெய்விட்டு லேகிய பதத்தில் இறக்கித் தேன்விட்டு பிசைந்து கொள்ளவும்.

## அஷ்ட சூரணம்

இந்துப்பு, மிளகு, கருஞ்சீரகம், சுக்கு, பெருங்காயம், திப்பிலி, சீரகம், ஓமம் இவற்றைச் சூரணித்து ஓர் அளவாக முக்கால் கழஞ்சளவு பசுவின் நெய்யில் கொள்ள குன்மம் முதலிய வாயுக்கள் தீரும். அக்கினிதீபன முண்டாகும்.

## பிள்ளை தரிக்க

குதிரைலத்தை கழுதைலத்தை இவைகளைப் பிழிந்த சாற்றுடன் காடி சேர்த்துக்கொடுத்தாலும்; உசிலங்கொழுந்தை அரைத்து நல்லெண்ணெயில் மத்தித்துக் கொடுத்தாலும்; இந்துப்பும் பெருங்காயமு மரைத்துக் காடியில் கொடுத்தாலும்; நாய் மண்டை ஓட்டை அரைத்து விளக்கெண்ணெயில் குழைத்துக் கொடுத்து வயிற்றில் தடவினாலும்; பண்ணைச்சாற்றை நல்லெண்ணெயில் கலந்து கொடுத்தாலும் குழந்தை பிறக்கும் [தரிக்கும்].

## நஞ்சு விழ

கறிவேம்பு, வேம்பு, முருங்கை இவற்றின் கொழுந்து வகைக்குப் பிடி ஒன்று, கடுக்காய் ஒன்று இவற்றை அரைத்து நீரிலிட்டு நன்றாய்க் காய்ச்சிக் கொடுக்கவும்.

## நீர்க்கடுப்பு, எரிவு, வெள்ளை, வெட்டை, இரத்தம் விழுதல் இவைக்கு

கோரோசனை, குங்குமப்பூ, வகைக்கு விராகனிடை, ஏலம் விராகன் ஒன்று, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சீரகம் இவை வகைக்கு விராகனிடை, இவைகளைச் சூரணித்து ஒரு படி பசுவின் நெய்யில் உள்முளை நீக்கிய ஈரவெங்காயம் பலம் ஒன்று, கையாந்தகரையிலை பிடி ஒன்று, இவற்றைத் தட்டிப் போட்டு மேற்படி சூரணங்களைப் போட்டு ஒரே வகை விரகாலெரித்துக் காய்ச்சி நெய்யை வடித்து ஒருநாளைக்கு மூன்று வேளை கொள்ளவும். சாதத்துடனும் கொள்ளலாம். ஏழு நாள் கடும் பத்தியம் காக்கவும். முறிவு:—நீர்புலாவிலையை மோர் விட்டு இடித்துப் பிழிந்து கொடுக்கவும். கைகண்டது.

## நீரிழிவுக்கு

தேற்றாம்விதை, கடுக்காய், ஆவரைவேர், விளாம்பிசின், இவற்றை அரைத்துப் பசுவின்மோரில் கலக்கி தாகமான போதெல்லாம் குடிக்கவும். புளி, புகை நீக்கவும்.

## நீர்ச்சுருக்கிற்கு

முள்ளங்கிச்சாற்றில் சீனி கலந்து கொடுக்கத் தீரும்.



## இருமலுக்கு

அருகின்வேர் பலம் ஏழு, பனங்கற்கண்டு பலம் மூன்று, மிளகு பலம் ஒன்று இவற்றைக் குடிநீரிட்டுக் கொடுக்கவும். பொன்னாங்கண்ணித்தைலம் உடல் முழுமையுந் தேய்த்துத் தேய்த்துத் தலை முழுகவும்.

## பித்தத்திற்கு

முசுக்கை, இஞ்சி, கொத்துமல்லி இவைகளை வகைக்கு ஒரு பிடி அளவாகக் கொண்டு இரண்டு படி நீர் விட்டு ஒரு படியாகக் காய்ச்சி இரண்டு நேரம் எலுமிச்சம்பழம் பிழிந்து கொடுக்கவும்.

## புழுவெட்டு முதலியவற்றால் மயிர் உதிர்ந்ததற்கு

அலரிச் செடியின் கொழுந்தை முறித்து அதிலிருந்து வரும் பாலை சிலநாள் தடவிவந்தால் புழுவெட்டு முதலியவை நீங்கி மயிர் முளைக்கும்.

## நாவறட்சி தோஷங்களுக்கு

ஆடவர்களுக்கு சிறுமிகளின் சிறுநீரும் பெண்டிர்களுக்கு சிறுவர்களின் சிறு நீறும் ஒரு ஆழாக்கு வீதம் கொடுக்கத் தீரும்.

## தேள் கடிக்கு

எருக்கன் கொழுந்து ஒன்று அல்லது இரண்டு வெற்றிலைப் பாக்குடன் மென்று விழுங்கத்தீரும்.

## வாயுவுக்கு

துளசியிலையை மென்று சாப்பிடத் தீரும்.

## சிலந்தி முதலிய வீக்கத்திற்கும் கட்டிகளுக்கும்

களிமண்ணைக் குழப்பித் துணியில் வைத்துப் பிழிந்த நீருடன் கொஞ்சம் சுண்ணாம்பு சேர்த்து மஞ்சளையுரைத்து களிம்பு போலானபின் கட்டிமேல் பூசி துணியிலும் பூசிப் பற்றிட கட்டி வற்றும் அல்லது பழுத்து உடையும்.

## வயிற்று வலிக்கு

எலுமிச்சம் பழச்சாற்றில் சிறிது இந்துப்பைப் பொடித்துத் தூவி ஒரு நாழிகை ஊறவைத்துச் சாப்பிடவும்.

## மூலத்துக்கு

காட்டுக்கருணைக்கிழங்கை வில்லையாய் நறுக்கி உலர்த்திச் சூரணித்தது பலம் எட்டு, மிளகு சூரணம் பலம் எட்டு இவற்றை லேகியம் செய்து சாப்பிடவும்.

## விக்கலுக்கு

பழைய தோலைச் சுட்டுச் சூரணித்து தேனிற் குழைத்துச் சாப்பிட்டு விலாமிச்சம்வேர் புகை பிடிக்கவும். மயிலிறகைச் சுட்டு தேனிற் குழப்பிச் சாப்பிடவும்.

## இடு மருந்து முறிய

நீராகாரம், நல்லெண்ணெய், எலுமிச்சம்பழச்சாறு இவை வகைக்கு அரை ஆழாக்காகக் கலந்து சாப்பிட மருந்து விழும்.

## வாய்ச்சூலை, கெற்பசூலைப் புண்ணிற்கு

ஒரு கொப்பரைத் தேங்காயை வெண்ணெய் போலாட்டி அத்துடன் பசுவினெய் படி காய்த்து வடித்து அத்துடன் சேர்த்து பச்சை கற்பூரம் விராகனிடை சேர்த்துக் கலக்கி காசிடை விகிதம் இரண்டு நேரம் சாப்பிட வாய்ப் புண் போம்.

## கரப்பான் சிரங்குக்கு

தேங்காய் எண்ணெயில் வெள்ளாட்டுப் புழுக்கை சூரணத் தைப் போட்டு சூரிய புடம்வைத்துத் தடவிவரத்தீரும்.

## சகல கட்டிகளுக்கும்

ஆறு கோழி முட்டைக்கருவில் சிறிது செம்புப்பொடியைக் கூட்டி அரைத்து கட்டிமேல் போட்டு அதன்மேற் பஞ்சுமூடி அதன்மேல் ஆறு தரம் குழம்பைத் தடவி அதன்மேல் உளுந்துமாவைத் தூவி அதன்மேல் ஆறு தரம் தடவிவிட்டு மூன்று நாள் பொருத்துப் பற்று நீக்கிப்பார்க்க கட்டி உடைந்து காணும்.

## சுகபேதி எண்ணெய்

சாதிலிங்கம், இரசகற்பூரம், பெருங்காயம் இவை வகைக்கு விராகனிடை நான்கு இவற்றை வறுத்துச் சூரணித்து உரித்த மலைப்பூண்டு விராகன் பதினாறு, சுத்திசெய்த நேர்வாளம் விராகன் எட்டு இவற்றைத் தனித்தனி அரைத்து நான்கு



தேங்காய்ப்பாலிலிட்டு மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்துக் கொண்டு நான்கு துளி முதல் பத்து துளி வரை புளி நீக்கிக் கொடுக்கவும், பேதியாகாவிடில் மிளகு ரசம் சாப்பிடவும். அதிகமானால் மோரும், சோறும் உண்க. நிற்காவிடில் வெள் ளரிப்பிஞ்சு சாப்பிடவும். பின்னும் நிற்காவிட்டால் பசுவின் வெண்ணெயில் பனைவெல்லம், ஈரவெங்காயம் இவற்றைச் சேர்த்து அரைத்து உட்கொள்ள நின்று விடும்.

## வாதநோய்க்கு

வாதநாராயணன்பட்டை, பூவரசம்பட்டை, நொச்சியிலை இவற்றைப் பொடித்து குழித் தைலம் இறக்கிப் பூசி வேது பிடிக்கவும்.

## பித்தத்திற்கு

சீரகத்தைக் குழித்துத் தைலம் இறக்கிச் சர்க்கரையில் கொடுக்கத் தீரும்.

## சாதிலிங்கக்கட்டு

எருக்கம்பாலும், எலுமிச்சம்பழரசமும் கலந்து அதில் இலிங்கத்தை ஒரு நாள் ஊறவைத்து கீழும் மேலும் ஓமம் வைத்துச் சீலைமண் செய்து எருவில் புடமிடக் கட்டும்.

## இரசகற்பூரக் கட்டு

சுண்ணாம்புத் தண்ணீரும், தும்பைச்செடிச்சாறும் கலந்து கற்பூரத்தை அரைத்து வில்லை செய்து உலர்த்தி கீழாநெல்லி இலையை அரைத்துக் கவசித்து உலர்த்தி சீலைமண் வலுக்கச் செய்து கசபுட மிடக்கட்டும். சுர வகைக்குத் தேனில் கொடுக்கவும்.

## மூலகிரகணிக்குப்புகை

புளியம்பட்டை, புளியங்கொட்டைத்தோல், வெண்கலம், பெருங் ஆமையோடு, முள்ளெலித்தோல், வெள்ளுள்ளிச்சருகு, பெருங் காயம் இவைகளைச் சேர்த்து இடித்ததைப் புகை போடவும்.

## அதிசாரத்துக்குக் குடிநீர்

சுக்கு, மூத்தக்காசு, பேராமுட்டி, பங்கம்பாளை, சிறுகாஞ் சொறி வறட்[illegible]ண்டி, புளியம்பட்டை, இலந்தைப்பட்டை, காட்டாத்திப்பூ, பெருமரப்பட்டை, குடசப்பாலை இவற்றை

முறைப்படி குடிநீரிட்டு, அதிவிடையம், காசுக்கட்டி இவற்றைச் சிறிதளவு பொடித்துச் சேர்த்துக் குடிக்கத் தீரும்.

## தாமிர பற்பம்

ஆடுதின்னுப்பாளைவேர், வெண்நெருஞ்சிவேர் இவற்றைச் சரிகூட்டி எருக்கம்பாலாலாட்டி தாமிர தகட்டிற்குப்பூசி, ஓட்டி லிட்டு சீலைமண் செய்து கசபுடமிடவும். பின்பு வேப்பிலைச் சாற்றால் அரைத்து வெளுக்குமட்டும் புடமிடவும்.

## சாதிலிங்க பற்பம்

சிவன்மூலிவேர்ப்பட்டையை அரைத்து குகைசெய்து அதில் லிங்கத்தை வைத்து சீலைமண்செய்து குக்குட புடமிடப்பற்பமாம்.

## இருமலுக்கு

இரசம், கந்தகம், அரிதாரம், நாவி, மனோசிலை, பற்பாடகம், திப்பிலி இவற்றைச் சரிகூட்டி நொச்சி, கண்டங்கத்திரி, ஆடா தொடை இவைகளின் சாற்றில் தனித்தனி ஏழு சாமமரைத்து பயறளவு மாத்திரை செய்து சர்க்கரை, நெய், தேன் இவற்றில் கொள்ளத் தீரும்.

## உடல் விக்கத்திற்கு

கற்பூரவல்லி, நீர்முள்ளி, சங்கங்குப்பி, சங்கு, சுருள்ளி, இஞ்சி இவை வகைக்குச் சாறு படி ஒன்று. ஆட்டு மூத்திரம், கழுதைப்பால் வகைக்குப் படி ஒன்று, விளக்கெண்ணெய் படி இரண்டு, நன்னாரிவேர், வெள்ளருகு, தக்கோலம், ஆவரைவேர், ஆகாயக்கருடன்கிழங்கு, சித்திரமூலம், புளியாரை இவைகள் வகைக்குப் பலம் இரண்டு இடித்துச் சேர்த்து மெழுகுபதத்தில் காய்ச்சி வடித்து உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலுக்கும் துவளை இடத்தீரும்.

## வாய்வுக்குச் சூரணம்

ஓமம், பெருங்காயம், வாய்விளங்கம், பஞ்சலவணம், சுக்கு, திப்பிலி, மிளகு, செவியம், முத்தக்காசு, சித்திரமூலம், சீரகம், கருஞ்சீரகம், செங்கழுநீர், கோஷ்டம், சிறுவழுதுளைவேர், சிவதைவேர், மஞ்சள், மரமஞ்சள், வசம்பு, கொத்தமல்லி, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், குமிழம்வேர் இவற்றை சரிகூட்டி சூரணித்து சமனிடை சர்க்கரை சேர்த்து வெருகடியளவு கொள்ளவும். இரண்டு நேரம் இருபது நாள். புளி, புகையிலை, தாம்பூலம் நீக்கவும்.



## மலசலக்கட்டுக்கு மாத்திரை

சுக்கு, மிளகு, திரிபலை, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், வாய் விளங்கம், கடுகுரோகணி, சைந்தவலவணம், வெங்காரம், சாதி லிங்கம் இவற்றைச் சரிகூட்டி இதற்கு சரி நேர்வாளம் கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றாலாட்டி குன்றியளவு குளிகைசெய்து உலர்த்தி திரிகடுகுச் சூரணத்தில் கொள்ளவும்.

## கருவங்க பஸ்பம்

ஓமம், மஞ்சள், புளியபுரணி இவை வகைக்குப் பலம் ஒன்று சூரணித்து, காரீயம் பலம் ஒன்று உருக்கி, இப்பொடியை சிறுகச் சிறுகத் தூவி, நாயுருவிக்குச்சியால் கிண்டிவர பற்பமாகும். மேற்படி பற்பம் தண்ணீரில் மிதக்கும்வரை கிண்டிக்கொடுத்து எடுத்துக்கொண்டு, நீர்க்கட்டு, பவுத்திரம், பெண்களுக்கு உதிரஞ்சாய்தல் இவைகளுக்கு சர்க்கரை பாலில் கொடுக்கவும். கால்பங்கு உப்புகூட்டி, வெந்நீரும், சோறும் உண்ணவும்.

## லவங்காதி ரசாயனம்

லவங்கம், லவங்கப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், கொத்தமல்லி, அசுவகந்தி, வெட்டிவேர், இலாமிச்சம்வேர், பூலாங்கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, கொப்பரைத்தேங்காய், கற்கடகசிங்கி, சங்கம்வேர்ப் பட்டை, சந்தனம், சிறுநாகப்பூ, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, கந்தகம், சடாமாஞ்சி, காட் டெருமைப்பால், அதிமதுரம் இவை சரிகூட்டிச் சூரணித்து சரி யிடை சர்க்கரை சேர்த்துப் புட்டுவைத்து இடித்து, தான்றிக்காய் பிரமாணம் உண்டைசெய்து உலர்ந்த சரீரத்துக்கு ஏற்றவாறு பசுவின் நெய்யில் கொள்ள ஸ்தூலிக்கும். ஸ்தூலசரீரத்துக்கு தேனில் கொள்ள உலரும். உழலை, சுரம், இளைப்பு, மேல்மூச்சு, சுவாசகாசம், க்ஷயம், சகல பித்தரோகங்கள், அரோசகம், வாந்தி, அன்னத்வேஷம், காமாலை அஸ்திசுரம், தாகம், தலைக்காய்ச்சல், கண்ணெரிவு, உடம்பு நடுக்குதல் இவைகள் தீரும். பத்தியம்: புளி, புகையிலை நீக்கவும்.

## ஏலாதி மாத்திரை

ஏலம், இலவங்கம், அதிமதுரம், சமுத்திரப்பச்சை, சந்தனம், நன்னாரிவேர், பேரீச்சம்பழம், வெட்டிவேர், இலாமிச்சம்வேர்,

கோரோசினை, தண்ணீர்விட்டான்கிழங்கு, உருத்திராக்ஷம், இலுப்பைப்பூ, தேவதாரம் இவை வகைக்கு விராகன் ஒன்று, கடுகுரோகணி விராகன் பதிமூன்று, இவற்றை இளநீர் விட்டரைத்து தேற்ருன்விரை அளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி தாகசுரம், கெற்பசுரம், சந்நிபாதசுரம் இவைகளுக்கு இளநீரில் வேகவைத்துக் கொடுக்கவும். பித்தசுரத்துக்கு முலைப்பாலை முறித்து அதில் கொடுக்கவும். பத்தியம் காக்கவும்.

## அதிசாரக்கடுப்புக்கு

சாதிக்காய், சாதிப்பத்திரி, அபினி, அதிவிடையம், காட்டாத்திப்பூ, குருசாணி, ஓமம் இவை வகைக்கு விராகன் ஒன்றைப் பொடித்து விதை நீக்கிய மாதுளம்பழத்துள் அடைத்து, சீலை மண்செய்து காட்டெருவிற் புடமிட்டு வெந்த பதத்திலெடுத்து அரைத்து,தேற்ரும்விதை அளவு குளிகைசெய்து,நிழலிலுலர்த்தி, வயிற்றெரிவுக்குத் தயிரிலும், பொருமலுக்கு எலுமிச்சம்பழம் பாதியிலும் ஒரு குளிகை வைத்து கொடுக்கவும். இவ்வாறு நாள் ஒன்றுக்கு இரண்டு முறை கொடுக்கவும். கடுப்புக்கு வரட்பூலா, செம்பூலா, நீர்பூலாவேர், வட்டத்திருப்பிவேர், நன்னாரி, மாதுளை வேர், பூ, காய், இலை, சிறுதேக்கு, கொத்தமல்லி, கோஷ்டம் இவை வகைக்குப் பலம் இரண்டாக இவற்றை இரண்டு படி நீரிலிட்டு கஷாயம் வடித்து மூன்று வேளை கொடுக்கத் தீரும்.

## பேதி (சிந்தாமணிக்கட்டு)

சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல், கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம், வாய்விளங்கம், கொத்தமல்லி, கடுகுரோகணி, இந்துப்பு, நேர்வாளம், சிவதைவேர் இவை வகைக்குப் பலம் ஒன்று, பூநாகம் பலம் ஒன்றேகால், இவற்றை எலுமிச்சம் பழச்சாற்றிலரைத்து சுண்டைக்காயளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி இருபது நாள் தானிய புடமிட்டு எடுத்து, சுக்கு கஷாயம், சீரக கஷாயம் ஏதேனும் ஒன்றில் கொடுக்க சகல சுரமும், மலசலக்கட்டும், தோஷமும் தீரும். பேதியாகும். பேதி அதிகமானல் சீரகமும், முருங்கைக்காயும் வெதுப்பி கஷாயம் செய்து கொடுக்கவும்.

## க்ஷயத்திற்கு சீரகாதிச் சூர்ணம்

நற்சீரகம், சர்க்கரை இவை வகைக்குப் பலம் ஏழு, அதிமதுரம் பலம் ஐந்து, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு இவை



வகைக்கு விராகன் ஐந்து, அக்ராகாரம், மடல்துத்தம், விலாமிச்சம்வேர், செங்கழுநீர், கோஷ்டம், கோரோசினை இவை வகைக்கு விராகன் ஒன்று, சங்கம்வேர் பலம் ஐந்து, தூதுவளைவேர் பலம் பத்து, இவற்றைச் சூரணித்து சர்க்கரை கலந்து வெருகடியளவு கொள்ளவும். பத்தியம் : புளி, புகை நீக்கவும்.

## சிவதை லேகியம்

திரிகடுகு, கடுகுரோகணி, இந்துப்பு, திரிபலை, முத்தக்காசு, அதிவிடையம்,ஓமம், வாய்விளங்கம், திப்பிலிமூலம்,இவை வகைக்குப் பலம் ஒன்று, நிலாவாரைச்சூர்ணம் படி அரை, இவற்றிற்குச் சரியிடை சிவதைச்சூர்ணம் கூட்டி ஆமணக்கெண்ணெயிலிட்டு பிசைந்து லேகியம்போல் செய்து இரண்டு கழஞ்சிடை லேகியம் வெருகடி சீனியுடன் கலந்து சாப்பிடப் பேதியாகும். பேய்ப்பீர்க்கிலைச்சாற்றில் கொள்ள கிருமிகள் விழும். மலபந்தந் தீரும்.

## குளிர் வருவதற்கு

குப்பைமேனியிலை, நொச்சிக்கொழுந்து, வேப்பிலை, துளசி யிலை, மிளகு, திப்பிலி, வெள்வெங்காயம் இவற்றைச் சரிகூட்டி அரைத்து உருண்டை செய்து மூன்று நேரம் கொடுக்கவும். கடும் பத்தியம் காக்கவும்.

## பிரமியத்திற்கு

நல்லெண்ணெய் படி இரண்டு, எலுமிச்சம்பழச்சாறு படி எட்டு, வெல்லம் பலம் ஒன்று, செந்தாளியிலை பிடி ஒன்று, இவற்றை அரைத்துக் காய்ச்சி மூன்று நாள் சாப்பிட்டு ஆறு நாள் பத்தியமாக இருக்க, வெள்ளைநோய் போம்.

## நீரடைப்பிற்கு

மேற்படி எண்ணெயுடன் முருங்கை இலையை அரைத்து எருமை மோரில் கொடுக்கத்தீரும்.

## சூலைக் கட்டுக்கு

கொழிஞ்சிச்சாறும் நல்லெண்ணெயும் சரி கூட்டி மூன்று நாள் கொண்டு, நான்குநாள் பத்தியம் காக்கவும்.

## வெள்ளை வெட்டைக்கு

புளியங்கொட்டைத்தோல், ஆவாரைவேர்ப்பட்டை, நாவல் வேர்ப்பட்டை, புளியம்வேர்ப்பட்டை இவற்றைச் சூரணித்து நல்லெண்ணெயில் கொள்ளவும்.

## நீரிழிவுக்கு

ஆவாரை, நாவல், கொன்றைப்பூ, அரசு, கட்டுக்கொடியிலை, முசுட்டை இலை, இவற்றைத் துவைத்துப் பிழிந்து சாப்பிடவும்.

## கணைச்சூட்டுக்கு

சாதிக்காய், சாதிப்பத்திரி, வெந்தயம், கிராம்பு, சதகுப்பை, கருஞ்சீரகம், ஓமம், இலாமிச்சம்வேர், கடுக்காய், கற்கடகசிங்கி, பெருமல்லி, வசம்பு, சுக்கு, மிளகு, திப்பிலி, சாஸ்திரபேதி, அதிமதுரம், பூவரசு, செங்கழுநீர், கோஷ்டம், வெங்காயம், செண்பகப்பூ, செஞ்சந்தனம், கல்நாற், கன்மதம், மாசிக்காய், இவற்றைச் சரிகூட்டி சூரணித்து பசுவின் நெய்யிலிட்டுக் காய்ச்சி இறக்கும்போது வெங்காயம் அரிந்துபோட்டு ஆறின பின்பு இறுத்துக் காசிடை கொள்ளவும். மயக்கம் உண்டானால் வெள்ளை ஆட்டு மோர் ஒரு சங்கு கொள்ளவும்.

## குஷ்டத்துக்கு

குன்றிமணி, அழிஞ்சிவிதை, காஞ்சொறிவிதை, துவரை விதை, பிரண்டைவிதை, கொடிகழல்விதை, பேய்ப்பீர்க்கின் விதை, மருகாரக்காய், இவை வகைக்கு வள்ளம் ஒன்று, சேங்கொட்டை (ஐந்நூறு) சிறுகிளாவயிரம், மிளகரணைவேர், செம்பருத்திவேர், சாயவேர், அழிஞ்சிவேர், இருபூலாவேர், எருக்கிலைவேர், கொடிவேலிவேர், உசிலம்பட்டை, கள்ளிப் பட்டை, விளாம்பட்டை, துடரிப்பட்டை, ஆயிலபட்டை இவை யாவையும் வகைக்குப் பலம் ஒன்றாகக் கொண்டு கூட்டி இடித்துக் குழித்துத் தைலம் எடுத்து அதில், ஒன்று முதல் இரண்டு துளி அரிசிமாவில் இட்டு, நாற்பது நாள் கொடுக்கத் தீரும். கைகண்டது.

## வெண் குட்டத்துக்கு

அவுரிவேர், கொடுவேலிவேர், சாறடைவேர், இம்மூன்றும் அரைத்து தயிரில் கொள்ளவும். அவுரியிலையும், கையாந்தகரை இலையும் சாறு பிழிந்து மேலே பூசவும்.

## பிள்ளை குறுக்கே விழுந்திறந்தால்

அதிமதுரமும் தேனும் கொடுக்கவும். வெள்ளெருக்கம் வேரை அரைத்துத் தொப்புளைச்சுற்றிப் பற்றிடவும்.



## கீரிப்புழு விழ

கொம்மட்டிப்பழவிதை படி இரண்டை நன்றாய் உலர்த்தி இடித்து சட்டியிலிட்டு நீர் விட்டுக் காய்ச்சி நீர் சுண்டிய பின் வருகிற எண்ணெயை எடுத்து அதில், காசிடை கொள்ள பேதியாகி, கிருமிகளெல்லாம் கூண்டோடு விழுந்து விடும். பேதி அதிகமானால் மோருஞ்சோறும் உண்ணவும்.

## சிவதைவேர்ச் சூரணம்

(1) சிவதைவேர்தோல் விராகன் இருபத்தேழு, கோவைக் கிழங்கு, வாய்விளங்கம், திரிகடுகு, கடுக்காய்த்தோல், ஏலம், லவங்கபத்திரி இவை வகைக்கு விராகன் ஒன்று, இவற்றைச் சூரணித்து சரியிடை சீனிகூட்டி வெருகடியளவு வெந்நீரில் கொள்ளப் பித்தம், குன்மம், சூலை, உஷ்ணம் பிரமியம், அக்கினி மந்தம், வாயு, சுவாசகாசம், மூலவாயு, தசவாயு முதலியன தீரும்.

(2) சிவதைவேர்ப்பட்டை விராகன் மூன்று, நிலாவரை விராகன் இரண்டு, கடுக்காய்த்தோல் விராகன் ஒன்று இவற்றைச் சூரணித்து, சீனி சரியிடை கலந்து, வெருகடி வெந்நீரில் கொள்ள, பேதியாம். மிளகுநீர் சாதம் சாப்பிடவும். இரவில் சாப்பிட்ட பின் சுக்குக் கஷாயம் சாப்பிடவும்.

(3) சுக்கு திப்பிலி, மிளகு, தான்றிக்காய், நெல்லிவற்றல், களிப்பாக்கு, கடுகுரோகணி, இந்துப்பு இவற்றை சரிகூட்டி சூரணித்து, அதற்குச் சரியிடை பசும்பாலில் மூன்று நாள் ஊற வைத்து உலர்த்தி இடித்த இடைக்குச் சரியிடை சிவதைச் சூரணம் சேர்த்துக்கூட்டி அத்துடன் சீனி, கொட்டைப்பாக்களவு பழம் புளி இவை சேர்த்து வெந்நீரில் கொள்ளவும். மிளகுநீர் சாதம் சாப்பிடவும்.

(4) சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், ஓமம், குராசானி ஓமம், இந்துப்பு, அதிமதுரம், கோஷ்டம், கடுக்காய்த்தோல், வாய்விளங்கம், கடுகுரோகணி, சீரகம், கொடிவேலிவேர்ப்பட்டை, இவை வகைக்குப் பலம் எட்டு, இவற்றின் சூரணத்துக்கு மூன்று பங்கு சிவதைவேர்ச் சூரணம் சேர்த்து, வெருகடியளவு வெந்நீரில் கொள்ளப் பேதியாம்.

(5) கண்டங்கத்திரிவேர், நிலையாவரைவேர், தூதுவளை வேர், மூக்காவளைவேர், வெள்ளைசாரணைவேர், தேசாவாரம்,

வளையலுப்பு, எவட்சாரம், வெடியுப்பு, புளியஞ்சாம்பல், நாயுருவிச்சாம்பல், எருக்கஞ்சாம்பல், தான்றிக்காய். சிற்றரத்தை இவைகளின் சூரணத்துக்கு மூன்று பங்கு சிவதைவேர்ச் சூரணம் கூட்டி வெந்நீரில் கொள்ள சகலவாயு, குன்மம், கவுசைக்கட்டி, நீராம்பல், மகோதரம், விச்சுளி, திரட்சி, சூலைமுட்டி, வாதவாயு, சூலை முதலிய நோய்கள் திட்டமாய்த் தீரும்.

## சர்த்தி பண்ணை

முருங்கைச்சாற்றுடன் பசுவின் பாலாவது வெள்ளாட்டுப் பாலாவது சரி கூட்டிக் கொடுக்க வாந்தி ஆகும்.

## சாதிலிங்க மாத்திரை

சாதிலிங்கம் ஒன்று, வெண்காரம் இரண்டு, ஆமணக்கு முத்துப்பருப்பு நான்கு, சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு எட்டு, பாங்காய்க் கூட்டி அரைத்து பயறளவு குளிகை செய்து தண்ணீரில் கொள்ளப் பேதியாகும். வெந்நீரில் கொள்ளப் பேதி கட்டும். வாதம் எண்பத்துநான்கு, குன்மம், கரப்பான் ஆகிய நோய்கள் தீரும்.

## நேர்வாள மாத்திரை

நேர்வாளத்தை வேண்டிய அளவு எடுத்து எருமைச்சாணிப் பாலிலும், காடியிலும், கற்றாழஞ்சோற்றிலும், மோரிலும், கோசலத்திலும் வேகவைத்து, பசுவின் பாலில் இரண்டு தரம் வேகவைத்து, ஒரு மாதம் சென்ற பின்பு, பாதரசம் விராகன் ஒன்றும், கந்தகம் விராகன் இரண்டும் கூட்டி கருப்பாகும் மட்டும் அரைத்து அத்துடன் பொரித்த வெண்காரம் ஒரு விராகன், திப்பிலி ஒரு விராகன், இவற்றிற்கு சரியிடை நேர்வாளம் இவற்றைச் சேர்த்து அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து, உலர்த்தி, ஒரு மாத்திரை தண்ணீரில் கொடுக்க, தாகம் அடங்கி பேதியாகும். அதிகரித்தால் வெந்நீரும் சோறும் உண்ணவும்.

**வேறு** :—நேர்வாளமுத்தைத் துணியில் முடிந்து சட்டியில் சாணிகரைத்து அதற்குள் முடிந்ததை வைத்து தண்ணீர் விட்டு சட்டிமூடி எரித்து. நீர் சுண்டியபின் எடுத்து, கழுவி, கற்றாழைக் குள் வைத்து முன்போல் எரித்து எடுத்துக் கழுவி, சிவனார் வேம்பு சமூலத்துக்குள் வைத்து பால் வார்த்து முன்போல் எரித்து எடுத்து கழுவி உலர்த்தி, பசுவின் பால் விட்டு அரைத்து



கம்பரிசியளவு மாத்திரை செய்து தூதுவளைவேர்க் கஷாயத்தில் இரண்டு மாத்திரை கொள்ளப் பேதியாகும். மிளகுநீர் சாதம் கொள்ளவும்.

## பேதியாக

சாரணைவேர், கூவிளம்வேர், காசுக்கட்டி இவற்றைச் சரி கூட்டி எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கொடுக்க வயிறு கழியும்.

**வேறு** :—கடுக்காய், களிப்பாக்கு, சுக்கு இவற்றிற்குச் சரியிடை உப்பு, அரத்தை இவற்றைச் சூரணித்து மோரில் கொள்ளக கிரிப்புழு, சீதம், பித்தம், இரத்தம், சுரம், மாறல் சுரம் இவைகள் தீரும்.

**வேறு** :—சீந்திற்றண்டு, கடுக்காய், சிவதைவேர், களிப்பாக்கு, சுக்கு, கடுகுரோகணி இவற்றைக் கிஷாயமிட்டுக்கொள்ளப் பேதியாகி மாந்தசுரம், சீதசுரம், வெப்புசுரம் எல்லாம் தீரும்.

## திருமேனிப்புழுவுக்கு

தும்பைச்சாறும், விளக்கெண்ணெயும் கலந்து கருப்புக் கட்டி சேர்த்து விழுங்க வயிற்றுப் புழு நோய் தீரும்.

## மூலத்திற்கு

காட்டுக்கருணை, கறிகருணை, மெருகன்கிழங்கு, சேமைக் கிழங்கு, புளிநரளைக்கிழங்கு இவற்றினை மேற்றோல் நீக்கி சமனிடை சேர்த்தரைத்து, பசுவின் நெய்யில் சிவக்க வேக வைத்து, அதற்குச் சரிபாதி சர்க்கரை சேர்த்துக் கிண்டி லேகியம் செய்து, கொட்டைப்பாக்களவு பத்து நாள் கொள்ள மூலம் தீரும்.

**வேறு** :-பெண்பிரண்டையைக் கணுநீக்கி அரைத்து அதைப் பன்றி நெய்யில் பதமாய் வேகவைத்து, பனைவெல்லம் பாதி போட்டுக் கிண்டி, காலையில் சாப்பிடவும்.

**வேறு** :-நாயுருவிவேர் பலம் நூறு கொண்டு வந்து துவைத்து இரண்டு மரக்கால் நீரிலிட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வடித்து. சிறுகாஞ் கொடிவேலிவேர், சிவதைவேர், பொன்முசுட்டைவேர், சிறுகாஞ்சொறிவேர், புங்கம்வேர், பிரண்டைவேர், ஆயில்பட்டை, அரசம் பட்டை, மருள்க்கிழங்கு, புளிநரளைக்கிழங்கு, காட்டுக்கருணைக்

கிழங்கு, இவை வகைக்குப் பலம் இரண்டு இடித்து நாலு படி நீரிலிட்டு ஒரு படியாகக் காய்ச்சி இருத்து, இரண்டு நீர்களையும் ஒன்றாகச் சேர்த்து, இந்துப்பு, நேர்வாளம், திரிகடுகு, திரிபலை, மஞ்சள், கடுகு இவை வகைக்கு விராகன் இரண்டு பால் வார்த்து அரைத்துச் சேர்த்து, அந்நீரில் கலக்கி, அத்துடன் நாழி நெய் விட்டு மூன்று நாள் மெதுவாய் எரித்து மெழுகுபதத்தில் இறக்கி வடித்துக் கொண்டு, அதனில் நான்கு காசிடை, வீதம் சாப்பிட ஐந்துவகை மூலம், வாயு, விப்புருதி, குதத்திலுள்ள சகல நோய்கள் எல்லாம் தீரும். இச்சாபத்தியம். கைகண்டது.

**வேறு** :—சிறுமூலம், சித்திரமூலம் இரண்டையும் பசுவின் பாலில் அரைத்து மெழுகு பதமாக்கிக் கிண்டி தூதுவளங்காயளவு தேனில் பத்து நாள் சாப்பிடவும். பத்து நாள் பத்தியம் இருக்கவும்.

**வேறு** :—கிராம்பு, நேர்வாளம், உமிக்கரி இவற்றை சூரணித்துச் சுண்ணாம்பு சேர்த்து மத்தித்துத் தடவி வரத் தீரும்.

**வேறு** :—சுக்கு, சாதிக்காய் இவற்றை நல்லெண்ணெய் தெளித்து வறுத்து நல்லெண்ணெய் வார்த்து அரைத்து, கழற்சிக்காய் பிரமாணம் உண்டைசெய்து நல்லெண்ணெயில் குழப்பி மூன்று நாள் உண்ணத் தீரும்.

**வேறு** :—நாயுருவி விதை படி ஒன்றில் சிறிது பசுவின் நெய் விட்டு வெதுப்பி அரைத்து அத்துடன், கடுகுரோகணி, கற்கடசிங்கி, கடுக்காய், பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளுள்ளி, இந்துப்பு, சீரகம், கடுகு இவைகள் வகைக்குப் பலம் ஒன்றாகக் கொண்டு பொடித்துக் கூட்டி, பிரண்டைச்சாறு விட்டரைத்து. இரண்டு படி நெய்விட்டுக் கரைத்து மெழுகு பதமாய்க் காய்ச்சி, வடித்து, வேளைக்கு ஒரு கரண்டி வீதம் இரண்டு வேளையும் கொள்ளவும்.

**புகை** :—நல்லபாம்புச்சட்டை, ஓமம், வெள்ளுள்ளி, வேப்பிலைச்சருகு இவைகளைச் சமனாகப் பொடித்து வேண்டிய அளவு புளியந்தணலிலிட்டு ஆசனவாயில் புகையைக்காட்ட, கடுப்பு, காந்தல் இவை தீரும். மூலமும் போம்.



**வேறு** :—நிலத்தில் சிறுகுழி தோண்டி புளியஞ்செதில் போட்டுத் தணலுண்டாக்கி ஏந்திரக்கால் துவாரத்தை மேல் பக்கமாக வைத்து, பன்றி நெய் தணலிலிட்டு ஆசனவாயில் புகை பிடிக்கக் கடுப்பு முதலியவை தீரும்.

## மூல முளைக்கு

துத்தம், சீனக்காரம், களிப்பாக்கு இவை வகைக்கு விராகனிடை ஒன்று, இவற்றைச் சுட்டு முலைப்பாலில் அரைத்து மூல முளை (அணி) யிற்றடவிவர ஆணி விழும்.

**வேறு** :—கௌரிப்பாஷாணம் விராகன் அரை, காவிக்கல் விராகன் இரண்டு இவற்றைப் பொடித்து விளக்கெண்ணெயில் குழப்பி மூன்று நாள் ஆறுபொழுது தடவி நான்காவது நாள் செம்பையிலையை விளக்கெண்ணெயில் வதக்கிக் கட்ட முளை விழுந்துபோம். விழாமலிருந்தால் தயிரும், சோறும் வைத்துக் கட்டவும், புளியிலையை வதக்கிக் கட்டவும் விழும். கைகண்டது.

**வேறு** :—மேற்றோல் நீக்கிய கார்த்திகைக்கிழங்கின் மேல் சிவந்த கோழிக்காரத்தைப் பூசி ஆசனவாயில் மூன்று நாள் வைத்தால் முளை கரைந்து விழும். பத்தியம்: பசுவின் பால், நெய் கூட்டவும்.

**வேறு**:-வெள்ளைப்பாஷாணம் கழஞ்சு ஏழுகொண்டு எருக்கன் கொழுந்து சேர்த்து சட்டியிலிட்டுச் சிவக்க வறுத்து சூரணித்து விரலில் தடவி ஆசனவாயின் முளையில் தேய்த்து வரவும். முளை விழுந்த பின் தயிருஞ்சோறும் வைத்துக்கட்டி எண்ணெயும் தடவவும்.

**வேறு** :—காடாத்திவேர், வேப்பம்பட்டை, மிளகு இவற்றை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி ஆசன வாயில் தடவிவர வலி தீரும்.

## மூலத்திற்கு

**திரி** :—கௌரிப்பாஷாணம் விராகன் ஒன்றை, ஊமத்தையிலைச்சாறு படி மூன்றில் போட்டுக் காய்ச்சி எடுத்துப் பின்பு பாகவிலைச்சாறு படி மூன்று விட்டுக் காய்ச்சி எடுத்துக்கொண்டு பயறளவு கொம்மட்டிக்காய்ச்சாற்றில் அரைத்து குச்சியில் பஞ்சு

சுற்றி மேலே நூலால்க் கட்டி அதில் மேற்படி மருந்தைத் தடவி ஆசனத்துள் வைப்பதற்கு முன்பு தயிரும், சோறும் வயிறு நிரம்பச் சாப்பிட்டுப் பின்பு வைக்கவும்,

**எண்ணெய் :**—இரண்டு தேங்காயைக் கண்திறந்து நீரை ஊற்றிவிட்டு, அதற்குள் **கள்ளிப்பால் நிறைய**விட்டு, வெள்ளாட்டெருவில் பதினைந்து நாள் புதைத்து எடுத்து, உடைத்துக் கீறி எடுத்து வறுத்து மெழுகுபதத்தில் இறக்கி எடுத்த எண்ணெயில் நாள் ஒன்றுக்கு மூன்று துளி, கருப்பு அரிசிமாவில் வைத்துச் சாப்பிட, உள்மூலம் விழும். மயக்கமானால் முருங்கையிலையை உப்பில்லாமல் அவித்து தண்ணீர் இருத்துக் குடிக்கவும். கைப்பு புளி நீக்கவும்.

**சூரணம்:**-காட்டுக்கருணைக்கிழங்கு, நிலவாகைவேர், மெருகங்கிழங்கு, மருள்கிழங்கு, கோவைக்கிழங்கு, அமுக்கராக்கிழங்கு, அப்பைக்கோவைக்கிழங்கு. சாரணைவேர், சங்கம்வேர், கொடிவேலிவேர், காட்டுமல்லிவேர், புளிநரணைக்கிழங்கு இவை வகைக்குப் பலம் ஐந்தை, மேல்தோல் நீக்கிக் காயவைத்துச் சூரணித்து அத்துடன் சுக்கு, திப்பிலிமூலம், பெருங்காயம், ஓமம், வெள்ளுள்ளி, காட்டுச்சீரகம், கருஞ்சீரகம், நற்சீரகம், சிற்றரத்தை, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு, கடுகுரோகணி, இந்துப்பு, கந்தகம், கன்மதம், கல்நாற், கடுக்காய், தேவதாரம், தான்றிக்காய், வசம்பு, மஞ்சள், மிளகு இவை வகைக்கு விராகன் ஒன்று சேர்த்துப் பொடிசெய்து, முன்மருந்துடன் கூட்டி, வேளை ஒன்றுக்கு வெருகடிப்பிரமாணம் தேனிலாவது, இஞ்சிச்சாற்றிலாவது, காலை மாலை பதினாறு நாள் சாப்பிட, ஆறுவகை மூலமும் தீரும். பத்தியம் : கருணைக்கிழங்கு, வாழைக்கச்சல் சேர்க்கவும். கைகண்டது.

**கோழிக்கறி :**—ஒரு கருங்கோழியின் தலை, கால், குடல், மயிர் இவை நீக்கிச் சதையை ஒரே அளவாகத் துண்டித்து அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, வெண்காரம், சீனிக்காரம், நெல்லிவற்றல், கருஞ்சீரகம், நற்சீரகம், கொடிவேலிவேர், சாரணைவேர், இவைகளைச் சமனிடையாகச் சூரணித்துச் சேர்த்துக் கறிக்கு வேண்டிய அளவு கூட்டிப் பிசைந்து வேகவைத்துச் சாப்பிட மூலம் தீரும்.



**நெய் :**—பசுவின் நெய், பசுவின் பால் இவை வகைக்குப் படி இரண்டு, பிரண்டை, நன்னாரி, கொடும்பை, அதிமதுரம், கோஷ்டம், பெருங்குறும்பை, செண்பகப்பூ, வேர் இவை வகைக்கு ஐந்து பலமாகக் கொண்டு முறைப்படி நெய்யும், பாலுங்கூட்டி மெழுகுபதமாகக் காய்ச்சி இறுத்துக் காசிடை வீதம் இரண்டு வேளையும் கொள்ளத் தீரும்.

## மூல முளைக்கு ஊடு

பொரித்த வெங்காரத்தை முலைப்பாலில் அரைத்து மூல முளைக்கு மேலூடு போட்டு, ஆரைக்கீரையை அவித்து வைத்துக் கட்டவும்.

## மூலத்திற்கு

சாரணைக்கிழங்கு, மருள்க்கிழங்கு, பிரண்டைக்கிழங்கு, கொடிவேலிக்கிழங்கு, புளிநரளைக்கிழங்கு இவற்றைப் பசுவின் பாலில் அரைத்துக் குடிக்கவும்.

**வேறு :**—தகரவிதை, காசுகட்டி, அபினி இவைகளைச் சமன் கூட்டி வாழைக்காய்ச்சாற்றில் அரைத்துப் பருத்திக்கொட்டை அளவு குளிகை செய்து, மூன்று நாள் ஆறுவேளை, இளவெந்நீரில் ஒரு குளிகை சாப்பிடவும்.

## பவுத்திரத்திற்கு

நிலவாகைச்சூரணம் வெருகடியளவு வெந்நீரில் கொள்ளவும். எருமைக்கிடா மாமிசத்தைத் தேற்றாம்விதைப் பிரமாணம் தழலிலிட்டு மூன்று நாள் இரண்டு நேரமும் மூலத்திற்குப் புகை பிடித்துப் பின்பு மேற்படி மருந்தைச் சாப்பிடவும்.

**வேறு :**—கருஞ்சீரகம் பணவிடை இரண்டை, பருத்தியிலைச் சாற்றில் அரைத்து, வெள்ளைச்சீலையி லூட்டி பவுத்திரப்புண்ணில் வைக்கப் புண் உலரும். பின்பு இரசம் கழஞ்சு ஒன்றை பருத்தியிலைச்சாற்றிலிட்டு வறுத்துச் சாம்பலாக்கி, ஊமத்தஞ்சாறு விட்டுக் குழைத்துத் தினம் இரண்டு பணவிடை புண்ணில் போடவும். இப்படி நாலைந்து நாள் பூசவும். அப்பொழுதும் உலராது இருந்தால் பருத்திக்கொட்டையை வறுத்துக்கட்டவும்.

## கொடிப்பவுத்திரத்திற்கு

இரசம் பணவிடை அரையை, முருக்கிலைச்சாற்றில் நன்றாய்ச் சாம்பலாக முறித்து, தேங்காயிலிட்டு நல்லெண்ணெய் சேர்த்துச்

சூரிய புடம் வைத்துப் புண்ணில் விட்டு ஊதி, விடவும். இவ்வாறு எட்டு நாள் ஊதிவரப் புண்ணுறி விடும்.

## சீதக் கழிச்சலுக்கு

உசிலம், அதிவிடையம், காசுக்கட்டி, இலவங்கப்பட்டை, அதிமதுரம், ஏலம், சீரகம், சுக்கு, கடுகு, ஓமம், பொடுதலைக்காய், மாம்பருப்பு இவை வகைக்கு விராகன் இரண்டு, விளாம்பிசின், இலவம்பிசின் இவை வகைக்கு விராகன் நாலு, அபினி விராகன் ஒன்று இவற்றைப் பொடித்து, விதை நீக்கிய மூன்று மாதுளங்காய்க்குள் வைத்து மூடி கயிறு கொண்டு கட்டி காய் தெரியாமல் எருமைமோர் வார்த்து வேகவைத்து எடுத்து அரைத்துச் சுண்டைக்காயளவு மாத்திரை செய்து எருமைத்தயிரில் கொள்ளவும், நிற்காவிட்டால், வாழைப்பூவை நரம்பு நீக்கிப் பிட்டுக் கட்டி வேகவைத்துப் பிழிந்த சாற்றில் மூன்றுநாள் கொடுக்கத் தீரும். பத்தியம்: வாழைக்கச்சல், கருணைக்கிழங்கு சேர்க்கவும்.

வேறு:-ஒரு குன்றி அபினியை மாதுளம்பிஞ்சுக்குள் வைத்து மூடி கொட்டையிலே ஏழு, மேலே சுற்றி உமிநெருப்பில் சுட்டு எருமைத்தயிரில் அரைத்து கொடுக்கவும். இப்படி மூன்றுநாள் கொடுக்கவும். பத்தியம்: தயிர்சாதம் சேர்க்கவும்.

## அதிசாரம், கிரகணி, சீதக்கழிச்சல், மந்தம் இவற்றிற்கு

அதிவிடையம், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, பெருமரப்பட்டை, வில்வப்பழச்சதை, மாதுளைஓடு, கோஷ்டம், வட்டத்திருப்பிவேர், விளாம்பிசின், காசுக்கட்டி, திப்பிலிமூலம், குராசானி ஓமம், லவங்கப்பட்டை, ஏலம், சிற்றரத்தை, சித்திரமூலம், வாய்விளங்கம், புளியங்கொட்டைத்தோல், சுக்கு, மிளகு இவை வகைக்கு விராகன் ஒன்று, இவைகளை வெதுப்பிச் சூரணித்து, அதில் ஒரு சிட்டிகையை மாதுளையிலையும், சீரகமும் சேர்த்திட்ட கஷாயத்திலாவது, தயிரிலாவது கொடுக்கத் தீரும்.

## கிரகணி வகைகளுக்கு பஞ்சகோல கிருதம்

சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், எவட்சாரம் இவை வகைக்குப் பலம் ஒன்று கொண்டு அத்துடன் பதக்குநீர் விட்டு எட்டிலொன்றாய்க் காய்ச்சி, அதில் பசுவின் பால், நெய் இவை வகைக்குப் படி ஒன்று சேர்த்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து, வேளை ஒன்றுக்குக் காசிடை வீதம் கொள்ளக் குன்மம், சுரம், கிரகணி, பாண்டு, பீலிகை, சுவாசகாசம் இவை தீரும். இச்சாபத்தியம். கைகண்டது.



## இரத்தக் கிராணிக்கு

திரிகடுகு, அதிவிடையம், ஓமம், குராசானி, சாதிக்காய், சாதிப்பத்திரி, தாளிசப்பத்திரி, இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம், வால்மிளகு, மான்கொம்பு, சிறுநாகப்பூ, கறிவேம்பு, சீரகம், கொத்தமல்லி இவை வகைக்கு விராகன் ஒன்று, இவற்றைச் சூரணித்துக் கற்கண்டு பலம் ஒன்றேகால் சேர்த்து, வெருகடியளவு தேனில் கொள்ள, கடுப்பு, பேதி, உளைச்சல், சீதக்கடுப்பு, இரத்தக் கடுப்பு எல்லாந் தீரும்.

## சலக்கழிச்சலுக்கு

ஏலம், சீரகம், கோஷ்டம், அதிமதுரம், கூகைநீறு, செண்பகப்பூ, இலவங்கப்பட்டை, கோரோசனை, கற்பூரம், சந்தனம், பாதிரிப்பூ, முந்திரிப்பழம், வெட்டிவேர், இலாமிச்சம் வேர், நெல்லிவற்றல், கலைக்கொம்பு, வெங்காரம், செஞ்சந்தனம், சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், இலவங்கப்பத்திரி இவைகளைச் சமனிடையாகச் சூரணித்து, வெருகடியளவு, இளநீர், சீரகச்சூரணம், கொதிநீர், நீர்மோர், வெந்நீர் இவற்றுள் ஒன்றில் கொடுக்கச் சலக்கழிச்சல், நீர்வேட்கை, நீரெரிவு, நீர்கடுப்பு, நீரிழிவு, எலும்புருக்கிநோய், உட்காய்ச்சல் முதலிய நோய்கள் தீரும்.

## அதிசாரத்திற்கு

மலைத்தாங்கிவேர், முத்தக்காசு, அத்திப்பட்டை, நீர்புலா வேர், நாவல்பட்டை, மாதுளங்கொழுந்து, மாதுளைப்பிஞ்சு, இருவேலி, இலாமிச்சம்வேர், அரசம்பட்டை, மாம்பட்டை, ஏலம், அதிவிடையம், வேர்க்கொம்பு கொட்டம், சீரகம், அதிமதுரம், காசுகட்டி இவைகளை முறைப்படி கஷாயமிட்டுக் கொடுக்கக் கழிச்சல், அதிசாரம் தீரும்.

புளியாரை நெய்:—புளியாரைச்சாறு, குருணி ஒன்று, தயிர் படி நாலு, நெய் படி நாலு, இவைகளைக் கலந்து அதில் பெருங்காயம், அதிவிடையம், திரிகடுகு, இந்துப்பு, எவச்சாரம், கிராம்பு, சாதிக்காய், வெட்பாலைஅரிசி, திப்பிலி, திப்பிலிமூலம், மரமஞ்சள், மாதுளம்பூ, லவங்கம் இவை வகைக்குக் காசிடை

ஐந்து சேர்த்து அரைத்துக் கரைத்து மெழுகுபதமாகக் காய்ச்சி, வடித்து, இரண்டுக் கரண்டி வீதம் காலை மாலை கொள்ள. அதிசாரம், கிராணி இவை தீரும்.

## விஷபேதிக்கு

நன்றாய் வெந்த சுண்ணாம்புக்கல்லைப் பானையில் இட்டு நிரம்பத் தண்ணீர்விட்டு நீற்ற பின் ஐந்து விளாங்காயளவு எடுத்து உருட்டி சட்டியிலிட்டு தண்ணீர்விட்டுக் கரைத்து இராத்திரி பனியில் வைத்து, காலையில் வடித்து, சட்டியைக் காயவைத்து சுண்ணாம்புத் தண்ணீரைவிட்டு முறித்து, இப்படி மூன்றுதரம் முறித்த பின்பு, ஆறவைத்துப் பீங்கானில் வைத்துக் கொண்டு, பெருவாரியாக வரும் கழிச்சலுக்கு கால் படி நீரில் கொஞ்சம் வெண்ணெய் போட்டுக்கொள்ள சலக்கழிச்சல், சயித்தியம் இவை தீரும்.

## சூதகவாயு வகைக்கு

தாளிசப்பத்திரி விராகன் நாலு, மிளகு விராகன் ஒன்று, சுக்கு விராகன் மூன்று, திப்பிலி விராகன் நாலு, கிராம்பு விராகன் ஐந்து, திப்பிலி மூலம் விராகன் ஆறு, வாய்விளங்கம், ஏலம், திரிபலை, முத்தக்காசு, இலவங்கப்பத்திரி இவை வகைக்கு விராகன் ஒன்று, சிவதைவேர் விராகன் பத்து, இவற்றைச் சூரணித்து, ஐந்து விராகனிடை வெந்நீரில் கொள்ள, பக்கவாயு, மூலவாயு, சூதகவாயு, வாதபித்தம், மந்தாக்கினி எல்லாந் தீரும்.

## பாண்டு வகைக்கு

நெல்லிவற்றல் சேர் ஒன்று, தானிக்காய் சேர் இரண்டு, கடுக்காய் சேர் எட்டு, திப்பிலி சேர் நாலு, சுக்கு பலம் ஒன்று, மிளகு பலம் இரண்டு, மண்டூரம் பலம் இரண்டு இவற்றின் சூரணத்துக்குச் சமனிடை பனைவெல்லம் சேர்த்து, லேகியம் செய்து சுண்டைக்காயளவு, இரண்டு நேரமும் கொள்ளவும். சுவையின்மை, சோகை, காமாலை, பாண்டு, கிராணி இவை தீரும்.

## வாயுக் கழிச்சலுக்கு

முருங்கையீர்க்கு படி ஒன்று கொண்டு வந்து அதன் அடியும், நுனியும் நீக்கிச் சட்டியிலிட்டு பொன்னிறமாய் வறுத்து, ஒரு பலம் ஓமம் போட்டுப் பொரியும் போது ஒரு படி நீர் விட்டு கால் படியாகக் காய்ச்சி, மூன்று வேளை கொடுக்கத் தீரும்.



## உஷ்ணவாயு வகைக்கு

வாழைச்சருகு ஒரு குத்து எடுத்துச் சட்டியிலிட்டு நெருப்புப் பற்றி எரிந்த பின், சுக்கு ஒரு துண்டு, வசம்பு ஒரு துண்டு போட்டு பற்பமாக்கி, ஓமம் உள்ளங்கையளவு போட்டுப் பற்பமாக்கி ஒரு படி நீர் விட்டுக் கால் படியாகக் காய்ச்சி, மூன்று வேளை கொள்ள உஷ்ணவாயு, கழிச்சல், சூதகவாயு இவை தீரும்.

## அதிசாரத்திற்கு

தயிர் படி இரண்டு, நெய் படி எட்டு, ஓமம், கருஞ்சீரகம், பெருங்காயம், கடுக்காய், திப்பிலி, புங்கம்வேர், வட்டத்திருப்பி வேர் இவை வகைக்குப் பலம் ஒன்று; சுக்கு விராகன் மூன்று இவற்றைப் பொடித்து எட்டு மரக்கால் நீர் விட்டு நாலொன்றாகக் காய்ச்சி வடித்து அதில் திப்பிலி, தேசாவாரம், சீரகம், கருஞ்சீரகம், மாசிக்காய், அதிமதுரம், மரமஞ்சள், வெப்பாலையரிசி, சிற்றரத்தை, வட்டத்திருப்பிவேர் இவை வகைக்கு விராகன் ஆறு இவற்றை அரைத்துக் கலக்கித் தயிர், நெய் கூட்டி, மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து, கரண்டியளவு கொள்ள. குருதி, சீதம், அதிசாரங்கள் எல்லாந் தீரும்.

**வேறு**:—வட்டத்திருப்பி, முத்தக்காசு, மலைவேம்பு, மாதுளை, காசுக்கட்டி, சுக்கு, கார்எள்ளின்பொரி இவற்றைச் சூரணித்து திரிகடி தயிரில் கொள்ளவும் தீரும்.

## வலியுடன் வயிறு கழிதற்கு

பாலரசம்பட்டை பலம் முப்பத்திரெண்டில் பதக்கு நீர் விட்டு நாழியாகக் காய்ச்சி வடித்து அதில் பாலரசிலைத்தண்டு விராகன் பதினாறு அரைத்துப் போட்டு, நெய் படி ஒன்று விட்டு பதமாய்க் காய்ச்சி, வடித்து கரண்டியளவு கொள்ள ; குருதி, சீதம், வலியுடன் வருங்கழிச்சல் எல்லாந் தீரும்.

## அதிசார வகைக்கு

சுக்கு பலம் பத்து, ஆயில்பட்டை பலம் இருபது, இவற்றைப் பொடித்து, குருணி நீரிலிட்டு, நாலொன்றாய்க் காய்ச்சி, வடித்து, தயிர் உரி ஒன்று கலந்து, திரிகடுகு, பெருங்காயம், செவியம், கொடிவேலிவேர், ஓமம், அரிசிதிப்பிலி, திப்பிலிமூலம், எவச்சாரம் இவை வகைக்கு விராகன் இரண்டு அரைத்துப்போட்டு நெய் படி இரண்டு சேர்த்து மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்து,

வேளை ஒன்றுக்கு மூன்று பலம் நெய்யாக மண்டலம் கொள்ள, அதிசாரம், கிரகணி, சோகை, பாண்டு, வயிற்றுவலி, முருக்குவலி எல்லாந் தீரும்.

## வயிறு கழிதலுக்கு

கடுகு, புங்கம்பட்டை, கடம்புப்பட்டை, நாவல்பட்டை, அத்திப்பட்டை இவற்றைக் கஷாயமிட்டுக் கொள்ள கழிச்சல், இரத்தம், சீதம் விழுதல் இவை தீரும்.

## சகல கழிச்சலுக்கும்

பருத்திப்பிஞ்சு, சாதிக்காய், கிராம்பு, வசுவாசி, அதிவிடயம், ஓமம், வெங்காரம், இலந்தைக்கொழுந்து, கையாந்தகரை இவற்றை அரைத்து, கழற்சிக்காய் அளவு, தேனில் கொள்ளவும்.

## கடுப்புக் கழிச்சலுக்கு

நல்லெண்ணெயில், மிளகை வேகவைத்து எடுத்து அரைத்து மூன்றுநாள் கொட்டைப்பாக்களவு கொள்ளவும்.

**வேறு :**—நல்லெண்ணெயில் இரண்டாய் வெட்டிய ஒரு சாதிக்காயும், நற்சீரகம் ஒரு பிடியும் போட்டுப் பொன்னிறமாய் வேகவைத்து எடுத்து அரைத்து புன்னைக்காய் அளவு மேற்படி எண்ணெயில் குழைத்து மூன்று நாள் கொள்ள இது நிற்கும்.

## குக்கில் சுத்தி

வேப்பம்பட்டை, சீந்தில்தண்டு, பேய்புடல், கண்டங்கத்திரி, ஆடாதொடை இவற்றை இடித்து பானையிலிட்டு குருணி நீர் விட்டுக் காய்ச்சி வடிக்கட்டி, அதன்மேல் குக்கிலை வைத்து மூடி சீலைமண் செய்து இரவில் ஒரு சாமம் காடாக்கினியாக எரித்து காலையில் எடுத்துக் கழுவி உலர்த்தி இப்படி மற்ற நான்கிலும் எரித்து எடுத்து, பசுவின் பாலில் வேகவைத்துக் கழுவி உலர்த்திக் கொள்ளவும்.

## குக்கில் நெய்

சுத்திசெய்த குக்கில் பலம் ஒன்றேகால், விழலரிசி படி ஒன்று, வட்டத்திருப்பிவேர், வாய்விளங்கம், தேவதாரம், அரிசித் திப்பிலி, சத்திச்சாரம், எவச்சாரம், மஞ்சள், செவியம், சாதிக் காய், சாதிப்பத்திரி, இலவங்கம், திப்பிலி மூலம், அதிவிடையம், கொத்தமல்லி, பிராயன்வேர் இவை வகைக்குப் பலம் ஒன்றேகால்



நன்றாகப் பொடித்து, பசுவின் பாலில் அரைத்து அத்துடன் பால், நெய் இவை வகைக்குப் படி ஒன்று சேர்த்து மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து, வேளைக்குக் கால் பலம் வீதம் கொள்ள, குட்டம், குன்மம், பவுத்திரம், பல் கிரந்தி, சூலை, மகோ தரம், கண்டமாலை, யோனிப்புற்று, வெகுநாளாருத சிலந்தி, க்ஷயம், காசம், சுவாசகாசம், அரோசகம், வாந்தி, உளைமாந்தை, நீர்பீனிசம், சோகை, பாண்டு, அதிசாரம் இவைகள் தீரும். பத்தியம் : கிரமமாய் நடக்க வேண்டியது. புளியாகாது.

## சூதக வாயுவுக்கு

திரிகடுகு, சித்திரமூலம், கருஞ்சீரகம், கார்போகரிசி, கடுகு ரோகணி, கொத்தமல்லி, வாய்விளங்கம், சதகுப்பை, மரமஞ்சள், இந்துப்பு, வால்மிளகு, சடாமாஞ்சி, நற்சீரகம், அதிமதுரம், கோஷ்டம், யானைத்திப்பிலி, ஏலம், சிறுநாகப்பூ, பெருங்காயம், வெள்ளுள்ளி, பெருநாகப்பூ இவற்றை சமனிடையாகச் சூரணித்து பொடுங்குரும்பை, பெருமருந்து, சங்கதாரி, அமுக்கரு, கைகொட்டிவேர், இவை வகைக்குப் பலம் இரண்டு,இவற்றையும் சூரணித்துடன் கலந்து புது மண்பானையில் வைத்துக்கொண்டு வேளைக்கு வெருகடியளவு ஏழு நாள் கொள்ள தேகக்கடுப்பு, வலிப்பு, குத்தல், குடைச்சல், சூதக சம்பந்தமான வாயுக்கள் சகலமுந் தீரும். கைகண்டது.

## வாத சூலைக்கு

தேங்காய்ப்பால் படி எட்டும், சங்கங்குப்பிச்சாறு படி எட்டும் கலந்து மூன்று நாள் ஆறு வேளையாகக் கொள்ள வாத சூலை தீரும்.

## நீரிழிவுக்கு

ஆவரைப்பஞ்சாங்கம் உலர்த்தி சூரணித்து பத்து நாள் வெருகடியளவு தேனில் கொள்ள நீரிழிவு தீரும்.

**வேறு :**—கடம்பைவேர் எலுமிச்சங்காயளவு அரைத்துப் பத்து நாள் எருமை மோரில் கொள்ளத் தீரும்.

**வேறு :**—சங்கங்குப்பியிலைச்சாறு படி கால். இத்துடன் நல்லெண்ணெய் ஆழாக்கு சேர்த்து மூன்று நாள் குடித்து, மூன்று நாள் பத்தியம் இருக்கத் தீரும்.

## மேக நீரிழிவுக்கு

ஆவரைவேர்ப்பட்டையை பசுவின் பாலில் அரைத்து மேற்படி பாலில் கலக்கிச் சாப்பிட ஏழு நாளில் மேக நீரிழிவு தீரும்.

## மது மேகத்திற்கு

செம்முள்ளிவேர்ப்பட்டையை பசுவின் பாலில் அரைத்துக் கரைத்து பத்து நாள் கொள்ள. மதுமேகம், எலும்புருக்கி, நீர்மேகம், மகாமேகம் முதலியன தீரும். இது சித்தர்மூலி. பத்தியம்: உப்பு, மிளகு, எருமைத்தயிர், மோர் இவை கூட்டவும்.

**வேறு:**—சீரகம் விராகன் இரண்டை தாழைவிழுதுச் சாற்றில் அரைத்துக் கரைத்து பனைக்கருப்புக்கட்டி சேர்த்து ஆறு வேளை சாப்பிடத் தீரும்.

## மேகங்களுக்கு

நெய்ச்சட்டிவேர் விளாங்காயளவு ஒரு சேர் வேப்பெண்ணெயில் கரைத்து மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்து அந்தி சந்தி ஓர் கரண்டியளவு பத்து நாள் கொள்ள மேகரோகங்கள் தீரும்.

## யோனியில் நீரொழுகலுக்கு

கற்றாழஞ்சோறும், சீனிச்சர்க்கரையும் சமமாகக் கலந்து ஆறு நாள் சாப்பிடத் தீரும். இச்சாபத்தியம்.

## நீர்க்கிருச்சிர வகைக்கு

பெரும் பூசனிக்காய்ச்சாறு, கரிப்பான்சாறு, தாமரை வளையச்சாறு இவை வகைக்குப் படி நாலும், முசுமுசுக்கைச் சாறு, ஓரிலைத்தாமரைச்சாறு இவை வகைக்கு படி இரண்டும், சதாவரிச்சாறு படி நாலும் சேர்த்து; அதிமதுரம், கோஷ்டம், செண்பகப்பூ, லவங்கம், சாதிக்காய், மஞ்சிட்டி, சிறுதேக்கு, குங்குமப்பூ, சாஸ்திரவேதி, இலுப்பைப்பூ, சீரகம், சிறுநாகப்பூ, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், நவச்சாரம், கூகைநீர், கடுகுரோகணி, இருவேலிவேர், இலாமிச்சம்வேர், அமுதவெள்ளிக்கிழங்கு, கொட்டிக்கிழங்கு, தாமரைத்தாது, வெப்பாலையரிசி, கொத்தமல்லி, கடுக்காய், சுக்கு, திப்பிலி, அரத்தை, சந்தனம், நன்னாரி இவை வகைக்கு விராகன் மூன்றை,



மேற்படிச் சாற்றால் அரைத்துக் கூட்டி அத்துடன் பசுவின் பால் படி நாலும், நெய் படி மூன்றும் சேர்த்து அதில் கரைத்து மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்து சீனிச்சர்க்கரை சேர்த்துச் சாப்பிட்டுவர மூத்திரகிருச்சிரம், இரத்தமூத்திரம், தாதுநட்டம், பித்தவறட்சி, உடம்பு வற்றுதல் இவைகள் தீரும்.

## கடிகளுக்கு மேல்பூச்சு

அரைச்சிறங்கை எள்ளில் கள்ளிப்பால் வேண்டிய அளவு வார்த்து உலர்த்தி வறுத்துப் பொடித்து நல்லெண்ணெயில் குழைத்துப்பூசக் கடி தீரும்.

## மேகவெட்டை, வெள்ளைக்கு

நல்லெண்ணெய் படி ஒன்று, நுணாயிலைச்சாறு படி கால், செம்பருத்தியிலைச்சாறு படி கால், வெள்ளுள்ளி பலம் ஒன்று, மிளகு பலம் மூன்று இவற்றை அரைத்துக் கரைத்து மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்து வேளை ஒரு கரண்டியளவு மூன்று நாள் ஆறு வேளை கொள்ளவும்.

## வயிற்று நோய்களுக்கு

அரத்தை, ஓமம், கண்டங்கத்திரிவேர், முருங்கைவேர், பேய்ப்பீர்க்கு இவற்றைச் சரிகூட்டிக் கஷாயம் செய்து கொள்ள கள முள வென்கிறதும், வயிற்று இசிவும் விட்டுப் போம்.

## வெட்டைக்கு

நல்லெண்ணெய், பசுவின் பால் இவை வகைக்குப் படி இரண்டு, கரிப்பான்சாறு, கொடுப்பைச்சாறு இவை வகைக்குப் படி ஒன்று, நெல்லிக்காய்ச்சாறு படி இரண்டு. ஆதண்டையிலைச் சாறு, நொச்சியிலைச்சாறு இவை வகைக்குப் படி கால், முசு முசுக்கைச்சாறு படி ஒன்று, அதிமதுரம் பலம் இரண்டு, கஸ்தூரி மஞ்சள் பலம் இரண்டு, முள்ளிலவின்பிசின் பலம் ஒன்றேகால், வில்வவேர்ப் பட்டை, துத்திவேர்ப்பட்டை, நீர்பூலாவேர்ப்பட்டை, கீழ்காய் நெல்லி இவை வகைக்குப் பலம் ஒன்றேகால், கோரைக்கிழங்கு பலம் ஒன்று வேர்ப்பட்டை பலம் இரண்டு, இவற்றை பசுவின் பால் படி ஒன்று விட்டு அரைத்துக் கரைத்து மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்துத் தலை முழுகிவர வெட்டை, சூடு, எரிவு, மயக்கம், சோம்பல் இவை தீரும். புளி நீக்கவும். கைகண்டது.

## நீரடைப்புக்கு

துருசுபொடியாக்கித்தூய வெண்ணெய்தன்னிற்
பரிவாய்விழுங்கி விட்டுப்பாராய்—துரிதாக
நீரடைப்புவிட்டு நெடுந்தாரையாயிழியும்
பாருடைய வெல்லார்க்கும் பரிந்து.

[(பொ-ள்.) துருசுபொடி ஒரு குன்றி அளவு வெண்ணெயில் சாப்பிட நீரிழியும். ஒரு வேளை மட்டும் சாப்பிடவும். மீண்டும் சாப்பிடக்கூடாது.]

## கல்லடைப்புக்கு

மானேகேள்நீரடைக்கில் வாழும்பசலையுடன்
தானேநற்கத்திரியின் றன்னிலையும்—பானைதனில்
ஒக்கக்கிஷாயமிட்டேயோதும் வெண்காரமிட்டுண்
கக்கக் கல்லுடைக்குங் காண்.

## பெரும் பாட்டிற்கு

இலந்தைவேர், இலந்தம்பழம், பவளப்புத்து இவை வகைக்குப் பலம் ஒன்றைப் பசுவின் பால் படி விட்டு அரைத்துக் கழற்சிக்காயளவு சாப்பிடப் பெரும்பாடு தீரும்.

**வேறு**:—செம்பருத்தம்பூ பலம் நாலு, கலைக்கொம்பு, சீனிக் கற்கண்டு இவை வகைக்குப் பலம் ஒன்று இவற்றை அரைத்துத்தேசிக்காயளவு மூன்று நாள் சாப்பிடத் தீரும்.

## மலசல அடைப்புக்கு

சட்டியில் வெதுப்பிப்பிழிந்த முசுமுசுக்கைச்சாற்றில் வெண்காரத்தைப் பொரித்துச் சூரணித்திட்டுக் குடிக்க மலசல அடைப்புத் தீரும்.

**வேறு**:—அப்பைக்கோவைக்கிழங்கை அரைத்து அதில் சிறிதளவு எருமை வெண்ணெயில் குழைத்துக் கொடுக்கத் தீரும்.

## கல்லடைப்பு நீரடைப்பு இவைக்கு

ஆவரையரும்பு, முசுட்டையரும்பு, காக்கணவிதை, காக்கணம்பூ இவை வகைக்குச் சிறங்கை ஒன்றை, இளநீரிலரைத்துப் பசுவின் பாலில் கரைத்து பத்து நாள் குடிக்கக் கல்லடைப்புத் தீரும். கைகண்டது.



## நீர்க் கடுப்புக்கு

பேய்க்கும்மட்டிவேர் பலம் நாலு, வசம்பு பலம் இரண்டு, தோலுரித்த வெள்ளுள்ளி சேர் இரண்டு, காருபா, கல்மதம் இவைகள் வகைக்கு விராகன் இரண்டு, விளக்கெண்ணெய் சேர் இரண்டு இவற்றைச் சேர்த்து மெழுகுபதமாகக் காய்ச்சி வேர் மிதக்கும்போது வடித்து, அந்தி சந்தி துட்டிடை வீதம் கொள்ள, நீர்கடுப்புத் தீரும். பத்தியம்: புளி, புகை, பச்சை மாமிசம் இவை நீக்கி; துவரை, முள்ளங்கி, மிளகு, மஞ்சள், உப்பு இவை சேர்க்கவும்.

## மேகவெட்டை, பிரமியம், நீர்கடுப்பு இவைக்கு

விடத்தலையிலையும், சீரகமும் சரிகூட்டி எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து கொட்டைப்பாக்களவு ஐந்து நாள் பத்து வேளை கொள்ளத் தீரும். பத்தியம் காக்கவும்.

## மேகவெட்டைக்கும், வாதம் எண்பதுக்கும்

தோலுரித்த வெள்ளுள்ளி, பெருங்காயம், எவச்சாரம், நவச்சாரம், பஞ்சலவணம், (கல்லுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கொந்தியுப்பு) இவை வகைக்குப் பலம் ஒன்றைச் சூரணித்து நல்லெண்ணெயிலிட்டு லேகியபதமாய்க் கிண்டி வைத்துக்கொண்டு, வெந்நீரில் வெருகடியளவு கொள்ள, தீரும்.

## விப்புருதிகளுக்கு

காட்டுமல்லிவேர், உடும்புருஞ்சிவேர்பட்டை, செங்கத்தாரிப் பட்டை, பூதகரப்பான்பட்டை, வாதகரப்பான்பட்டை, நிலப் பனைக்கிழங்கு, மருக்குரான்பிஞ்சு, மாவிலங்கையிலைச்சாறு, வெள்ளுள்ளி இவை வகைக்குப் பலம் ஒன்றோடு, வசம்பு பலம் இரண்டு நறுக்கிப்போட்டு, விளக்கெண்ணெய் ஒரு படி விட்டு, ஒரு சாதி விறகால் எரித்து பதமாய்க் காய்ச்சி வடித்து இரண்டு விராகனிடை வீதம் இரண்டு நேரம் கொள்ள, இராச விப்புருதி, கண்டமாலை, ஓடு விப்புருதி, கன்னக்கிரந்தி, குழிக்கள்ளன், பிளவை, பனிச்சை, உச்சிப்பிளவை, மார்புப்புற்று, தவளைச்சொரி, துடைவாழை இவைகள் போம். பத்தியம்: கைப்பு, புளிப்பு நீக்கவும். காய்ச்சிய எண்ணெயைக் கீழே வைக்கக்கூடாது. புண்களுக்கு கோழி இறகால் பூசவும்.

## புண்களுக்குப் பால்சீலை

கொடிக்கள்ளிப்பாலை வெள்ளைத் துணியில் தடவி புண்கண்ட இடத்தில் போட கன்னக்கிரந்தி, கன்னவிப்புருதி, கன்னப்பற்று முதலிய கன்னத்திலுண்டாகும் புண்கள் தீரும்.

## ஆறாத புண் வீக்கத்திற்கு

நல்ல அகத்தியிலையை அரைத்துச் சாறுபிழிந்து மேகத் தினால் வெடித்த புண்ணிற்குப் போடவும். கட்டிகளுக்கு அரைத்துப்பூச வீக்கம் வற்றும்.

## கட்டிவிப்புருதி, சுண்டாவிப்புருதி இவைகளுக்கு

மஞ்சள், கருப்புக்கட்டி, நாய்க்கொட்டான்வேர் இவற்றைத் தேசிக்காயளவு அரைத்து உரி பசுவின் நெய்யில் வேகவைத்து பத்து நாள் கொள்ளத் தீரும்.

## சுணங்காத விப்புருதிக்கு

நத்தைச்சூரிவேர், பெருங்காயம் இவற்றை நன்றாய்த்தட்டி விதை நீக்கிய பேய்க்கொம்மட்டிப்பழத்துள் வைத்துப்பிழிந்து மூன்று நாள் கொள்ளத் தீரும்.

## சகல மேகங்களுக்கும்

சிற்றாமணக்கெண்ணெய் படி ஒன்று, சத்திச்சாரணைவேர் பலம் இரண்டரை, வசம்பு பலம் ஒன்றரை, வெள்ளுள்ளி பலம் இரண்டரை, முன்னைவேர்ப்பட்டை பலம் ஒன்றரை, முன்னை யிலையை அரைத்த விழுது நார்த்தங்காயளவு இவற்றை அரைத்து மேற்படி எண்ணெயில் கரைத்துக் காய்ச்சி கடுகுதிரளும் பதத்தில் இரக்கி வடித்து காலையில் இரண்டு துட்டிடை வீதம் இரண்டு நாள் சாப்பிடவும். இரண்டு நாள் கடும் பத்தியமாய் இருக்கவும். மேகவாயு, பக்ஷவாயு, வயிற்று விப்புருதி, கிரந்திகள், சூலைக்கட்டி இவைகள் தீரும். கைகண்டது.

## மேக எண்ணெய்

வெட்பாலைப்பட்டை. வெட்பாலையிலை, சுடுதுருத்தி, சின்னி, சங்கு, தழுதாழை, சங்கங்குப்பி, கரிப்பான், பொற்றலைக்கரிப்பான், செம்முள்ளி, சிறுசெருப்படை, பெருஞ்செருப்படை, கிரந்தி நாயகம், குவளை, கழற்சி, பூவரசு, மாவிலங்கை, வெண்ணொச்சி,



கருநொச்சி, முடக்கொற்றான், கொட்டைக்கரந்தை, வெள்ளீண்டு நுணா, கோழியாவரை இவைகளின் இலைச்சாறு வகைக்குப் படி யாகக்கொண்டு சேர்த்து. பரங்கிப்பட்டை, அதிமதுரம், கடுகு ரோகணி, சன்னலவங்கப்பட்டை, சாதிக்காய், கிராம்பு, ஏலம், கருஞ்சீரகம் இவை வகைக்குப் பலம் ஒன்றேகால் அரைத்து மேற்படி சாறுடன் கரைத்து விளக்கெண்ணெய் படி மூன்று சேர்த்து மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்து வேளை ஒன்றுக்குக் கால் வீசம் படியாக மூன்று நாள் ஆறு வேளை சாப்பிடவும், இரு மூன்று நாள் இருந்து ஏழாவது நாள் பத்தியம் முறிக்கவும். கிரந்தி, சூலைக்கட்டி, விப்புருதி, மேகவாயு, பக்ஷவாயு முதலிய நோய்கள் தீரும்.

## கிரந்திக்கும் சூலைக்கும்

கம்பரிசி படி ஒன்று, விழியிலை படி ஒன்று இவற்றை இடித்து மாவாக்கித் திருகுகள்ளியை சிறுகரணையாகத் தரித்துச் சட்டியிலிட்டு, தண்ணீர் விட்டு வேடுகட்டி அதன்மேல் மேற்படி மாவை வைத்து மூடி மண்சீலை செய்து எரித்து வெந்த பதத்தில் எடுத்து மேற்படி மாவை நெய் சேர்த்துப் பிசரி ஐந்து நாள் சாப்பிட்டு, ஒன்பதுநாள் விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும். உப்பு, புளி இவை நீக்கி முப்பது நாள் பத்தியமாய் இருக்கவும். கைகண்டது.

## கிரந்திக்கு

சங்கங்குப்பியிலைச்சாறு காலையில் கால் படி வீதம், மூன்று நாள் சாப்பிட்டு, கடும் பத்தியம் இருந்து, நான்காம் நாள் உப்பு வறுத்துக் கூட்டி வெந்நீர் வார்க்கவும்.

## கிரந்தி மேக சூலைக்கு

பரங்கிப்பட்டை, கந்தகம், அமுக்கருவேர் இவை வகைக்குப் பலம் நாலு, கொடிவேலிவேர் பலம் இரண்டு இவற்றைச் சூரணித்து, சர்க்கரை பலம் ஐந்தும், நெய் பலம் பதினொன்றும் சேர்த்து, லேகியம் செய்து புன்னைக்காயளவு கொள்ளவும். புளி, புகை நீக்கிப் பால் வகை கூட்டிக் கொள்ளவும்.

## கிரந்தி, சூலை, அரையாப்பு, வெண்குஷ்டம் இவைக்கு

சங்கம்வேர், முடக்கொத்தான், சிவன்வேம்பு, கஞ்சா, வெள்ளருகு, கஞ்சாங்கோரை, கரிசிலாங்கண்ணி இவற்றைச்

சூரணித்து வெருகடியளவு பசுங்கோமயத்தில் இரண்டு வேளை கொள்ள அரிகரப்பான், கிரந்தி, புண், வாதம் எண்பது இவைகள் தீரும். கடும் பத்தியம் காக்கவும்.

## அண்டவாத வகைக்கு

சிற்றுமணக்கெண்ணெய் படி ஒன்று, கழற்சிக்கொழுந்து, மாவிலிங்கங்கொழுந்து, எருக்கன்கொழுந்து, நொச்சிக் கொழுந்து, ஆடாதொடைக்கொழுந்து, தழுதாழைக்கொழுந்து, முருங்கைக்கொழுந்து, முடக்கொத்தான்கொழுந்து, பிரமியிலை இவற்றை அரைத்த விழுது வகை ஒன்றுக்கு எலிமிச்சங் காயளவு கூட்டி அதில், சுக்கு, மிளகு, திப்பிலி, சிற்றரத்தை, தேசாவாரம், வெள்ளுள்ளி, வசம்பு, கருஞ்சீரகம், இந்துப்பு, பெருங்காயம் இவை வகைக்குப் பலம் அரை, கடுக்காய், கடுகு ரோகணி இவை வகைக்கு விராகன் பத்து, ஈரவெங்காயம் பலம் இருபது, இவற்றை அரைத்து எண்ணெயில் கரைத்து மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு கரண்டியளவு இரண்டு வேளை ஐந்து நாள் கொள்ளவும். உப்பு மட்டும் வறுத்துக் கூட்டி பத்தியத்தோடு சாப்பிட்டுவர, அண்டவாயு. ஆந்த்ரவாயு, விரை வாயு, ஆனந்தவாயு, மேகம், காங்கை, முடக்குவாதம், கைகால் பிடிப்பு வாதம் முதலிய நோய்கள் போம்.

## முழங்கால் வாதத்துக்கு

கொட்டைக்கரந்தையிலையைச் சிறுநீர் விட்டு வதக்கி மூன்று வேளை வைத்துக்கட்ட வலியும் வீக்கமுந் தீரும்.

## கைகால் பிடிப்பிற்கு

தெகுளுந்தண்டு இடித்து இலந்தைப்பட்டைச்சாறும் சிறுநீரும் கூட்டி வெதுப்பி வைத்துக்கட்ட முடக்கு முதலியவை தீரும்.

## திமிர் வாதத்துக்கு

மஞ்சள், குந்திருக்கம் இவை வகைக்குப் பலம் அரை, பெருந்தும்பைச்சாறு படி கால், கல்நீராக்கிய சுண்ணாம்பு பலம் இரண்டு, இவற்றைச் சேர்த்து கிண்டிப் பூச திமிர்வாதந் தீரும்.

## முழங்கால் கடுப்புக்கு

காட்டுச்சீரகம், வசம்பு, வெள்ளுள்ளி இவற்றை அரைத்து விளக்கெண்ணெயும், வேப்பெண்ணெயும் அதில் சேர்த்து



மெழுகுபதமாய்க் காய்த்து வடித்து காலிலும், உடம்பிலும் பூசிப் பிடித்துப் பிசைந்து அரப்பிட்டு வெந்நீர் விட்டுக் குளிக்கவும்.

## திமிர்வாத வகைக்கு

எருக்குமொட்டு, முருங்கைப்பட்டை இவை சரிகூட்டி, குடத்தில் இட்டுப் புடமிட்டுத் தைலம் வாங்கி அதில் பெருங் காயம், முத்தக்காசு, ஒவ்வொன்றும் கழஞ்சு நாலு, தலை மயிர் கழஞ்சு மூன்று, தேங்காய்க்கீறு இவற்றை வெந்நீரில் அரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து நாள் ஒன்றுக்கு ஒரு பலம் தைலம் கொள்ளத் திமிர்வாதம் போம். மேலும் சந்து கைகால் இவற்றில் முள்ளு வாங்கியால் மெல்லியதாகக் கீறிய இடத்தில் தைலம் சிறிதுவிட கணுவாதம், தனுர்வாதம் முதலியன தீரும்.

## கைகால் முடக்கு வகைக்கு

புங்கு, பிராய், மா, இலுப்பை, புரசு, அழிஞ்சி, குவளை, உழ்லாத்தி, நூறு வருடம் சென்ற வேம்பு, பூவரசு, செங்கழுநீர்க் கிழங்கு, கருவேலன்வேர், சிவன்வேம்பின்வேர் இவைகளின் பட்டை, கவடி, வங்கம் இவை பதினைந்தும் வகைக்குப் பலம் ஐந்தை, தண்ணீர் குருணி நான்கு சேர்த்துக் காய்ச்சி குழம்பு பதத்தில் வடித்து அதில் ஆடுதீண்டாப்பாளை, வெள்ளருகு, (களக்குட்டியும்), கழற்சி, சங்கங்குப்பி, செருப்படை, கொட்டைக்கரந்தை, பொடுதலை இவற்றின் வேர் வகைக்குப் பலம் இரண்டை, குருணி நீர்விட்டுக் காய்ச்சிக் குழம்புபதத்தில் வடித்து இரண்டையும் ஒன்ருகக் கூட்டி அதில் நல்லெண்ணெய் படி இரண்டு கூட்டி அத்துடன் பரங்கிப்பட்டை, முளைநீக்கிய சேங்கொட்டை இவை வகைக்குப் பலம் இரண்டு சூரணித்துப் போட்டு காய்ச்சி, மெழுகுபதத்தில் வடித்து ஒரு கரண்டியளவு கற்கத்துடனே கொள்ள கை கால் முடங்கல், வெடிசூலை, தோல் தடிப்பு, குத்து, வரிகுட்டம், தோலுரிதல், வாதம், லிங்கப்புற்று, மதுமேகம், கன்னக்கிரந்தி, அரையாப்பு முதலியன தீரும். பத்தியம்: ஆறு நாள் பசுமோர், மறுநாள் எல்லாம் ஆகும். மொச்சை, துவரை, பாசிப்பயறு, முளைக்கீரை, அறைக்கீரை கூட்டலாம்.

## அரையாப்புக்கு

நத்தைச்சூரிவேரைப் பாக்களவு அரைத்து நல்லெண்ணெயில் குழைத்து ஐந்து நாள் பத்து வேளை கொள்ளவும். உப்பு, புளி நீக்கவும்.

**வேறு:**—கீழாநெல்லிவேரைப் பாக்களவு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பி ஐந்து நாள் பத்து வேளை சாப்பிட்டு, எட்டு நாள் பத்தியம் கொள்ளவும். வெந்நீர் கொள்ளக்கூடாது.

**வேறு :**—கொடிவேலிவேர் நார்த்தங்காயளவு, சீரகம் பலம் ஒன்று இவற்றைச் சேர்த்து அரைத்து நல்லெண்ணெய் படி கால் சேர்த்துக் காய்ச்சி பதத்தில் சீனிச் சருக்கரை பலம் நாலு போட்டுக் கிண்டி, எண்ணெய் ஆழாக்கு வீதம் குடித்து மேற்படி கற்கத்தை பச்சைப்பாக்களவு தின்றுவர, மூன்றும் நாள் வீக்கமும், சீழ்கட்டினதும், புரையோடியதும் தீரும். பத்தியம்: கைப்பு, புளிப்பு நீக்கவும்.

## குடல் வாதத்திற்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, நெல்லிவற்றல், கருஞ்சீரகம், நற்சீரகம், கொத்தமல்லி, சதகுப்பை, கிராம்பு, இலவங்கப்பத்திரி இவை வகைக்குப் பலம் ஒன்று, கடுகு, அசமதாகம், வெள்ளுள்ளி, கடுக்காய் இவை வகைக்குப் பலம் இரண்டு, இந்துப்பு, பெருங்காயம் இவை வகைக்குப் பலம் கால், செவ்வள்ளிக் கொடி, தான்றிக்காய் இவை வகைக்குப் பலம் அரை, காட்டு சீரகம் பலம் ஐந்து, பனைவெல்லம் பலம் பத்து, ஆயில்பட்டை, கொடிவேலிவேர்ப்பட்டை இவை வகைக்குப் பலம் கால், விழுதி வேர்ப்பட்டை, கருணைக்கிழங்கு, மருக்காரைவேர்பட்டை, கண்டங்கத்திரிவேர் இவை வகைக்குப் பலம் ஒன்று, பிரண்டை வேர்ப்பட்டை பலம் இரண்டு, வறட்பூலாங்கொழுந்து, புங்கங் கொழுந்து, கழற்சிக்கொழுந்து, கரிப்பானிலை இவை வகைக்குப் பிடி ஒன்று, சாரணைவேர் பலம் அரை இவற்றைப் பிரண்டைச் சாறு, முடக்கொற்றான்சாறு இவை வகைக்குப் படி ஒன்று கொண்டு அரைத்து அத்துடன் கழற்சிப் பருப்பு ஐந்து சூரணித்திட்டு விளக்கெண்ணெய், நல்லெண்ணெய் வகைக்கு ஒரு உரி விட்டுக் காய்ச்சிக் கடுகு திரளும் பதமாக வறுத்துப் புதுக் கலசத்தில் வைத்துக்கொண்டு ஒரு திங்கள் சென்றபின் அதில் புன்னைக்காயளவு இரண்டு வேளை பதினைந்து அல்லது இருபது நாள் கொள்ள குடல்வாதம், குடல்புரட்டல், குன்மவலி, வயிறு பொருமிக்கழிதல், வயிறு இரைதல், அடிவயிற்று வலி, செறியா மாந்தம், வயிறு முழங்கி இரைதல், உடம்பூதல், அசதி, வயிறு எல்லாம் வலித்துப் பேதியாதல் ஆகிய நோய்கள் எல்லாம் தீரும். **பத்தியம்:** தயிர், மோர், மிளகுநீர் சேர்க்கலாம்.

## அண்டவாத வகைக்கு

காந்தம், பெருங்காயம், இந்துப்பு, வெடியுப்பு, கரியபோளம் இவை வகைக்கு விராகன் இரண்டு, பீசின், கருஞ்சீரகம், நற்சீரகம், கடுகுரோகணி, வெள்ளுள்ளி, வெள்ளை ஈரவெங்காயம், இவை வகைக்குப் பலம் இரண்டு, சுக்கு, மிளகு இவை வகைக்குப் பலம் ஒன்று, நொச்சிமூலம், சாரணைவேர் இவை வகைக்குப் பிடி ஒன்று, துளசிசமூலம் பிடி இரண்டு இவற்றை இடித்து, பதக்கு நீரிலிட்டு இரண்டு படியாகக் காய்ச்சி வடித்து அதில் நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய் இவை வகைக்குப் படி அரை சேர்த்து முளைநீக்கிய கழற்சிப்பருப்பு ஐந்து அரைத்துப் போட்டு ஐம்பது கோழிமுட்டை வெண்கருவைவிட்டு மேற்படி கடைச்சரக்குகளையும் அரைத்துப் போட்டுக் கரைத்து ஒரு சாதி விறகால் எரித்து கிண்டி காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, அதில் அரைக்கரண்டி அளவு மூன்று நாள் ஆறு வேளை கொள்ளவும். உப்பு, புளி நீக்கவும். அண்டவாதம், கழல்வாதம், அந்தரவாயு, ஓரண்டவாதம் முதலியன தீரும். கைகண்டது.

**வேறு:**—கரிவளையல், உப்பு, மிளகு இவை சரிகூட்டிப் பெருங்காயம் பணவிடை இரண்டு சேர்த்து மைபோல் அரைத்து உருட்டிக் கொள்ள தீரும்.

## அண்ட வாயுவுக்கு

கொழிஞ்சிவேர்பட்டை விராகன் மூன்றை, கொழிஞ்சியிலைச் சாறு விட்டு அரைத்துத் துளி சுண்ணாம்பில் கலக்கி வெற்றிலையில் தடவி, பச்சைப்பாக்கு, கொட்டைப்பாக்கு, சீவலுடன் சேர்த்து மென்று இரசத்தை விழுங்கவும். மூன்று நாள் வேண்டும் போதெல்லாம் சாப்பிடவும். புகையிலை நீக்கவும்.

**வேறு:**-விளக்கெண்ணெய் படி ஒன்று. ஒரு தலை வெள்ளைப் பூண்டு சேர் ஒன்று. ஒரு குடங்கை முடக்கொற்றானைப் பிரிமணை (பிரமணை) போல் சுற்றி மேற்படி பூண்டைத்தோல் போக்கிச்

சட்டியில் மேற்படி எண்ணெயை ஊற்றி அதில் ஈரமண்ணை வைத்து அதன்மேல் பூண்டைப் பரப்பி வைத்து ஒரு சாதி விறகால் எரித்து பூண்டும் இலையும் சிவந்த பதத்தில் இடித்து ஒரு கரண்டியளவு மூன்று நாள் ஆறு வேளை கொள்ளவும். கடும் பத்தியமாக வெந்நீரும் சோறும் சாப்பிட்டுவர அந்தரவாயு ஓரண்டவாதம் இவை தீரும்.

## அந்திரவாயு வகைக்கு

வெள்ளுள்ளி பலம் நாலு, கல்லுப்பு உழக்கு, மிளகு பலம் ஒன்று இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து நல்லெண்ணெய் உழக்கு விட்டுக் கிண்டி ரவிபுடம் வைத்து புன்னைக்கா யளவு பத்து நாள் கொள்ள அந்திரவாயு, இசிவு, வலி முதலியன தீரும். பத்தியமாய் இருக்கவும்.

## அண்டவாயு அந்திரவாயுவுக்கு

மாவிலிங்கப்பட்டை பலம் ஒன்று, கழற்சிப்பருப்பு அரைப் பலம் இவற்றைச் சூரணித்து கோழிமுட்டை வெள்ளைக்கரு விட்டுப் பொரித்து ஏழு நாள் கொள்ளவும். மேலுக்கும் கழற்சி விதையை மஞ்சளுடன் கூட்டி சுட்டு அரைத்துப் பூசியும், அந்த மருந்தையே தணலிலிட்டுப் புகை பிடித்தும் வர இருவகை வாயுவும் தீரும். பத்தியம் : வெந்நீரும் சோறும் உண்கவும்.

## அண்ட வாதத்திற்கு

சத்திசாரணைவேரும், சர்க்கரையும் அரைத்துப் பசுவின் பாலில் குடிக்கத் தீரும்.

வேறு :—கழித்தும்பைவேர்ப் பட்டையை பாக்குடன் மென்று இரசத்தை விழுங்கி வரத் தீரும்.

வேறு :—கழித்தும்பையிலையை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக் கொட்டைப்பாக்களவு மூன்று நாள் கொடுக்க அந்திரவாயு, ஒருவிதை வாதம், அக்கினிமந்தம் இவைகள் தீரும்.

## ஒருவிதை வாதத்துக்கு

ஒரு விரல் அளவு வசம்பை ஒரு மண்டலம் கொள்ளத் தீரும்.



## கெற்பக்கிராணி வயிற்று கழிச்சலுக்கு

தானிக்காய், சுக்கு, திரிகடுகு, ஏலம் இவை வகைக்குப் பலம் இரண்டு, இவற்றை இடித்துச் சூரணித்துப் பனைவெல்லம் பலம் இரண்டு சேர்த்து திரிகடியளவு கொள்ளத்திரும்.

## குன்மங்களுக்கு

இந்துப்பும், பெருங்காயமும் வகைக்குப் பலம் ஒன்று, மிளகு பலம் இரண்டு, தோல் நீக்கிய வெள்ளுள்ளி பலம் மூன்று, திருகுகள்ளிப்பால் உழக்கு இவற்றைக் கூட்டி அரைத்துக் குடல், தலை போக்கிய கோழி வயிற்றில் வைத்துத் தைத்து நாலு படி வெள்ளாட்டுக் கோமயத்திலிட்டு அவித்துப் பதத்தில் எடுத்து உலர்த்தி இடித்து சூரணித்து அதில் வெருகடியளவு பேய்ப்பீர்க் குக் கஷாயத்திலாவது, வெந்நீரிலாவது இரண்டு வேளை ஐந்து நாள் கொள்ள, நீராமை, கவுசை, பெருவயிறு, பீலிகை, வாயுக் கட்டி, குன்மம், எரிகுன்மம் முதலிய நோய்கள் தீரும். தெளி தண்ணீரிலும் கொள்ளலாம். பத்தியம் : மோருஞ்சோறும். கைகண்டது.

## வலி குன்மத்துக்கு

கடுக்காய் பலம் பத்து, கடுகும், வெள்ளுள்ளியும் வகைக்குப் பலம் ஐந்து, அசமதாகம், வெடியுப்பு, பெருங்காயம் இவை வகைக்குப் பலம் அரை, சுக்கு, இந்துப்பு ஒவ்வொன்றும் பலம் ஒன்று, சாரணைவேர் பலம் ஒன்று, திருகுகள்ளிப்பால் படி எட்டு, வெள்ளாட்டுக்கோமயம் உரி. ஒன்று. மேற்கூறிய சரக்குகளை எல்லாம் நன்றாக இடித்துத் தூளாக்கி அதை கள்ளிப்பாலும் ஆட்டு மூத்திரமும் கூட்டிப் பிசைந்து உலர்த்தி அதை ஆற்றுத் தும்மட்டிக்காய்களுள் அடைத்து நூலினால் நன்றாய்க்கட்டி பானையிலிட்டு சீலைமண் செய்து பானையின் கீழும் மேலும் ஆட்டு எரு போட்டுப் புடமிட்டுப் பதத்தில் எடுத்து பொடித்துப் புது கலசத்தில் வைத்துக்கொண்டு அதில் வெருகடியளவு இஞ்சிச்சாற்றிலாவது, சுக்குக்கஷாயத்திலாவது கொடுத்து வரவும். கைப்பு, புளிப்பு, மிளகு நீக்கி, மோருஞ்சோறும் எட்டு நாள் உண்ணவும். வலிகுன்மம் தீரும். கைகண்டது.

## சத்தி குன்மத்துக்கு

இந்துப்பு பலம் ஒன்றை, கள்ளிப்பால் விட்டு அரைத்து தேங்காய்க்குள் இட்டுச் சீலைமண் செய்து சுட்டு ஓடுநீக்கி

சூரணித்து, முலைப்பாலிலாவது, தேனிலாவது கொள்ள சத்தி குன்மமும், வாந்தியாதலும் தீரும். பத்தியம்: மோருஞ்சோறும் உண்ணவும்.

## சாதம் செரியாமை வாயால் எடுத்தலுக்கு

சாரணைவேர், வில்வவேர், முக்காவளைவேர், சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி இவை சரிகூட்டி அரைத்து இளவெந்நீரில் கொள்ள இவை இரண்டும் தீரும்.

## எரி குன்மத்துக்கு

சிறுகீரைவேர், பொன்னுங்காணிவேர், செண்பகப்பூ இவை சரிகூட்டி கருப்புட்டி சேர்த்து அரைத்து வெள்ளாட்டுப் பாலில் கொள்ள எரிகுன்மந் தீரும்.

## குன்மம் எட்டுக்கு

பேய்கும்மட்டிக்காய்சாறு படி நாலு, இந்துப்பு, படிகாரம், எவச்சாரம், மணிவெங்காரம், நல்ல பெருங்காயம், கருஞ்சீரகம், திப்பிலி இவை வகைக்கு விராகன் எட்டு இவற்றை சூரணித்து மேற்படி சாறுடன் கூட்டி உழக்காகக் காய்ச்சிக் கிண்டிப் பதமாய் இறக்கும்போது பசுவின் நெய் உழக்கு சேர்த்து கிண்டி எடுத்து அதில் ஒரு குன்றியளவு கொள்ள நோய் தீரும். இச்சா பத்தியம்.

## அஷ்டகுன்ம கோடரி

வெண்காரம், பஞ்சலவணம், வெள்ளுள்ளி, கடுக்காய், வசம்பு, திரிகடுகு, ஓமம், எவச்சாரம், நவச்சாரம், சவுக்காரம், கடுகு, பெருங்காயம், நேர்வாளம் இவை சரிகூட்டிப் பொடித்து தேங்காயில் அடைத்து முளையடித்து சாணிபூசி புடமிட்டு மேல் ஓடு வெந்த பதத்தில் எடுத்து ஓடு நீக்கி அரைத்து மெழுகு பதமான பின் எடுத்து ஒரு மாதம் சென்ற பின் சாப்பிடவும். பத்தியம்: பசுவின் நெய், பால், தயிர் சேர்க்கலாம்.

## சூலை வகைக்கு

வெள்ளுள்ளி நாறு அரைத்து அத்துடன் நொச்சி, முக்குரண்டி, பிரமி, முடக்கொற்றான், குப்பைமேனி, காட்டு முருங்கை, பாவட்டை, வெள்ளைச்சாரணைவேர், அமுக்கிரா, பங்கம்பாளை, பொன்னுவரை, கொட்டைக்கரந்தை, வேளையிலை



இவைகளின் சாறு வகைகள் ஒன்றுக்கு படி ஒன்று. வெள்ளாட்டு மூத்திரம், பசுவின் மூத்திரம், தேங்காய்ப்பால், நார்த்தஞ்சாறு, செங்கழுநீர் இவை வகைக்கு உழக்கு ஒன்று, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், நெய் இவை வகைக்குப் படி ஒன்று இவற்றை ஒன்றாகக் கூட்டி பாகுபதமாகக் காய்ச்சி அதில் வெண்காரம், திரிகடுகு, சதகுப்பை, அரத்தை, செவ்வியபடிகாரம், சத்திசாரம், கோஷ்டம், பஞ்சலவணம் இவற்றை வகைக்குப் பலம் கால் பொடித்துக் கூட்டிப் போட்டு கிண்டி கடுகாகத் திரட்டி வைத்துக் கொண்டு சுண்டைக்காயளவு காலை மாலை சாப்பிட குன்மம், நீராமை, குட்டம், தேமல், மகோதரம், முளைமூலம், வலி, சூலை முதலிய நோய்கள் போம்.

## குன்மம் 8-க்கும் சூசிக வாயுவுக்கும்

முளை தோல் போக்கிய வெள்ளுள்ளி பலம் நூறு அரைத்து சாதிக்காய், திரிகடுகு, பெருங்காயம், திப்பிலி மூலம், சதகுப்பை, கொடிவேலிவேர், எவச்சாரம், சத்திச்சாரம், கழற்சிப்பருப்பு, ஓமம், அஞ்சப்பு, கடுகு, எள் இவை வகைக்குப் பலம் இரண்டு பொடித்துக் கூட்டி அத்துடன் விளக்கெண்ணெய் உழக்கும், நெய் உழக்கும் சேர்த்து கடுகு செய்து புன்னைக்காயளவு கொள்ள, எட்டு வகை குன்மங்களும் போம். இச்சாபத்தியம்.

## சந்தனாதி சூரணம்

சந்தனக்கட்டை, அதிமதுரம், கச்சோலம், கோஷ்டம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், செங்கழுநீர்க்கிழங்கு, வில்வப் பருப்பு, நெல்லிப்பருப்பு, முத்தக்காசு, விலாமிச்சம்வேர் இவற்றைச் சரிகூட்டி சூரணித்து சமமாகச் சீனி சருக்கரை சேர்த்து வெருகடியளவு தேன், நெய், வெந்நீர், தண்ணீர், கழுநீர், அன்னநீர், இஞ்சிச்சாறு இவற்றில் ஒன்றில் கொள்ள நெஞ்செரிவு, கைகாலெரிவு, அசதி முதலிய நோய்களும் ஈரல் குலை எரிவு, முக எரிவு, பழங்காய்ச்சல், அக்கினிமந்தம், மேகம் முதலியவைகளும் தீரும். பசி உண்டாகும். இச்சாபத்தியம்.

## பயித்திய வகைகளுக்கு

முசுமுசுக்கை பலம் நூறு இடித்து பதினாறு மரக்கால் நீர் விட்டு எட்டு ஒன்றாய்க் காய்ச்சி வடித்து தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு படி ஒன்று, பாவிரன்கிழங்குச்சாறு படி நாலு

இவற்றைக் கலந்து காய்ச்சி குழம்பு பதத்தில் வரும்பொழுது அத்துடன் அதிமதுரம், திப்பிலி, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், ஏலம், கிராம்பு, லவங்கப்பட்டை, செஞ்சந்தனம், சாதிக்காய், சாதிப்பத்திரி, நன்னாரிவேர். முத்தக்காசு, தாமரைவளையம், நெல்லிவற்றல், வெட்டிவேர், நெய்தல்க்கிழங்கு, கசகசா, கச்சோலம் இவை வகைக்குப் பலம் அரை, கூகைநீறு பலம் நாலு இவற்றைச் சூரணித்து மேற்படி குழம்பிலிட்டுக் கிண்டி தேன் படி இரண்டு சேர்த்து லேகியம் செய்து ஒரு காசிடை கொள்ள காலைப் பித்தம், உள்மாந்தை, தலைசுற்றல், மூர்ச்சை, ஆயாசம், இரத்தக்காமாலை, மூத்திரகிருச்சிரம், பித்தசிலேஷ்மம், அபஸ்மாரம், சிரோநேத்திர விகாரங்கள்: தாய்மையிலாமை, தாது நஷ்டம் இவைகள் தீரும். பத்தியம்: பாலுஞ்சோறும் உண்பதற்கு முன் சீந்திற் சருக்கரை ஒரு விராகன் சாப்பிடவும்.

## பித்த வகைக்குச் சீந்திற் சருக்கரை

திரிபலை, திரிகடுகு, நேர்வாளம், கண்டங்கத்தரி, ஏலம். கிராம்பு, இலவங்கப்பட்டை, அகத்திவிதை, சேங்கொட்டை, தேவதாரு, லவங்கப்பத்திரி, ஓமம், கடுகு, கருஞ்சீரகம், அத்திப்பட்டை, நரிவிளா, பெருங்காயம், முத்தக்காசு, சித்திர மூலம், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், இலவம்பட்டை, மருதம் பட்டை, மகிழம்விதை இவை சரிகூட்டி சூரணித்து அதன் இடை சிவதைச்சூரணம் கூட்டிப் பனைவெல்லத்தைப் பாகு செய்து அதில் இட்டு லேகியமாகக் கிளறி, புன்னைக்காயளவு கொள்ள வாயு நோய்கள், வயிற்று வலி, உப்பிசம், மேல்மூச்சு, இளைப்பு, சலக்கட்டு, மூலம், மேகம், மலக்கட்டு, உடம்புக் கடுப்பு, வாதம், பித்த சிலேட்டும நோய்கள், அகுளை, பெரு வயிறு, கவுசை முதலியன தீரும். வயிறு கழியும்படி மருந்துகள் கொடுக்கவும். பத்தியம் கடைப்பிடிப்பது முக்கியம்.

## பித்த பயித்தியத்திற்கு

கொடுப்பை, தவசுமுருங்கை, உளர்முருங்கை, முசுமுசுக்கை, சீந்தில்தண்டு, செம்புரா இவைகளின் சாறு, இஞ்சி, கரிப்பான் இவற்றின் சாறு வகைக்குப் படி அரை, கழுதைப்பால் படி கால், சீரகம், ஏலம், அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், கூகைநீர், கோரோசனை இவை வகைக்குப் பலம் அரை. இவைகளைச் சூரணித்து மேற்படி சாறு



பால்களுடன் சேர்த்து சர்க்கரை, சூரணங்களின் கூட்டுத்தொகையாகக் கொண்டு காய்ச்சிப் பாகுபதத்தில், மேற்படி சூரணமிட்டுக் கிண்டி தேன் சரிகூட்டி லேகியம் செய்து, புன்னைக்காயளவு, வில்வப்பழம் சேர்த்து கொள்ள, பித்த பயித்தியம் தீரும்.

## வாந்தி, பித்தம், மயக்கம் முதலிய வகைக்கு

பருத்திப்பருப்பு, திப்பிலி, சீரகம், ஏலம், பனைவெல்லம், நெல்பொறி, சர்க்கரை, தேன் இவற்றைச் சமன் சேர்த்துக் கஷாயமிட்டுச் சாப்பிட, இரையும் கிராணி, தலைச்சுற்றல், இருமல் முதலியவை தீரும்.

## வாத வலிக்கு

கொடுப்பை, முருக்கு, முசுமுசுக்கை, சீந்தில்தண்டு, செம்பிரான், இஞ்சி இவைகளின் சாறு வகைக்குப் படி எட்டு, கழுதைப்பால் படி கால், சீரகம், ஏலம், அதிமதுரம், சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், கூகைநீர், கோரோசனை இவை வகைக்கு விராகன் ஒன்று, பசுவின் பால் படி எட்டு, நல்லெண்ணெய் படி ஒன்று. இவற்றோடு சாறு வகைகளைக் கூட்டி, அதில் சரக்கு வகைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, தலைமுழுகி வர வாத வலி தீரும்.

## வெட்டைக்கு

நல்லெண்ணெய், நெல்லிக்காய்ச்சாறு, பசுவின் பால் இவை வகைக்குப் படி இரண்டு, கரிப்பான்சாறு, கொடுப்பைச்சாறு, முசுமுசுக்கைச்சாறு இவை வகைக்குப் படி ஒன்று, ஆதண்டையிலைச்சாறும், நொச்சியிலைச்சாறும் வகைக்குப் படி நாலு, இவைகளைச் சேர்த்து அதில் அதிமதுரம் பலம் இரண்டு, கஸ்தூரி மஞ்சள் பலம் இரண்டு, இவற்றை அரைத்துக் கலக்கி, மெழுகு பதமாகக் காய்ச்சி, வடித்து, தலைமுழுகி வர வெட்டை தீரும். புளி நீக்கி பத்தியமாய் இருக்கவும்.

## பித்தத்துக்கு

சீந்தில்தண்டு, சதாவேரிக்கிழங்கு, தாமரைவளையம், தாமரைத்தாது, துரட்டியிலை, அவுரியிலை, கரிப்பான் இலை, கொட்டைப்பாசியிலை, இளநீர், குருவிக்கரும்பு, கூவிளம் இலை, நெல்லிக்காய், பேய்ப்புடல், கோவைத்தண்டு, நரிப்பயற்றிலை, புளியிலை, முத்தக்காசு, குருந்தொட்டியிலை இவைகளின் சாறு

வகைக்குப் படி ஒன்று, பசுவின் பால் படி நாலு, நல்லெண்ணெய் படி ஒன்று இவைகளைக் கலந்து அதில், அசமதாகம், தேவதாரம், சரளப்பதுமுகம், அரக்கு, கடல்நுரை, தக்கோலம், சங்கலவங்கப்பட்டை, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், மிளகு, கடுகுரோகணி, கடுக்காய், தான்றிக்காய், சடாமாஞ்சி, கோஷ்டம், அதிமதுரம், புலிநகம், ஈறிக்கிழங்கு இவை வகைக்கு விராகன் நாலு, இவற்றை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, தலைமுழுகி வர பித்தகோபம், இருமல், பைத்தியம், கைகால் கண்ணெரிவு, காதிரைச்சல், பித்தசுரம் என்னும் இவைகள் தீரும்.

## உடம்பெரிவுக்கு

சுரைத்தண்டுச்சாறும் பசுவின் நெய்யும் சரிகூட்டி எட்டு நாள் கொள்ள கைகால் எரிவு தீரும்.

## பித்த பாண்டுக்கு

ஏலம் விராகன் நாலு, சடாமாஞ்சி, குக்கில், திப்பிலி, கொத்தமல்லி, கோரைக்கிழங்கு, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், மிளகு, அதிமதுரம், சீரகம், கருஞ்சீரகம், சிறுநாகப்பூ, சந்தனம், கூகைநீர், சாதிக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், கடுக்காய், சீந்தில் சருக்கரை, நெருஞ்சிவேர், இலாமிச்சம்வேர், நிலப்பனைக்கிழங்கு இவை வகைக்கு விராகன் ஒன்று, இவைகளைச் சூரணித்து, சரியிடை சர்க்கரை சேர்த்து, வெருகடியளவு பசுவின் நெய்யில் நாற்பது நாள் கொள்ள, அஸ்திசுரம், க்ஷயம், ஆம்லபித்தம், மூலவாயு, குன்மம், சுவாசகாசம், அரோசகம், காமாலை, மூத்திரகிரீச்சரம், பிரமியம், உஷ்ணம் இவைகள் தீரும்.

## உஷ்ண வாயுவுக்கு

வெள்ளுள்ளியும், சுக்கும் வகைக்குப் பலம் ஒன்று, கல்லுப்பு பலம் எட்டு, இவற்றை அரைத்துப் பசுவின் பாலில் கரைத்து எருக்கன் விறகால் எரித்துக் காய்த்து, களிபதமாகக் கிண்டி வேளைக்கு கழற்சிக்காயளவு, ஒரு நாளைக்கு இரண்டு வேளை கொள்ள தீரும். இச்சாபத்தியம்.

## அதிக உஷ்ண வாயுவுக்கு

வில்வத்தின் பூ, பிஞ்சு, கொழுந்து, வேர், பட்டை இவற்றை உலர்த்திச் சூரணித்து இடைக்கு இடை சீனிச்சர்க்கரை சேர்த்து வெருகடியளவு இரண்டு வேளை, வாததேகிக்குத் தேனிலும்,



பித்ததேகிக்கு நெய்யிலும், சிலேத்துமதேகிக்குப் பசுவின் பாலிலும் கொள்ளவும். இச்சாபத்தியம்.

## வாயுவுக்கு

காட்டாமணக்கிழங்கு பலம் இரண்டு, சத்திச்சாரணைக் கிழங்கு பலம் மூன்று, பெருங்காயம், இந்துப்பு, காந்தம், சவுக்காரம், கடுகுரோகணி இவை வகைக்குக் கழஞ்சி ஒன்று, பூண்டு பலம் மூன்று, கடுகு, வேர்க்கொம்பு, ஓமம், சீரகம், குராசாணி ஓமம், சதகுப்பை, கார்போகவரிசி, மஞ்சள் இவை வகைக்குப் பலம் இரண்டு, கடுக்காய் பலம் ஒன்று இவைகளைச் சூரணித்து வெருகடியளவு மூன்று வேளை கொள்ள, வாயு, எரிவு, காது குத்தல், வயிற்றில் உண்டாகும் கேடுகள் யாவும் தீரும்.
பத்தியம்: வெந்நீரில் குடித்தல், குளித்தல் செய்யவும்.

**வேறு**:—பெருங்காயம், திரிகடுகு, திரிபலை, கிராம்பு இவை வகைக்குக் கழஞ்சு இரண்டு, அரத்தை, நேர்வாளம் இவை வகைக்குக் கழஞ்சு ஒன்று, கார்போகவரிசி, கம்பிப்பிசின், வெட்பாலையரிசி, சீரகம், கருஞ்சீரகம் இவை வகைக்குப் பலம் ஒன்று இவைகளைச் சூரணித்து சரியிடை சர்க்கரை கலந்து, ஒரு சிட்டிக்கை தேனில் கொள்ளத் தீரும்.

## வாயு சூலைக்கு

பரங்கிப்பட்டைச்சூரணம் பலம் பத்து, வெள்ளறுகு, சிவன்வேம்பு, நிலவேம்பு, சிறுகுறிஞ்சான்வேர், பெருமருந்து, புங்கம்வேர், திப்பிலி, திப்பிலி மூலம், வாய்விளங்கம், சீரகம், மிளகு, கடுக்காய், தான்றிக்காய், அரத்தை இவை வகைக்குப் பலம் ஒன்று இவற்றைச் சூரணித்து அவ்வளவுக்கு இரண்டு பங்கு பரங்கிப்பட்டைச் சூரணம் கலந்து புது கலசத்திலிட்டு, அதில் வெருகடியளவு ஒரு வேளை கொண்டு வரத் தீரும்.

## சத்தி குன்ம வாயுவுக்கு

சுக்கொடு மிளகுங் கொள்ளுந் துய்ய திப்பிலியின் மூலம்
திக்குள முருங்கைப் பட்டை செழித்திடு மேலங் கூட்டி-
யொக்கவே வெள்ளைப் பூண்டு முண்கவே குடிநீரிட்டுத்
திக்கெனச் சத்திகுன்மந் திகழ்படப் பறக்குங் கண்டீர்.

[ (பொ-ள்.) சுக்கு, மிளகு, கொள்ளு, திப்பிலிமூலம், ஓரளமுருங்கைப்பட்டை, ஏலம், வெள்ளைப்பூண்டு இவைகளை

வாகக்கொண்டு முறைப்படி குடி நீரிட்டுக் கொடுக்க சத்தி குன்மம் போம்.]

### வாயுவுக்கு

பெருங்காயங் கழஞ்சொன் று வசம்பிரண்டு
பேர்பெரிய வுப்புமூன் று மிளகுநான்கு
மருங்காருஞ் சுக்கைந்து மசமதாகமா று
வரிக்கடுக்கா யேழ்கொடி வேலியெட்டுத்
திருந்தாகுங் கொத் துமல்லி யொன்பது கோட்டம்
பத்துசிவதை பதினொன்றென் று செப்புமிந்த
மருந்தான விவையரைத்து மெள்ள
வானபுடஞ்செய் துண்ணவாயு போமே.

[(பொ-ள்.) பெருங்காயம் ஒன்று, வசம்பு இரண்டு, உப்பு மூன்று, மிளகு நான்கு, சுக்கு ஐந்து, ஓமம் ஆறு, வரிக்கடுக்காய் ஏழு, கொடிவேலி எட்டு, கொத்தமல்லி ஒன்பது, கோட்டம் பத்து, சிவதை பதினொன்று கழஞ்சுகளாகக் கொண்டு பொடித்து, சூரியபுடமிட்டு தக்க அளவில் கொள்ள வாயு நோய்கள் போம்.

### போசன சஞ்சீவி

வெண்காரம், இந்துப்பு, மிருதார்சிங்கி, கிராம்பு, திப்பிலி மூலம், நவச்சாரம், வேர்க்கொம்பு, கோட்டம், சவுட்டுமண், பூநீறு, ஓமம், வெள்ளுள்ளி இவை வகைக்குப் பலம் ஒன்று, பூண்டு பலம் ஐந்து இவற்றிக்குச் சரியிடை பனைவெல்லம் கூட்டி அரைத்து மகிழங்காயளவு, இரண்டு வேளை இருபது நாள் சாப்பிட, வாதம் எண்பது, குன்மம் எட்டு, சூசிகாவாயு ஏழு இவை தீரும்.

### போசன குளிகை

சாரணைவேர், பிரண்டைவேர், சித்திரமூலம், காட்டுக் கருணை, கறிக்கருணை, மெருகங்கிழங்கு இவை வகைக்குப் பலம் இரண்டு, இவற்றைப் பசுவின் பாலில் வேகவைத்து உலர்த்தி அத்துடன் சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு, நவச்சாரம், சிறுதேக்கு, சிறுமூலம், செவியம், பூண்டு, பெருங்காயம், சுக்கு மிளகு, திப்பிலி, கிராம்பு, கழற்சிப்பருப்பு இவை வகைக்குப் பலம் எட்டு, இவைகளை இடித்துச் சூரணித்து ஒன்றாகக் கலந்து குப்பைமேனிச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்து அரைத்து, தேற்றான்



விரையளவு குளிகை செய்து நிழலிலுலர்த்தி, அசனத்துக்கு முன் தேன், சருக்கரை இவை சேர்த்து பத்து நாள் சாப்பிட வாயு, புளியேப்பம், மூலவியாதி, உதிரவாயு, திரட்சிவாயு எல்லாம் தீரும். கைகண்டது.

### வாய்ப் புண்ணிற்கு

கருநொச்சியிலை இரண்டை, மூன்று நாள் மென்று நீரைக் கொப்பளித்துத் துப்பி விடவும். கைகண்டது.

### வாயிதழ் கோணுதலுக்கு

ஆயப்பட்டையை அரைத்துக் கோணியிருக்கிற பக்கம்பூசி சரியாய்த் திருப்பிவிட நிற்கும். கைகண்டது.

### தலை வலிக்கு

கழுத்து நரம்பை (Vein) இறுக்கிப் பிடித்துக்கொண்டு பலாயிலையையாவது, எருக்கமொட்டையாவது மூக்குத் துவாரத் துள் வைத்து அழுத்த, சிறு மூக்குடைந்து இரத்தம் வரும். நீங்காத் தலைவலி தீரும்.

### வாயுவுக்கு

மிளகு, கடுகு, வெள்ளுள்ளி, சுக்கு, ஓமம், பெருங்காயம், கடுகுரோகணி இவை சரிகூட்டி வெதுப்பிச் சூரணித்து, ஒரு சிட்டிக்கை தேனில் கொள்ளவும். கைப்பு புளி நீக்கவும்.

### வாதத்துக்கு

அழிஞ்சி, மாவிலிங்கு, கொடுவேலி இவைகளின் இலை வகைக்குப் பிடி ஒன்றை நன்றாக இடித்து தண்ணீர் அல்லது பழந் தண்ணீர் விட்டரைத்து, கழற்சிக்காய் அளவு கொள்ளத் தீரும்.

### குடல் பிடிப்பு வாதத்திற்கு

காவிலை, சங்கிலை, எருக்கமொட்டு இவற்றை வறுத்துப் பொடித்த சூரணமும், வசம்பு, சுக்கு, கடுக்காய், பூண்டு, அசமதாகம் இவற்றை வறுத்து இடித்த சூரணமும் ஓர் அளவாகக் கலந்து வெருகடியளவு கொள்ளவும். கைப்பும் புளிப்பும் நீக்கவும்.

**வேறு:**—பாவட்டைவேரும் மிளகும் அரைத்து இளவெந் நீரில் கொள்ளவும்.

**வேறு:**-முடக்கொற்றான்சமூலம், முருங்கையிலை, குறிஞ்சான் இலை, இண்டங்கொழுந்து, நொச்சிக்கொழுந்து, கழற்சிக்

கொழுந்து, பிறண்டைக்கொழுந்து, வேலிபருத்திசமூலம், சாரணைசமூலம், இவைகளை இடித்து இரண்டு படி சாறுவாங்கி அதில் தேங்காய்பால் படி ஒன்று சேர்த்து அத்துடன் சுக்கு, மிளகு, பூண்டு, பெருங்காயம், கடுகு, வெந்தயம், கருஞ்சீரகம், இந்துப்பு இவை வகைக்கு நாலு காசிடை கூட்டி, இவைகளை அரைத்துக் கலக்கி சட்டியைக் காயவைத்து விளக்கெண்ணெய் உழக்கு விட்டுக் காய்ச்சி எடுத்து அதில் ஒரு கரண்டியளவு மூன்று நாள் கொள்ளவும். பத்தியம்: வெள்ளாட்டு வற்றல், முருங்கையிலை, காய், தேங்காய்ப்பால் கூட்டலாம்.

## பஞ்சாக்கினி தைலம்

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், புன்னையெண்ணெய், புங்கெண்ணெய் இவை வகைக்குப் படி இரண்டு சேர்த்து, அத்துடன் பெருங்காயம், சங்கழுநீர், கோஷ்டம், கடுகு, கொடிவேலிவேர், வசம்பு, ஏலம், கஸ்தூரி மஞ்சள் இவை வகைக்கு விராகன் இரண்டு சூரணித்திட்டு காய்ச்சும்போது அதில் வெள்ளுள்ளி தோல்நீக்கியதும், வசம்பும் வகைக்குப் பலம் இரண்டு, இவைகளைத் தட்டிப்போட்டு மெழுகு பதத்தில் காய்ச்சி வடித்து சர்வாங்கமும், தேய்த்துவர, பக்ஷ வாதம், சிலேற்பனவாதம், தனுர்வாதம் முதலிய வாதநோய்க் கூட்டங்கள் எல்லாம் தீரும். கைப்பு புளிப்பு நீக்கவும்.

## கைகால் நரம்பு இசிவுக்கு

சாரணைக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு இவற்றின் இடைக்குச் சமன் வரகரிசி சேர்த்து இடித்து, மாவைத்தெள்ளி, களிகிண்டி கருப்புக்கூட்டி, அத்துடன் சிறிது நெய் சேர்த்து உண்ணத் தீரும்.

## கைகால்இசிவு நரம்புப் பிடிப்பு இசிவுசன்னி இவைக்கு

பிரண்டைவேரை அரைத்து எலுமிச்சங்காயளவு நல்லெண்ணெயில் குழப்பி உண்ணவும்.

வேறு:—மஞ்சள்க்கிழங்கு, சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி, அசமதாகம் இவை ஒரு சேர் கொண்டு குப்பைமேனிச்சாறும் பசுவின் நெய்யும் அவ்வளவு கூட்டி வேகவைத்து பதத்தில் வடித்து உள்ளுக்குக் கொடுத்து மேலும்பூசிப் பிடிக்க இசிவு வகை தீரும்.



## விஷ முஷ்டித் தைலம்

எட்டி, எருக்கு, முருக்கு, ஊமத்தை, வாதமடக்கி, வாகை, தழுதாழை, சங்கங்குப்பி, முடக்கொற்றான், வேலிப்பருத்தி, குப்பைமேனி, சன்னிநாயகம், முருங்கை, முன்னை இவைகளின் இலைச்சாறு, வெள்ளுள்ளிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பை எண்ணெய், பசுவின் பால் இவை வகைக்குப் படி ஒன்று, எட்டி விதைக் குடிநீர் படி ஒன்று; வெள்ளுள்ளி, தேவதாரம், அதிமதுரம், கோஷ்டம், இந்துப்பு, திப்பிலி, கொடிவேலிவேர், தகரைவேர், திப்பிலிமூலம், சந்தனம், ஏலம், கிராம்பு, இலவங்கப் பட்டை, புலிதொடக்கிவேர், கச்சோலம், அரத்தை, கருஞ்சீரகம் இவை வகைக்கு விராகன் ஆறு. இவற்றை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி ஆதொண்டம்பட்டை விராகன் ஆறு பொடித்துப் போட்டு மெழுகுபதமாக வடித்து, காசிடை கொண்டு, உடல் முழுமையும் பூசிப்பிடித்து வெந்நீரில் குளித்துவர, திமிர்வாதம், பாரிசவாதம், சந்துவாதம், அஸ்திவாதம், தோள்வாதம், வாதக் குடைச்சல், சர்வாங்கவாதம், வாயு, உடல்இளைத்துப்போதல் சன்னி பதிமூன்று இவைகள் தீரும். பத்தியம் காக்கவும்.

## சஞ்சீவித் தைலம்

நல்லெண்ணெய் படி ஒன்று, சின்னி, கோழியாவரை, கற்பூர வல்லி, சிறுமுன்னை, சிலந்திநாயகம், சங்கு இவற்றின் இலைச் சாறு வகைக்குப் படி எட்டு, சிற்றவரைக்கிழங்கு, அஞ்சில்இலை வயிரவன்கிழங்கு, கோவைக்கிழங்கு, அப்பைக்கிழங்கு, நன்னாரி வேர், சிறுகுறிஞ்சான்வேர், பெருமருந்துப்பட்டை, அரத்தை, சதகுப்பை, தேவதாரம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், இலவங்கம், கார்போகவரிசி, பூதகரம்பான்பட்டை, திப்பிலி, பூண்டு, வசம்பு இவை வகைக்கு விராகன் இரண்டு மேற்படி சாற்றில் அரைத்துக் கரைத்துக் காய்ச்சி மெழுகுபதமாக வடித் துக் காசிடை சாப்பிட்டு, மேலும் பூசத் தீரும். இச்சாபத்தியம்.

## விக்கத்துக்கு

அவுரிச்சாறு, கள்ளிப்பால், பசுவின் பால், தயிர், நெய் இவை வகைக்குப் படி எட்டு கூட்டிக் காய்ச்சிப் பதமாய் வடித்து துட்டிடை இரண்டு வேளை பத்து நாள் கொள்ள பெரு வயிறு, சோகை முதலிய நோய்கள் தீரும். பத்தியம் காக்கவும்.

## பெரு வியாதிக்கு

பூவரசன்யிலையைக் குழித்தைலம் இறக்கிச் சாப்பிட்டு மேலும் பூச, வண்டுகடி, ஆருத புண், தீராத விரணம், பெரு நோய் முதலியன போம்.

**வேறு :**—பூவரசம்விதையைக் குழித்தைலம் வாங்கி இரண்டு மூன்று துளி சாப்பிட்டு, மேலுக்கும்பூச, வண்டு கடி, ஆருத புண் முதலியவை தீரும். இச்சாபத்தியம்.

**வேறு :**-வேலிப்பருத்தியிலைச் சூரணம் தக்க அளவில் இரண்டு வேளை பத்து நாள் சாப்பிடத் தீரும். நாற்பது நாள் சாப்பிட் வெடித்த புண்கள், வண்டுகடி இவை தீரும். பத்தியம் : மீன், பாகற்காய் நீக்கி, விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும்.

## வயிற்றுக்கட்டி வகைக்கு

பேய்க்கொம்மட்டிக்காய்ச்சாறு படி இரண்டு, தேங்காய்ப் பால் படி நாலு, கொள்ளு வெந்தசாறு படி எட்டு, இவை களுடன் சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், நற்சீரகம், கருஞ்சீரகம், தேசாவாரம், பெருங்காயம், இந்துப்பு, கடுகு ரோகணி, கோஷ்டம், சிற்றரத்தை இவை வகைக்குப் பலம் இரண்டு, பனைவெல்லம் பலம் ஏழு இவைகளை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கிச் சிறு எலுமிச்சங் காயளவு, புளி நீக்கிப் பத்து நாள் சாப்பிட; பெருவயிறு, நீர்க்கோவை, நீராமை, கெற்பவிப்புருதி, கடிகள், வயிற்றுள் உண்டாகும் நோய்கள் முதலியன தீரும்.

## வயிற்று வலி வகைக்கு

பேய்க்கொம்மட்டிக்காய், ஈரவெங்காயம் இவை வகைக்குப் பலம் இரண்டு சிறுக அறிந்து, கால்ச் சேர் விளக்கெண்ணெய் விட்டு சிவக்க வறுத்து கருப்புக்கட்டி சேர்த்து அரைத்துக் கழற்சிக்காய் அளவு இரண்டு வேளை சாப்பிட வயிற்றிரிவு, கெண்டை, வயிற்றுக்கட்டி இவை தீரும். உப்பு, மிளகு கூட்டிய பத்தியம். பேதியாகில் கஞ்சி வைத்து உண்ணவும்.

## மகோதரத்துக்கு

சமுத்தை லத்திச்சாறும், விளக்கெண்ணெயும், சரி கூட்டி இரண்டு வேளை ஐந்து நாள் கொள்ளவும். சோறு கேட்டால் படுக்கையிலேயே கொடுக்கவும்.



## பெரும் பாட்டிற்கு

எருமைச்சாணிப்பாலும், தயிரும் கலந்து சாப்பிடத் தீரும்.

**வேறு :**—மஞ்சள்ச் சூரணம், வெருகடியளவும், பெருங்காய சூரணம் இரண்டு பணவிடையும் சேர்த்து மூன்று நாள் கொள்ளவும்.

**வேறு :**—எழுமுள்ளியிலையும், கீழ்க்காய்நெல்லியியிலையும், சரி கூட்டி அரைத்து, நல்லெண்ணெயில் கொள்ளவும்.

**வேறு :**—முள்ளிக்கீரைவிதையை அரைத்துப் பசுவின் வெண்ணெயில் குழப்பிக் கொள்ளவும்.

**வேறு :**—வாழைப்பழத்தில் இரண்டு பணவிடை பெருங் காயம் சேர்த்து மூன்று நாள் கொள்ளப் பெரும்பாடு தீரும்.

## இருமல் வகைக்கு

பரங்கிப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம் இவை வகைக்குப் பலம் மூன்று, இவைகளைச் சூரணித்து வெருகடியளவு தேனில், அந்தி சந்தி கொண்டு, மிளகு கஷாயம் சாப்பிடவும். ஈளையும், காசமும் தீரும்.

## மேகநீர்க் குட்டத்திற்கு

ஒரு சட்டியில் பசுவின் பால் படி இரண்டு விட்டு வேடு கட்டி அதன்மேல் ஐந்து பலம் கந்தகத்தைப் பொடித்து வைத்து மேலே தட்டைச்சட்டியால் மூடி மண் சீலை செய்து மேற்படி சட்டியைக் கழுத்தளவு குழியில் புதைத்து அதன் மேல் எருவிட்டுப் புடமிட கந்தகம் பாலில் உருகி விழுந் திருக்கும். இவ்வாறு ஏழு முறை செய்து எடுத்த கந்தகத்தைச் சூரணித்து, சரியிடை சீனிச்சருக்கரை கலந்து, வெருகடியளவு இரண்டு வேளை சாப்பிட, சகல குட்டமும் தீரும்.

## கைகால் குறைந்த குட்டத்துக்கு

பிரண்டைக்கொழுந்தை பசுவின் பாலிலரைத்து ஒரு மண்டலம் கொள்ளத் தீரும். . இச்சாபத்தியம்.

## மார்பாணி நெஞ்சுப்பிளவை மூலைக்குத்துப் பிளவைக்கு

மாஞ்சியிலை, நீர்ப்புலாயிலை, கோவையிலை இவைகளின் சாறு வகைக்கு ஆழாக்கு எடுத்து மிளகு பலம் மூன்றும்

மாவிலை மூன்றும் சேர்த்து மேற்படிச் சாற்றால் இரண்டு சாமம அரைத்த பின், ஊமத்தஞ் சாற்றில் ஒரு நாழிகை அரைத்துப் பற்றிடத் தீரும்.

## புண், வெட்டுகாயம் இவைகளுக்கு

இலவங்கப்பட்டை, அதிமதுரம், கோஷ்டம், செண்பகப்பூ, காசுக்கட்டி, வேம்பாடம்பட்டை, கருஞ்சீரகம், சதகுப்பை இவை சரிகூட்டி வறுத்து இடித்து, அவ்விடைக்கு வெள்ளாட்டுப் புழுக்கைச் சூரணம் கூட்டி நன்றாய் அரைத்துப் புண்களில் தூவி வர எல்லாப் புண்களுமாறும். கைகண்டது.

## ஆறாத இரணங்களுக்கு

நன்னாரிவேர் பலம் ஒன்று, மஞ்சள், மரமஞ்சள், கடுகுரோகணி, பேய்ப்புடல், வெள்ளறுகு, வேப்பிலை, பெருமரப் பட்டை இவை வகைக்கு விராகன் ஒன்று, இவற்றை அரைத்து நல்லெண்ணெயில் கரைத்துக் காய்ச்சி வடித்துப் புண்களில் போட, எல்லாப் புண்களுமாறிப்போம்.

## வண்டு கடிக்கும், 18 குட்டத்திற்கும்

சிவன்வேம்பு, சாரணை, வெள்ளறுகு, சங்கு, ஊமுலாற்றி, தழுதாழை, புங்கு, குமிழ், மாவிலிங்கு, காட்டாமணக்கு, அழிஞ்சி, நிலவிளா, மிளகரணை, வேப்பம்பட்டை இவை வகைக்குப் பலம் இருபது, புங்கு, இலுப்பை, புன்னை, வேம்பு, அழிஞ்சி, எட்டி இவற்றின் விதை வகைக்குப் பலம் ஐந்து இவைகளைப் பாண்டத்திலிட்டுப் புகைத் தைலம் இறக்கி, வேளைக்குக் காசிடை உள்ளுக்கு உண்டு, மேலுக்கும் பூசி வரத் தீரும். புளி நீக்கி இச்சாபத்தியமாக இருக்கவும்.

## வண்டு கடிக்கு

சங்கம்வேர், வெள்ளறுகு, சிறுகுறிஞ்சான், சங்கங்குப்பி, நொச்சி, மாதுளை, முக்காவேளை, மிளகரணை, பொன்முசுட்டை, நாய்வேளை, காட்டுமுருங்கை, குருந்தொட்டி, பழுபாகல், பேய்ப்புடல், சுண்டை, அமுக்கிரா, மருக்காரை, சீந்தில்தண்டு, வில்வம், வெள்ளெருக்கு, தலைசுருளி, கருடன்கிழங்கு, நாய்ப் பாகல், முன்துடரி, பின்துடரி, பீலித்துடரி இவைகள் வகைக்குப் பலம் பத்தும், நூறு வருஷம் சென்ற வேப்பம்பட்டை, கரந்தை வேர், தேற்றாம்பட்டை, கருங்காலிப்பட்டை இவை வகைக்குப்



பலம் ஐந்தும், உசாப்பட்டை, நரிவிளாப்பட்டை இவை வகைக்குப் பலம் மூன்றும், திரிகடுகு பலம் மூன்றும், ஆன இவைகளைச் சூரணித்து, அத்துடன் கேழ்வரகு படி ஒன்று, வீழிச்சாறு விட்டு ஏழு தடவை வறுத்து, ஐந்து பலம் கருப்புக்கட்டி சேர்த்து மேற்கண்டவைகள் எல்லாம் சேர்த்து இடித்துக் கூட்டி புது கலசத்திலிட்டு, ஒரு வேளைக்கு வெருகடியளவு, புளி நீக்கி ஒரு மண்டலம் கொள்ளத் தீரும்.

**வேறு** :—வெள்ளாட்டு மூத்திரம் படி எட்டு கொண்டு ஒரு வகை விறகால் எரித்து, குழம்பாகக் காய்ச்சி, அதில் எருக்கம் பழுப்புச்சாறு விட்டுக் குழம்புபதத்தில் காய்ச்சித் தடவிவர, நீர்வண்டுகடி, பொரிவண்டுகடி, சிறுவண்டுகடி இவை தீரும். கோழி இறகால் எடுத்துத் தடவவும்.

**வேறு** :—நூறு வருடம்சென்ற பிராயம்பட்டையைச் சிறுக நறுக்கி, வெள்ளாட்டு மூத்திரம் படி நாலு விட்டு ஒரு படியாகக் காய்ச்சி வடித்து, பச்சைக்கடலை படி ஒன்று போட்டு அவித்து உலர்த்தி முறுகாமல் வருத்து, முதல் நாள் ஒன்றும், இரண்டாம் நாள் இரண்டும், இவ்வாறாக ஒவ்வொன்று, அதிகமாக ஒரு மண்டலம் வரையில் சாப்பிடத் தீரும். கைப்பு புளிப்பு நீக்கவும்.

## பெரிய வண்டு கடிக்கு

பேய்ப்பீர்க்கம்விதை, கொம்மட்டிச்சாறு, ஊமத்தங்காய்ச் சாறு, குளமஞ்சிச்சாறு, வெள்ளுள்ளி, வெண்ணெய், குப்பை மேனிச்சாறு, வசம்பு இவை ஓர் அளவாகக் கூட்டி சூரியபுடம் வைத்து கோழி இறகால் பூச, பொரிந்து உலர்ந்து விடும்.

**வேறு** :—ஆலங்கொழுந்து பிடி மூன்று, குப்பைமேனியிலை சுண்டைக்காயளவு, வெள்ளுள்ளி, மிளகு, வசம்பு இவை குன்றி எயவு இவைகளை அரைத்து ஒரு முட்டைச்சாம்பலை புண்ணில் தேய்த்து அதற்கு மேல் மருந்து போட்டு மூன்று நாளுக்குப் பின் வெந்நீரிட்டுக் கழுவி, புங்கம்விதையை அரைத்துப் பூசவும்.

## புறநஞ்சுப் பொருள்கள்

பெருவாகை, பெருங்குமிழ், பாதிரி, கூவிளை, முன்னை, கள்ளி வேர்ப்பட்டை, சுக்கு, சதாவேரி, நெருஞ்சி, சீந்தில் இவைகளின் தோல் நஞ்சுத் தன்மை உடையதாம்.

## அகநஞ்சுப் பொருள்கள்

நெல்லிதான்றி, கடுக்காய், சித்திரமூலம், சிவதை, நேர்வாளம், இவைகளின் உட்புறமுள்ள கொட்டை நரம்புகள் நஞ்சுத் தன்மை உடையனவாம். அவற்றை நீக்கிக் கொள்ள வேண்டும்.

## விக்கத்திற்கு

வேப்பம்பட்டை, பேய்ப்பீர்க்கு, வட்டத்திருப்பி, மரமஞ்சள், சிறுவழுதலை, கண்டங்கத்தரி, ஆடாதொடை இவை வகைக்குப் பலம் பத்து, இவைகளை இடித்து இரண்டு தூணி நீரிலிட்டுப் பதக்காகக் காய்ச்சி, நெய் படி நாலு சேர்த்து, அத்துடன் திப்பிலி மூலம், செவியம், கொடுவேலிவேர், மிளகு, கோஷ்டம், அதிவிடையம், இந்துப்பு, வட்டத்திருப்பி, வாய்விளங்கம், தேவதாரம், சீரகம், யானைத்திப்பிலி, அரத்தை, ஓமம், மஞ்சிட்டி, வாலுளுவை, எவச்சாரம், மஞ்சள், பூதகரப்பான், குடசப்பாலை இவை வகைக்குக் கழஞ்சு ஒன்று, சுத்திசெய்த சுக்கு பலம் இருபது இவைகளை அரைத்துக் கரைத்துக் கலக்கிக் காய்ச்சி, மெழுகுபதத்தில் வடித்து, வேளைக்கு துட்டிடை கொள்ள மூலம், விப்புருதி. சந்து விப்புருதி, ஆறாத புண், நரம்புச்சிலந்தி, பவுத்திரம், கண்டமாலை, விடக்கடி, பாண்டு, பிரமேகம்கூடிய வாதம், பீனிசம், சுவாசகாசம், மார்புநோவு, சுரோணித வாதம் முதலிய நோய்கள் தீரும். இச்சாபத்தியம்.

## காதுக்குக்கீழ் உண்டாகும் விக்கத்திற்கு

கருஞ்சீரகத்தை அரைத்துப் பூச, சிறு குழந்தை முதல் பெரியவர்கள் வரை உண்டான எவ்வித வீக்கமும் வற்றும்.

## ஈரல் குலை நோவுக்கு

பசுவின் பால் படி ஒன்று, நன்னாரிவேர், கோரைக்கிழங்கு, முசுமுசுக்கைவேர், வில்வவேர், பழம்பாசிவேர், பேய்ப்பீர்க்கு, ஓரிதழ்த்தாமரைவேர், தூதுவளைவேர், விடத்தலைவேர் இவை வகைக்குப் பலம் ஒன்று, சீரகம், கிராம்பு, கருஞ்சீரகம் இவை வகைக்கு விராகன் ஒன்று இவைகளை இடித்துப் பசுவின் நெய் படி ஒன்று சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து ஒன்பது நாள் கொள்ளவும். புளி, புகை நீக்கவும். ஈரல், குலையெரிவு, அஸ்தியெரிவு, நெஞ்செரிவு, உஷ்ணஎரிவு எல்லாம் தீரும்.



**வேறு** :—கோவைக்கொழுந்து, சந்தனம், காவிக்கல் இவைகளை வெள்ளாட்டுப்பாலிலரைத்து மூன்று நாள் கொள்ளத்தீரும்.

## மலட்டுப்பூச்சிக்கு

முன்னைவேர்ப்பட்டையை பாக்களவு அரைத்து மூன்று நாள் ஆறு வேளை அரைத்துத் தண்ணீரில் கொள்ள மலட்டுப் புழு நீங்கி, கெற்பந்தரிக்கும். கைகண்டது.

## கெற்ப முண்டாக

விளக்கெண்ணெய் சேர் ஒன்று, புத்திரசஞ்சீவிப்பட்டை, உலர்ந்த கருடன்கிழங்கு, பரங்கிப்பட்டை இவை வகைக்குப் பலம் நாலு, ஈரவெங்காயம் வீசை பத்து, இவைகளைச் சுத்த சலத்தில் அரைத்துக் கரைத்து மெழுகுபதமாகக் காய்ச்சி, வேளைக்கு ஒரு பலம், காலையிலும் மாலையில் கால் பலமும் சாப்பிட்டு மறுநாள், பச்சை விளக்கெண்ணெய் தேய்த்து முழுகவும். உப்பு, புளி, காரம், கறி இவை நீக்கி மாதத்துக்கு இரண்டு முறை சாப்பிடவும். உப்புக்கண்டம் சேர்த்துக் கொள்ளலாம்.

## பிறந்த பிள்ளைகள் தக்காமல் போய்விடச் செய்யும் நோய்க்கு

இலவங்கப்பட்டை, நிலவேம்பு, கடுகுரோகணி, சுக்கு இவை வகைக்குப் பலம் எட்டு, நாட்டுச்சர்க்கரை பலம் இரண்டரை, பசுவின் நெய் படி இரண்டு, பசுவின் பால் வேண்டிய அளவு வார்த்து எல்லாவற்றையும் அரைத்துக் கரைத்து குழம்பு பதத்தில் எலுமிச்சம்பழச்சாறு படி விட்டு, மேற்படி சர்க்கரையும், நெய்யும் சேர்த்து லேகியம் செய்து, கழற்சிக்காயளவு இரண்டு வேளை சாப்பிடவும். புளி, புகையிலை நீக்கவும். தலை முழுகிய நாள் பொரி, ரசம், துவரம்பருப்பு, நெய் இவை கூட்டலாம். இப்படி இருபத்திரண்டு நாள் சாப்பிடப் பிறக்கும் குழந்தை நன்றாய் இருக்கும்.

## பிள்ளை வயிற்றில் மரித்தால்

குதிரைலத்தியை இளவெந்நீரில் கரைத்துக் கொடுக்கப் பிள்ளை பிறக்கும்.

**வேறு** :—ஆமணக்கிலைச்சாறும், வெள்ளாட்டுப்பாலும், சரி கலந்து உண்ண, பிள்ளை பிறக்கும்.

**வேறு** :—வெந்தோன்றிக்கிழங்கை அரைத்து யோனியில் தடவ, பிள்ளை பிறக்கும்.

## பிள்ளைபெறமாட்டாதார்க்கு

தலைகீழாயிருக்கிற கோவைச்சிறுகொடியை விளக்கெண்ணெயிலிட்டு ஊறவைத்து அந்த எண்ணெயைக் கொடுத்து கொடியை கால் பெருவிரலில் கட்டி பிறந்தவுடன் கொடியைத் தண்ணீரில் போடவும்.

**வேறு** :—நீர்முள்ளிவேர் நாலு காசிடை அரைத்து விளக்கெண்ணெயில் குழப்பிக் கொள்ளப் பிள்ளை பிறக்கும்.

**வேறு** :—கீழ்க்காய்நெல்லிவேரை அரைத்து மேற்கூறிய படி கொடுத்து மேல் வயிற்றில் பூசவும் பிறக்கும்.

## பிள்ளை விழ

கொள்ளுக் கஷாயமும், கொம்மட்டிக்காய்ச்சாறும் சரி கூட்டிக் கொடுக்கப் பிள்ளை விழும்.

**வேறு** :—செண்பக விதையை வெள்ளாட்டுப் பாலில் அரைத்துக் குடிக்கவும் விழும்.

## பிள்ளை பெற்றவள் காயலுக்கு

கடுகுரோகணி, மிளகு, ஏலம், பூண்டு, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், கிராம்பு, கோஷ்டம், அக்கிராகாரம், பொரிக்காரம், திப்பிலி, கடுக்காய், அரத்தை, வசம்பு, பெருங்காயம், நிலவேம்பு, முக்காவேளை, சிவன்வேம்பு இவைகளைச் சரிகூட்டி இடித்து சூரணித்து சீனி சர்க்கரை சேர்த்து தினசரி தேனில் கொள்ளவும்.

## நான்காம் மாறல் சுரத்துக்கு

ஈயைப் பிடித்து கருப்புக்கட்டிக்குள் வைத்து மூடி மூன்று நேரம் கொடுக்கவும். உப்பு, புளி, நீக்கவும். மூன்றும் நாள் தலைக்குத் தண்ணீர் விடவும்.

## விக்கல், வாந்திக்கு

பாலும், நெற்பொரியும் கூட்டிக் காய்ச்சிக் கொடுக்கத் தீரும்.

**வேறு** :—நெற்பொரி, திப்பிலி, தேன், சர்க்கரை, மாதுளம் பழரசம், இவைகளைக் கூட்டிக் குழம்பாக்கிக் கொடுக்கவும் தீரும்.



**வேறு** :—நெற்பொரி, பேய்ப்புடல், வில்வப்பழம், சுக்கு, பயறு இவற்றைக் கூட்டி வெந்நீரில் கலந்து கொடுக்கவும்.

**வேறு** :—நெற்பொரி, கொத்தமல்லி, குளுந்தமட்டி, கூவிளம், கற்கண்டு அல்லது சர்க்கரை இவற்றைக் கூட்டி வடித்த நீர் கொடுக்கவும் தீரும்.

**வேறு** :-நெல்பொரி, சர்க்கரை, திப்பிலி, மாதுளம்பழச்சாறு இவற்றைக் கலந்து கொடுக்கத் தீரும்.

## காமாலை சோகை விக்கத்திற்கு

முரு முரு முருவிலி முள்ளிமுக் காவளை
உரி உரி உரி உரி உரியநீர் கொடு
பரு பரு பரு பரு பாண்டு ரோகமுஞ்
சுரு சுரு சுருவெனச் சோகை மாறுமே.

[(பொ-ள்.) முருவிலிசமூலம், நீர்முள்ளிசமூலம், முக்காவளைசமூலம் இவை வகைக்குப் பலம் இரண்டு, கடுக்காய் இருபது, ஈரவெங்காயம் படி இரண்டு, இவைகளைத் தட்டி எட்டு படி நீர்விட்டு நாலொன்றாகக் காய்ச்சி ஆழாக்கு அளவு இரண்டு வேளை நாலாறு நாள் கொள்ளத் தீரும்.

## காமாலை சோகை பித்தபாண்டுவுக்கு

அரப்பொடி, வெள்ளுள்ளி இவை வகைக்குப் பலம் இரண்டு மிளகு பலம் ஒன்றரை, அவுரிவேர்ப்பட்டை பலம் இரண்டு இவைகளை எலுமிச்சம்பழச்சாறு விட்டு நன்றாய் அரைத்துச் சூரியபுடம் வைத்து கொட்டைப்பாக்களவு இரண்டு வேளை பத்து நாள் கொள்ளத் தீரும். பத்தியம் காக்கவும். கைகண்டது.

## காமாலைக்கு

(1) நாயுருவிசமூலத்தைச் சுட்டசாம்பலை நீரில் கரைத்து வடிகட்டிக் காய்ச்ச பற்பமாகும். மேற்படி பற்பம் பணவிடை கொள்ளப் பசியையுண்டாக்கி, சகல வியாதிகளையும் போக்கும்.

(2) கீழாநெல்லிவேரையும், சீரகத்தையும் பசுவின் பாலில் அரைத்துக் குடிக்கவும் தீரும்.

(3) எருமைச்சாணிப்பாலை எருமைத்தயிரில் கூட்டிக் கொடுக்கவும் தீரும்.

(4) மூன்று வருடம் சென்ற பருத்தியிலைச்சாற்றில் சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி, சீரகம், இவைகளை ஓர் அளவாக அரைத்துக் குடிக்கவும் தீரும்.

(5) புளியனீர்க்கைத் துவைத்துப் பிழிந்தசாறு படி எட்டு, சாரணைசமூலச்சாறு படி எட்டு, தலைஎருமைச்சாணிப் பால் படி எட்டு, எருமைத்தயிர் படி எட்டு இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி வடித்து தக்க அளவில் கொடுக்கவும் தீரும். பாலும் சோறும் உண்ணவும்.

(6) சீரகம் விராகன் ஐந்து, இந்துப்பு விராகன் மூன்று, பெருங்காயம் விராகன் ஒன்றரை, அரப்பொடி விராகன் ஐந்து, கோளாங்கொட்டை விராகன் ஐந்து இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றில் நன்குக அரைத்துக் கையாந்தகரைச் சாறு, ஆழாக்கில் கலந்து கொடுக்கவும் தீரும். மூசுட்டையைத் துவைத்துச் சாறு பிழிந்து உடலின் மேல் துவளையிடவும்.

## ஏலாதி மாத்திரை

ஏலம், இலவங்கம், பச்சிலை, குங்குமப்பூ, அதிமதுரம், சந்தனம், சுக்கு, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், நன்னாரிவேர், வெட்டிவேர், இலாமிச்சம்வேர், தேவதாரம், திப்பிலி, இலுப்பைப்பூ இவை வகைக்கு விராகன் இரண்டு, கோரோசனையும், சடாமாஞ்சியும் வகைக்குக் கழஞ்சு ஒன்றரை, கஸ்தூரி விராகன் இரண்டு இவைகளைப் பொடித்து இளநீர் விட்டரைத்து, தூதுவளங்காயளவு மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தி இஞ்சிச் சாற்றில் அல்லது முலைப்பாலில் கொடுக்கத் தாபசுரம், அஸ்தி சுரம், பித்தசுரம், கபசுரம், உள்காய்ச்சல் எல்லாந் தீரும் தோஷத்துக்கு முலைப்பாலில் கொடுக்கவும்.

## வெள்ளைப்பாஷாண பற்பம்

வெள்ளைப்பாஷாணம் பலம் நாலு, தாமரையிலையை அரைத்த விழுது நார்த்தங்காயளவு கொண்டு அதனுள் பாஷாணத்தைப் பொதிய வைத்து அதன்மேல் புளியம்புறணி ஐந்து விரல் படியும்படி வைத்து மூடி சீலை மண் செய்து மேலே ஏழு சீலை மண் செய்து உலர்த்தி, சிறு புடமாகப் போட்டு, குளிர்ந்த பின் பாஷாணக் கட்டியை எடுத்துப் பொடித்து வைத்துக் கொண்டு, தக்க அளவில் இனமறிந்து அனுபானத்திலிடச் சகல வியாதிகளும், சகல சுரங்களும் தீரும். பத்தியம் காக்கவும்.



## சுரத்தின் மேற்காணும் இருமலுக்கு

முன்னைவேரைக் குறுக நருக்கி ஒன்றரைப் படி நீரிலிட்டு கால் படியாகக் காய்ச்சி இருத்து மூன்று நாள் ஆறு வேளை கொடுக்க இருமல் தீரும்.

## குளிர் சுரத்திற்கு

சுக்கு, கொத்தமல்லி, பேய்ப்புடல், பற்படாகம், நிலவேம்பு, சீந்தில்தண்டு, கோரைக்கிழங்கு, சிறுகாஞ்சொரி, முட்காய்வேளை, கண்டங்கத்திரி, பேராமுட்டி, அவுரிவேர், விஷ்ணு கரந்தை, கோஷ்டம், சிறுதேக்கு, ஆடாதொடை இவை வகைக்குப் பலம் எட்டு கொண்டு இடித்து, மூன்று படி நீரிலிட்டு எட்டு ஒன்றுகக் காய்ச்சி இறுத்து, வீசம் படியில் தேனும், பெருங்காயமும் பணவிடை உரைத்துக்கூட்டி, மூன்று நாள், ஆறு வேளை கொடுக்கத் தீரும். புளி நீக்கி, பத்தியம் காக்கவும்,

## அரக்குத்தைலம்

வெருகங்கிழங்கு பலம் பத்து, சிற்றாமுட்டி, நன்னாரி, நெருஞ்சி, அமுக்கரு, நரிப்பயற்றங்கொடி, குமிழம்வேர், கொடுப்பை, மூசுமுசுக்கைவேர் இவை வகைக்குப் பலம் ஒன்று, தாமரை வளையம் பலம் இரண்டு, கடுக்காய் பலம் ஐந்து, இவைகளை இடித்து நாலு மரக்கால் நீரிலிட்டுக் குருணியாகக் காய்ச்சி இறக்கி, வல்லாரைச்சாறும், இளநீரும் வகைக்குப் படி ஒன்று, ஆவின்பால் படி நாலு, தயிர் தெளிநீர், நெல்லிக்காய்ச் சாறு, இவை வகைக்குப் படி ஒன்று, எலுமிச்சம்சாறும், முலைப்பாலும் வகைக்குப் படி இரண்டு, பத்துப் பலம் அரக்கை, நாலு வள்ள நீரிலிட்டு, குருணியாகக் காய்ச்சி இறுத்து, முற்கூரியதுடன் சேர்த்துக் காய்ச்சியபின், சன்னலவங்கப்பட்டை, கோஷ்டம், அதிமதுரம், அக்கிராகாரம், இலுப்பைப்பூ, நற்சீரகம், கருஞ்சீரகம், தாமரையரிசி, நெல்லிப்பருப்பு, கோரைக்கிழங்கு, கொத்தமல்லி, வாய்விளங்கம், சதகுப்பை, இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, சந்தனக்கட்டை இவை வகைக்கு விராகன் நாலு, வெட்டிவேர், இலாமிச்சம்வேர், சிறுநாகப்பூ, பெருநாகப்பூ, ஏலம், கூகைநீறு இவை வகைக்குப் பலம் ஒன்று நல்லெண்ணெய் படி நாலு, இவைகளை எல்லாம் சேர்த்துக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்து எடுத்து அதில் ஆவின்பால், அல்லது காடி இவற்றுளொன்றில் ஒரு கரண்டியளவு கொடுத்து மேலுக்கும்

தேய்த்துத் தலைமுழுக, அஸ்திசுரம், உள்காய்ச்சல், எலும்பைப் பற்றியசுரம், ஆறுமாதமாகக்காயும்சுரம், உட்சூடு, மேகம் இருபத்தொன்று, கிராணி, மூலம் முதலியன தீரும். பத்தியம். கைப்பு, புளிப்பு, நீக்கவும். நோயின் தன்மைக்கேற்ப பத்து, இருபத்திரண்டு, நாற்பத்திரண்டு நாள் சாப்பிடவும்.

## நாட்பட்ட சுரத்திற்கு

முடக்கொற்றான், ஆடாதொடை இவ்விரண்டும், காட்டாமணக்கு, ஆவாரை, கீழாநெல்லி, இவற்றின் வேர் வகைகளும் பச்சைப்பாக்களவாகக் கொண்டு அத்துடன் கருங்காக்கணம், உசிலம், மாவிலிங்கை, குன்றி இவற்றின் வேர் பச்சைப்பாக்களவும், கடுக்காய், தான்றிக்காய், வெள்ளுள்ளி, பூவசம்பு இவைகள் இரண்டு பாக்களவும், சுரவெங்காயச்சாறு படி இரண்டும் கள்ளிப்பால் ஆழாக்கு அரையும் ஆக இவைகளையெல்லாம் அரைத்து விளக்கெண்ணெய் படி ஒன்றில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து ஒரு கரண்டியளவு இரண்டு மணி நேரத்திற்கொரு முறை சாப்பிடத் தீரும். கைப்பு, புளிப்பு நீக்கவும்.

## காய்ச்சல் சன்னி தோஷத்திற்கு

சுக்கு, திப்பிலி, மிளகு இவை வகைக்குப் பலம் இரண்டு, கிராம்பு விராகன் இரண்டு, தேசாவரம் விராகன் மூன்று, சித்தரத்தை விராகன் ஆறு, இஞ்சி பலம் இரண்டு, சித்தரத்தையும் இஞ்சியையும் சுரசம் செய்து மற்றவையை வெதுப்பிச் சூரணித்துப் போட்டுக் காலையில் கொள்ளத் தீரும்.

## பித்தசுரம் குளிருக்கு

பேய்ப்புடல், கோஷ்டம், கொத்தமல்லி, சுக்கு, சிற்றுமுட்டி, பேராமுட்டி, அவுரிவேர், நிலவேம்பு, சிறுதேக்கு இவைகளைக் கூட்டி நீரிட்டு ஐந்து, அல்லது பத்து நாள் சாப்பிடவும். புளி நீக்கவும்.

## சுரத்திற்கு

ஆடாதொடை, தும்பை, துளசி, வேலிப்பருத்தி, குட்டிவிளா, உத்தமதாளி, முசுமுசுக்கை, பேய்ப்புடல், நாயுருவி இவற்றின் இலைகளைச் சரிகூட்டி இடித்து, சட்டியிலிட்டு இரண்டு படி நீர் விட்டு வேடுகட்டி, அதில் சுக்கு, கடுகுரோகணி, மிளகு இவற்றைக் கூட்டி துணியில் முடிந்து மேற்படி இடித்த மருந்துக்குள் வைத்து



மேல்மூடி சீலைமண்செய்து, அடுப்பிலேற்றி வேகவைத்து எடுத்து துணியில் உள்ள மருந்துகளை எடுத்து மூன்றில் ஒரு பாகம் சட்டியில் இருக்கும் நீரால் அரைத்து, மூன்று நாள் ஆறு வேளை சாப்பிடவும். பத்தியம்: உப்பை வறுத்துக் கூட்டிக்கொள்ளலாம்.

## குளிர் சுரத்திற்கு

எருக்கன்கொழுந்து, வசம்பு, வெள்ளுள்ளி, மிளகு, சுக்கு, முருங்கைப்பூ இவை சரிகூட்டிச் சிறுநீரிலரைத்து சுண்டைகாயளவு உண்டை செய்து, இளவெந்நீரில் கொள்ளக் குளிர்சுரம் போம்.

**வேறு :—**குப்பைமேனிவேர் ஒன்று, வெள்ளுள்ளி பத்து, மிளகு மூன்று இடை, இவற்றை அரைத்து வெந்நீரில் கொள்ளக் குளிர்காய்ச்சல் தீரும்.

**வேறு :—**பொன்னாங்கண்ணிவேர், பேய்ப்புடல், முத்தக்காசு, பற்படாகம், சீந்தில், சுக்கு இவைகளை ஓர் அளவாகக்கொண்டு, முறைப்படி குடிநீரிட்டுக் கொடுக்கலாம்.

**வேறு ;—**கஞ்சாங்கோரை, துளசி, பற்படாகம், விஷ்ணு கரந்தை, கருவேம்பு, சிற்றுமுட்டி, பேராமுட்டி, அரத்தை, பேய்ப்புடல், துளசி, சிறுதேக்கு, இலவங்கம், திப்பிலி இலாமிச்சம்வேர், சீந்தில் இவைகளைச் சமன்கூட்டி, குடிநீரிட்டும் கொடுக்கலாம்.

## சுர வெதுப்பிற்கு

பெரும் பூசணிக்காய்ச்சாறு, தண்ணீர்விட்டான்கிழங்குச் சாறு, இளநீர், ஆவின்பால், ஆவின்நெய் இவை வகைக்குப் படி ஒன்றேமுடு, கோஷ்டம், அதிமதுரம், சந்தனம், பச்சிலை, கச்சோலம், ஏலம், இலவங்கம், செங்கழுநீர்க்கிழங்கு, தாமரைவளையம், வெட்டிவிழாலரிசி, வெப்பாலையரிசி, சுக்கு, இலாமிச்சம்வேர், இலவம்பிசின், வேர், திப்பிலி, மாங்கொட்டை, ஆத்திப்பூ, சிற்றுமுட்டி, பொன்முசுட்டை இவைகளை வகைக்கு விராகன் ஒன்றேகால் வீதம் கூட்டி அரைத்துக் கரைத்து மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்து, நாள் ஒன்றுக்குக் காசிடை வீதம் சாப்பிட உள்காய்ச்சல் தீரும். பத்தியம் காக்கவும்.

## தாக சுரத்திற்கு

கூவிளம்வேர்ப்பட்டை, நெல்பொரி, சீரகம் இவைகளைக் குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

வேறு :—ஆற்றுமணலைத் தீ பறக்க வறுத்து வேண்டிய நீர் விட்டு ஆறிய பின் நாலு வேளை கொள்ளவும்.

## மேற்சுவாசத்திற்கு

வில்வப்பட்டை, சீரகம் இவ்விரண்டையும் அரைத்துக் கொடுத்து, தொப்புளிலிருந்து மார்புவரை சந்தனத்தைக் கனக்கப் பூச மேற்சுவாசம் நிற்கும்.

## விடாச்சுரத்திற்கு

கொத்தமல்லி, சுக்கு, வெள்ளுள்ளி, சீரகம், மிளகு இவற்றைத் துணியில் முடிந்து ஒரு படி நீரிலிட்டு உழக்காய்க் காய்ச்சிய நீரில் மருந்தை அரைத்து மூன்று நாள் ஆறு வேளை கொடுக்க விடாச்சுரம் தீரும்.

## சுரத்திற்கு

கருப்பங்கட்டி சந்தனமுங்
காட்டில் பழுத்தபழம் புளியும்
விரும்பிக்கடைந்த வெண்ணெயுடன்
விடியற்காலங் கொள்விரேல்
பருப்புபால் நெய் முருங்கையிலை
பரிகாரஞ்செய் புளிதவிர்த்தால்
நெருப்புப்போன்ற சுரங்களெல்லாம்
நில்லாதோடும் நிச்சயமே.

[(பொ-ள்.) வெல்லம், சந்தனம், காட்டுப்புளி, வெண்ணெய் ஆகிய இவைகளை ஓர் அளவாகக்கூட்டி விடியற் காலையில் தின்று, புளியைத் தவிர்த்து, பருப்பு, பால், நெய், முருங்கையிலை போன்ற உணவைப் பத்தியமாகக் கொள்ள, சுரம் போம்.]

## நடுக்கு சுரத்திற்கு

அழிஞ்சிப்பட்டை விராகன் நாலு, வசம்பு, வெள்ளுள்ளி இவை விராகன் இரண்டு; இவைகளை அரைத்து, சுண்டைக்காயளவு மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தி இஞ்சிச் சுரசஞ்செய்து அதில் கொடுக்கத் தீரும். மீறினால் நொச்சித்தழையை நீர்விட்டு அவித்துச் சாறு பிழிந்து வடிக்கட்டி அதில் கொள்ளவும்.

## தலை கனத்திற்கு

பொன்னாங்காணி சமூலம், வெள்ளுள்ளி, வசம்பு இவைகளைத் தட்டி முலைப்பாலில் நசியமிடத் தீரும்.



## கருத்த அக்கர சுரத்திற்கு

பேய்ப்புடல், முத்தக்காசு, பற்படாகம், முசுமுசுக்கை, சுக்கு, திப்பிலி, சீரகம், ஏலரிசி இவைகளைத் துணியில் முடிந்து ஒரு வள்ளம் நீரிலிட்டு ஒரு சாதி விறகாலெரித்து ஒரு படியாகக் காய்ச்சி இறுத்து கால் படி கொடுக்கவும். பத்தியம்: வெந்நீரும் சோறும் உண்ணவும்.

## கருத்த சீத சுரத்திற்கு

சட்டியைக் காயவைத்துச் சீரகமிட்டுப் பொரியும்போது ஒரு படி நீர்விட்டு அரைக்கால் படியாகும்போது எலுமிச்சங்காய் அளவு எருமை வெண்ணெய் போட்டுக் கொடுக்கவும்.

## வாத சுரத்திற்கு

கொத்தமல்லி, சுக்கு இவற்றை வெந்நீரிலரைத்துக் காய்ச்சி கொடுக்கவும்.

வேறு :—சிறுகாஞ்சொறி, சீந்தில், முத்தக்காசு, சிற்றுமுட்டி, கொத்தமல்லி, சுக்கு இவற்றைக் குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

## பித்த சுரத்திற்கு

தும்மராட்டம், சுக்கு, திப்பிலி, அகில்கட்டை, கடுகுரோகணி, மிளகு, கொத்தமல்லி, வெள்ளுள்ளி இவை சரிகூட்டி வெந்நீரிலரைத்துக் கொடுக்கவும்.

வேறு :—முத்தக்காசு, சிற்றுமுட்டிவேர், சீந்தில், நன்னாரி வேர், கருவேலம்வேர், சந்தனம், பற்படாகம் இவைகளைக் குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

## சிலேட்டும சுரத்திற்கு

சீரகம், திப்பிலி, சுக்கு, வெள்ளுள்ளி, கடுகுரோகணி, கொத்தமல்லி, லவணம், தும்மராட்டம் இவை சரிகூட்டி வெந்நீரிலரைத்துக் கொடுக்கவும்.

வேறு :—பேய்ப்புடல், சீந்தில், நிலவேம்பு, முத்தக்காசு, கடுக்காய், நெல்லிப்பருப்பு, தான்றிக்காய், தேவதாரம், கசகசா, திப்பிலி இவைகளை ஓர் அளவாகக் கொண்டு குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

## தொந்த சுரத்திற்கு

இஞ்சி, கருவாய்ப்பட்டை, நொச்சியிலை, சித்திரமூலம், கையாந்தகரை இவற்றை நறுக்கிச்சாறு பிழிந்து, அத்துடன் சுக்கு, மிளகு, திப்பிலி இவைகளைப் பொடித்து உளுந்திடை போட்டு அரைத்துக் கொடுக்கவும்.

**வேறு:**—கொத்தமல்லி, சுக்கு, பேய்ப்பீர்க்கு இவைகளைக் குடிநீர் செய்து கொடுக்கவும்.

**வேறு:**—கண்டங்கத்திரி, இருவேலி, விஷ்ணுகரந்தை, வாய் விளங்கம், துளசி, குமிழம், கோஷ்டம், சங்கு இவைகளை ஓர் அளவாகக் கொண்டு குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

**வேறு:**—பாதிரி, நிலவேம்பு, சீந்தில், நன்னாரி, இருவேலி, இலாமிச்சம்வேர், சாரணை, குருந்தொட்டி, சின்னிமுள்ளி, சிறுதேக்கு, அரத்தை, சிற்றுமல்லி, கள்ளி, கஞ்சா, கொத்தமல்லி, குமிழ், இலுப்பைப்பூ இவைகள் ஓர் நிறையாய் கொண்டு, குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

## வாத பித்த சுரத்திற்கு

நெருஞ்சிவேர், நிலவேம்பு, அகில், சிற்றுமுட்டிவேர், சுக்கு, பற்படாகம், கடுக்காய், ஆடாதொடை இவைகளைக் குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

சீந்தில்தண்டு, முத்தக்காசு, நன்னாரிவேர், செவ்வியம், சுக்கு, துளசி இவைகளைக் குடிநீர்செய்து கொடுக்கவும்.

## வாத சிலேட்டும சுரத்திற்கு

கண்டங்கத்திரிவேர், சிறுகுறுஞ்சான்வேர், சுக்கு, கண்டு பரங்கி, சீந்தில்தண்டு, தும்மராட்டம், திப்பிலி, திப்பிலிமூலம் இவைகளைக் குடிநீரிட்டுக் கொடுக்கவும்.

## அசிரண சுரத்திற்கு

நெல்லிவற்றல், கடுக்காய், தான்றிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், ஓமம், வசம்பு, பற்படாகம் இவைகளைச் சமனிட்டுக் குடிநீர் செய்து கொடுக்கவும்.

## சந்நிபாத சுரத்திற்கு

முத்தக்காசு, பற்படாகம், முன்னை, கொத்தமல்லி, பாதிரி, நிலவேம்பு, நெருஞ்சி, முந்திரிப்பழம், வேலிப்பருத்தி, கொன்றை,



குமிழ், காஞ்சொரி, வாகை, வழுதுணை, கண்டங்கத்திரி இவைகளைக் கஷாயமிட்டுக் கொடுக்கவும்.

## சன்னி சுரத்திற்கு

முந்திரிப்பழம், அதிமதுரம், இலுப்பைப்பூ, திப்பிலி, பேரிச்சம்பழம், இலாமிச்சம்வேர், இருவேலிவேர், நன்னாரிவேர், முத்தக்காசு, கண்டசர்க்கரை இவைகளைச் சரி சமன்கூட்டி கரும்புப் பாலிலரைத்து உண்டைசெய்து நிழலிலுலர்த்தி சன்னியால் வாய் திறவாமலிருந்தால் முலைப்பாலில் நசியம் செய்து மேற்படி பாலில் உள்ளுக்குக் கொடுக்கவும்.

## சுவாசகாசம், எலிகடி, வண்டுகடி இவைகளுக்கு

வெள்ளைப்பாஷாணம், கௌரிப்பாஷாணம், துருசு, நேர்வாளம், எட்டிவிதை, நீரடிமுத்துப்பருப்பு இவை வகைக்கு விராகன் நாலு, தேங்காய் ஓட்டுக்கரி விராகன் எட்டு இவைகளைத் தேங்காய்ப்பால் விட்டு ஆறு சாமம் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து வேப்பெண்ணெயில் துவட்டி பொரி மாவில் புரட்டி ஐந்து நாள் கொடுக்கவும். உப்பு, புளி, நீக்கிப் பத்தியம் இருக்கவும். பச்சை அரிசியில் பால் வார்த்துக் கஞ்சி வைத்துக் கொள்ளலாம். இரைப்பு, இருமல், ஈளை இவைகள் போம்.

## இரத்த காசத்திற்கு

நல்லெண்ணெய் சேர் ஒன்று, காட்டுச்சீரகம் சேர் எட்டு, கழற்சிவேர்ப்பட்டை பலம் ஒன்றரை இவற்றை நீரிலரைத்து எண்ணெயில் கரைத்து மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து ஒரு அளவாக பத்து நாள் சாப்பிடத்தீரும். பத்தியம் காக்கவும்.

## வாத சயத்திற்கு

இம்பூறல்சாறு படி எட்டு, அக்கிராகாரம் பலம் இரண்டு இவைகளைக்கூட்டி வெய்யலில் உலர்த்தி சூரணித்து மூன்று நாள் ஆறு வேளை சாப்பிட நோய்போம்.

## காசம் இருமலுக்கு

குருந்தொட்டி சமூலத்தை, மூல நட்சத்திரத்தில் தூபதீபமிட்டுப் பிடுங்கி நிழலிலுலர்த்தி சூரணித்து வெருகடியளவு தேனில் ஒரு மண்டலம் கொள்ளத் தீரும்.

## காசம் 5-க்கு

சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளைத் தூதுவளை, வட்டத் திருப்பி, தகரைவேர் இவற்றின் சாற்றில் அரைத்துப் பசுவின் நெய்யிலிட்டுக் காய்ச்சிக் கொள்ளவும்.

## பிரமானந்த வயிரவ மாத்திரை

சாதிலிங்கம், வெங்காரம், மிளகு, நாபி இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து இஞ்சிச்சாற்றில் கொள்ள, சன்னிசுரம், பித்தம், தேள் விஷம் முதலியன தீரும்.

## வாத நீருக்கு

நல்லெண்ணெய், புங்கெண்ணெய், வேப்பெண்ணெய், புன்னையெண்ணெய், பசுவின் வெண்ணெய் இவை வகைக்குப் படி எட்டு, எருக்கு, முள்ளி, சங்கு, புங்கு, விராலி, முத்துருக்கன், முருங்கை, முருக்குகள்ளி, மாவிலங்கு, கொடிவேலி இவைகளின் வேர் வகைக்குப் பலம் ஒன்று, சுக்கு, மிளகு, திப்பிலி, அரத்தை, கோஷ்டம், சீரகம், கொத்தமல்லி, அக்கிராகாரம், அதிவிடையம், நெல்லிவற்றல் இவை வகைக்குப் பலம் ஒன்று, ஏலம், இராம்பு, சாதிக்காய், பச்சைகற்பூரம், கோரோசனை, குங்குமப்பூ, புனுகுசட்டம் இவை வகைக்கு விராகன் மூன்று, இவைகளை அரைத்து மேற்படி எண்ணெய்களை விட்டு மெழுகு பதமாகக் காய்ச்சி வடித்துக் கொள்ளவும். பத்தியம் காக்கவும்.

## சகல பருக்களுக்கும்

அருகங்கிழங்கும், நாயுருவிவேரும் இரண்டிரண்டு விராகனிடை பச்சை நெல்லு, வெள்ளுள்ளி, வெள்ளை ஈரவெங்காயம், வசம்பு, மிளகு இவ்வளவுந்தட்டி விளக்கெண்ணெய் படி இரண்டு சேர்த்து சூரியபுடம் வைத்து மெல்லிய துணியில் தடவி பருக்களின் மேற்போட மூடுபரு, உதட்டுப்பரு, மூக்குப்பரு, கன்னப்பரு, காணுப்பரு முதலியன தீரும். உப்பு. புளி, நீக்கி கடும்பத்தியம் கொள்ளவும்.

## விரியன் கடிக்கு

தான்றிவேரை அரைத்து உண்டை செய்து விரியன் கடிக்குக் கொடுக்கவும்.



## நல்லபாம்பு கடிக்கு

தான்றியிலையை அரைத்து உண்டை செய்து நல்லபாம்பு கடிக்குக் கொடுக்கவும்.

## சில் விடங்களுக்கு

மேற்படி பூவை அரைத்து உண்டை செய்து சில் விஷங்களுக்குக் கொடுக்கவும்.

## பிள்ளை எளிதில் பெற

மேற்படி காயை அரைத்து உண்டை செய்து பிள்ளைபெற வருத்தப் படுபவளுக்கு வயிற்றில் தடவவும்.

## கண்டமாலைக்கு

நீலிவேரை அரைத்து பதினைந்து நாள் புண்ணில் வைத்துக் கட்ட ஆணிவிழுந்து விடும். நீலியிலையை அரைத்து வைத்துக் கட்ட புண்ணாறி விடும்.

**வேறு :**—கள்ளிக்கரி, எருக்கங்கரி, ஊமத்தங்கரி, கீரைத் தண்டு, நாயுருவியிலை இவை சரியிடை கூட்டி எலுமிச்சம்பழச் சாற்றில அரைத்துப் புண்ணிற்குப் பூசவும்.

**வேறு :**—வாழைப்பூ, செங்கீரை, நாயுருவிசமூலம், அப்பைக் கோவைக்கொழுந்து இவைகளை உலர்த்தி, ஓட்டிலிட்டுச் சுட்டுக் கரியைப்பொடி செய்து ஒன்றுகச் சேர்த்துச் சூரணித்து தேனில் குழைத்து பூசி வரவும். புண் உலர புன்னைப்பூவைக் கருக்கி எண்ணெயில் குழப்பிப் போடவும்.

**வேறு :**—சுண்டைவேரை இளவெந்நீரில் அரைத்துக் குடிக்கவும், நாகப்பாம்புச்சட்டையைப் புண்ணிலிட்டு எண்ணெய் தடவவும், ஆணி விழும்.

**வேறு :**—வாழைத்தாரின் இளம்பிஞ்சைச் சுட்டு எண்ணெயில் குழைத்துப் பூசவும்.

**வேறு :**—வேலியணைஞ்சானிலைச்சாறும் நல்லெண்ணெயும் சரிகூட்டி அமாவாசை தொடங்கி மூன்று நாளும் பௌர்ணமி தொடங்கி மூன்று நாளும் குடிக்கவும். இவ்வாறு மூன்று முறை செய்யவும்.

வேறு:-நோவிள்ளவேர், கிளிமூக்குத்திமூங்கு, வெள்ளரிவேர் இவைகளைப் பசுவின் பாலில் அரைத்துக் குடிக்கப் புழு சாகும். புண்வாய்க்கு கள்ளிப்பாலைச் சீலையிலூட்டிப் போடவும்.

அதன் பின்பு அரசன்பட்டையை நையத் தட்டிக் கட்டவும்.

பூவரசந்தழையை விளக்கெண்ணெயில் வதக்கி மூன்றுநாள் கட்டவும்.

கம்பிளிப்புழுவை நசுக்கி மூன்று நாள் கட்டவும்.

பூனைக்குட்டித்தலையில் தண்ணீர் வார்த்து அந்தத் தண்ணீரை மூன்று நாள் கொடுக்கவும்.

முற்றிய வேப்பமரத்தின் வைரத்தை அரைத்து இரண்டு வள்ளம் எருமை மோரில் கலக்கி சூரியபுடம் வைத்து சாப்பிடவும்.

வெட்டிவேரை அரைத்து ஒரு படி நல்லெண்ணெயில் கலந்து ஒரு சாதி விறகாலெரித்துக் காய்ச்சித் தலைமுழுகி வரவும் தீரும்.

## பல் நோய்களுக்கு

கொம்பரக்கு, மாசிக்காய், கொருக்காப்புளி, படிகாரம், துருசு இவைகள் வகைக்கு விராகன் ஒன்று, கடுக்காய், தான்றிக் காய், அரப்பொடி இவைகள் வகைக்கு மூன்று விராகன் இவற்றை எடுத்து எலுமிச்சம்பழச்சாற்றில் ஊறவைத்து உலர்த்திச் சூரணித்து பல்விளக்கப் பல் நோய்கள் எல்லாம் தீரும். கைகண்டது.

## பல் வலிக்கு

ஆல், அரசு, அத்தி, இத்தி, கருவேல் இவைகளின் பட்டைகளைச் சமன்கூட்டிக் காசுக்கட்டி, களிப்பாக்கு, கடுக்காய் இவைகளை இருபங்கு கூட்டிச் சேர்த்து கஷாயமிட்டு வாய் கொப்பளிக்க வலி தீரும்.

வேறு:—கடுக்காய் ஐந்து, சீனுக்காரம் விராகன் ஒன்று, வசம்புத்துண்டு மூன்று இவைகளைக் குடிநீரிட்டு வாய் கொப்பளித்துக் காட்டாமணக்கின் பாலைக்கொண்டு பல் விளக்கத் தீரும்.

வேறு:—மருக்காரை, சுக்கு, வெள்ளெருக்கு இவற்றை ஓர் அளவு கூட்டிக் குடிநீரிட்டுக் கொப்பளிக்கவும்.



## பல் புழுவிழ

காட்டுமுள்ளரியின் காயை முள்ளால் குத்தி, பசரியிலை சேர்த்து விளக்கெண்ணெயிலிட்டு வேகவைத்து மென்று வாயிலடக்கி உமிழ பற்புழுக்கள் விழும். வீக்கமும், வலியும் தீரும்.

## பல்லரணைக்கு

சீயக்காய்விதை ஒன்றும், மிளகு ஒன்றும் அரைத்து இளவெந்நீரில் குடிக்கவும்.

வேறு:—குதிரைவாலிவேர்க் கஷாயமிட்டுக் குடிக்கவும்.

வேறு:—வெள்வேல், வேம்பு இவைகளின் பட்டை, கடுக்காய், காசுக்கட்டி, களிப்பாக்கு இவைகளைக் கஷாயமிட்டுக் கொப்பளிக்கவும். கள்ளிப்பாலைப் பஞ்சிலூட்டி பல்லரணை மேல் போடத் தீரும்.

## முக சன்னிக்கு

நொச்சியிலை, மிளகு, பீர்க்கந்தண்டு, மஞ்சள், கற்றாழை வேர், ஓமம் இவை வகைக்குப் பலம் ஒன்று, வேப்பம்விதை ஐந்து, இவைகளைக் கூட்டி அரைத்துக் கொதிக்க வைத்துத் தலையில் தேய்த்து மூன்று நாள் முழுகவும்.

## பல் குடைச்சல் வாயுவுக்கு

குப்பைமேனியிலை, சுக்கு, மிளகு இவைகளைக் கஷாயமிட்டுக் கொப்பளிக்கவும்.

## நேத்திர வாயுவுக்கு

துத்தம், துருசு, சீனிக்காரம், தலைமயிர் சுட்ட சாம்பல் இவைகளை வட்டிலிலிட்டு ஆவின்வெண்ணெயும், எலுமிச்சம் பழச்சாறும் விட்டு செம்புக்குழவியால் மைபோல் அரைத்து நெல்லிடை கண்ணிலிட நேத்திரவாயு, பூச்சி, புழுவெட்டு, கண்பூ இவை தீரும்.

## ஒருதலை வலிக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், சதகுப்பை, ஆலாத்திகற்பூரம் இவைகளைக் குன்றிச் சாற்றாலாட்டி சீலையிலூட்டி திரிசெய்து உலர்த்திப் புகை பிடிக்க ஒருதலை வலி, கண்ணோய் இவை போம். இதனை நசியமிடப் பிடரிவலி, முகவாதம், புறவாதம், சன்னி இவை தீரும்.

## தலைவலி வாயுவுக்கு

சிற்றாமணக்கிலை, சிறுபூனைக்காஞ்சொரியின்யிலை, பழம்பாசியிலை, நத்தச்சூரியிலை, பேராமுட்டி, செம்முள்ளி, காசுக்கட்டி இவைகளை அரைத்துச் சூரியபுடம் வைத்துத் தலைக்குத் தேய்த்து இருபத்தைந்து நாழிகைக்குமேல் தலைமுழுகி பத்தியமாய் இருக்கவும். இப்படியாக ஐந்து முறை முழுகத் தீரும்.

**வேறு :**—வெள்ளாட்டு மூத்திரம் குருணி ஒன்று, வெற்றிலை கவுளி மூன்று இவைகளைத் துவைத்துப் பிழிந்து வடிக்கட்டி அதில் சீனக்காரம், துத்தம், துருசு இவைகள் வகைக்கு விராகன் இரண்டு அரைத்துக் கரைத்துக் காய்ச்சிப் பூசு, தலைவாயு என்ற பூச்சி வெட்டு தீரும். விஷத்துக்கு வெற்றிலையில் தடவிக் கொடுக்கவும். கலிக்கமிட விஷம் தீரும்.

## முக மங்குக்கு

கோழிமுட்டை வெள்ளைக்கருவில் ஒரு விராகன் படிகாரத்தைப் பொடித்திட்டு அனலில் வைத்துக் கிண்டி வெண்ணெய் போல் வரும்பதத்தில் எடுத்து முகத்தில் தடவிவர மங்கு நீங்கி முகத்தில் காந்தி உண்டாகும்.

## காது வலிக்கு

எருக்கம்பழுப்பு, முள்ளங்கிக்கிழங்கு, நாயுருவி, நண்டு, வெள்ளரிக்கொடி இவற்றின் சாறுகள் வகைக்குப் படி ஒன்று, கடல்நுரை, வலம்புரிக்காய், கருஞ்சீரகம், வெளிச்சிப்பிசின், வசம்பு, கஸ்தூரிமஞ்சள் இவை வகைக்குப் பணவிடை நாலு, வேப்பெண்ணெய், நல்லெண்ணெய் இவை வகைக்குப் படி மூன்று இவைகளைக் காய்ச்சிக் காதில்விட, காதுக்குத்தல் முதலிய நோய்கள் தீரும்.

## சிறு காஞ்சொரி லேகியம்

குருந்தொட்டிவேர் பலம் பத்தை, தண்ணீர் மூன்று படியிலிட்டு, எட்டு ஒன்றாகக் காய்ச்சி வடித்து அதில், கரும்பு வெல்லம், பனைவெல்லம் இவை வகைக்குப் பலம் பத்து, சிவதை வேர் பலம் மூன்று, சுக்குச்சூரணம் பலம் ஒன்று, மிளகு, ஓமம், கோரைக்கிழங்கு, கடுக்காய்த்தோல், திப்பிலி, ஆனைத்திப்பிலி, மிளகரணைப்பட்டை இவைகள் வகைக்கு விராகன் ஒன்று, இவற்றைச் சூரணித்து பாகிற்போட்டு லேகியம் செய்து சாப்பிடவும்.



## சீத பித்தம் காதடைப்பு இவைக்கு

கையான் றகரை நெல்லிக்காய்
  கனத்த சாறு நானாழி
மெய்யா றெண்ணெயாழாக்கு
  விதித்த ஆவின்பால் நாழி
செய்யாமதுர மீராறுஞ்
  சேரவறைத்துத் தலைமுழுக
வெய்யா சீதபித்தமும் போ
  மடைத்த செவியும் வெளியாமே.

[ (பொ-ள்.) கரிசாலை, நெல்லிக்காய் இவைகளின் சாறு படி ஒன்று, எண்ணெய் உழக்கு, பசுவின்பால் படி ஒன்று இவற்றைக் கூட்டி அதில் அதிமதுரம் ஆறு பலம் கொண்டு அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து தலைமுழுக காதடைப்புப் போம்.]

## காதடைப்புக்கு

குப்பைமேனிச்சாறு, வேலிப்பருத்திச்சாறு, நல்லெண்ணெய் இவை சரிசமன் கூட்டி மத்தித்து காதில் விட்டு அடைக்க மூன்று நாளில் தீரும்.

## காதில் நீர் வடிதலுக்கு

சாதிக்காய், சாதிப்பத்திரி, வண்டுகொல்லிப்பட்டை, செங்கடுக்காய், நொச்சியிலை, சிறுகழற்சி, ஈரவெங்காயம், தெருவிலழகி இவைகளைச் சமன்கூட்டி அரைத்து நல்லெண்ணெயில் கலக்கி சூரியபுடம் வைத்துக் கொடுக்கத் தீரும்.

## சகல பிணிசங்களுக்கும்

கரிப்பான், பொடுதலை, கொடுப்பை, நொச்சியிலை, கஞ்சாங்கோரை, முசுமுசுக்கை, கரத்தொட்டி, வெற்றிலை, மலைவேம்பிலை, விழிம்பியிலை, மணித்தக்காளி, கருஊமத்தை, பங்கம்பாளை இவைகளின் சாறு வகைக்குப் படி முக்கால், நல்லெண்ணெய் படி ஒன்று, சுக்கு, திப்பிலி, கருஞ்சீரகம், மரமஞ்சள், சதகுப்பை, கோஷ்டம், அதிமதுரம், சடாமாஞ்சி, சிறுநாகப்பூ, தேவதாரம், சாதிக்காய், தேசாவாரம், பூலாங்கிழங்கு, சந்தனக்கட்டை, கொத்தமல்லி, கஸ்தூரிமஞ்சள் இவைகள் வகைக்கு விராகன் இரண்டு, மிளகு, சமுத்திராப்பழம், சிறுதேக்கு இவைகள் வகைக்குப் பலம் இரண்டு இவைகளை அரைத்துக் கரைத்துக்

காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து ஆறு நாளைக்கு ஒரு முறையாக முழுகி வர நீர்பீனிசம், சிராய்ப்பீனிசம், இரத்தபீனிசம் முதலியன தீரும்.

## பீனிச நோய்களுக்கு

கொடும்பை, சிறுகீரை, கோவையிலை, கரிப்பான், நொச்சி, சுடுதுத்தி இவற்றின் சாறுகள், முலைப்பால் இவை வகைக்குப் படி எட்டு, கச்சோலம், வசம்பு, குங்குமப்பூ, சதகுப்பை, கருஞ்சீரகம், கடுகு, வெள்ளுள்ளி, கஸ்தூரிமஞ்சள், சடாமாஞ்சி, மிளகு இவை வகைக்கு விராகன் ஒன்று இவைகளை பசுவின் பால் சிறிது விட்டு அரைத்துப் பசுவின்பால், நல்லெண்ணெய் இவைகள் வகைக்குப் படி ஒன்று கூட்டிக் கலந்து காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்துத் தலைமுழுகி வர, பீனிசநோய்கள், அசதி, நெஞ்சுக்கட்டல், இளைப்பு, இருமல், நீர்ப்பீனிசம் முதலியன தீரும். கைகண்டது.

## நீர் பீனிசத்துக்கு

எட்டியிலைச்சாறு, நல்லெண்ணெய் இவை வகைக்குப் படி எட்டு கூட்டி, மிளகு படி கால் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்துத் தலைமுழுகி வரத் தீரும்.

## கண் நோய்களுக்கு

துத்தம், துரிசு, சங்கு, ஆமையோடு, ஓரிலைத்தாமரைவேர் இவைகள் வகைக்கு விராகனிடை ஒன்றை எலுமிச்சம்பழச் சாற்றால் இரண்டு சாமமரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வாயுவால் வந்த கண்நோய்களுக்கு முசுமுசுக்கைச்சாற்றிலும், கண்பூவுக்கு பனைமட்டைச்சாற்றிலும், மாலைக்கண்ணிற்கு கையாந்தகரைச்சாற்றிலும் உறைத்துப் போடத் தீரும்.

## கண் புகைச்சலுக்கு

எலுமிச்சம்பழச்சாற்றில் கிராம்பை உரைத்து மூன்று நாள் கண்ணிலிடத் தீரும்.

**வேறு** :—நல்லெண்ணெய் படி இரண்டு, பசுவின்பால், கையாந்தகரைச்சாறு, கற்றாழைவேர்ச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, முசுமுசுக்கைச்சாறு இவை வகைக்குப் படி ஒன்று, அதிமதுரம் பலம் இரண்டை பாலில் அரைத்து எல்லாவற்றையுஞ் சேர்த்துக் காய்ச்சி வடித்து, எட்டு நாளைக்கு இரண்டு முறை தலை முழுகவும்.



**வேறு** :—ஏலரிசி, மிளகு இவை வகைக்குப் பலம் ஒன்று, அவற்றுள் மிளகைப் பசுவின்பாலில் ஒரு நாள் ஊறவைத்து எடுத்து ஏலரிசியும், மிளகும் சேர்த்து உடைத்து நல்லெண்ணெயிலிட்டு சூரியபுடம் வைத்துத் தலை முழுகவும்.

## கண்ணுக்கு மை

விதை நீக்கிய கடுக்காய் பத்து எடுத்து துணிசுற்றி சீலைமண் ஐந்து செய்து, காட்டெருவிற் புடமிட்டு எடுத்த சாம்பலை வெண்கலத்திட்டு, பசுவின் வெண்ணெய் சேர்த்து செம்புக்குழவியால் அரைத்து செம்புச்சிமிழில் வைத்துக்கொண்டு கண்ணில் போட கண்வலி, அழிகண், கண்குழைவு, அறிப்பு, மயிர் உதிர்தல், பூ, படலம், அமரம் இவை தீரும்.

## மாலைக் கண்ணுக்கு

மிளகை நல்லெண்ணெயில் ஊறவைத்து சாயங்காலம் உரைத்துத் தலையில் பூசத் தீரும்.

**வேறு** :-எட்டிவிதையை முலைப்பாலில் உரைத்துக் கண்ணில் போட்டு வரத் தீரும்.

## கண் பூவுக்கு

கொட்டைப்பாசியிலை ஒரு பலம், துத்தம், துரிசு இவை வகைக்கு ஒரு குன்றிகூட்டி சிறுநீரிலரைத்து மாத்திரை செய்து சிறுநீரிலுரைத்துக் கண்ணிலிட, பதினாறு வருடம் சென்ற கண்பூவும் தீரும்.

**வேறு** :—வேப்பன்விதையைத் தேனிலுரைத்துப் போட்டு வரத் தீரும்.

## கண் வியாதிக்கு

துத்தம், துரிசு, படிக்காரம் இவைகளைப் பொடித்து ஓர் அளவாகக் கொண்டு எலுமிச்சம்பழச்சாறு விட்டு செப்புக்குழவியாலரைத்துப் போடத் தீரும்.

**மை** :—துத்தம், துரிசு இவை வகைக்கு ஒரு பலம் கொண்டு வெண்சாரணை, கையான்தகரை, வெற்றிலை இவற்றின் சாற்றில் வெண்கலத்திட்டுச் சங்காலரைத்துப் புதுச்சட்டியின்மேல் பூசி மேற்படி சட்டி விளக்கில் நெய் விட்டுத் திரிகொளுத்தி மேற்படி சட்டியில் பற்றிய மையை ஆவின் கவிழ்த்து மூடி

வெண்ணெயில் குழைத்துக் கண்ணிலிட கண்ணோய் தொண்ணூற்றாறும் தீரும்.

## வெள்ளெழுத்துக்கு

வேப்பம்பிசினை, அழிஞ்சிப்பழச்சாற்றில் அரைத்துக் கண்ணில் போடவும்.

**வேறு :—** பருத்தியிலைச்சாற்றை ஏழு நாள் கண்ணில் பிழிய கண் தெரியும்.

**வேறு :—** துத்தம், துருசு, பொன்னாங்கண்ணிவேர் இவை வகைக்கு ஒரு காசிடையைப் பனைமட்டைச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, புளியிலைச்சாறு, விரியிலைச்சாறு இவைகளில் அரைத்து மாத்திரைசெய்து நிழலிலுலர்த்திச் செம்பிராஞ் சாற்றில் உரைத்துக் கண்ணில் விட படர்ந்த கண்நோயும், புளியிலைச்சாற்றிலிடத் தினவும், பனைமட்டைச்சாற்றிலிட இமைத்தடிப்பும், நீலகாசமும், வெள்ளெழுத்தும், தண்ணீரிலிட வெந்த கண்ணோயும், முலைப்பாலிலிட செவ்வெருக்கும், விரியிலைச் சாற்றிலிட மற்ற நோய்களும் தீரும்.

## மண்டை நோய்க்கு

நல்லெண்ணெய் படி ஒன்றில் ஊமத்திலைச்சாறு படி எட்டு சேர்த்து, அரை படி மிளகை வருத்து வெடிக்கும்போது எடுத்து உடைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து, நான்கு முழுக்கு முழுகவும். புளி நீக்கவும்.

**புகை :-** அரிதாரம், இரசம், கல்க்காந்தம், கந்தகம், மனோசிலை இவைகளைச் சரிஎடை கொண்டு வேலிப்பருத்தி, கழற்சி, நொச்சி, ஊமத்தை இவைகளின் சாறு விட்டு அரைத்து, துணியில் தடவி திரிசெய்து வேண்டும்போது திரியை வேப்பெண்ணெயில் துவைத்துக் கொளுத்தியாவது, சட்டியில் தணலிட்டாவது திரியின் புகையைப் பிடிக்கத் தீரும்.

## சன்னிக்கு

பூநாகம், வெள்ளிரி, கோஷ்டம், அதிமதுரம், திப்பிலி, ஆலம்பழம் இவைகள் சமன் கூட்டி, முலைப்பாலில் அரைத்து நாக்கில் தடவ, சன்னி தீரும். பேசா நாக்குந் திரும்பும்.



**வேறு :—** சங்கு, பூநாகம், கலைக்கொம்பு, திப்பிலி, ஆலம் பழம், கற்பூரம் இவைகளைக் கூட்டி அரைத்துத் தேனில் கொடுக்கத் தீரும். நாக்குத் தடிப்பும் நீங்கும்.

**வேறு :—** வெண்காரம் கழஞ்சு நாலு; பழுத்த மிளகு படி ஒன்று இவற்றை கையாந்தகரைச்சாறு படி ஒன்றில் பொடித்துப் போட்டு காய்ச்சி பதம் வரும்போது சோமனாதிகாயம் கழஞ்சு நாலைப்பொடித்துப் போட்டுக் கிண்டிக் காய்ச்சி, கழற்சிப் பிரமாணம் உருட்டுவில்லை செய்து நிழலிலுலர்த்தி இருவேளையும் ஒவ்வொரு வில்லை கொள்ளத் தீரும். புளி நீக்கவும்.

## சன்னி 13-க்கு

சுக்கு, திப்பிலி, தேசாவாரம், சிற்றரத்தை, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், ஊசிக்காந்தம், வெள்ளுள்ளி, மனோசிலை, அரிதாரம், வெள்ளைப்பாஷாணம், மிளகு, ஓமம் இவை வகைக்கு விராகன் மூன்று, மாவிலிங்கம்பட்டை, முருங்கைப்பட்டை, மிளகரணைப்பட்டை, தூதுவளைவேர், எருக்கம்வேர், சங்கம் வேர்பட்டை, தலைசுருளிவேர், வேலிபருத்திவேர், குப்பைமேனி வேர், கண்டங்கத்திரிவேர், தைவேளைவேர், குட்டிவிளாவேர், வாகைப்பட்டை இவை வகைக்குப் பலம் எட்டு இவற்றை வேப்பெண்ணெய் படி ஒன்று, புங்கெண்ணெய் படி இரண்டு கூட்டிக் கலந்து அதில் மேற்படி கடைமருந்து வகைகளைச் சூரணித்தும் பட்டைவேர் வகைகளை தட்டியும் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து ஒரு விராகன் எடை உள்ளுக்குக் கொடுத்தும் மேலுக்குப் பூசியும் வரத் தீரும்.

**வேறு :—** கோழிமுட்டை முப்பது கொண்டு வந்து அவைகளின் மஞ்சள் கருவைச் சட்டியிலிட்டு ஒரு விறகால் எரித்து அதில் ஐந்து விராகனிடை வேப்பெண்ணெய்விட்டுக் காய்ச்சி தைலம் இறக்கி அதை எடுத்து ஒரு காசிடை கொடுத்து தலையில் பூசி மூக்கில் இரண்டு துளிவிட்டு, உடலிலும் பூசி வரத் தீரும்.

**வேறு :—** வெள்ளுள்ளி பலம் ஐந்து அரைத்து துணியில் பொட்டணங்கட்டி விளக்கில் வேப்பெண்ணெய் விட்டுத் திரி கொளுத்தி அதில் பொட்டணத்தைச் சூடு காட்டிப் பிழியத் தைலம் இறங்கும். அதை உள்ளே கொடுத்தும், தலையில் பூசியும், மூக்கிலிட்டும் வரத் தீரும்.

**வேறு :—**ஒரு படி வேப்பெண்ணெயில், வெள்ளுள்ளி பலம் ஐந்து, சுக்கு பலம் இரண்டு, வசம்பு பலம் மூன்று, பெருங்காயம், சங்கிநாயகம், கருஞ்சீரகம், கார்போகரிசி, சதகுப்பை, கொத்தமல்லி, திப்பிலி இவை வகைக்கு விராகன் இரண்டு இவற்றை சூரணித்திட்டு, அதில் பூநாகம் படி ஒன்று, வேலிப்பருத்திச்சாறு படி ஒன்று, எருக்கம்பழுப்புச்சாறு படி ஒன்று சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, ஒரு துட்டிடை உள்ளுக்குக்கொண்டு மேலுக்கும் சிறுகப்பூச, சன்னி பதிமூன்றும், உள்வீச்சு, புறவீச்சு முதலியனவும் தீரும். கைப்பும், புளியும் நீக்கவும். கைகண்டது.

**வேறு :—**குருணியளவு வீழியிலையை வாய் பேசாமல் பரித்து காடி வார்த்துத் துவைத்துப் பிழிந்து வடிக்கட்டி ஒரு படியைக் கொதிக்க வைத்து அத்துடன் ஆமணக்கெண்ணெய் படி ஒன்று சேர்த்து, சுக்கு, மிளகு, வெள்ளுள்ளி இவை வகைக்குப் பாக்கள வரைத்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி வடித்து மேலே பூசி வேளைவேரும், மிளகுந் தட்டிப் பிழிந்து மூங்கில் பிழிந்தும், நசியமும், அஞ்சனமுமிட்டும் வர நோய் தீரும்.

**புகை :—**கம்பு, கேழ்விரகு, கொள், சாமை, தினை, குதிரைவாலி, மயிலிறகு, கோழியிறகு, நாய்விட்டை, கழுதைவிட்டை, நரிவிட்டை, இலந்தைப்பட்டை, இலந்தம்பழம், குதிரை, மாடு, எருமை இவற்றின் குளம்பு, மிளகு, பருப்பு, நாக்குப்பூச்சி இவைகளைச் சூரணித்து சட்டியில் நெருப்பையிட்டு மேற்படித் தூள் சிறிது போட்டுப் புகை பிடிக்கத் தீரும்.

## சன்னி நோயில் பல்கிட்டி விடின்

தேங்காய் இரண்டைத் திருகி அத்துடன் ஆடாதொடையிலையைக் குறுக அரிந்து புழுங்கரிசித்தவிடு இரண்டு படி வெள்ளுள்ளி படி ஒன்று இவைகளைக் கூட்டி இரண்டு பாகஞ் செய்து பொட்டணங்கள் கட்டி, சட்டியில் வேப்பெண்ணெய் விட்டுக் காய்ச்சி அதில் மேற்படி பொட்டணத்தை மாற்றி மாற்றி வெதுப்பி உச்சிமுதல் உள்ளங்கால்வரை ஒற்றிடம் கொடுக்க இசிவு, பல்கிட்டு இவை தீரும்.

## பிள்ளைபெற்ற சன்னிக்கு

வெள்பூண்டு, விடத்தலை, எருக்கு இவற்றின் வடவேர், வசம்பு, உள்ளி, மிளகு இவைகளை நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சிப் பூசத் தீரும்.



## வாய் திறவாத சன்னிக்கு

அதிமதுரம், முந்திரிப்பழம், இலுப்பைப்பூ, திப்பிலி, பேரீச்சம்பழம், எலுமிச்சம்பழம், இருவேலி, நன்னாரிவேர், முத்தக்காசு, கற்கண்டு, சர்க்கரை இவற்றை கரிப்பன்சாற்றிலரைத்துக் குளிகை செய்து நிழலிலுலர்த்தி முலைப்பாலிலொரு உண்டை உள்ளுக்குக் கொடுத்து, நசியமுமிட சன்னியால் வாய் திறவாமலிருப்பது தீரும்.

## சன்னி சுரத்திற்கு

நிலவேம்பின்வேர்ப்பட்டை, மாவிலிங்கம்பட்டை, ஆயில் பட்டை, பெருமரப்பட்டை, முத்தெருகஞ்செவி, திப்பிலிமூலம், மிளகு இவைகள் வகைக்குப் பலம் எட்டு ஆகக்கொண்டு குடிநீரிட்டு மிளகு சூரணம் பலம் எட்டு போட்டு, எட்டு நாள் கொடுக்கவும். கைகண்டது.

## தாகத்திற்கு

சதகுப்பை, மஞ்சள், மூங்கிலிலை, மஞ்சிட்டிவேர், கொன்றைக்காயின் மேற்பட்டை, மஞ்சணாத்திப்பட்டை, சுக்கு, வில்வஓடு, இவைகள் வகைக்குப் பலம் இரண்டு கொண்டு குடிநீரிட்டு அதில் வாழைச்சருகைச், சுட்ட சாம்பல் பலம் ஒன்று. துணியில் முடிந்து போட்டுக் காய்ச்சிக் கேட்ட நேரமெல்லாம் கொடுக்கவும். கைகண்டது.

## பிள்ளை பெற்றவள் மண்டைக்குத்தலுக்கு

மிளகு, மஞ்சள், வெங்காயம், முசுருமுட்டை, நிலப்புழு, ஓட்டடை இவைகள் சமன்கூட்டி, நல்லெண்ணெயும், வேப்பெண்ணெயும் வகைக்குப் படி அரை சேர்த்து கலந்து அதில் போட்டுக் காய்ச்சி, காசிடை கொடுத்து மேலுக்கும் பூசி, படுக்கை அடியில் கனல் போட்டிருக்கக் கைகால் அயர்ச்சி, இளம் பிள்ளைவாதம், உதிரக்கட்டு, மயக்கம், மண்டைக்குத்தல் எல்லாம் தீரும்.

## சகலசன்னி, முகவாதத்திற்கு

முப்பது கோழிமுட்டையை வேகவைத்து மஞ்சட்கரு எடுத்து அத்துடன் செந்நாயுருவி, வட்டத்துத்திவேர், வேலிப்பருத்தி இவற்றின் வேர் வகைகளைத் தனித்தனியே எலுமிச்சங்

காயளவு அரைத்துச் சேர்த்துப் பிசைந்து வேப்பெண்ணெயாவது, நல்லெண்ணெயாவது ஆழாக்குச் சேர்த்து தைலமாகக் காய்ச்சி வடித்துப் பணவிடை தைலம் இரண்டு துளி மூக்கிலிட்டும் மேல் பூசி வரவுந் தீரும்.

## விடத்திற்கு

பெருங்காயமும், தாளிவிதையும் சமன்கூட்டி எலுமிச்சம் பழச்சாற்றில் எட்டு நாள் ஊறவைத்து மேற்படி சாற்றில் அரைத்துக் குளிகை செய்து நிழலிலுலர்த்தி எருக்கிலை, கையாந்தகரை, பொடுதலை இவற்றில் ஒன்றின் சாற்றில் இழைத்து வலது செவியைக் கீழ்வைத்து இடது செவியில்பிழிய, வலது செவியில் சாறு வந்தால் உயிருண்டு. அப்போது மேற்படி மாத்திரையைச் சிறு நீரிலுரைத்துக் கண்ணிலிடத் தீரும். சாறு வராதிருந்தால் உயிரில்லையென்று அறியவும்.

வேறு :—பேயத்திப்பழத்திற்குள் மிளகிட்டு மூடி புகையூறலில் எட்டு நாள் கட்டி இப்படியாக நான்கு முறை பேயத்திப் பழத்துள் அடைத்துக்கட்டி எடுத்துப் பின்பு, மிளகும், பழமும் சிறுநீரில் அரைத்துக் குளிகை செய்து நிழலிலுலர்த்தி சிறுநீரில் அரைத்துக் கண்ணிலிட, உயிரடங்கி இருந்தால் பிழைக்கும். விடம் தீரும்.

## சலமண்டலி கடிக்கு

காசுச்செம்பில் காடி வார்த்து உசிலம்பொடி போட்டுக் காய்ச்சிக் கொடுக்கவும். நீர்மேல் நெருப்பின் வேரை வண்டு கடியின்மேல் வைக்க மூச்சு அடங்கி இருந்தால் வெளி வரும்.

## நாய் கடிக்கு

கம்பம் பயிரைத் துவைத்து வதக்கி ஒற்றிடமிட்டு அதனையே கடிவாயிலும் கட்டவும். இப்படி ஐந்து அல்லது மூன்று முறை கட்டுக் கட்டவும். கட்டவிழ்த்து எடுக்க விடவீக்கம் வாங்கி விடமும் தீரும்.

வேறு :-செடிகளிலாவது, முள்ளுகளிலாவது கட்டியிருக்கிற பூச்சிக் கூட்டுக்குள் இருக்கின்ற பூச்சியை அரைத்துக் கடிவாயில் பூசினாலும், நாயுருவியிலையை அரைத்துக் கடிவாயில் போட்டாலும் தீரும்.



## மாந்தத்திற்கு

தைவேளை, உள்ளி, வசம்பு இவற்றைத்தட்டி எண்ணெயிலிட்டுக் காய்ச்சி சூரியபுடம் வைத்து காசளவு கொடுத்து மேலும் பூச தீரும்.

வேறு :—ஓமம், உள்ளி, ஆமையோடு, மிளகு, திப்பிலி, வாய்விளங்கம், வசம்பு, பொடுதலைக்காய், கழற்சிப்பருப்பு இவைகளைச் சரிகூட்டி, பொடுதலைச்சாற்றால் அரைத்து, சூரைக்காயளவு மாத்திரைசெய்து, கண்டங்கத்திரிச்சாற்றில் இருமல் கழிச்சலுக்கும், வேலிப்பருத்திச்சாற்றில் பொருமலுக்கும், ஓமக்குடிநீரில் சகல மாந்தத்திற்கும், கொடுக்கத் தீரும்.

வேறு :—தைவேளைவேரை சிறுகப்பிளந்து சட்டியிலிட்டுக கருக்கிய பின்பு, வெந்தயம் துட்டிடை போட்டுக் கருக்கி அரைப்படி நீர்விட்டு சுண்டக்காய்ச்சி சங்களவு கொடுக்க மாந்தக் கழிச்சல் தீரும்.

குளிகை :—குளிமிட்டான், சின்னி, கொழிஞ்சி, கழற்சி, தூதுவளை, சங்கு, பொடுதலை, கண்டங்கத்திரி, கையாந்தகரை, நரியாம், பொரியரிசி, ஆறுங்கொழுந்து, நுணுக்கொழுந்து, விளாங்கொழுந்து, பீணாரிக்கொழுந்து, வேப்பங்கொழுந்து, ஆலம்விழுது, கறிவேப்பிலை, பருத்திக்கொழுந்து, வெதுப்படக்கி, வெள்ளைச்சாரணை, நொச்சிக்கொழுந்து, குப்பைமேனி, மிளகு தக்காளி, ஆனையருகங்கொழுந்து, தும்பை, துளசி, கோழியாவரை, முள்ளிக்கொழுந்து, முக்கரவேளை, நன்னாரி, பொன்முசுட்டை, ஆவரை, கிளுவை, கருவேல், துத்தி, பழம்பாசி, மாந்தப்புல், சாணாக்கி, வட்டத்துத்தி, சிறுபுள்ளடி, செப்பு நெருஞ்சி, வெள்ளிண்டு, செம்முள்ளி, அவுரி, சிறுகீரை, வறட்புலா, தவசிமுருங்கை, உளர்முருங்கைக்கொழுந்து, வேளைக் கொழுந்து, சிற்றாமுட்டி, பேராமுட்டி, நாவல்கொழுந்து, இலவங்கொழுந்து, திரிகடுகு, சீரகம், கருஞ்சீரகம், ஓமம், குராசானியோமம், கஸ்தூரிமஞ்சள், கார்போகவரிசி, சாதிக்காய் சாதிப்பத்திரி, கிராம்பு, அதிவிடையம், பெருங்காயம், கசகசா, சிறுநாகப்பூ, சின்னலவங்கப்பட்டை, இலவங்கப்பத்திரி, வில்வவோடு, ஆமையோடு, வசம்பு, வெள்ளுள்ளி, கடுகுரோகணி, கோஷ்டம், கோரோசனை இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை வெந்நீர் விட்டு அரைத்து மிளகளவு குளிகை செய்து நிழலி

உலர்த்தி வெந்நீரில் இரண்டு அல்லது மூன்று நேரம் கொடுக்கவும். தாய் பச்சைமீன், புளி, புகையிலை இவை நீக்கி பத்தியமாய் இருக்க வேண்டும்.

## குழந்தைகளின் கணை, இழுப்புக்கு

வேப்பெண்ணெயும், கோவழம்பட்டைச்சாறும் வகைக்குப் படி எட்டு, மிளகு, பூண்டு இவை வகைக்குப் பலம் இரண்டு, வசம்பு பலம் எட்டு இவைகளை அரைத்துக்கரைத்துப் பதமாய்க் காய்ச்சி வடித்து, தாய்க்கும், பிள்ளைக்கும் மூன்று நாள் கொடுக்கவும். உப்பும், புளியும் நீக்கவும்.

## குழந்தை வைத்தியம்

### (இராமதேவர் பாடல்)

*பொடுதலை மாவேம்பு புளிநுணா நொச்சிவேலி*
*கடுகொடு யிவைகளேழுங் கலப்பது சமனதாக*
*இடுவது ஓமமுள்ளி திப்பிலி யிடுநேராக*
*அடுவது நீரிலிட்டு அப்பனே யெட்டொன்றுக்கே* 1

*ஆக்கிய கஷாயந்தன்னி லானதோர் சங்குகொள்ள*
*போக்கிடு மிருமல்மாந்தம் பேர்மாந்தம் சத்திமாந்தம்*
*தேக்கிடுஞ் செறியாமாந்தம் தெரித்திடுங் கட்டுமாந்தம்*
*தாக்கிடு மாந்தமைந்துந் தரணியிற் றரியாதாமே* 2

[(பொ-ள்.) பொடுதலை, மா, வேம்பு, புளி, நுணா நொச்சி, கடுகு இவ்வேழும் ஓரளவாக எடுத்து அத்துடன் ஓமம், உள்ளி, திப்பிலி அவ்விடையே கூட்டி, நீரிட்டு எட்டொன்றாகக் காய்ச்சி, சங்கு அளவு கொடுக்க ஐந்து வகை மாந்த நோய்களையும் போக்கும்.]

*ஆமேதிப்பிலி யதனொடு*
*அளவா யெண்ணெயிற் சிவக்க*
*தாமேவருத்துப் பொட்டணமாய்*
*சமைந்த மோரினுடன் காய்ச்சி*
*யாமேகசாயந் தனையிறுத்து*
*ஒரு சங்களவே கொடுப்பீரேல்*
*போமே மாந்தமுள்ளதெல்லாம்*
*புவிமேற் கடலிற் புக்கிடுமே*



## சுழிக்கணையின் குறி குணம்

*மின்னே கேளாய் சுழிக்கணைதான்*
*மேவுஞ் சுவாசமிரும லுண்டாம்*
*பின்னே மார்பு மேகளைப்புப்*
*புடைத்துக் காணுமுண்மை இது*
*அன்னே முலையு முண்ணாது*
*அயர்ந்து கிடக்கு மறிவாயே*
*இன்னே செருமும் மேல்மூச்சா*
*மிருகை காலுங் குளிர்ந்திடுமே*

*பொருமும் வயிறு தானேகும்*
*புனலும் சுரமுமிக வுண்டாம்*
*அருதிக் கழியும் வழிதீரு*
*மலண்டு கிடக்கு மறிவாயே*
*பொருதிப் புறளும் பொருமலுடன்*
*பூட்டுங் கண்ணுந்தனைச் சுழற்றும்*
*இருகும் பிறகே வீச்சாகு*
*மிதுக்கு மருந்து மியம்பக்கேள்* 5

**இதற்கு மருந்து:**—துளசி, ஆடாதொடை, வறட்புலா, செம்முள்ளி, விஷ்ணுகாந்தி, தூதுவளை, கண்டங்கத்திரி, வெதுப்படக்கி, பேய்ப்புடல், சங்கு, நிலையாவரை, நொச்சி இவைகளைக் கஷாயமிட்டுக் கொடுக்க சுவாசம், சுரம், கணை, தோஷம் எல்லாந் தீரும்.

## அனுமந்த சஞ்சீவி மாத்திரை

பசுவின் பாலில் கழுவிய லிங்கம், பசுவின் சாணிப்பாலில் கழுவிய வெண்காரம், மேற்றோல் சீவிய சுக்கு இம்மூன்றும் சரி கூட்டி முலைப்பாலில் அரைத்துக் குளிகை செய்யவும்.

## அமிர்த சஞ்சீவி குளிகை

அதிமதுரம், செண்பகப்பூ, ஏலம், கோரோசனை, சாத்திரபேதி, வெட்டிவேர், கோஷ்டம், மாசிப்பத்திரி, இலாமிச்சவேர் இவைகளை அரைத்து, முலைப்பாலில் கொள்ள மாந்தம், குடற்படுவன், நீர்ப்பாடு, பாய்ச்சல், உஷ்ணம், குலையெரிவு தோஷம் எல்லாம் தீரும்.

## இருமலுக்கு

நெல்லிவற்றல், திப்பிலி, நெல்பொரி, சர்க்கரை இவைகளைச் சூரணித்துத் தேனில் கொள்ளவும்.

**வேறு:**—சுக்கு, திப்பிலி, நெல்பொரி இவைகளைச் சூரணித்து சர்க்கரை கூட்டி ஆவின்பாலில் கொள்ளவும்.

**வேறு:**—அரிதாரமும், பச்சைகற்பூரமும் வகைக்கு விராகன் இரண்டு, கழற்சிவேர் பலம் இரண்டு இவைகளை நீரிலரைத்துத் திரியாக்கி எருக்கங்குழாயிற்றிணித்து மூன்று நாள் ஆறு வேளை புகை குடிக்கவும். நான்காவது நாள் நெய் தேய்த்து முழுகவும். பத்து நாளைக்குப் பச்சை ஆட்டுக்கறி கூட்டவும். சைவர்களாகில் உளுந்துப் பலகாரம் கூட்டிக் கொள்ளவும்.

## இளைப்புக்கு

நிலஆவரையும், ஓமமும் சரி சமன்கூட்டி பசுவின் கோசலத்தில் ஊறவைத்து உலர்த்திச் சூரணித்து காலை மாலை சாப்பிட்டுவரத் தீரும்.

## காசத்திற்கு

இம்பூரல், தூதுவளை, ஆடாதொடை, சங்கம்வேர் இவைகளைச் சரிசமன் கூட்டிக் குடிநீரிட்டு அத்துடன் ஒவ்வொரு முறையும் ஒரு விராகன் கிராம்பு வறுத்து அரைத்துக் கூட்டிக் கலக்கி மூன்று நாள் ஆறு நேரம் குடித்துவர, சகல இருமல்களும், காசமும் தீரும்.

## எலி கடிக்கு

புதுக்கலயத்தில் ஒரு படி எருமை மோரை விட்டு அதில் மூன்று துளி எருக்கம்பால் விட்டுக் கலக்கிக் கொடுக்கவும். புதுக்கடி, பழயகடி இரண்டிற்குமாகும். வெந்நீரும், சோறும் சாப்பிடவும். கடும் பத்தியம் காக்கவும்.

**வேறு:**—பூனைப்பீயை வாழைப்பழத்திலாவது, வெல்லத்திலாவது சேர்த்துக் கொள்ளத் தீரும்.

## விஷத்துக்கு

ஐவிரலிவேர், மாம்பட்டை, கொன்றைவேர், வெளிச்சிப்பிசின் இவைகளைப் பொடித்து நசியமிடத் தீரும்.



## பாம்பு கடிக்கு

நார்த்தம்வேர், எலுமிச்சம்வேர், உப்பிலிவேர், அவுரிவேர் இவைகளைத் தின்னத் தீரும்.

**வேறு:**—நறுந்தாளியிலையைக் கசக்கித் துவளை இட்டாலும், கடித்தவுடன் கோவையிலையைக் கசக்கி கடிவாயில் போட்டாலும் உடனே தீரும்.

## பாம்பு கடியாமலிருக்க

முட்கொழிஞ்சிவேராவது, வெள்ளெருக்கம்வேராவது, வெள்ளைகுன்றிவேராவது குளிசமாடிக்கையிலிருக்க பாம்பு கடியாது.

**வேறு:**—ஞாயிற்றுக்கிழமை அமாவாசையன்று நீலி மூலிகைக்குக் காப்புக்கட்டி பலி கொடுத்து எடுத்து செம்பு தாயத்திலடைத்து வைத்திருக்கப் பாம்பு கடியாது.

## விரியன் பாம்பு கடிக்கு

அமாவாசையன்று அழிஞ்சிவேருக்குக் கன்னிகழியாத பெண் நூற்ற நூலால் காப்புக்கட்டி தூபதீபம் முதலியன கொடுத்து சூரிய நமஸ்காரம் செய்து மாலையில் வடவேர் எடுத்து மேற்புறணி நீக்கி நய்யத்தட்டி, சட்டியிலிட்டு ஒரு பணவிடை இரசம் சேர்த்து, கால் படி எருக்கம்பால் விட்டு பதினைந்து நாள் ஊறவைத்து பௌர்ணமியில் எடுத்து எருக்கம்பால விட்டு அரைத்து பாசிப்பயறளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வெற்றிலை, புகையிலை காரம்படாமல் சிமிழிலாவது, தாயத்திலாவது அடைத்துக் கொண்டு இளவெந்நீரிலாவது, சும்மாவாவது ஒரு குளிகை சாப்பிடத் தீரும்.

**வேறு:**—பல்கிட்டி இருந்தால் உச்சியில் வளையலோட்டால் கீறி மாத்திரையைப் பொடித்து வைத்து, எருக்கம் வேரைத் தணலிலிட்டு ஒரு சிறு ஓட்டை அத்தணலிலிட்டு கைபொருக்க எரித்து எடுத்து விடவும். கடிவாயில் விஷம் முன்னும் மருந்து பின்னும் வரும்.

**வேறு:**—நாய்ப்பாகலிலை, கையாந்தகரையிலை, வசம்பு, வெள்ளுள்ளி, பெருங்காயம் இவைகளைத் தட்டி வெந்நீரில் நசியம் செய்ய உயிர் மீண்டு வரும்.

வேறு :—கடிவாய்க்கு நிலக்குமிழ்வேர், சீந்திர்கொடிசமூலம், தூதுவளைவேர் இவைகளைக் குடிநீரிட்டுக் கொடுத்து மேலுக்கும் பூசவும்.

வேறு :—தூதுவேளை, சிவன்வேம்பு, வேலிப்பருத்தி, குப்பமேனி, வெள்ளுள்ளி, வசம்பு, மிளகு இவைகளை இடித்துப் பிழிந்து துவளையிடவும். அழிஞ்சிவேரை அரைத்துத் தண்ணீரில் கொடுக்க வாந்தியாகும். மயக்கமானல் மோருஞ்சோறும் கொடுக்கவும்.

வேறு :—வாய்த்தினவு தீண்டில், பச்சரிசி தின்னவும். தனி நெய் நசியமிடவும்.

வேறு :—பிலாப்பிஞ்சை எருக்கம்பாலில் ஏழு நாள் ஊற வைத்து அரைத்து குளிகைசெய்து நிழலிலுலர்த்தி மேற்படி பாலில் உரைத்துக் கடிவாயில் தடவி, அனல் காய்ச்ச நெறியிறங்கும். இல்லாவிட்டால் மறுநாளும் அப்படியே செய்யத் தீரும்.

## பேய்நரி நாய்கடிக்கு

உத்தாமணிவேரை வாய் பேசாமல் பிடுங்கி வந்து கொட்டைப்பாக்களவு அரைத்து, அதைப் பசுவின்பாலில் பச்சரிசி போட்டு பொங்கவைத்து இறக்கும் சமயத்தில், நடுச்சோற்றுக்குள் இட்டுக் கிண்டி இறக்கிச் சாப்பிடவும். இச்சாபத்தியம்.

## சகல விஷத்திற்கும்

அப்பைக்கோவைக்கிழங்கு, ஆகாசகருடன்கிழங்கு, பெருங்கும்மட்டிவேர், சிறுகும்மட்டிவேர், பல்லிப்பூட்டுவேர், கலப்பைக்கிழங்கு, உரிக்கட்டிவேர், எட்டிவிதை இவைகளைச் சமன்கூட்டி, எட்டிவிதையை நீரில் ஊறவைத்த தண்ணீரால் அரைத்து, குன்றியளவு குளிகைசெய்து, சகல நோய்களுக்கும் தண்ணீரில் உரைத்துக் கொடுக்கத் தீரும்.

## வெள்ளி பற்பம்

அபின், வெங்காரம் இவை வகைக்கு இரண்டு விராகனிடை, படிக்காரம் விராகன் நாலு, பொடுதலை, கையான்தகரை இவைகளின் சாறு கொண்டு அரைத்து, சுத்திசெய்த வெள்ளிப் பொடி நாலு விராகனுடன் கலந்து பிசறி அகலில் வைத்து வில்லையாகத்தட்டி சீலை மண்செய்து உலர்த்தி, கஜபுடமிட்டு



எடுக்கவும். மறுபடியும் அவ்வாறே கஜபுடமிடப் பற்பமாகும். பணவிடை வெண்ணெயிற்கொள்ள மேகம் இருபதும், வெள்ளையும் தீரும்.

## கருவங்க பற்பம்

பங்கம்பாளை சமூலமரைத்துக் கருவங்கக்கட்டிக்குக் கவசஞ்செய்து கஜபுடமிடப் பற்பமாகும். பின்பு பத்து புடம் மேற்படிச் சாற்றல் அரைத்து மேற்படியாகப் புடமிட தூய்மையான பற்பமாம்.

வேறு :-காரீயம் பலம் எட்டு, நூறு வருடஞ்சென்ற வேப்பம் பட்டையை இடித்ததூள் குருணி ஒன்றின் நடுவே வங்கக் கட்டியை வைத்து மேலே சாண விராட்டி அடுக்கி தீயிட்டு ஆரவிட்டு எடுக்க பற்பமாகும். நீரிழிவு இருபதுக்கும் வெண்ணெயில் கொள்ளவும்.

வேறு :—காரீயத்தகடு பலம் ஒன்றுக்கு நொச்சியிலை அரைத்துக் கவசஞ்செய்து மேற்படி வெள்ளீயம்போல் புடமிட்டுக் கொடுக்க காமாலை, சூலை, குட்டம், கிரந்தி, மேகம், காந்தல், சிறுநீர்கடுப்பு, வறட்சி, உஷ்ணம் இவை தீரும்.

## சாதிலிங்க பற்பம்

சாதிலிங்கம் விராகன் பத்துக்கு, சங்கம்பழச்சாறு படி எட்டு கொண்டு சுருக்கிட்டுக்கட்டி, சங்குயிலையை அரைத்துக் கவசஞ்செய்து காடைப்புடமிட இடை குறையாமல் பற்பமாகும்.

## கருவங்கச் செந்தூரம்

காரீயம் விராகன் இரண்டை மோரில் இரண்டு நாள் ஊறவைத்துக் கழுவி, கெட்டியான சட்டியிலிட்டு உருகும்போது ஆவரம்பட்டை தூக்கு ஒன்று, சிவந்த நாயுருவி தூக்கு ஒன்று இவற்றைச் சூரணித்து ஒவ்வொரு பிடியாக வங்கத்தில் போட்டு இரும்புக் கரண்டியால் நாலு சாமம் வறுக்கவும். இப்படி நாலு நாள் பதினாறு சாமம் வருக்க சாதிலிங்க நிறமான செந்தூரமாகும். ஆவரைப்பஞ்சாங்கச் சூரணத்துடன் தேன் சேர்த்து பத்து நாள் கொள்ள நீரிழிவு, மேகரோகம் இவை தீரும்.

## வெள்வங்க பற்பம்

கருவங்க பற்பம்போல் ஒரே புடத்திலும் மேற்படி தூளில் செய்யலாம்.

**வேறு:**—நல்ல கனமுள்ள வெள்ளீயத்தகடு பலம் ஒன்றுக்கு ஆடாதொடைவேர், வெங்தோன்றிக்கிழங்கு இவை வகைக்குப் பலம் ஒன்று அரைத்துக் கவசஞ்செய்து ஓட்டிலிட்டு மண் சீலை செய்து, கஜபுடமிடப் பற்பமாகும். ஆவாரைப்பஞ்சாங்க சூரணத்தில் தேன் சேர்த்து ஒரு பணவிடை பற்பம் கூட்டி மூன்று நாள் ஆறு வேளை கொள்ள, நீர் இனிப்பு, பிரமேகம், கல்லடைப்பு, நீர் எரிச்சல், சதையடைப்பு முதலியன தீரும்.

## சன்னிக்கு

சுக்கு, மிளகு, துருசு, கந்தகம், இந்துப்பு, பெருங்காயம், முசுறுமுட்டை இவை வகைக்கு விராகன் மூன்றை முலைப் பால் விட்டரைத்துக் குளிகை செய்து உலர்த்தி, முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிடவும். வெள்ளுள்ளியை உரித்து இடித்துக் கிழிக்கட்டி வேகவைத்து பிழிந்து துவளை யிடவும்.

## குக்கில் கிருதம்

திரிபலை கஷாயத்தில் தோளாயந்திரங்கட்டி பதினைந்து நாழிகை எரித்தாவது; கோசலத்தில் வேப்பம்பட்டை, கண்டங்கத்திரிவேர் இவற்றைத் தட்டிப்போட்டு தோளாயந்திரங் கட்டி எரித்தாவது; ஆடாதொடைவேர், கண்டங்கத்திரிவேர், கொடிவேலிவேர், சுக்கு, திப்பிலி, மிளகு, செவ்வியம் இவைகளைக் கஷாயமிட்டதில் எரித்தாவது; சுத்திசெய்த குக்கில் பலம் இரண்டரை, முற்றிய வேப்பம்பட்டை, சீந்தில்தண்டு, ஆடாதொடை, பேய்ப்புடல், கண்டங்கத்திரிவேர் இவை வகைக்குப் பலம் பத்து கொண்டு இடித்து எட்டு மரக்கால் நீர் விட்டுக் குருணியாகக் காய்ச்சி வடித்து, அத்துடன் பொன் முசுட்டை, வாய்விளங்கம், செவ்வியம், தேவதாரம், அத்தி திப்பிலி, சத்திச்சாரம், நவச்சாரம், சுக்கு, மஞ்சள், சதகுப்பை, கோஷ்டம், மிளகு, திப்பிலி, வெட்பாலையரிசி, ஓமம், வீழிவேர், கொடிவேலிவேர், கடுகுரோகணி, வசம்பு, திப்பிலிமூலம், மஞ்சிட்டி, அதிவிடையம், சிற்றாமல்லிவேர், சீரகம் இவை வகைக்கு விராகன் ஒன்று, இவற்றை முதல் கூறிய குடிநீரால் அரைத்து அதில் பசுநெய் படி இரண்டு விட்டுக் கலக்கிக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, சூடாக உள்ளபோதே குக்கிலைப் பொடித்திட்டுக் கலந்து வைத்துக் கொண்டு, நாள் ஒன்றுக்கு



மூன்று கழஞ்சு வீதம் கொள்ளவும். கருங்குட்டம், வெண்குட்டம், நரம்புச்சிலந்தி, கொடிப்பவுத்திரம், ஆசனப்பவுத்திரம், அரையாப்பு, புண்கள், மேகங்கள், காசநோய்கள், சுவாசகாசம், பீனிசம், சோகை, பாண்டு, காமாலை, கட்டிவகைகள், கண்டமாலை முதலிய நோய்கள் தீரும். பத்தியம்: புளி புகை நீக்கவும்.

## ஆனந்த சூரணம்

சுக்கு, திப்பிலி, மிளகு, சாதிக்காய், வசுவாசி, கிராம்பு, இந்துப்பு, அசமதாகம், சீரகம், நற்சீரகம், கடுக்காய், ஏலம், விளாம்பிசின், முத்தக்காசு, நெல்லிமுள்ளிவேர், பெருமரப் பட்டை, அதிவிடையம், புளியம் விதைத்தோல், மாதுளங்காய்த் தோல், அபினி இவைகளைச் சூரணித்து அதன் எடைக்கு மூன்றில் ஒரு பங்கு கஞ்சாச்சூரணம் சேர்த்துக் கலந்து தேனிற்கொள்ள வாயுக்கிராணி, மூலக்கிராணி, சீழ்க்கிராணி, இரத்தக்கிராணி முதலியவை தீரும். கைப்பும், புளிப்பும் தள்ளி மோருந்தயிரும் கூட்டவும்.

## கந்தக சிந்தாமணிச் சூரணம்

கந்தகம், அரிதாரம், முத்தக்காசு, அதிவிடையம், சுக்கு, திப்பிலி, மிளகு, நேர்வாளம், பஞ்சலவணம் இவை வகைக்கு விராகன் மூன்றோடு இவைகளுக்குச் சமனாகக் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இவைகளைச் சூரணித்துக் கூட்டி, இவைகளுக்குச் சரியிடை சீனிச்சருக்கரை கூட்டிக்கலந்து; வெருகடியளவு இரு நேரமும் கொள்ள குன்மம், மூலக்கிராணி, குட்டம் பதினெட்டு, பிரமேகம், சுவாசகாசம் முதலியன தீரும். பத்தியம்: புளியும், புகையும் நீக்கி வெந்நீர் கூட்டவும்.

## கதலி கிருதம்

வாழைபழத்தின்சாறும், வாழைப்பூச்சாறும் வகைக்குப் படி நாலு, நெல்லிக்காய்ச்சாறும், நிலப்பனைக்கிழங்குச்சாறும் வகைக்குப் படி இரண்டு, தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு, பெரும்பூசனிக்காய்ச்சாறு, பசுவின்பால், பசுவின்நெய் இவை வகைக்குப் படி நாலு இவைகளைக் கலந்து அதில், ஏலம், லவங்கம், லவங்கப்பத்திரி, திரிபலை, விளாம்பழம், சந்தனம், தேவதாரம், சடாமாஞ்சி, நெய்தல்கிழங்கு, தாமரைவளையம், பூலாம்பட்டை, அத்திப்பட்டை, இத்திப்பட்டை, அரசம்பட்டை, மருதம் பட்டை, நாவல்பட்டை, கிருவன்பட்டை இவை வகைக்குக்

கழஞ்சு. அரைத்துக் கலக்கி மெழுகுபதத்தில் காய்ச்சி வடித்து, இரண்டு கரண்டி அளவு நெய்யுடன் சர்க்கரை கூட்டிக் கொள்ள, உஷ்ணம், மேகம், பிரமேகம், எலும்புருக்கி, உள்ளுருக்கி, அத்திசுரம், உள்வேகம், காய்ச்சல், நீர்க்கடுப்பு, வயிற்றுவலி இவை தீரும். பத்தியம்: கைப்பும், புளிப்பும் நீக்கவும்.

## கூழ்மாண்ட கிருதம்

பெரும்பூசனிக்காய்ச்சாறும், பசுவின் நெய்யும் வகைக்குப் படி ஒன்று, கலந்து அதில், ஏலம், இலவங்கம், கோஷ்டம், சாஸ்திரபேதி, கிராம்பு, நாகப்பு, சீரகம், நெல்லிமுள்ளி, கற்கண்டு, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், சிறுதேக்கு, கொத்தமல்லி, இலாமிச்சம்வேர், இருவேலிவேர், முத்தக்காசு, சந்தனம், கலைக் கொம்பு, நன்னாரிவேர், ஓரிலைத்தாமரைவேர், நற்பாலைவேர், பழுபாகல்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு இவை வகைக்குக் கழஞ்சு நான்கை அரைத்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து. ஒரு கரண்டி அளவு மூன்று வேளை சர்க்கரை கூட்டிக்கொள்ள, நீர்ப்பாண்டு, நீர்க்கடுப்பு, சுக்கிலப் பிரமியம், மேகவியாதி, அஸ்திவேட்கை இவை தீரும். வற்றினவுடல் பருக்கும். புளியும், புகையும் நீக்கவும்.

## நீரடைப்புக்கு

நாலு சிறுகளாவேரை எடுத்து, மேற்புறணிசீவிப் பட்டையை எடுத்து அரைத்து எலுமிச்சங்காயளவு வெள்ளாட்டுப் பாலில் வெல்லம் சேர்த்துக் கொடுத்தாலும் அல்லது சிறுபூனைகாஞ்சொறிவேரைப் பசுவின் பாலில் அரைத்துக் கொடுத்தாலும் அல்லது வாருகவிரையை வெந்நீரில் அரைத்துக் கொடுத்தாலும் அல்லது இலுப்பைப் பிண்ணாக்கை அரைத்துச் சுண்டைக் காயளவு வெந்நீரில் கொடுத்தாலும் நீர்கட்டு போம்.

## பரங்கிப்பட்டை சூர்ணம்

பரங்கிப்பட்டை பலம் ஐந்தை பசுவின் பாலில் ஊறப் போட்டு எடுத்துச் சிறுக நறுக்கி ஒரு கலசத்திலிட்டு மேற்படி கலசத்தின் வாய்க்கு நஞ்சுண்டாம்பட்டையைத் துணித்து போட்டு; அதன்மேல், இரசம், மனோசிலை, கந்தகம், வெள்ளைப் பாஷாணம், வெள்ளைக்குங்கிலியம் இவை வகைக்கு விராகன் இரண்டு கொண்டு கழற்சியிலைச்சாறு விட்டு அரைத்து



ஒன்பது குளிகை செய்து உலர்த்தி அதில் ஒரு குளிகையை சீலையில் முடிந்து கலசத்துள் வைத்து அதனை குழிதோண்டி அதில் புளியஞ்சிராய் போட்டுத் தணலாக்கி மேற்படி தணலில் மேற்படி கலசத்தை வைத்து மூடிப் புகை அடங்கியபின் கலசத்தை எடுக்கவும். இப்படியாகவே மற்றைய குளிகைகளையும் புடமிட்டு எடுத்துக்:கூட்டி ஒன்றாக அரைத்து அதில் இரண்டு அரிசியை, நல்லெண்ணெயும், பிண்ணாக்குயிலை சாம்பலும் கூட்டி உணவு உண்டபின் உண்டு வெந்நீர் சாப்பிடவும். இவ்வாறு அரை மண்டலஞ் சாப்பிடுதல் நலம். பத்தியம்: கடுமையாகக் காத்தல் வேண்டும். முடியாவிட்டால் அரை உப்புக் கூட்டிக் கொள்ளலாம். மருந்து முடிந்தபின் மறு பத்தியமாக பசுவின் நெய், துவரை, கண்டங்கீரை, வெள்ளாட்டு உப்புக்கண்டம், காடை இவை சேர்க்கலாம். அரை உப்புக் கூட்டலாம்; காற்று, குளிர், பனி இவை படாமலிருக்கவும். சூலைக்கட்டு, ஆருதபுண், கைகால் முடக்கங்கள், நரிதலைவாயு, ஐயசூலை, வாதசூலை, வெடிசூலை, கட்டுச்சூலை, பித்தசூலை, வாய்ச் சூலை முதலிய சகல சூலைகளும் தீரும்.

## கடுக்காய் லேகியம்

கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் இவைகள் வகைக்குப் பலம் பத்தைத் தட்டி நீரிலிட்டு எரித்து எட்டொன்றாய் வற்ற வைத்து, வடித்த நீரில் பேய்முசுட்டைவேர், கொடிவேலிவேர், முட்காய்வேளைவேர், பிரண்டைவேர், சிறுகுறிஞ்சான்வேர், அரசம்பட்டை, மாம்பட்டை, கிளுவைப்பட்டை இவைகளை வகைக்குப் பலம் பத்தை இடித்துத் தூணி நீரிலிட்டுக் காய்ச்சி வடித்துக் கூட்டி இஞ்சிச்சாறு, பசுவின் பால் வகைக்குப் படி இரண்டு. இவைகளை எல்லாம் ஒன்றாய்க் கலந்து காய்ச்சி, அத்துடன் சாதிக்காய், சாதிப்பத்திரி, அபினி, கிராம்பு, தாளிசப் பத்திரி, குராசானியோமம், காசுக்கட்டி, ஓமம், சுக்கு, மிளகு, திப்பிலி, அதிவிடையம், கஞ்சா, சீரகம், ஏலம் இவை வகைக்கு விராகன் பத்தைச் சூரணித்து மேற்படி நீர்களில் கூட்டிக் காய்ச்சி நீர்சுண்டி வரும்போது கோதுமை மாவு படி ஒன்று போட்டுக் கிளறி லேகிய பதத்திலிறக்கி, தேன் படி இரண்டு, நெய், நல்லெண்ணெய் இவை வகைக்கு ஆழாக்கு ஒன்று சேர்த்துப் பிசைந்து எடுத்துக் கொள்ளவும். இதில் புன்னைக்

காயளவு இரு நேரமும் கொள்ள, மூலக்கிராணி, மூலவாயு, கிராணி, சங்கிராணி, அதிசாரம், வாந்தி, கைகால், முகங்களில் உண்டாகும் வீக்கம் முதலியவை தீரும். பத்தியம் : கைப்பும், புளியும் நீக்கவும். வெந்நீர் சேர்க்கவும்.

## மகாவாதி கிருதம்

மிளகரணை, தாதுவளை, செங்கொட்டி, சங்கு, பேராமுட்டி, சிற்றாமுட்டி, தேவதாரி, அமுக்கரா, முத்தக்காசு, நரிவிளா, வாகை, தண்ணீர்விட்டான், கரிப்பான், கொட்டைக்கரந்தை, நஞ்சுண்டான் இவைகளின் வேர், கிழங்கு வகைகள் ஒவ்வொன்றும் பலம் பத்து, ஆடாதொடையிலை பலம் ஐந்து இவைகளை இடித்து ஆறு மரக்கால் நீரிலிட்டு ஆறு படியாகக் காய்ச்சி வடித்து, அதில் பசுவின் பால், பசுவின் நெய், பெரும் பூசணிக் காய்ச்சாறு, ஆடாதொடைச்சாறு, கையாந்தகரைச்சாறு, பேய்க் கரும்பின்சாறு இவைகளை வகைக்குப் படி இரண்டு சேர்த்துக் கலந்து, அத்துடன் திப்பிலி, திப்பிலிமூலம், செவியம், சித்திர மூலம், கடுக்காய், கடுக்காய்ப்பூ, சுக்கு, சிறுதேக்கு, சடாமாஞ்சி, கடுகுரோகணி, நற்சீரகம், கருஞ்சீரகம், ஓமம், கிராம்பு, அரத்தை, மஞ்சிட்டி, பின்கு, கோஷ்டம், இந்துப்பு, யானைத் திப்பிலி, ஏலம், லவங்கப்பத்திரி, இவைகள் வகைக்குப் பலம் ஒன்றைச் சூரணித்துப் போட்டுக் கிண்டி லேகிய பதத்தில் சீனி சர்க்கரை பலம் நாலு, தேன் படி ஒன்று, முந்திரிப்பழம் பலம் ஒன்று, அதிமதுரசூரணம் பலம் அரை இவற்றைப் போட்டுக் கிண்டி எடுக்கவும். இதில் நாலு காசிடைக்கொள்ள இருமல், காசம், சுவாசகாசம், மந்தாரகாசம், சயம், பக்கமந்தார காசம், மருந்தீட்டுக்காசம், பீனிசகாசம், எலிகடிகாயம் முதலியன தீரும். பத்தியம் காக்கவும்.

## அசுவகந்தி கிருதம்

மேற்புறணிசீவி நறுக்கிய அமுக்கலாங்கிழங்கு பலம் பத்தைப் பசுவின் பாலிலாட்டி, இரண்டரை படி பசுவின் நெய் விட்டு, ஒரு நாள், சூரியபுடம் வைத்து, அந்த இரவில் உமிக் காந்தலில் வைத்து, காலையில் கமலாக்கினியில் காய்ச்சும்போது, திரிகடுகு, திரிபலை, வாய்விளங்கம, திப்பிலிமூலம், கிராம்பு, நற்சீரகம், ஏலம் இவைகள் வகைக்கு விராகன் மூன்றைப் பொடித்திட்டுக் காய்ச்சி வடித்து இரண்டு விராகனிடை



கொள்ள, அஸ்திசுரம், மாங்கிசசுரம், பாண்டு, பைத்தியம், சயம், கிராணி, மூலம், குன்மம், வயிற்றைப்பற்றிய நோய்கள் எல்லாம் தீரும். பத்தியம் : உப்பும், புளியும் நீக்கவும். மேற்படி மருந்துடன் நெய், தேன், திப்பிலிப்பொடி இவை சேர்த்துக் கொள்ள கடுமையான சயரோகமும் தீரும்.

## சித்திரமூல லேகியம்

கொடிவேலிவேர் பலம் பதினைந்தை இடித்துத் தூணி நீரிலிட்டு நாலொன்றாகக் காய்ச்சி இரும்புச் சட்டியில் வடித்து அதில், திரிகடுகு, திரிபலை, முத்தக்காசு, விளாவரிசி, திப்பிலி, திப்பிலிமூலம், நெருஞ்சிவேர், பச்சிலை, தேவதாரம், கொத்தமல்லி வசம்பு, சிறுதேக்கு, நன்னாரிவேர், யானைத்திப்பிலி, அசமதாகம், நற்சீரகம், பெருங்காயம், இந்துப்பு, கடுகுரோகணி இவைகளின் பொடிகள் வகைக்கு விராகன் ஆறு, தூவிக் கிண்டி பசுவின் நெய் படி ஒன்று சேர்த்துக் கிண்டி ஒரு மாதம் தானியபுடம் வைத்து எடுத்துச் சாப்பிடவும். மூலம், மூலபாண்டு, இருமல், மேலிளைப்பு, காமாலை, குட்டம், பவுத்திரம், மூத்திரகிருச்சரம், வாதசூலை, சோம்பல், வீக்கம், வயிற்றுப்பொருமல் முதலியன தீரும். பத்தியம் : முதலில் வெந்நீரும், சோறும். பின்பு நெய்யும், பாலும் கூட்டிக் கொள்ளலாம்.

## அறுகு நெய்

அறுகு, துளசி, கற்றாழை, ஆடாதொடையிலை, அகத்தியிலை, கரிப்பானிலை, சீந்தில், அவுரியிலை இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்றரையும், பசுவின் பால், நெய் இவைகள் வகைக்குப் படி இரண்டும் சேர்த்து அதில் அமுக்கராவேர், இலாமிச்சம் வேர், பங்கம்பாளைவேர், இருவேலிவேர், முத்தக்காசு, தாமரை வளையம், செங்கழுநீர்க்கிழங்கு, கச்சோலம், கடுகு, நெல்லி முள்ளி, தான்றிக்காய், ஏலம், இலவங்கம், பச்சிலை, புனுகு, செங் கழுநீர், கோஷ்டம், குங்குமப்பூ, திரிகடுகு, பெருங்காயம். இவைகள் வகைக்குக் கழஞ்சு இரண்டை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து [illegible] கொள்ள, விஷபாகம், கிரந்தி, வீக்கம், [illegible], இரணங்கள், கெற்பிணி கிரந்தி, உட்சூடு, உஷ்ணரோகம் எல்லாம் தீரும். பத்தியம் காக்கவும்.

LC
N150
101993

## நாவல் நெய்

நாவல்பட்டை பலம் ஐம்பதை இடித்து இரண்டு தூணி நீரிலிட்டு நாலொன்ருய்க் காய்ச்சி வடித்து அதில் நெய் படி இரண்டு, தயிர் குருணி ஒன்று கலந்து. அத்துடன் வில்வவேர், அதிமதுரம், வெள்ளிலோத்திரம், இலவம்பிசின், தாமரை வளையம், தாமரைத்தாது, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், செண்பகமொட்டு, வெட்பாலையரிசி, சிறுநாகப்பூ, சுக்கு, மாதுளம்பிசின், பங்கம்பாளைவேர், முத்தக்காசு, ஓமம், மாங் கொட்டை, நாவல்விதை, செங்கழுநீர்க்கிழங்கு, விளாம்பிசின், நிலப்பனைக்கிழங்கு, தேள்கொடுக்குவேர் இவைகளை வகைக்குப் பலம் நாலு அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து. மூன்று கழஞ்சு விகிதம் கொள்ள, இரத்தபித்தம், யோனிச்சூலை, யோனிநோய், பெரும்பாடு, எலும்புருக்கி, உள்ளுருக்கி, வறட்சி, காமாலை எல்லாம் தீரும். பத்தியம் காக்கவும்.

## சீந்தில் சர்க்கரைச் சூரணம்

வெட்டிவேர், இலாமிச்சம்வேர், கோஷ்டம், கடுக்காய், நிலப்பனைக்கிழங்கு, ஏலம், ரேணுகம், முந்திரிப்பழம், குங்குமப்பூ தாமரைவளையம், கற்பூரம், சிலாசத்து. அதிமதுரம், சுக்கு' மிளகு, திப்பிலி, அமுக்கருக்கிழங்கு, தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலக்குமி, நெருஞ்சிவேர், கற்கடகசிங்கி, சாதிக்காய், தக்கோலம், கச்சோலம், நெல்லிப்பருப்பு இவைகளைச் சமன்கூட்டிச் சூரணஞ் செய்து, அவ்விடைக்குச் சமன் சீந்தில் சர்க்கரையும் இவை களின் கூட்டுத் தொகைக்கு சர்க்கரையும் சேர்த்து வெருகடி யளவு கொள்ள, சயநோய், ரத்த அதிசாரம், அந்தரவாயு தாகம், கால்கை கண், எரிவு, பிரமியம் இருபது, மூத்திர கிருச்சரம், பெருமூத்திரம், குண்டலாகிவாயு, இந்திரிய நஷ்டம் முதலியன தீரும். தேகம் பருக்கும். வீரிய விருத்தி உண்டாகும். அஸ்தியெரிவு தீரும். பத்தியம் காக்கவும்.

## மதிமயக்கம் பிரமைக்கு

பூநாகம் விராகன் பதினைந்து, இந்துப்பு விராகன் இரண்டு இவைகளைத் தேங்காயைக் கண்திறந்து அதனுள் அடைத்து மூன்றுநாள் மூடிவைக்க தண்ணீராகும். அதைப் பசுவின் பால்



படி எட்டு சேர்த்து மூன்று நேரங்கொடுக்க மதிமயக்கம், பிரமை இவை தீரும்.

## உன்மத்தத்திற்கு

எலுமிச்சம்பழச்சாறு படி நாலு, இஞ்சிச்சாறு, நீர்ப்பூண்டுச் சாறு, கரிப்பான்சாறு இவைகள் வகைக்குப் படி நாலு சேர்த்து, அதில் நான்கு பலகரையை பொடித்துப் போட்டு, செப்புச் சட்டியிலிட்டு ஓர் இராத்திரி வைத்து, காலையில் அதை வடித்துக் கொடுக்க, வாந்தி, பிராந்தியாகும். பின்பு மோருஞ்சோறும் கொடுக்கவும். பேய்க்கும்மட்டிக்காய்ச்சாறும், காடியும் கலந்து மேலில் துவளை போடவும். பேய்க்கும்மட்டிவேரைத் தட்டி காடியில் பிசைந்து பொட்டணங்கட்டி மூக்கில் நசியமிடவும். இப்படிச் செய்ய உன்மத்தம், பிரமை, அறிவு மயக்கம், பயித்தியம் எல்லாந்தீரும்.

## பயித்தியத்திற்கு

திரிகடுகை இடித்துப் பொடித்துக் கரடியின் சிறுநீரில் கலக்கி மூக்கிலிடவும். பின்பு நெல்லிக்காய்ச்சாறும், வெள்ளாட் டுப்பாலும் கலந்து உள்ளுக்குக் கொடுத்து, வெள்ளாட்டுப் பாலையே உணவாகக் கொடுக்கவும்.

**வேறு :**—பீர்க்கம்விதையை அரைத்து முள்ளிக்காயளவு பசுவின் பாலில் கொடுக்கவும்.

**வேறு :**—நெய்கொட்டாம்பழத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் பிசைந்து கொடுத்து, நசியமிடவும்.

**நெய் :**—பேய்த்தும்மட்டி, நன்னாரி, சிறுமல்லி, பெருமல்லி கண்டங்கத்திரி, வெட்டிவேர், வில்வம், சாரணை, முள் வள்ளி, நிலப்பனை, மருள், சிற்ருமுட்டி, பேராமுட்டி இவை களின் வேர், ஆடாதொடைசமூலம் ஆக வகைக்குப் பலம் பத்தை நறுக்கி இடித்துத் தூணி நீரிலிட்டு எட்டொன்ருய்க் காய்ச்சி வடித்து அதில் பசுவின் நெய் படி ஒன்று சேர்த்து அத்துடன், வாலுளுவையரிசி, மஞ்சிட்டி, மரமஞ்சள், நாணல் தாது, தகரம், மூங்கிலரிசி, இம்மியரிசி, நாகப்பூ, கோஷ்டம், சிறுதேக்கு, லவங்கம், கோழிக்காரம், மதுரம், விடையம், தேவதாரம், சிற்றேலம், பேய்ப்புடல், வெட்பாலையரிசி, பச்சிலை, கச்சோலம், திரிகடுகு, திரிபலை, தாமரைத்தாது, பூனைக்காலிவேர், தாளிசப்பத்திரி, சதாவேரிப்பூ, வெள்ளிக்கிழங்கு, தக்கோலம்,

பூட்டில், ரேணுகம், பேரீச்சம்பழம், முந்திரிப்பழம் இவை வகைக்குக் கழஞ்சு மூன்று, அரைத்துப் பசுவின் பால் படி ஒன்றில் கரைத்துச் சேர்த்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வரும்பொழுது சந்தனம், குங்குமப்பூ, கோரோசனை, சேர்த்து வடித்து. அதில் மூன்று கழஞ்சு வீதம் சர்க்கரை சேர்த்துக் கொள்ள, சன்னி, பிரமை, உன்மத்தம், அறிவு மயக்கம், பித்தம், பயித்தியம் எல்லாம் தீரும். பத்தியம் : பாசிப்பயறு, பசுவின் மோர், உப்பு இவை கூட்டிக் கொள்ளவும்.

வேறு :—முசுமுசுக்கைச்சாறு, ஆனைக்கணச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, கழுதைப்பால், ஆவின்பால், ஆவின்நெய் இவைகள் வகைக்குப் படி ஒன்றும், பொன்னாங்காணி, சாணகினி, தாமரை வளையம், செங்கழுநீர்க்கிழங்கு இவற்றின் சாறுகள் வகைக்கு படி ஒன்றும் சேர்த்து, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கிராம்பு, சிறுநாகப்பூ, சாதிப்பத்திரி, கற்கண்டு, செண்பகப்பூ, சீரகம் இவை வகைக்கு கழஞ்சு ஒன்று, இவைகளை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து மூன்று கழஞ்சு வீதம் கொள்ள, வெறிப்பித்தம், பித்தப்பயித்தியம், அறிவு மயக்கம், உன்மத்தம் எல்லாந் தீரும், பத்தியம் கிரமமாக இருக்கவும்.

## தாளிச்சபத்திரிச் சூரணம்

தாளிச்சபத்திரி, திப்பிலிமூலம், செவ்வியம், கடுக்காய் நெல்லிப்பருப்பு, தான்றிக்காய், ஏலம், இலவங்கம், நாககேசரம், சந்தனம், சுக்கு, சீரகம், அதிமதுரம், குராசாணிஓமம், செண்பகப்பூ இவைகள் வகைக்குப் பலம் எட்டை சூரணித்து, கும்மட்டிமாதுளம்பழச்சாறும், மாதுளம்பழச்சாறும் சரிகூட்டி மேற்படி சூரணம் முழுகும்படி விட்டு மூன்று நாள் சூரியபுடம் வைத்து நன்றாக உலர்ந்தபின் சூரணித்த எடைக்குச் சரியிடை சீனிசர்க்கரை சேர்த்து, வெருகடியளவு இரண்டுநேரம் கொள்ள, வாதக்கிராணி, பித்தக்கிராணி, சிலேட்டுமக்கிராணி, சத்தி, இருமல், இளைப்பு, சுரம், அரோசகம், வீக்கம், குன்மம், மகோதரம், பாண்டு, மேல்நோக்குவாயு, பீனிசம், வாயு, இரத்தபித்தம், பித்தசுரம் முதலியவை தீரும். பத்தியம் காக்கவும்.

## சித்தாதி லேகியம்

இரும்புப்பொடி பலம் ஐம்பதை, நாலு மரக்கால் காடி நீரிலிட்டு நாலு நாள் ஊறவைத்துப்பின் எட்டிலொன்றாய்க்



காய்ச்சி வடித்து அதில், பழைய வெல்லம் பலம் இருபத்தைந்து, குறுக நறுக்கிய இஞ்சி பலம் பதினாறு, சாரணைச்சாறு படி பதினாறு இவைகளைக் கூட்டி சிறுதீயால் எரித்து பாகுபதமாகக் காய்ச்சி, அதில், சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம் இவை வகைக்குப் பலம் ஒன்றைச் சூரணித்துப் போட்டுக் கிண்டி லேகிய பதத்தில், தேன் பலம் பன்னிரண்டு சேர்த்து மத்தித்து, தானிய புடம் வைத்து எடுத்து, அதில் மூன்று கழஞ்சு வீதம் கொள்ள பாண்டு, சோகை, காமாலை, வீக்கம் இவை தீரும்.

## சித்திரமூலாதி லேகியம்

சித்திரமூலப்பட்டை பலம் இருபது, புனல்முருங்கை, சிற்றாமணக்கு, ஆவாரை, புங்கம்பட்டை, முக்காவளைவேர், இவைகளை மேற்றோல்சீவி நசுக்கி வகைக்குப் பலம் இரண்டு இடித்து பதக்கு நீரிலிட்டு, நாலு படியாகக் காய்ச்சி வடித்த கஷாயத்தில், கருப்புக்கட்டி பலம் பத்தைக் கரைத்து, அத்துடன் இஞ்சி பலம் ஐம்பது இடித்துப் பிழிந்தசாறும், கரிப்பான், நொச்சி, பசு மஞ்சள், சங்கிலை இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்றும் சேர்த்து, அத்துடன் கருஞ்சீரகம், நற்சீரகம், ஓமம், பெருங்காயம், திரிகடுகு, தேவதாரம், இந்துப்பு, அரேணுகம், அதிவிடையம், ஆத்திப்பூ, திரிபலை இவைகளை வகைக்குப் பலம் ஒன்று சூரணித்துப் போட்டுக் கிண்டி இறக்கி, தேன், நெய், நல்லெண்ணெய் இவைகளை விட்டு, லேகிய பதமாக்கிக் கொள்ளவும். அதில் மூன்று கழஞ்சு வீதம் கொள்ள, வாதம், வாயுத்திரட்சி, முடக்குவாதம், வாயுக்கட்டி, வாதவாயு, வயிற்றுவாயு, அசீரணவாயு, செரியாமாந்தம் இவை தீரும். பத்தியம் காக்கவும்.

## புளியிலைக் குழம்பு

ஆறு மரக்கால் புளியைத் துவைத்து, ஆறு மரக்கால் பழைய காடியில் போட்டுக் கடுக்காய் மூந்நூறு நறுக்கியிட்டு, இரும்பு பலம் நூறும், இருப்புக்கிட்டம் பலம் நூறும் சேர்த்து, கீழ்க்காய் நெல்லி, கரிப்பான், சாரணை, சிறுசெருப்படை இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்று கலந்து. ஆறுநாள் சூரியபுடம் வைத்து ஏழாம் நாள் காய்ச்சிப் பிழிந்து, எடுத்து அத்துடன் இருப்புக்கிட்டத்தை எடுத்துக் கூட்டி, இருதாணி கோமூத்திரம் விட்டு வற்றக்காய்ச்சி எடுத்து சிவதைவேர், நெல்லி, மஞ்சள், வில்வவேர் இவைகள் வகைக்குப் பலம் பத்து, அவுரி, முன்னை, பாதிரிவேர்,

சிற்ருமல்லி, பேராமல்லி, சிறுவழுதலை இவைகள் வகைக்குப்பலம் ஐந்து, கண்டங்கத்தரி, நெருஞ்சி, சிற்ருமுட்டி இவைகள் வகைக்குப் பலம் பத்து இவற்றை இடித்து மூன்று பாத்திரத்தில் மூன்று வகை மருந்துகளையும் போட்டு பலம் ஒன்றுக்கு இருதூணி நீராகவிட்டுக் காய்ச்சி குருணியாகப் பிழிந்து மூன் கஷாயத்தில் கலந்து,-ஆண்பனைவெல்லம் அறுபதும்,சர்க்கரை பலம் அறுபதும் கரைத்துக் கலந்து, பேய்த்தும்பை, மஞ்சள், புளியம்பட்டை, சித்திரமூலம், கீரைத்தண்டு, எள்ளுச்செத்தை, பிலாக்கட்டை இவைகளின் சாம்பல் வகைக்குப் பலம் நாலு, சதுரக்கள்ளிச் சாறும், அவுரிச்சாறும் வகைக்குப் படி இரண்டு, இவை எல்லாம் ஒன்ருய்க் கரைத்து இதில் அரப்பொடி பலம் ஐந்து, காந்தம், திரிகடுகு, திரிபலை, ஓமம், கருஞ்சீரகம், நற்சீரகம், சிவதைவேர், கடுகுரோகணி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திர மூலம், மஞ்சள், மரமஞ்சள், வெட்டாலையரிசி, வாலுளுவையரிசி இவைகளை வகைக்குப் பலம் ஒன்று சூரணித்துக் கூட்டி காய்ந்து பதமானவுடன் தேன் படி இரண்டு, நெய் படி ஒன்று சேர்த்துக் கிண்டி எடுத்து அதில் மூன்று கழஞ்சு வீதம் கொள்ள, விஷபாண்டு, பித்தபாண்டு, வாதபாண்டு, குன்ம பாண்டு, காமாலை, சோகை, வீக்கம், மஞ்சட்காமாலை எல்லாம் தீரும். பத்தியம் காக்கவும்.

## தாளிசப்பத்திரி வடகம்

தாளிசப்பத்திரி, திப்பிலி, திப்பிலிமூலம் இவை வகைக்குப் பலம் இரண்டு, மிளகு; செவ்வியம், சுக்கு, கடுக்காய், தான்றிக் காய், நெல்லிவற்றல், ஏலம், லவங்கம், லவங்கப்பத்திரி, நாக கேசரம், இலாமிச்சம்வேர் இவை வகைக்குப் பலம் ஒன்று சூரணித்த அளவிற்கு மூன்று பங்கு பழைய சர்க்கரை சேர்த்துப் பிசைந்து, புதுப்பாண்டத்தில் இரண்டு படி பசுவின் பால் விட்டு வேடுகட்டி மேற்படி மருந்தை வைத்து, மேல் சட்டிமூடி அவித்து பிட்டுப்பதமான பின்பு தான்றியளவாக உருட்டி, ஒரு உண்டை காலை மாலை கொடுக்க வாயுவாதம், கிராணி, இருமல், சத்தி, அரோசகம் எல்லாம் தீரும்.

## வாந்தி பேதிக்கு

ஒரு விராகனிடை அபினியை வாழைப்பிஞ்சுக்குள் வைத்துச் சுட்டுக்கொடுக்கவும். குலைநோய் உண்டாளுல் தயிர்,



மோர் கொடுக்கவும். இதில் நிற்காமல் பேதி அதிகமாளுல் ஒரு விராகனிடை பெருங்காயத்தை வெற்றிலைக்குள் வைத்துக் கொடுக்கவும். வாந்தி அதிகமாளுல் இரசசெந்தூரத்தை முலைப் பாலில் உரைத்துக் கொடுக்கவும். வாந்தி பேதி நிற்கும்.

## வெள்ளை விழுதலுக்கு

நீர்ப்பூண்டு பலம் நாலு, வெந்தயம் பலம் இரண்டு, கலைக் கொம்பு, சீரகம், பனங்கற்கண்டு இவைகள் வகைக்குப் பலம் எட்டு சூரணித்து விளக்கெண்ணெய் விட்டு மூன்று நாள் சூரியபுடம் வைத்துக்கொள்ள, வெள்ளை, இரத்தம், நீர்கடுப்பு முதலியவை தீரும்.

## தாளிசபத்திரி குளிகை

சுக்கு, மிளகு, திப்பிலி, அதிமதுரம், செவ்வியம், இலவங்கம், சாதிக்காய், கோஷ்டம், கிராம்பு, ஏலம், நற்சீரகம் இவை வகைக்கு விராகன் ஒன்று, தாளிசபத்திரி விராகன் பத்து, சீனி சர்க்கரை விராகன் பத்து, இவைகளைச் சூரணித்துக் கலந்து பசுவின்பாலில் பிட்டுக்கட்டி வேகவைத்து கழற்சிக்காயளவு குளிகைசெய்து கொள்ளவும். வாயு, நாவறட்சி, தண்ணீர்த் தாகம், மூர்ச்சை, மயக்கம், சத்தி, வெள்ளேக்காளம், இளைப்பு, உப்பிசம், அசிரணவாயு, மூலவாயு, கிராணி, கீழ்க்கிராணி இவை தீரும். பத்தியம் காக்கவும்.

## சந்தளுதி சூரணம்

மிலாக்காய், சந்தனம், அதிமதுரம், நாயுருவியரிசி, சிறு சீரகம், இலாமிச்சம்வேர், முள்வள்ளிக்கிழங்கு, கோஷ்டம், செங்கழுநீர்க்கிழங்கு, மாதுளையோடு, மஞ்சள், மரமஞ்சள், சாதிக்காய், பேய்ப்பீர்க்கு, தக்கோலம், தேற்ரும்விதை, கொன்றைவிதை, நெருஞ்சிவேர், நிலப்பனைக்கிழங்கு, அத்திப் பட்டை, அருகின்வேர், குங்குமப்பூ, அரசம்பட்டை, ஆலம் பட்டை, இத்திப்பட்டை, உழுந்து இவைகளை உலர்த்திச் சூரணித்த இடைக்கிடை சீனிகூட்டிக் கலந்து வெருகடியளவு, தேன், நெய், வெண்ணெய் இவைகளில் ஏதேனும் ஒன்றில் இரண்டு நேரங்கொள்ள, கைகாலெரிவு, மேகரோகங்கள், வெகுமூத்திரம், தாகம், இரத்தபித்தம், கற்ருழை நாற்றம்,

குட்டம், கல்லடைப்பு, பெரும்பாடு, பிரமை முதலியவைகள் தீரும். பத்தியம் காக்கவும்.

## முயல் நெய்

ஆடாதொடை துலாம் ஒன்று இடித்து, நாலு மரக்கால் நீரிலிட்டு நாலொன்ருய்க் காய்ச்சி வடித்து, அதில் ஒரு முயலை உயிருடனே பிடித்து உரித்து, கால், குடல், தலை இவை நீக்கிச் சதையைக் கொத்தி, பதக்குநீரிலிட்டு நாலொன்ருய்க் காய்ச்சி மேற்படி கஷாயத்துடன் சேர்த்து, அதில் தேவதாரம், இந்துப்பு, கற்கடகசிங்கி, சிறுதேக்கு, இலவங்கம், காக்கோளி, பாற்கோளி, அசமதாகம், சுக்கு, மிளகு, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், பெருங்குரும்பை, நற்சீரகம் இவைகள் வகைக்குக் கழஞ்சி இரண்டு, அரைத்துக் கலக்கி பசுவின்நெய் படி இரண்டு, விட்டுக்காய்ச்சி, மெழுகுபதத்தில் நெய்யை வடித்து எடுத்து அதில் மூன்று கழஞ்சு வீதம் கொள்ள, இளைப்பு, காசம், ஈளை, இருமல், முதலியன தீரும்.

**வேறு** :—முயலையுரித்து, கால், குடல், தலை இவைகளை நீக்கி, உரலிலிடித்துக் குருணி நீர்விட்டு நாலொன்ருய்க் காய்ச்சி அதில், ஆடாதொடைச்சாறு, பசுவின்பால், நெய் இவைகள் வகைக்குப் படி ஒன்று சேர்த்து, அத்துடன் தேவதாரம், வாய்விளங்கம், அமுக்கராவேர், முத்தக்காசு, மஞ்சள், சர்க்கரைக்கிழங்கு, முந்திரிப்பழம், கற்கடகசிங்கி, சிறுதேக்கு, திரிகடுகு, தண்ணீர் விட்டான்கிழங்கு, அதிமதுரம் இவைகளை வகைக்கு விராகன் மூன்று சூரணித்துப் போட்டுக் காய்ச்சிக் கடுகு பதத்திலிறக்கி, சர்க்கரை வீசை நான்கு கூட்டிக் கொள்ளவும். இதில் மூன்று கழஞ்சு அளவு காலை மாலை கொடுக்க, தாகசுரம், இரத்தபித்தம், உப்பிசம், ஈளை, இருமல், அஸ்திசுரம் எல்லாம் தீரும்.

## ஈளை இருமலுக்கு

பொன்னரிதாரமும், சாதிக்காயும் வகைக்கு விராகன் மூன்று, கொண்டு முலைப்பால் விட்டரைத்து வெள்ளைச்சீலையில் தடவி திரிசெய்து நிழலிலுலர்த்தி, விளக்கில் கொளுத்திப் புகை பிடிக்க வும். பத்தியம்: மோருஞ்சோறும் உண்டு வரவும். மூன்று நாள் பிடிக்கவும். பின்பு விளக்கெண்ணெய் தேய்த்து முழுக வும். ஈளை, இருமல், உப்பிசம், கோழைக்கட்டு இவை தீரும்.



## வறட்சி இருமலுக்கு

சுக்கு, திப்பிலி, மிளகு இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை இளவறுப்பாக வறுத்துச் சூரணித்து, வெள்ளாட்டுப்பாலில் மூன்று நாட்கொள்ள, வறட்சி, இருமல் தீரும்.

வேறு :-கடுக்காய்ப்பூ, கடுக்காய், திப்பிலி, ஆடாதொடையிலை இவைகளை வகைக்கு விராகன் ஒன்றை வறுத்துச் சூரணித்துச் சரியிடை சீனி சேர்த்து மூன்று நாள் கொள்ளவும். புகைச்சல், வறட்சி இவை தீரும்.

## வறட்டிருமல், குத்திருமல், இவைகளுக்கு

சிந்தில்தண்டு, ஓமம், கடுக்காய் இவை வகைக்குப் பலம் இரண்டைச் சூரணித்து, அதில் ஓர் கழஞ்சு நெய் சேர்த்து லேகியம் செய்து மூன்று நாள் கொள்ளக் குத்திருமல், வறட்சி இவை தீரும்.

## விஷமுஷ்டித் தைலம்

எட்டிப்பழம், எருக்கிலைசமூலம், முருங்கையிலை, எலுமிச்சம் பழம், ஊமத்தையிலை, மாவிலிங்கஇலை, நொச்சியிலை, கள்ளி, அமுக்கருசமூலம், வாதமடக்கி, புளியிலை, நிலவாகை, வாகை யிலை, இஞ்சி, இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்று, நல் லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண் ணெய், இலுப்பெண்ணெய், பசுவின்நெய், வெள்ளாட்டுப்பால் இவை வகைக்குப் படி ஒன்று, எட்டிவிதை பலம் இரண்டு, வெள்ளுள்ளி, தேவதாரம், அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், இந்துப்பு, கொடிவேலி, அசமதாகம், திப்பிலி, திப்பிலிமூலம், சந்தனம், ஏலம், கிராம்பு, லவங்கப்பட்டை, மருக்கரைவேர், புலிதுடக்கிவேர், தகரைவேர், தகரைவிதை, கச்சோலம், அரத்தை இவை வகைக்கு விராகன் ஒன்று. இவைகளை அரைத்துக் கரைத்துக் காய்ச்சி, மெழுகுபதம் வரும்போது குழலாதண்டம் பட்டை வீசை ஆறை சூரணித்துப்போட்டு வடித்து, ஒரு காசிடை கொண்டு மேலுக்குப் பூச, திமிர்வாதம், பக்கவாதம், பாரிசவாயு, அழற்சிவாதம், தோள்வாதம், வாயுக்குத்து, கை கால் முடக்கம், முகச்சாய்ப்பு, கழுத்திழுப்பு முதலிய வாதம் எண்பதும் தீரும். பத்தியம் : உப்பு, புளி நீக்கவும். இவ்வெண் ணெயை வெதுப்பிப் பிரயோகிக்க தேகயெரிவும் தீரும்.

## மகாவிஷமுஷ்டித் தைலம்

நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், விளக்கெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய் இவை வகைக்குப் படி ஒன்று, பசுவின் பால் படி ஐந்து. ஆமணக்கிலை, சித்திரமூலஇலை, அமுக்கராயிலை, எருக்கிலை, புங்கிலை, நொச்சியிலை, வாதமடக்கி, ஊமத்தை, பிரண்டை, கழற்சி, ஆடாதொடை, பெருங்குமிழ்யிலை, கடம்பையிலை, பற்படாகம், பேய்ப்பீர்க்கு, கண்டங்கத்திரி, சீதாச்செங்கழுநீர், காந்தாரியிலை, நல்லவேளை, சிற்றாமுட்டி, பேராமுட்டி, முருங்கை, காட்டுமுருங்கை இவைகளின் சாறு வகைக்குப் படி இரண்டு, சிற்றாமுட்டிவேர், பேராமுட்டி, ஆமணக்கு, ஆடாதொடை, கொன்றை, அகாமவேர், புனல்முருங்கை, உளர்முருங்கை, வெள்வேல், நஞ்சுண்டான், பெருமரப்பட்டை, செங்கத்தாரி, சங்கு, வெள்ளெருக்கு, கோங்கு, சாரணை, மாகாளி, சீந்தில் இவைகளின் வேர் வகைக்குப் பலம் இரண்டு இவற்றை நறுக்கி இரண்டு தூணி நீரிலிட்டு ஒரு தூணியாகக் காய்ச்சி, வடித்து, முன் எண்ணெய்களையும் சாறுகளையும் சேர்த்து மூன்று நாள் சூரியபுடம் வைத்துப் பின் திரிகடுகு, திரிபலை, பெருங்காயம், கொடிவேலிவேர், வசம்பு, அரத்தை, கடுகு, புங்கம்விதை, அதிமதுரம், அதிவிடையம், கார்போகரிசி, முருக்கம்வேர், முருங்கைவேர், சீந்தில்வேர், கஸ்தூரிமஞ்சள், நற்சீரகம், களாப்பருப்பு, லவங்கைப்பட்டை, வெட்பாலையரிசி, வாலுளுவையரிசி இவைகள் வகைகருப் பலம் எட்டு சூரணித்துப் போட்டு, கள்ளிப்பால், சதுரக்கள்ளிப்பால், திருகுகள்ளிப்பால், எருக்கலம்பால், புங்கம்பால், கரிசல்கொட்டைப்பால், காட்டுக்கொட்டைப்பால் இவைகள் வகைக்குப் படி இரண்டு, சேர்த்துக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து ஒரு காசிடையுண்டு, மேலுக்குப்பூச, சர்வாங்கவாதம், வாயு, கீல்வாதம், கெண்டைவாதம், குதிக்கால்வாதம், முழங்கால்வாதம், சந்துவாதம், கபாலவாதம், மண்டைவாதம், இடுப்புவாதம், குடுவைவாதம், தோள்வாதம், பாரிசவாதம், விரைவாதம், நேத்திரவாதம், விறணைவாதம், நாக்குவாதம், முடக்குவாதம், பிடிவாதம், திமிர்வாதம், வாதக்கரப்பான், பிடிப்பு முதலிய வாதம் எண்பதும் தீரும். புளியும், புகையும் நீக்கவும். வச்சிரதேகமாகும்.



## இலகு பஞ்சாக்கினி தைலம்

நல்லெண்ணெய் படி நாலும், எருக்கஞ் சாறு படி ஒன்றும் சேர்த்து, நிலவாகைவேர், சித்திரமூலவேர், சாரணைவேர், அமுக்கராவேர், நொச்சிவேர், ஆதண்டம்வேர், முருங்கைவேர், இலுப்பைவேர், இந்துப்பு, கடுகு, ஏலம், திப்பிலி, செங்கழுநீர்ப்பூ, கோஷ்டம், கஸ்தூரிமஞ்சள் இவைகள் வகைக்கு விராகன் நான்கை சூரணித்துப் போட்டுக் காய்ச்சி, மெழுகுபதத்தில் வடித்து எடுக்கவும். இந்த எண்ணெயைக் கொண்டு உடலில் பூசிப்பிடிக்க சர்வாங்கவாதமும், வாயுக்களும், முடக்குவாதங்களும், குத்துவலிகளும் தீரும்.

## சந்திரகாந்தத் தைலம்

ஆமணக்கு, முற்றிய எருக்கு, சித்திரமூலம், அமுக்கிரு, புங்கு, நொச்சி, பருத்தி, சுண்டை, கணுமூங்கில், மயூரசிகை, சங்கு, ஊமத்தை, பிரண்டை, கழற்சி, வாதமடக்கி, ஆடாதொடை, மருதாணி, பேய்ப்பீர்க்கு, பெருங்குமிழ், சிற்றகத்தி, புரசு, பற்படாகம், தாழை, கொட்டி, பீர்க்கு, கண்டங்கத்திரி, சிற்றாமுட்டி, பேய்க்கும்மட்டி, வாகை கருவாகை, தேள்கொடுக்கு, முருங்கை, காட்டுமுருங்கை, நாய்வேளை, வேல், வேங்கை, சதுரக்கள்ளி, கொடிக்கள்ளி இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்றும், நல்லெண்ணெய், கள்ளிப்பால் இவை வகைக்குப் படி நான்கும் சேர்த்து : திரிகடுகு, திரிபலை, பெருங்காயம், சித்திரமூலம், வசம்பு, சணப்பு, மஞ்சள், பஞ்சலவணம், புங்கம்வேர், அதிமதுரம், ஆயில்பட்டை, உகாய்ப்பட்டை, மலையுகாப்பட்டை, சதகுப்பை, முருங்கைவேர், காட்டுமுருங்கைவேர், சீந்தில்கொடி, பேய்முசுட்டை, நற்சீரகம், கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை இவை வகைக்கு விராகன் நான்கைச் சூரணித்திட்டு மெழுகுபதமாகக் காய்ச்சி வடித்து, மேலே தடவிப் பிடிக்க, நாக்குவாதம், சந்துவாதம், தனுர்வாதம், சிரக்கம்பவாதம், மண்டைவாதம், இடுப்புவாதம், அந்தரவாதம், கிராணிவாதம், தசைவாதம், திருகுவாதம் இலிங்கசூலை, யோனிச்சூலை, நாபிச்சூலை, ஆசனச்சூலை, முடக்குச்சூலை, நாரிச்சூலை, நாய்ச்சூலை இவை தீரும். பத்தியம் : கைப்பும், புளிப்பும் நீக்கவும். அபத்தியம் கூடாது.

## நெல்லிக்காயெண்ணெய்

நெல்லிக்காய்ச்சாறு, கரிப்பான்சாறு, பசுவின்பால், நல்லெண்ணெய் இவைகள் வகைக்குப் படி ஒன்று, சேர்த்து அதில், அதிமதுரம் பலம் கால், ஏலம், சண்பகப்பூ, இருவேலிவேர், இலாமிச்சம்வேர் இவை வகைக்குப் பலம் இரண்டு கொண்டு பாலில் அரைத்துக் கலந்து, மெழுகுபதத்தில் இறக்கி, தலைமுழுகி வர நேத்திரரோகங்கள், மண்டை வியாதிகள், பித்தரோகங்கள், வாதரோகங்கள் முதலியன தீரும்.

## எமதண்ட தைலம்

சிறுசெருப்படை, வாதமடக்கி, நார்க்கரந்தை, வீழி, முருக்கு, முடக்கொத்தான், முத்தெருக்கன்செவி, வேலிப்பருத்தி, சங்கங்குப்பி, நன்னாரிவேர், செந்தொட்டிவேர், பொடுதலை, தூதுவளை, நஞ்சுத்தரா, மிளகரணைவேர், வில்வவேர், கொடிவேலிவேர், கள்ளிவேர், புங்கு, முடக்கொத்தான், வேம்பு, முழக்குந்து, வேலிப்பருத்தி இவைகள் வகைக்கு விராகன் ஐந்து, மேற்கூறியவைகளின் இலைகளின் சாறு படி பதினாறு கொண்டு வேர்களைச் சாற்றில் அரைத்துக் கலக்கி அத்துடன் ஒரு சேர் குங்கிலியம், நேர்வாளவிதை நூறு, கள்ளிப்பால் உழக்கு, வெற்றிலைச்சாறு படி ஒன்று, கலந்து அதில் திரிகடுகு, ஓமம், கருஞ்சீரகம், அரத்தை, தேவதாரம், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், ஏலம், இலவங்கம், சாதிக்காய், வெள்ளுள்ளி, இந்துப்பு இவை வகைக்கு விராகன் மூன்றைச் சூரணித்திட்டு, நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய் இவை வகைக்குப் படி ஒன்றாகக் கலந்து மூன்று நாள் சூரியபுடம் வைத்துப் பின்பு, அடுப்பிலிட்டுக் காய்ச்சி, மெழுகுபதத்தில் வடித்து, ஒரு காசிடை கொடுத்து ஒன்று விட்டொருநாள் மேலும் தடவிப் பிடிக்க, வாதம் எண்பதும், சன்னி வகைகளும் தீரும்.

## நாரிகேள தைலம்

தேங்காய்ப்பால், விளக்கெண்ணெய், ஊமத்திலைச்சாறு இவை வகைக்குப் படி ஒன்று, அத்துடன் கள்ளிப்பால் படி கால் கலந்து, மூன்று நாள் சூரியபுடம் வைத்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து, ஒரு காசிடை உள்ளுக்குக் கொடுத்து, மேலுக்கும் பூசிப்பிடிக்க, முகுவாதம், விசிவாதம், தனுர்வாதம்,



குதிகால்வாதம், மூச்சுவாதம், கரட்டுவாதம், சன்னி, பித்தம் எல்லாந் தீரும்.

## வாத நோய்களுக்கு

நொச்சி, வாதமடக்கி, வேம்பு, கஞ்சா, கஞ்சாங்கோரை, எருக்கு, முள்ளி, தொட்டி, மலைகடம்பு, முடக்கொத்தான், மேனி, மருட்படை, குன்றி இவைகளின் இலைகளை வேகவைத்து வேது பிடிக்க சகல வாத நோய்களும் தீரும்.

## சுருளித் தைலம்

எருக்கலம்பால், நொச்சியிலை, புளியிலை, ஆலியிலை, நீர்முள்ளி இவற்றின் சாறு, பிரமிச்சாறு, பொடுதலைச்சாறு, வேளையிலைச்சாறு, மேனியிலைச்சாறு இவைகள் வகைக்குப் படி ஒன்று, நல்லெண்ணெய் படி நாலு, இவற்றைச் சேர்த்து, மூன்று நாள் சூரியபுடம் வைத்துக் காய்ச்சி இறக்கும்போது: சுக்கு, திப்பிலி, மிளகு, கடுகுரோகணி, அரத்தை, செம்பைவிதை, சீகைவிதை இவைகளை வறுத்துப் பொடித்துப் போட்டு இறக்கவும். இதனை மேல்தடவி சிரசில் தேய்க்க, முடக்குவாதம், கரட்டுவாதம் முதலிய சகலவாத நோய்களும் தீரும்.

## இந்திராணித் தைலம்

நொச்சி, பேய்ப்புடல், ஆடாதொடை, சாரணைவேர், வேலிப்பருத்தி இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்றும், நல்லெண்ணெய் படி ஒன்றும், கலந்து அதில் திரிகடுகு, திரிபலை, கடுகுரோகணி, மஞ்சிட்டி, மரமஞ்சள், ஓமம், வெங்காரம், அரத்தை, கருஞ்சீரகம், கார்போகரிசி, முசுறுமுட்டை, பூநாகம், வெள்ளுள்ளி, வெளிச்சிப்பிசின், இந்துப்பு இவை வகைக்கு கழஞ்சு இரண்டை அரைத்துக் கலந்து, காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, மூன்று கழஞ்சி வீதம் கொள்ள, சன்னி, முகசன்னி, குளிர்சன்னி, எரிசன்னி, திமிர்சன்னி முதலிய சன்னி ரோகங்களும், வாதரோகங்களும் தீரும். பத்தியம்: புளி, உப்பு, புகை இவை நீக்கவும்.

## செங்கத்தாரி எண்ணெய்

செங்கத்தாரிப்பட்டை, புங்கம்பட்டை, தூதுவளைவேர், செம்முள்ளிவேர், கோவைவேர், சங்கங்குப்பிவேர், குழிமிட்டான்வேர், குட்டித்தக்காளிவேர், சங்கம்வேர், நிலவாகை

சமூலம், நற்சீரகம், கோஷ்டம், திப்பிலி, சென்கைரப்பழம், வெளிச்சிப்பிசின், ஏலம், இலவங்கம், செஞ்சந்தனம், பூலாங் கிழங்கு, மெருகங்கிழங்கு, வசம்பு, வெள்ளுள்ளி இவைகள் வகைக்கு விராகனிடை ஐந்து, விதை நீக்கிய கடுக்காய் விராக னிடை முப்பது இவைகளைச் சூரணித்து இரண்டு படி சிற்று மணக்கெண்ணெயிலிட்டுப் பிசைந்து மூன்று நாள் சூரியபுடம் வைத்து ஒரு கரண்டி வீதம் கொடுக்கக் கரப்பான், பதினெட்டு கிரந்தி முதலியவை தீரும். குழந்தைகளுக்கு காசிடை கொடுக்கவும்.

## அண்ட தைலம்

கோழிமுட்டைக் கருத்தைலம், நீர்ப்பூண்டு, ஓரளிப்பூண்டு இவைகள் சாறு படி ஒன்று, வசம்பு, ஓமம், கடுகு, திப்பிலி, சாரணைவேர், வலம்புரிக்காய், சிறுகீரைவேர், கசகசா, கரு வாட்டுத்தலை, முருங்கப்பட்டை, குப்பைமேனிவேர், நில வாகைவேர் இவை வகைக்குப் பலம் இரண்டு சூரணித்து மேற்படி கோழிமுட்டை மஞ்சள் கருதைலமும், வேப்பெண் ணெயும் வகைக்கு ஆழாக்கு, நீர்ப்பூண்டென்ற ஈரவெங்காயச் சாறும், ஓரளிப்பூண்டென்ற வெள்ளுள்ளிச்சாறும் கலந்து அதில் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து இரண்டு காசிடை உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசிப் பிடிக்க சகல சன்னிகளும், பயித்திய ரோகங்களும் தீரும். பத்தியம் காக்கவும்.

## ஆடாதொடைத் தைலம்

ஆடாதொடை, வாதமடக்கி, எருக்கம்பழுப்பு, குப்பை மேனி, முடக்கொற்றான், கஞ்சத்தரா, வேலிப்பருத்தி, பங்கம் பாலை இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்று, திரிகடுகு, மர மஞ்சள், அரத்தை, வசம்பு, ஓரளிப்பூண்டென்ற ஒரு கொட்டை வெள்ளைப்பூண்டு, பெருங்காயம், வெண்காரம், இலுப்பைப்பூ, பெருங்குரும்பை, கடுகு, ஓமம், மருக்காரைவேர், சிறுபூளைவேர், நீர்மேல்நெருப்புவேர் இவை வகைக்கு விராகன் மூன்று, வேப் பெண்ணெய், விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், புங்கெண் ணெய், இலுப்பெண்ணெய் இவைகள் வகைக்குப் படி ஒன் றாகக் கலந்து மேற்படி வேர் வகைகளைச் சூரணித்துக் கூட்டிக் காய்ச்சி, மெழுகுபதத்தில் வடித்துக் காசிடை உள்ளுக்கு கொடுத்தும்; மேலுக்கு துவளையிட்டும் வர, முகசன்னி, சீதள



சன்னி, வாதசன்னி, பித்தசன்னி, பையித்தியசன்னி முதலியவை தீரும். பத்தியம் காக்கவும்.

## பயோதர தைலம்

வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், புங்கெண்ணெய், விளக் கெண்ணெய், இலுப்பெண்ணெய், எருக்கம்பால், திருகுகள்ளிப் பால், சதுரக்கள்ளிப்பால், புங்கம்பால், ஆயில்பட்டைச்சாறு இவை வகைக்குப் படி ஒன்று சேர்த்து நொச்சிவேர், நிலக்குமிழ் வேர், எருக்கம்விழுதிவேர், ஆடாதொடைவேர், வாதமடக்கிவேர், அழிஞ்சிவேர், சாரணைவேர், வேலிப்பருத்திவேர், வேளைவேர், நாய்வேளைவேர், கொடிவேலிவேர், சிறுகளாவேர், எட்டிப்பழம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, இவைகளைச் சிதைத்து ஐந்து மரக்கால் நீர் சேர்த்து ஐந்து படியாக வற்றக்காய்ச்சி அதில் சாதிலிங்கம், துத்தம், துரிசு, மனோசிலை, கோஷ்டம், செங்கழுநீர்க்கிழங்கு, சுக்கு, நாபி, தாமரைவளையம், மரமஞ்சள், வெட்பாலையரிசி, திப்பிலி, கடுகுரோகணி, கம்பிளிப்பிசின், வெளிச்சிப்பிசின் இவை வகைக்குப் பலம் ஒன்று சூரணித்திட்டு எருக்கம்பாலும், குப்பைமேனிச்சாறும் விட்டு அரைத்து மேற் படி எண்ணெயில் கலக்கிக் காய்ச்சி பக்குவமாக வரும்போது, பச்சைப்பாம்பு, இந்திரகோபப்பூச்சி இவை வகைக்குப் படி ஒன்று இடித்துப் போட்டு ஒரு கொதி வந்தபின் வடித்து அதில் ஒரு கரண்டி வெதுப்பி நரம்புத்தாரைகளில் தடவியும், உள்ளங் கால் பிடரிகளிலும் தடவிப்பிடிக்க, முகசன்னி, குளிர்சன்னி, தாபசன்னி, சோபசன்னி, கர்ணிகசன்னி, விச்சின்னசன்னி, தள்ளுசன்னி, பிரவீச்சு முதலியன தீரும். கைகண்டது.

## வாத சுரத்திற்கு

வாதமடக்கிவேர், ஆமணக்குவேர், ஓமம், கொத்தமல்லி, சுக்கு, சிறுசெருப்படை, சித்திரமூலம் இவைகள் வகைக்குப் பலம் கால், கொண்டு சிதைத்து மூன்று படி நீரிலிட்டு முக்கால் படியாகக் காய்ச்சி, ஆறு நேரம் கொடுக்க, வாதசுரம் தீரும். வெந்நீர், சோறு, புளி, புகை இவைகளை நீக்கவும்.

வேறு:—இலந்தைவேர், முள்ளிவேர், பேராமுட்டிவேர், கடுக்காய், சுக்கு, கொத்தமல்லி இவற்றைக் குடிநீரிட்டுக் கொடுக்கவும் தீரும்.

**வேறு** :—வேலிப்பருத்திவேர், வாதமடக்கிவேர், திரிபலை, சுக்கு, விஷ்ணுகரந்தை, நீலிவேர் இவைகளைச் சரிகூட்டிக் கஷாயமிட்டுத் திப்பிலிப் பொடியும் சேர்த்து கொள்ளவும் தீரும்.

**வேறு** :—ஆலம்விழுது, வெட்டிவேர், மரமஞ்சள், நீலிவேர், வாதமடக்கிவேர், சுக்கு இவைகளைச் சரிகூட்டிக் கஷாயமிட்டுக் கொள்ளவும்தீரும்.

## பித்த சுரத்திற்கு

கருநாயுருவிவேர், வெட்டிவேர், 'பேராமுட்டிவேர், சீந்திற்றண்டு, சிற்ருமுட்டிவேர் இவைகள் வகைக்கு ஒரு பிடியும் சுக்கு சீரகம், உள்ளி, முத்தக்காசு, கால்பலமும் கூட்டி முறைப்படி குடிநீரிட்டு உண்ணவும்.

**வேறு** :—பூனைக்காலிவேர், அதிமதுரம், முத்தக்காசு, சுக்கு, கொத்தமல்லி, அரத்தை, சதகுப்பை, வெட்டிவேர் இவைகளை ஓர் அளவாகக் கொண்டு முறைப்படி கஷாயமிட்டுக் கொள்ளத் தீரும்.

**வேறு** :—தூதுவளைசமூலம், சீந்தில்தண்டு, சடாமாஞ்சி, பாசிப்பயறு, சுக்கு, முத்தக்காசு, சிற்ருமுட்டி, அதிமதுரம் இவற்றை விதிப்படி குடிநீரிட்டுக் கொள்ளவும் தீரும்.

## சீத சுரத்திற்கு

ஆடாதொடையீர்க்கு, *முப்புரமெரித்தான்வேர், முள்ளிவேர், செம்முள்ளிவேர், சுக்கு, திப்பிலி இவற்றை நீரிலிட்டு எட்டொன்ருய்க் காய்ச்சி, தேன் விட்டுக் கொள்ளத் தீரும்.

**வேறு** —தூதுவளைசமூலம், முள்ளிவேர், கடுகுரோகணி, விஷ்ணுகரந்தை இவற்றைக் கஷாயமிட்டுத் தேன் சேர்த்துக் கொள்ளவும் தீரும்.

**வேறு** :-பேய்ப்புடல், கடுக்காய், நெல்லிமுள்ளி, உத்தாமணிவேர், கண்டங்கத்திரிவேர், கடுகுரோகணி, ஆடாதொடை, மரமஞ்சள், சுக்கு, செம்முள்ளிவேர், வாகைவேர் இவற்றின் எடைக்கு எட்டு பங்கு நீரிட்டு எட்டொன்ருய்க் காய்ச்சி வடித்து அதில் தக்க அளவு கொண்டு தேன் கூட்டிக் கொள்ளவும் தீரும்.

---

* சிவனார்வேம்பு, தும்பைவேர் இவ்விரண்டினையும் குறிக்கும்.



## வாத பித்த சுரத்திற்கு

சங்கு, வசம்பு, சுக்கு, தூதுவளை, வெட்டிவேர், செங்கொட்டிவேர், கொத்தமல்லி, நிலவேம்பு, முத்தக்காசு, பங்கம்பாளை, திரிபலை இவற்றைக் கொண்டு குடிநீரிட்டுத் தேன் சேர்த்து உண்ணவும்.

## தொந்த சுரத்திற்கு

சீந்தில்தண்டு, நிலவேம்பு, பேராமல்லி, சுக்கு, பேராமுட்டி, பரஞ்சோதிக் கடுக்காய், முத்தக்காசு இவைகளைக் கஷாயமிட்டுக் கொள்ளவும்.

## அசீரண சுரத்திற்கு

திரிகடுகு, திரிபலை, சிற்ருமல்லி, கடுகுரோகணி, சுக்கு, பேராமல்லி, சித்தாமுட்டி, பேராமுட்டி இவற்றைக் கஷாயமிட்டுக் கொள்ளவும்.

**வேறு** :—சுக்கு, மிளகு, செவியம், சித்திரமூலம், முத்தக்காசு, வசம்பு, கொத்தமல்லி, பேராமுட்டி, சிற்ருமுட்டி இவற்றைக் குடிநீர் வைத்துக் கொள்ளவும்.

## விஷ சுரத்திற்கு

சீந்தில்கொடி, கொளிஞ்சிவேர், நிலவேம்பு, விஷ்ணுகரந்தை திப்பிலி இவற்றைக் குடிநீர் வைத்துக் கொள்ளவும்.

**வேறு** :—பேராமுட்டி, பேய்ப்பீர்ககு, பேராமல்லி, சீந்தில், சுக்கு, கடுகுரோகணி, திப்பிலிமூலம், செவ்வியம், பற்படாகம், விஷ்ணுகரந்தை, நெல்லிமுள்ளி இவற்றைக் குடிநீர் வைத்துக் கொள்ளவும்.

## தோஷ சுரத்திற்கு

முத்தக்காசு, வில்வவேர், கொடிவேலிவேர், சிற்ருமல்லி, பேராமல்லி, சுக்கு, நொச்சியிலை, சங்கம்வேர் இவற்றை முறைப்படி கஷாயமிட்டு உண்ணவும்.

**வேறு** :—சித்திரமூலவேர், செங்கொட்டிவேர், செவ்வியம், சுக்கு, பற்படாகம், வாதமடக்கி, கையாந்தகரை இவற்றை முறைப்படி கஷாயமிட்டு உண்ணவும்.

**வேறு** :—பெருஞ்செருப்படை, வசம்பு, சுக்கு, பூசனிவேர், பேய்ப்புடல், முதியார் கூந்தல், கண்டங்கத்திரிவேர், சங்கம்வேர் இவற்றை முறைப்படி குடிநீர் வைத்து உண்ணவும்.

## சீத வாத சுரத்திற்கு

சீந்தில், பேராமுட்டி, சுக்கு, முத்தக்காசு, திப்பிலிமூலம், திப்பிலி, தூதுவளை, விஷ்ணுக்கரந்தை, கொத்தமல்லி, தேசாவாரம் இவற்றை விதிப்படி குடிநீர் செய்து கொள்ளவும்.

## வாத பித்த சிலேத்தும சுரத்திற்கு

ஆடாதொடைவேர், சித்திரமூலவேர், பேய்ப்புடல், சிற்றுமல்லி, பேராமல்லி, தூதுவளை, கண்டங்கத்திரி, சிற்றுமுட்டி, பேராமுட்டி, அசமதாகம், முதியார் கூந்தல், சுக்கு, மிளகு, திப்பிலி, தேசாவரம், திரிபலை இவைகளைச் சரியிடை கூட்டி எட்டு பங்கு நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சி வேண்டிய அளவு தேன் சேர்த்துக் கொள்ளத் திரிதோஷசுரமும் தீரும்.

வேறு :—முத்தக்காசு, பேய்ப்புடல், நிலவேம்பு, கண்டங்கத்திரி, ஆடாதொடை, தூதுவளை, சுக்கு, திப்பிலி, மிளகு இவற்றைக் குடிநீர் செய்து கொள்ளவும் தீரும்.

## சன்னிக்கு

அழிஞ்சிவேர், செவ்வியம், பேராமுட்டிவேர், சுக்கு, கொடிவேலிவேர், பூசனிவேர், வசம்பு, நன்னாரி கூத்தன்குதம்பை இவற்றைச் சரிகூட்டி இவற்றின் எடைக்கு எட்டு பங்கு நீர்விட்டு எட்டொன்றாகக் காய்ச்சிக் குடிநீர் வடித்துக் கொள்ளவும்.

வேறு :—பாதிரிவேர், அவுரிவேர், நொச்சிவேர், கொடிவேலிவேர், கையாந்தகரை, சுக்கு, திப்பிலி, காஞ்சொறிவேர், பேய்ப்புடல் இவற்றை ஓரளவாகக் கொண்டு முறைப்படி குடிநீர் செய்து கொள்ளவும்.

வேறு :—நெருஞ்சிவேர், நொச்சிவேர், கொடிவேலிவேர், சுக்கு, பேய்ப்புடல், மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம் இவற்றிற்கு தக்க அளவு நீர்கூட்டி எட்டொன்றாய்க் காய்ச்சிக் கொள்ளவும்.

வேறு :—வேப்பம்பட்டை, சங்கங்குப்பிவேர், உப்பிலிவேர், கொடிவேலிவேர், பற்படாகம், சுக்கு, வெள்ளுள்ளி இவற்றை முறைப்படி குடிநீர் செய்து கொள்ளவும்.

வேறு :—நொச்சி, முள்ளியிலை, கஞ்சாயிலை, திரிகடுகு இவற்றைக் குடிநீர் செய்து கொள்ளவும்.



வேறு :—திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், மிளகு, சுக்கு, கிராம்பு, கடுகு, பற்படாகம், சிறுதேக்கு, பேய்ப்புடல் இவற்றைக் குடிநீர் செய்து கொள்ளவும்.

வேறு :—கொடிவேலி, உத்தமதாளி, அவுரி, திப்பிலி, சுக்கு, குந்திருக்கம், செவ்வியம் இவற்றை விதிப்படி குடிநீர் செய்து கொள்ளச் சகல சன்னிகளும் தீரும்.

## அகத்தியர் குழம்பு

பெருங்காயம், இந்துப்பு, கடுகு, இரசம், வெண்காரம், மனோசிலை, அரிதாரம், திப்பிலி, கருஞ்சீரகம், தான்றிக்காய் இவைகள் வகைக்குப் கழஞ்சு ஒன்று, சுத்திசெய்த நேர்வாளம் விராகன் பத்து, இதில் ஐந்து விராகனிடையை வறுத்தும், மற்றது பச்சையாகவும் சேர்த்து, உத்தமதாளிச்சாறு விட்டு இரண்டு சாமமரைத்து, எருமைக்கொம்புச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்; சுக்குச்சூரணம் அல்லது சுக்குக் கஷாயத்தில் கொடுக்க வாயுவும், மிளகு நீரில் கொடுக்க சுரமும், கடுக்காயில் கொடுக்க இருமலும், உமிழ்நீரில் கலந்து பூசப் புண்களும், தாழைவிழுதுச்சாறும், பொரித்த வெண்காரமுங் கூட்டி அதில் கொடுக்க கல்லடைப்பும் தீரும். இன்னும் அநேக வியாதிகளுக்கும் அதற்குரிய அனுபானங்களிடத் தீரும்.

## கருங்கோழிச் சூரணம்

சங்கங்குப்பிச்சாறில் மூன்று முறை ஊறவைத்து நிழலிலுலர்த்திய பரங்கிப்பட்டை பலம் நாலு, அரிதாரம், கந்தகம், குக்கில், பொரிகாரம், சாதிலிங்கம், புரைக்காந்தம், மரமஞ்சள், ஏலம், இலவங்கம், கிராம்பு, சுக்கு, மிளகு, வால்மிளகு, கடுகு, சீரகம், துருசு, சிவதை, வாய்விளங்கம் இவைகள் வகைக்குப் பலம் கால் சூரணித்து; முட்டையிடும் பருவமுள்ள ஒரு கருங்கோழியின் குடல், மயிர், தலை இவைகளை நீக்கி, வயிற்றுக்குள், மேற்படி மருந்துகளை வைத்துத் தைத்து, பாண்டத்தில் நொச்சிச் சாறு, வேளைச்சாறு, பசுவின்பால் இவைகளை விட்டு, ஏடு கட்டி அதில் மேற்படி கோழியை வைத்து மேல்சட்டிமூடி ஏழு சீலை மண்செய்து, காலாக்கினியாக முப்பது நாழிகை எரித்து எடுத்து, ஆறியபின், எலும்புநீக்கி உலர்த்திச் சூரணித்து, புதுகலத்தில் வைத்துக் கொண்டு வெருகடியளவு கொள்ள, சூலை, படர்

தாமரை, கைகாலெரிவு, தடிப்புமூலம், பவுத்திரம், கிரந்தி, பிளவை, வாதம், குன்மம், நீராம்பல், நீரொழுக்கு, இடுப்புவலி, பிடிப்புவலி முதலியவை தீரும். வெந்நீரும், சோறும் பத்தியம்.

## வில்வாதி லேகியம்

மேற்றோல் போக்கிச்சீவியெடுத்த வில்லவேர் பலம் முப்பதை, தூணி நீரிலிட்டு நாலு படியாகக் காய்ச்சி அதில், வெட்டிவேர், இலாமிச்சம்வேர், சிற்றாமுட்டிவேர், பேராமுட்டி வேர், ஆடாதொடைவேர், தொட்டிவேர், சித்திரமூலவேர், கொடுப்பைவேர், சிறுதொட்டிவேர், குட்டிவிளாவேர், நில வாகைவேர், முன்னைவேர், சீந்தில்தண்டு, முத்தக்காசு, சாரணை வேர், வட்டிலாம்வேர், கீழ்க்காய் நெல்லிவேர், கீழ்க்காய் நெல்லியின்காய், கண்டங்கத்திரிவேர், வாகைவேர், நன்னாரிவேர், மூற்றிய முருங்கைவேர் இவைகள் வகைக்குப் பலம் இரண்டை நறுக்கி, இடித்துத் தூணி நீரிலிட்டு நாலு படியாகக் காய்ச்சி, மேற்படி கஷாயத்துடன் கூட்டி அத்துடன் இஞ்சிச்சாறு, ஆடாதொடைச்சாறு, கீழ்க்காய் நெல்லிச்சாறு, கரிப்பான்சாறு, கும்மட்டி, மாதுளம்பழச்சாறு இவைகள் வகைக்குப் படி ஒன்றைச் சேர்த்து இவைகளைக் காய்ச்சி குருணியளவான பின், பழைய சருக்கரை வீசை நான்கை கரைத்துக் காய்ச்சிப் பாகு பதத்தில், திப்பிலியும், செவ்வியமும் பலம் ஒன்று, மிளகு பலம் நாலு, சுக்கு பலம் மூன்று, நற்சீரகம், கொடிவேலிவேர், திப்பிலி மூலம் இவைகள் வகைக்குப் பலம் இரண்டு, தாளிசபத்திரி பலம் ஒன்று, இலவங்கம், ஏலம், நாகப்பூ, இலவங்கப்பத்திரி, கொத்தமல்லி, கடுகுரோகணி, மகிழம்விரை, பீதரோகணி, கச்சோலம், சிற்றரத்தை, வால்மிளகு, கிராம்பு, கோஷ்டம், சன்னலவங்கப்பட்டை இவைகள் வகைக்குப் பலம் கால், இவற்றை வெதுப்பிச் சூரணித்து, கம்பு வறுத்து இடித்த பொரிமாவு படி ஒன்று, பருத்திவிதைப்பருப்பு படி இரண்டு சூரணித்துச் சேர்த்துப் போட்டுக் கிண்டி மெழுகுபதத்தில் நெய் படி இரண்டு, தேன் படி ஒன்று இவற்றைச் சேர்த்துப் பிசைந்து பதினைந்து நாள் தானியபுடம் வைத்துப் புன்னைக்காயளவு கொள்ள, கிராணி, குன்மம் எட்டு, பாண்டுவாயு, இருமல், ஈளை, சயம், இரத்தகாசம், பித்தகாசம், சுவாசகாசம், பீனிசகாசம், வாந்தி, அரோசகம், நீரருகல், நீர்பாய்ச்சல், பித்தம் நாற்பது இவைகள் தீரும். தாதுபுஷ்டியும், தேகபுஷ்டியும் உண்டாகும்.



## இடிவல்லாதகி லேகியம்

சேராங்கொட்டையை மூக்குவெட்டி, கற்றாழை மடலுக்குள் வைத்துச் சுட்டெடுத்துப் பின்பு சாணிப்பாலில் போட்டு வேகவைத்து, அதன் பின்பு புளியிலைச்சாற்றில் வேகவைத்து சுத்திசெய்த செங்கொட்டை இருபது, திரிகடுகு, ஏலம், திப்பிலிமூலம், செவ்வியம், ஓமம், வாய்விளங்கம், கொத்தமல்லி, இலவங்கப்பட்டை, குராசாணியோமம், சாதிக் காய், சாதிப்பத்திரி இவைகள் வகைக்குப் பலம் இரண்டு சூரணித்து அத்துடன், எள் படி இரண்டு, பனைவெல்லம் பலம் மூன்று, சுக்கு, பலம் இரண்டு, நல்லெண்ணெய் படி கால் இவைகளைச் சேர்த்து, நன்றாய் இடித்து லேகியபதமாக வரும் போது எடுத்துப் பீங்கானிலிட்டுமூடி, ஒரு மாத காலமான பின், கழற்சியளவு அந்தி சந்தி கொள்ள, அந்தரவாயு, வாதம், சூலை, கிரந்தி, மாரடைப்பு, நெஞ்சுவலி, கைகால்வலி, திமிர் வாயு, பாரிசவாயு, தோல்தடிப்பு, புண்கள், வெடிசூலை, அரிப்பு, சொரி, தினவு, மேகநோய், வெண்குட்டம், கருங் குட்டம், ஊறல் இவை எல்லாம் தீரும். பத்தியம்: பசுவின் நெய், பால், துவரை, உப்பு, பனைவெல்லம் இவை கூட்டவும். தலை முழுகும்போது சுரையோட்டுச்சாம்பல் எண்ணெயிலிட்டு முழுகவும். மழைத் தண்ணீரும் பெண்போகமும் நீக்கவும்.

## கார்போக மெழுகு

கார்போகரிசி படி மூன்று, உதியம்பட்டைச்சூரணம் படி ஒன்று, அரப்பொடியும், மண்டூரப்பொடியும் வகைக்கு வீராகன் பத்து இவற்றைச் சூரணித்துக் கரிப்பான்சாறு படி பத்தோடு ஒரு பாண்டத்தில் சேர்த்து ஏடுகட்டி வெய்யலில் வைத்து, வற்றிய பின் மெழுகுபதத்தில் பிசைந்து, வைத்துக்கொண்டு சுண்டைக்காய்ப் பிரமாணம் தேனில் அந்தி சந்தி ஒரு மண்டலங் கொள்ள, வெண்குட்டம், கருங்குட்டம், வீக்கம், பாண்டு, சோகை இவை தீரும். பத்தியம் காக்கவும்.

## கற்பூராதி தைலம்

ஆரைச்சாறு, குமரிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, இளநீர், பசுவின் வெண்ணெய், எலுமிச்சம்பழச்சாறு, பசுவின்பால், கற்பூரவல்லிச்சாறு இவைகள் வகைக்குப் படி ஒன்று, தேவ தாரம், வெட்டிவேர், இலவங்கம், நாகப்பூ, கிளியூரல், மஞ்சள்,

செண்பகப்பூ, பாகல்வேர், பச்சிலை, வாலுளுவை, கற்கடகசிங்கி, விளாவரிசி, கஸ்தூரிமஞ்சள், சந்தனம், இலாமிச்சம்வேர், கிராம்பு, மரமஞ்சள், தான்றிக்காய், சீரகம், சிறுதேக்கு, குங்குமப்பூ இவைகள் வகைக்கு கழஞ்சு ஒன்று, இவைகளைப் பசுவின் பாலிலரைத்துப் போட்டு நல்லெண்ணெய் படி இரண்டு விட்டு ஒரு சாதி விறகாலெரித்து மெழுகுபதத்தில் வடித்துத் தலை முழுகிவர, மூக்குநீர்பாய்ச்சல், உளைதல், சீழ்விழுதல், நாசியடைப்பு, நாசியிரத்தம், மண்டைக்குத்து, ஒரு தலைவலி, பாரிசக்குத்து, மேகநீர்பாய்ச்சல், சிரசுக்கனம், தலைவலி, கண்ணோய், கண்சிவப்பு, கண்ணீர்வடிதல், பித்தம் நாற்பது, கண்ணோய் தொண்ணூறு, பீனிசம் ஆறு எல்லாம் தீரும்.

## காது நோய்க்கு

மூசுறுமுட்டை, பூஞுகம், நண்டிறைச்சி, வெள்ளுள்ளி, கோழிமுட்டை வெண்கரு, வசம்பு, சுக்கு, கடல்நுரை, வலம்புரிக்காய், அவுரிவேர், புங்கம்பட்டை இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்றைச் சிதைத்து, வேப்பெண்ணெய் படி கால் சேர்த்து மெழுகுபதமாகக் காய்ச்சிப் பின்பு வெதுப்பிக் காதிலிட்டு பஞ்சு கொண்டு அடைக்கவும். காதில் சீழ், குத்து, வலி, மந்தம், படுவன் முதலிய செவி ரோகங்கள் தீரும்.

## கெற்பிணிகள் சுரத்திற்கு

அதிமதுரம், நாவல்தளிர், மாந்தளிர், மாதுளந்தளிர், ஆலின் மொட்டு, சுக்கு இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை, நாழி நீரிலிட்டு எட்டொன்ருய்க் காய்ச்சி அரைக்கால் படி வீதம் மூன்று நேரம் கொள்ள, கெற்பிணிசுரம், தாகசுரம், ஆயாசம், சோபம், சோம்பல் முதலியவை தீரும்.

வேறு:—மாதுளைவேர், நற்சீரகம், சுக்கு, நன்னாரிவேர், நாய்வேளைவேர், வில்வவேர், மாந்தளிர், கொத்தமல்லி இவைகளைக் கஷாயமிட்டுக் கொடுக்கக் கெற்பஸ்திரீ சுரம் தீரும்.

## மகோதரத்திற்கு

துரிசு பொரித்தபொடி, தேற்றும்விதை காவிக்கல் இவைகள் வகைக்கு ஓர் எடை கொண்டு செப்புச்சட்டியிலிட்டு எலுமிச்சம்பழச்சாறு உழக்குக் கூட்டி அதில் பத்து காசம் கூடப்போட்டு ஒரு இரவு ஊறவைத்துக் காலையில் வடித்து



சாப்பிடப் பேதியாகும். அதிகமானுல் சுடு கஞ்சி கொடுக்கவும். நிற்காவிட்டால் மோருஞ்சோறும் உண்ணவும். நான்காம் நாள் வடக்கே போகிற செங்கம்வேரை அரைத்து எலுமிச்சங்காயளவு எடுத்து அத்துடன் விரை நீக்கிப் பொடித்த பத்து கடுக்காய் கூட்டி ஈனுக்கிடாரியின் கோசலம் படி இரண்டு கலந்து கொள்ளப் பேதியாகும். இவ்வாறு நான்கு நாளைக்கொரு தரம் மாற்றி மாற்றி முன் சொன்ன மருந்தும், பின் சொன்ன மருந்தும் இருபது முறை கொடுக்க மகோதரம் தீரும். பத்தியம்: ஆறு மாதத்திற்கு மாமிசம் நீக்கவும். கத்திரிக்காய், பாகல்காய், பன்றிக்கறி, நல்லெண்ணெய், கெண்டைமீன், புண்ணாக்கு இவற்றை ஒரு வருஷம் நீக்கவும். எண்பது நாளைக்கு அவ பத்தியம் நீக்கவும். விளக்கெண்ணெய், முருங்கக்காய், கீரை கீரைத்தண்டு, துவரம்பருப்பு இவைகள் கூட்டவும்.

[குறிப்பு:—இம்முறை இக்காலத்து மக்கள் உடல் நிலைக்கு ஒவ்வாது போல் தோன்றுகிறது. ஆதலின் இதனை வழங்குவது நன்றன்று.]

## கெற்ப விப்புருதிக்கு

கடுக்காய், மஞ்சள், இந்துப்பு, கடுகு, வெள்ளுள்ளி, வெங்காரம், ஆமணக்கின்வேர், நிலவாகைவேர் இவை வகைக்குப் பலம் இரண்டை இடித்து அரைத்து விளக்கெண்ணெயில் போட்டு வேகவைத்து ஒரு கரண்டி வீதம் கொள்ளத் தீரும். பத்தியம் காக்கவும்.

## சன்னி, விஷம், பேய் இவைக்கு

திருகுகள்ளிப்பாலைச் சீலையிலூட்டிச் சுரைக்காய், கந்தகம், நேர்வாளம், கஸ்தூரி இவற்றைப் பொடித்து அதில் வைத்துத் திரித்துப் புகை பிடிக்கவும்.

## பீனிச ரோகங்களுக்கு

சீந்தில்தண்டு, தூதுவளை, சிவனார்வேம்பு, நிலவேம்பு, பன்றிமோந்தான்கிழங்கு, நிலப்பனைக்கிழங்கு, பொன்னாங்காணி வேர், நிலக்குமிழ்வேர், சிற்றுமல்லிவேர், முத்தக்காசு இவைகளைப் பசுவின் பாலில், வேகவைத்து, உலர்த்திப் பொடித்து, நெய்யும், நல்லெண்ணெயும் வகைக்குப் படி இரண்டும் வேப்பம் பட்டைச்சாறு படி இரண்டும் சேர்த்து, சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், அதிமதுரம், வசம்பு, வெள்ளுள்ளி, கற்கடகசிங்கி,

ஏலம், கிராம்பு, வசுவாசி, கிளியூரல், தக்கோலம், குங்குமப்பூ, பச்சிலை, கச்சோலம், கருஞ்சீரகம், நற்சீரகம், கொத்தமல்லி, சடாமாஞ்சி, கடுகுரோகணி இவை வகைக்குக் கழஞ்சு ஒன்றைச் சூரணித்துப் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து. மூன்று கழஞ்சு வீதம் கொள்ள, சகல பிணிசமூந் தீரும்.

## சுக சன்னிக்கு

நாய்ச (தெனசு) மூன்று பிடித்து அவற்றின் தலை, கால் நீக்கி, வெற்றிலையில் வைத்து மூன்று நாள் கொடுத்தாலும். அல்லது எருக்கிலை மொக்கு மூன்று, கிராம்பு மூன்று அரைத்து உருட்டி மூன்று நாள் கொடுத்தாலும் தீரும்.

## சகல விஷத்திற்கும்

மருக்காரைக்காயை, நிழலிலுலர்த்தி வெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும்.

## சுரத்திற்கு

சுத்திசெய்த லிங்கமும், வெள்ளைப்பாஷாணமும் வகைக்கு விராகன் மூன்றைப் பாகலிலைச்சாற்றில் இரண்டு சாமமாட்டிப் பயறளவு குளிகைசெய்து. இஞ்சிச்சாற்றில் கொள்ள, குளிர் சுரமும், மிளகு கஷாயத்தில் கொள்ள வெரும் சுரமும் தீரும்.

## ஈரல்குலை வலிக்கு

பசுவின் வெண்ணெய், ஈரவெங்காயம், கருப்பட்டி இவை சமன்கூட்டி அரைத்து உண்ணத் தீரும்.

## மலசலக் கட்டுக்கு

பச்சாலை இடித்துப் பிழிந்த ரசத்துடன் கருப்புக்கட்டி சேர்த்துக் கொள்ளவும். கைகண்டது.

## மூத்திரக் கட்டுக்கு

தென்னை, பனை, கமுகு இவைகளின் இளம்வேர், எலிப் புழுக்கை, சிறுநெருஞ்சிமுள், வெள்ளரிவிதை இவற்றைச் சமன் கூட்டிக் காடியில் அரைத்து நாபியில் தேய்க்கவும்.

வேறு :—வெடியுப்பையும், வெண்காரத்தையும் பொரித்து, ஈருள்ளிச்சாற்றில் அல்லது வாழைக்கிழங்குச்சாற்றில் கொடுக்கவும். அல்லது மேற்படி இரண்டையும் அரைத்து இளநீரில் கொடுக்கவும்.



## சுரங்களுக்கு

ஆடாதொடை, பேய்ப்புடல், சீந்தில், பற்படாகம், கண்டங்கத்திரி, நிலவேம்பு, சுக்கு இவைகளை ஓர் அளவாகக் கூட்டி முறைப்படி குடிநீரிட்டுத் தேன் சேர்த்துக் கொள்ளவும்.

## மூலக்கடுப்பு, சீதரத்தம் விழுதலுக்கு

கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி இவைகளைப் பசு வெண்ணெயில் வேகவைத்து இறுத்து, பச்சைக் கருவேப்பிலையைக் கூட்டி அரைத்துக் குழப்பி மூன்று நேரம் கொடுக்கவும்.

## பாண்டு விக்கத்திற்கு

மூன்று பிடி பாச்சாலை வதக்கிப் பிழிந்த ரசம் கொடுத்து மூன்று நாள் காட்டுக்கம்புச்சோறும், தண்ணீரும் சாப்பிட்டு, ஏழாம் நாள் தலைக்குத் தண்ணீர் வார்த்துக் கொள்ளப் பாண்டு நோய்கள் போம்.

## சுடரெண்ணெய்

கருமத்தைவேர்ப்பட்டை விராகன் நாலு, கந்தகம் விராகன் இரண்டு, கௌரியும், அரிதாரமும் வகைக்கு விராகன் ஒன்று இவற்றை வேப்பெண்ணெயில் அரைத்துச் சுடர்த்தைலம் இறக்கிப் பஞ்சிலூட்டிப்போட, ராஜபிளவை, கண்டமாலை, விப்புருதி, வெடிசூலை, தொடைவாழை, கிரந்திப்புண் முதலிய இரணங்கள் போம். சன்னிக்குத் துவளையிடலாம். எருது மாட்டின் வஞ்சிப்புண்ணிற்குப் போட, அதுவும் தீரும்.

## இரணங்களுக்கு

வெள்ளைப்பாஷாணம், பச்சைக்கற்பூரம், இந்துப்பு, பெருங்காயம் இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை காகிதத்தில் மடித்துச் சுட்டுக் கொம்புத் தேனில் குழைத்துப்போட ஆணி வெளி வந்து விடும்.

## காமாலை பாண்டுவுக்கு

கடுகை முள்ளிக்காயளவு அரைத்து வெள்ளாட்டு மூத்திரத்தில் மூன்று நாள் கொள்ளவும்.

## கரப்பான் விக்கத்திற்கு

சங்கம்வேரையும், பச்சரிசியையும் கூட்டிக் கூழ் காய்ச்சி மூன்று நாள் கொண்டு கடும்பத்தியமும் கொள்ளவும்.

## இரத்தசீதக் கடுப்புக்கு

பற்படாகம், மாசிக்காய் இவைகளை எருமைத்தயிரில் அரைத்து மூன்று வேளை கொடுத்தாலும், அல்லது ஆட்டுக்கால் சீரகம் இவை சூப்புச்செய்து கொடுத்தாலும் தீரும். கைகண்டது.

## அடி தள்ளினதிற்கு

ஓணானைத் தலை, கால், குடல் நீக்கிச் சம்பாரம் சேர்த்து நெய்யில் பொரித்துக் கொடுக்கவும். கைகண்டது.

## வயிற்றுக் கடுப்புக்கு

ஆவரைத்தழைச்சாற்றை எருமைத்தயிரில் மூன்று நேரம் கொடுக்கவும்.

## காது வலிக்கு

சுக்கு, இந்துப்பு, திப்பிலி, முத்தக்காசு, பெருங்காயம், வசம்பு, வெள்ளுள்ளி இவைகளை எருக்கிலைச்சாற்றில் அரைத்து நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி வடித்துக் காதிலிட்டுப் பஞ்சாலடைக்கத் தீரும். கைகண்டது.

## கிராணிக்கு

குங்கிலியம், கொம்பரக்கு, அதிவிடையம், சாதிக்காய், அபினி, குராசாணியோமம் இவைகளை நல்லெண்ணெய் விட்டு அரைத்து மெழுகாக்கிக் கொடுக்கவும்.

## அமுத லேகியம்

எட்டு படி பசுவின்பாலைக் காய்ச்சிச் சுண்டும்போது சீனி பலம் நாலு சேர்த்துக் குழம்புப்பதத்தில் வரும்போது வால் மிளகு பலம் ஒன்று, கசகசா பலம் இரண்டு இவற்றை வறுத்துச் சூரணித்திட்டுக் கிளறி, நெய் படி இரண்டு சேர்த்து லேகியமாக்கிப் பாக்களவு இரண்டு வேளை பன்னிரண்டு நாள் கொள்ள மேகம் இருபத்தொன்றும் தீரும்.

## சுகவரி சூர்ணம்

ஆவாரம்பூ, பருப்பு, கொழுந்து, விதை, வேர், பட்டை இவைகளைத் தனித்தனி உலர்த்தி இடித்த சூரணம் வகைக்குப் பலம் ஒன்று, வாய்விளங்கம், மரமஞ்சள், புல்வாய்க்கொம்பு, புள்ளிமான்கொம்பு இவற்றின் சூரணம் வகைக்குப் பலம் கால்



சேர்த்து, வெருகடியளவு மோரில்கொள்ள, உஷ்ணநோய்கள், மேகம் இருபத்தொன்று எல்லாந்தீரும். கைகண்டது.

## சுவாச காசத்திற்கு

இண்டம்பாலில் கருஞ்சீரகச் சூரணஞ்சேர்த்துக் கொள்ளவும். கைகண்டது.

## பிளேக்குக்கு

பெருலவங்கப்பட்டையையும், ஆடுதின்னாப்பாளை சமூலத்தையும், சூரணித்து, எலுமிச்சம்பழச்சாறு விட்டு நாலு சாமமரைத்துப் பணவிடை குளிகைசெய்து நிழலிலுலர்த்தி, ஆணுக்குப் பெண்ணின் சிறுநீரிலும், பெண்ணுக்கு ஆணின் சிறுநீரிலும் இரண்டுவேளை மூன்று நாள் கொடுத்துத் தாகத்துக்குப் பிராந்தியும், கட்டிக்கு எருமைச்சாணிவேதும் கொடுத்து, புளி, கடுகு, எண்ணெய் நீக்கவும்.

## வாந்தி பேதிக்கு

பழைய சூடன், பளிங்கு சாம்பிராணி, சட்டிவைப்புலிங்கம் இவைகளை ஒவ்வொன்றுய்ச் சேர்த்து அரைக்க மெழுகாகும். இதனில் குன்றியளவு தக்க அனுபானங்களில் கொள்ள, சுரநோய் போம். கைகண்டது.

## சிராய்ப் பீனிசத்திற்கு

நல்லெண்ணெய், நொச்சிச்சாறு இவைகள் வகைக்குப் படி ஒன்றில், மிளகு பலம் ஒன்றைச் சூரணித்திட்டுக் காய்ச்சி மூக்கில் விட்டுத் தலைமுழுகி வரவும்.

## விஷபாண்டு, காமாலை, சோகை, வீக்கம் இவைகளுக்கு

அரப்பொடி படிநாலு, எலுமிச்சம்பழம் இருபது, சீரகம் படி நாலு, கருஞ்சீரகம் படி நாலு, காந்தம், இந்துப்பு, கடுகுரோகணி, கருங்குங்கிலியம் இவைகள் வகைக்கு விராகன் மூன்று, சுக்கு, ஓமம் இவைகள் வகைக்குப் பலம் கால், வெள்ளுள்ளி, மிளகு இவைகள் வகைக்குப் பலம் இரண்டு, காட்டுமல்லிச்சாறு, தைவேளைச்சாறு, நாய்வேளைச்சாறு, கரிப்பன்சாறு இவைகள் வகைக்குப் படி கால் விட்டு மருந்துகளை கூட்டிப் பிசைந்து கரைத்து எலுமிச்சம்பழத்தை நான்காய்ப் பிளந்து, மேற்படி மருந்தை வைத்து; மிஞ்சிய மருந்தையும், சாற்றையும் சட்டியில்

விட்டு, நான்கு நாள் சூரியபுடம் வைத்து, அதில் ஒவ்வொரு கீற்று எடுத்துச் சாப்பிடவும். பத்தியம்: உப்பு, புளி நீக்கி, பசுவின் நெய்யும், பாசிப்பயறும் கூட்டவும். எலுமிச்சம்காய்ச் சட்டிக்கு வேடுகட்டி வெய்யிலில் வைத்து வரவேண்டும். உலர்ந்தபின் பொடிசெய்து வைத்துக்கொண்டு ஒரு விராகன் அளவு கொடுக்கலாம்.

## கிராணி டீக்ரு

நெல்லிக்காய், புளியவிரைத்தோல், மாதுளையோடு, கடுக்காய், நற்சீரகம், கருஞ்சீரகம், ஏலம், கிராம்பு, திரிகடுகு, அபினி, கஞ்சா, சாதிக்காய், அதிவிடையம் இவைகள் வகைக்கு விராகன் மூன்றை வறுத்து இடித்து வெருகடியளவு தயிரில் கொள்ள. கிராணிகள், கழிச்சல், கடுப்புகள் எல்லாந்தீரும்.

## இறைவனூர் சூரணம்

பெருங்காயம், வழுதலைவேர், கொத்தமல்லி, நீர்மேல் நெருப்பு, செவ்வியம், பங்கம்பாலை, சடாமாஞ்சி, இந்துப்பு, சுட்டஉப்பு, கல்லுப்பு, திரிகடுகு, சவுக்காரம், வசுவாசி, மாதுளையோடு, கடுக்காய், வெங்காரம், அசமதாகம் இவைகள் வகைக்கு விராகன் ஒன்றைச் சூரணித்து இஞ்சிச்சாறு அல்லது எலுமிச்சம் பழச்சாற்றில் வெருகடியளவு கொள்ள, ஊமை பேசுவான், மூலக்கிராணி, முலைவாதவுருத்தம், மகோதரம், கயம், அந்திர வாயு, திமிர்வாயு முதலியவை தீரும். பத்தியம்: உப்பு மோர் கூட்டி, புளி, புகை நீக்கவும்.

## சித்திராதி சூரணம்

இலாமிச்சம்வேர், தக்கரைவேர், சுக்கு, அழிஞ்சிவிதை, செஞ்சந்தனம், இலவங்கப்பட்டை, திப்பிலி, திப்பிலிமூலம், ஏலம், சிறுநாகப்பூ, கோரைக்கிழங்கு, நெல்லிப்பருப்பு, பச்சைக்கற்பூரம், பச்சிலை, அகில்கட்டை, சந்தனம் இவைகளைச் சரியிடை வாய்ச் சூரணித்து எட்டிலொரு பாகம் சீனி சேர்த்து, வெருகடியளவு உண்ண, இரத்தவாந்தி, சத்தி, ஓக்காளம், அரோசகம், பேதி, மூலம் இவைகள் தீரும்.

## ஏலாதி சூரணம்

ஏலம், கிராம்பு, தக்கோலம், கற்பூரம், சாதிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு இவை சரியிடை சூரணித்துத் தேனிற்கொள்ள,



சகலவிக்கல், சிலேட்டுமம், அரோசகம், நெஞ்சிற்கனம், உஷ்ணம் எல்லாம் தீரும்.

## சரபாக்கினி சூரணம்

அசமதாகம், திப்பிலிமூலம், ஏலம், லவங்கம், பச்சிலை, சிறுநாகப்பூ, திரிகடுகு, வெட்டிவேர், இலாமிச்சம்வேர், கொத்தமல்லி, காட்டாத்திப்பூ, திப்பிலி, கூவிளம்பிஞ்சு இவைகளைச் சரியிடை சூரணித்து, எட்டிலொன்று, சீனிகூட்டி, வெருகடியளவு கொள்ள, அதிசாரம், கிராணி, மாந்தம், மூகரோகம், எலி கடி, உதிரவியாதி முதலியவை தீரும்.

## தாபாக்கினி சூரணம்

ஓமம், பெருங்காயம், விழாலரிசி, பஞ்சலவணம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், திரிகடுகு, செவ்வியம், நாகப்பூ, முத்தக்காசு, ரோகணி, கொடிவேலிவேர், சீரகம், கருஞ்சீரகம், வெட்பாலையரிசி, கோஷ்டம், செங்கழுநீர்க்கிழங்கு, வழுதலைவேர், வசம்பு, மஞ்சள், கண்டங்கத்திரிவேர், வெள்வசம்பு, மரமஞ்சள் இவைகளைச் சரியிடை சூரணித்து, வெருகடியளவு இரண்டு நேரங்கொள்ள, வயிற்றுப்பொருமல், சீதவாத ரோகங்கள், குன்மம், மலக்கட்டு, நீர்கடுப்பு, பாண்டுரோகம், வாயு, காமாலை, மந்தாக்கினி, தேகவெப்பம், மூலரோகம் இவைகள் தீரும்.

## கடுக்காய்ச் சூரணம்

கடுக்காயும், நெல்லிக்காயும், வகைக்குப் பலம் பத்து, பெருங்காயம், வசம்பு, பங்கம்பாலை, நவச்சாரம், அதிவிடையம், செவ்வியம், கடுகுரோகணி, விளாவரிசி, பஞ்சலவணம், ஆனைத் திப்பிலி, சிறுவழுதுலை, வில்வப்பிசின், அசமதாகம் இவைகள் வகைக்குப் பலம் கால், இவற்றைச் சூரணித்து, விளக்கெண்ணெயில் வெருகடியளவு கொள்ள, மேலிளைப்பு, வீக்கம், மூலரோகம், பக்கமாந்தம், நெஞ்சுவலி, பக்கவலி, அஸ்திகாந்தல், வயிற்றுப் பொருமல், அன்னத்துவேஷம், கிராணி இவைகள் தீரும். வெந்நீரிலும் கொள்ளலாம்.

## புஷ்கராதி சூரணம்

கோஷ்டம், கடுக்காய், தான்றி, நெல்லி, செவ்வியம், திப்பிலிமூலம், கொடிவேலிவேர், இந்துப்பு, இலாமிச்சம்வேர்,

கற்பூரம் இவைகளைச் சரியிடை சூரணித்து, வெருகடியளவு கொள்ள, தாபசுரம், அஸ்திசுரம், விடாச்சுரம் இவைகள் தீரும.

## இஞ்சிச் சூரணம்

மேற்றோல் நீக்கிய இஞ்சி பலம் பத்து, சுக்கு, திப்பிலி, மிளகு இவைகள் வகைக்குப் பலம் இரண்டு, திப்பிலிமூலமும், சித்திரமூலமும் வகைக்குப் பலம் ஒன்று, ஏலம், சாதிக்காய், இவைகள் வகைக்கு விராகன் ஆறைச் சூரணித்து, வெருகடியளவு இரண்டு நேரம் கொள்ள வாயு, குடல்வாதம், பொருமல், வாய்நீர்ப்பாய்ச்சல், அரோசகம், பயித்தியவாயு, பெருமூச்சு, செரியாமை இவை தீரும்.

## மகுடாதி சூரணம்

மாதுளம்பிஞ்சு, விளாம்பிஞ்சு, வில்வப்பிஞ்சு, மாம்பருப்பு, காட்டாத்திப்பூ, இலவம்பிசின், அதிவிடையம், அசமதாகம், குராசாணியோமம், லவங்கப்பட்டை, வெட்பாலையரிசி, கருங் காலிவையிரம், சுக்கு, திப்பிலி, மிளகு, முத்தக்காசு, சீரகம், கருஞ்சீரகம், புளியங்கொட்டைத்தோல், மலைத்தாங்கி, இந்துப்பு, நீர்முள்ளிவிதை, சாதிக்காய், கழற்சிப்பருப்பு, ஆனைத் திப்பிலி, இவைகளைச் சரியிடை வறுத்து விளாம்பழச்சாறு விட்டு அரைத்து, நிழலில் காயவைத்து சூரணித்து வெருகடி யளவு தேன், தயிர், சீனி, மோர் இவைகளில், நோய்க்குத் தக்க வாறு கொள்ள, வாயு, கிராணி, பேதி, கடுப்பு, அசீரணம், பொருமல் எல்லாந் தீரும்.

## மாதுளைச் சூரணம்

மாதுளம்பிஞ்சு, காட்டாத்திப்பூ, வெள்ளிலோத்திரம், புளியம்விதை மேற்றோல், சீரகம், கருஞ்சீரகம், இலவம்பிசின், அதிவிடையம், வெட்பாலையரிசி, முத்தக்காசு, ஓமம், கடுகு, வில்வப்பழம், கழற்சிப்பழுப்பு, இந்துப்பு, சுக்கு, இவைகளைச் சரியிடை வறுத்துச் சூரணித்து நல்லெண்ணெயில் வெருகடி கொள்ள, உதரசூலை, அக்கினி மந்தம், சீதக்கடுப்பு, கிராணி பேதி, அஸ்திகாங்கை, தாகம், வாந்தி, இவைகள் தீரும்.

## ஏலாதி சூரணம்

ஏலம், கிராம்பு, பச்சிலை, நாகப்பூ, முத்தக்காசு, சந்தனம், பச்சைக்கற்பூரம் இவைகளைச் சமனிடை சூரணித்து வெருகடி



தேனிற்கொள்ள, வாந்தி, அரோசகம், இருமல், வறட்சியிருமல், நீர்பாய்தல், பைத்தியம், வாயு இவைகள் தீரும்.

## கற்பூராதி சூரணம்

கற்பூரம், வெள்ளிலோத்திரம், தக்கோலம், சாதிக்காய், ஏலம், இலவங்கம், நாகப்பூ, திரிகடுகு இவைகளைச் சரியிடை சூரணித்துச் சேர்த்து, வெருகடி கொள்ள, இருமல், ஈளை, காசம், பயித்தியம், வாந்தி, குன்மம், மூலவாயு இவைகள் தீரும். தீபனம் உண்டாம்.

## இலவணாதி சூரணம்

இந்துப்பு, சவுக்காரம், ஏலம் இவைகள் வகைக்குப் பலம் இரண்டு, சுக்கு பலம் நான்கு, மிளகு பலம் ஆறு, திப்பிலி பலம் எட்டு, வில்வப்பழம் பலம் எட்டு இவைகளைச் சூரணித்து வெருகடி கொள்ள, காசம், குரல்நெரிப்பு, விக்கல், அரோசகம், அக்கினி மந்தம், மூக்கில் நீர் பாய்தல் முதலியன தீரும்.

## குன்மத்திற்கு

இந்துப்பு விராகன் இரண்டும், வெண்காரம் விராகன் ஒன் றும் கொண்டு இடித்துப் பனைவெல்லம் சேர்த்து அரைத்து, இருநேரம் ஏழு நாள் கொள்ளக் குன்மந் தீரும்.

## பித்தத்திற்கு

மூன்று தேற்றான்விதையை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக் கொள்ளவும்.

## விக்கலுக்கு

பருத்திவிரைப்பருப்பு, நெற்பொரி, ஏலம், திப்பிலி இவை களைச் சூரணித்து சீனி சர்க்கரை அல்லது தேனில் கொள்ளத் தீரும்.

## அசுவகந்தி சூரணம்

அமுக்கிருங்கிழங்கு பலம் இரண்டு, திப்பிலி பலம் இரண்டு, சுக்கு பலம் ஒன்று, மிளகு பலம் இரண்டு, சிவனார்வேம்பு பலம் மூன்று, ஏலம் பலம் நாலு, பரங்கிப்பட்டை பலம் மூன்று, பூதக்கரப்பான்பட்டை பலம் இரண்டு, செங்கத்தாரிப்பட்டை பலம் இரண்டு, பெருமரத்துப்பட்டை பலம் இரண்டு, கொன்னைக்காய்ப்பட்டை பலம் இரண்டு இவைகளைச் சூரணித்து

அவைகளுடன் சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, குராசானி யோமம், அதிவிடையம், அபினி, கஞ்சா இவைகள் வகைக்கு விராகனிடை ஒன்றை, சூரணித்துக் கலந்து, சருக்கரை பலம் பத்துக் கூட்டி வெருகடியளவு இரண்டு நேரம் கொள்ள, வாந்தி, அசீரணம், கழிச்சல், செரியாமாந்தம், குன்மம், புளித்தேப்பம், வாயு, முதலானவை தீரும்.

## பஞ்சலவண சூரணம்

இந்துப்பு, பொட்டிலுப்பு, காசுலவணம், வண்டலுப்பு, அட்டுப்பு, கடுகு, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், கருஞ்சீரகம், நற்சீரகம், கற்கடகசிங்கி, பெருங்காயம் இவைகளைச் சரி எடையாகக் கொண்டு சூரணித்து, தேனில் வெருகடி கொள்ள, வாயு, குன்மம், அந்திரவாயு, அசீரணம், செரியா மந்தம், அரோசகம், மலக்கட்டு இவைகள் தீரும். தீபன முண்டாம்.

## பிப்பலாதி சூரணம்

ஏலம், கிராம்பு, திப்பிலிமூலம், சுக்கு, தாளிசப்பத்திரி, மிளகு, அரத்தை, செவ்வியம், சிறுதேக்கு, கற்கடகசிங்கி இவைகள் வகைக்கு விராகன் இரண்டை, இதற்குச் சரியிடை திப்பிலி கூட்டிச் சூரணித்து, கூட்டுத்தொகைக்குச் சரி சர்க்கரை சேர்த்துக் கலந்து, வெருகடி கொள்ள, காசம், சுவாசகாசம், சயரோகம், மூலவாயு, வீக்கம், காமாலை, வாந்தி, குன்மம், விக்கல், இரத்தபித்தம், என்னும் நோய்கள் தீரும்.

## அண்டவாதத்திற்கு

கழற்சிப்பருப்பு, ஊமத்தன்விதை, நொச்சிவேர், மஞ்சள் இவைகளை அரைத்துப் பத்துப் போடவும். கழற்சியிலை, நொச்சியிலை, கழுதைலத்தி, உவர்மண், சுண்ணாம்புநீறு இவற்றைக் கூட்டி, ஒற்றிடமிடவும். வேதுபிடித்தாலும் தீரும்.

## கார்போகவரிசிச் சூரணம்

கார்போகவரிசி படி மூன்று, உதியம்பட்டையை உலர்த்தி இடித்த சூரணம் படி ஒன்று, அரப்பொடியும், மண்டூரப் பொடியும் வகைக்கு விராகன் பத்து, இவைகளைச் சூரணித்துக் கரிப்பான்சாறு படி பத்து ஒரு பாண்டத்திலிட்டு மேற்படி சூரணங்களைக் கலந்து வேடுகட்டி வெய்யிலில் வைத்து இருகிய



பதத்தில் பிசைந்து உலர்த்தி வெருகடி இருநேரம் தேனில் ஒரு மண்டலம் கொள்ள வெண்குஷ்டம், கருங்குஷ்டம், பெருவியாதி வெங்சூறைநோய், பாண்டு, சோகை, புண் இவைகள் தீரும் வெந்நீருஞ் சோறும் பத்தியம்.

## அமுத லேகியம்

கண்டங்கத்திரி, தூதுவளை, கரிப்பான், நீர்முள்ளி, வெள்ளரி, காற்பாசம், காற்பாசக்காய், கொடும்பை, நீர்பிரமி, பொடுதலை, முசுமுசுக்கை இவைகளின் சாறு வகைக்குப் படி இரண்டும், பசுவின் பால், நெய் வகைக்குப் படி இரண்டும், சேர்த்து அதில் கோஷ்டம், சிற்றரத்தை, திரிகடுகு, ஓமம், கடுக்காய், அதிவிடையம், பொரிக்காரம், கல்நார், வாய்விளங்கம், மண்டூரம், திப்பிலிமூலம் இவைகள் வகைக்குக் கழஞ்சு நாலை, பொடித்திட்டு சீனி பலம் நாலும், தேன் படி இரண்டும், சேர்த்துக்கிண்டி இலேகிய பதத்தில் காய்ச்சி எடுக்கவும். இதில் கழஞ்சு வீதம் கொள்ள, காமாலை, இருமல், ஈளை, காய்ச்சல், நாவறட்சி, வீக்கம், சோகை, பாண்டு, கபாலபித்தம் இவைகள் தீரும். பத்தியம்: புளி, புகை ஆகாது.

## நவபஞ்ச பாஷாண கிருதம்

நொச்சிவேர், தாழைவேர், நீலிவேர், சங்கம்வேர், வேலிப் பருத்திவேர், கண்டங்கத்திரிவேர், வேப்பன்பட்டை, புங்கம் பட்டை, மாவிலிங்கம்பட்டை, தூதுவளைசமூலம் இவைகள் வகைக்குப் பலம் மூன்றை, நறுக்கி இடித்து இரண்டு தூணி நீரிலிட்டுக் குருணியாகக் காய்ச்சி அதில் கரந்தைச்சாறு, ஆடாதொடைச்சாறு, முத்துருக்கஞ்சாறு, நீர்ப்பிரமிச்சாறு, முடக்கொற்றான்சாறு, அமுக்கிராச்சாறு இவைகள் வகைக்குப் படி இரண்டு சேர்த்து அடுப்பிலிட்டு இரண்டு படியாக வற்றக் காய்ச்சி, அதனுடன் பூநாகம், முசுருமுட்டை, சாதிலிங்கம் இவைகள் வகைக்கு விராகன் பதினொன்றை சூரணித்திட்டு அண்டத்தைலம், கந்தகச்சுடர்தைலம் இவைகள் வகைக்குப் படி கால் கூட்டி; சுக்கு, திப்பிலி, மிளகு, பூண்டு, திப்பிலிமூலம், குராசானியோமம், கசகசா, வெளிச்சிப்பிசின், வேப்பம்பிசின், கருவேலம்பிசின், அரத்தை, மகிழ், மஞ்சள், ஆலம்விழுது, அமுக்கலாங்கிழங்கு, செங்கத்தாரிப்பட்டை, வசம்பு, திரிபலை, இவைகள் வகைக்குக் கழஞ்சு இரண்டை பொடித்திட்டு, வேப் பெண்ணெயும், நல்லெண்ணெயும் வகைக்குப் படி இரண்டு

சேர்த்து, கிருதபதத்தில் காய்ச்சி இறக்கி அதில், ஒரு கழஞ்சு வீதம் இரண்டு நேரம் கொள்ள, விஷசன்னி, இடிமூலசன்னி, தாதுசன்னி, சித்தவிப்பிரமைசன்னி, கற்னிகாசன்னி, மந்தாரசன்னி, போகசன்னி, வாதசன்னி, பித்தசன்னி, தாந்திரிகசன்னி, சீதசன்னி முதலியவை தீரும். **பத்தியம்:** உப்புடன் வெந்நீர்ச் சோறு உண்ணவும்.

## சுரத்திற்காணும் நீர்வேட்கைக்கு

கலைக்கொம்பு, சின்ன லவங்கப்பட்டை, ஏலம், கோரோசனை இவைகளை ஆதளம்பாலில் உரைத்து நாவில் தளமிட்டாலும்; அல்லது விளாவோடு, வில்வவோடு, கலைக்கொம்பு, திப்பிலி, அக்ராகாரம், முத்து, பவளம், தங்கம், வெள்ளி இவைகளை முலைப்பாலில் உரைத்துத் தளமிட்டாலும்; அல்லது வேப்பம் பட்டை, கடுக்காய், அக்கிராகாரம், விளாவோடு, ஆமையோடு இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றில் உரைத்துத் தளமிட்டாலும் தாகம் தீரும்.

## சகல தோஷத்திற்கும்

தேசாவாரம், அரத்தை, கோஷ்டம், அக்கிராகாரம், வாய் விளங்கம், தாளிசப்பத்திரி, கருஞ்சீரகம், திப்பிலிமூலம், செவ்வியம் இவைகளை வறுத்துப் பொடிசெய்து இஞ்சிச்சாற்றில் போட்டு உரைத்து கஸ்தூரி, தேன், கோரோசனை, சிறிது கூட்டிக் கொடுக்கச் சகல தோஷமும் தீரும்.

## வாத சன்னிக்கு

சிற்றாமுட்டி, குருந்தொட்டி, முள்ளி, வாதமடக்கி, கண்டங் கத்திரி, கடம்பு, கூத்தங்குதம்பை, வில்வம் இவைகளின் வேர், வசம்பு, வெள்ளைப்பூண்டு, சுக்கு இவைகளைக் கூட்டிக் கஷாய மிட்டுக் கொடுக்கத் தீரும்.

## பித்த சன்னிக்கு

நத்தச்சூரிவேர், குதிரைப்பல்லு, கடுக்காய், கருஞ்சீரகம், மலையாவரைவேர், திப்பிலி இவைகளை வேப்பெண்ணெயில் தட்டி இட்டுக் காய்ச்சி துட்டிடை உள்ளுக்குக் கொடுத்து மேலும் பூசத் தீரும்.



## எரிபித்த சன்னிக்கு

வசம்பு, தேவதாரம், கோரோசனை, நேர்வாளக்கொட்டை, வெள்ளுள்ளி, இந்துப்பு, குந்தரிகம் இவைகளை வேப்பெண் ணெயில் போட்டுக் காய்ச்சிக் கரண்டியளவு கொடுக்கத் தீரும்.

## சீத சன்னிக்கு

ஆடாதொடைச்சாறும், வேப்பெண்ணெயும் வகைக்குப் படி ஒன்று கூட்டி, அதில் அதிமதுரம், வேப்பம்விதை, விராலிப் பட்டை, வேப்பம்பட்டை, துராப்பட்டை, ஊமத்தன்வேர், இந்துப்பு, முசுருமுட்டை, வெள்ளுள்ளி இவைகள் வகைக்குப் பலமாகக் கொண்டு முன் சாற்றில் அரைத்து மேற்படி எண் ணெயில் கலக்கிக் காய்ச்சி ஒரு கரண்டியளவு கொடுத்து மேலுக்கும் பூசவும்.

## சகல சன்னிக்கும்

தாமிரப்பொடி, மேனிப்பொடி, தலையோடு, துத்தம், துரிசு, இவைகளைப் புளியிலைச் சாறுவிட்டு அரைத்து உருட்டி, உலர்த்தி, அகத்தியிலைச்சாற்றில் உரைத்துக் கண்ணில் கலிக்கமிடத் தீரும்.

## வாத சேத்தும சன்னிக்கு

வாதமடக்கிவேர், குப்பைமேனிவேர், கரிப்பான் இவை களின் சாறு படி ஒன்றில், வெள்ளைப்பூண்டு, சுக்கு, மிளகு இவைகளை அரைத்துக் கூட்டி வேப்பெண்ணெய் படி ஒன்று விட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கடுக்காய்ச் சூரணம் சிறிது பொடித்துக் கூட்டிக் கொடுக்கத் தீரும்.

## வாத பித்த சேத்தும சன்னிக்கு

நிலவேம்பு, சடாமாஞ்சி வெள்ளைப்பூண்டு, மல்லி, வேப்பம் பட்டை, வேப்பம்விதை இவைகளை நொச்சிச்சாற்றில் அரைத்து வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் எட்டு நாள் சாப்பிடத் தீரும். குப்பைமேனிச்சாற்றால் துவலை இட்டு கொடுத்து வரவும்.

## பித்த வாத சேத்தும சன்னிக்கு

மேனிவேர், கடம்புவேர், சிவனார்வேம்பு, உகாபட்டை, வேப்பம்பட்டை இவைகள் வகைக்குப் பிடி ஒன்றோடு, உள்ளி, சுக்கு, அபினி இவைகளைக் கூட்டி இடித்து வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சிச் சாப்பிடத் தீரும்.

## பித்த சேத்தும சன்னிக்கு

சத்திச்சாரணைவேர், குன்றிவேர், வேப்பம்பட்டை, கடுக்காய், உள்ளி, வசம்பு, கோஷ்டம், கடுகு இவைகளை அரைத்து வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் ஏழு நாள் உண்ணத் தீரும்.

## பித்த வாத சன்னிக்கு

நீர்பூலாவேர், கடம்புவேர், நொச்சிவேர், நிலவேம்பு, கொடிவேலிவேர், கரந்தைவேர், சுக்கு, கோஷ்டம், அக்கிராகாரம், உள்ளி, திப்பிலிமூலம் இவைகளை அரைத்து வேப்பெண்ணெயில் விட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் கொள்ளத் தீரும்.

## குளிர் சன்னிக்கு

திப்பிலி, திப்பிலிமூலம், ஆடாதொடை, செவ்வியம், கொடிவேலிவேர், சுக்கு, மிளகு, அரத்தை, சிறுதேக்கு, உகாவேர், மிளகரணைவேர், பற்படாகம், பேய்ப்புடல், வேப்பம்பட்டை இவைகளை அரைத்து வேப்பெண்ணெயில் போட்டுக் காய்ச்சி இரண்டு நேரமும் கொள்ளத் தீரும்.

## அந்தக சன்னிக்கு

சித்திரமூலம், நொச்சிவேர், செவ்வியம், சுக்கு, பேய்ப்புடல், திப்பிலிமூலம், மிளகு, கடுக்காய் இவைகளை அரைத்து வேப்பெண்ணெய் விட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் உண்ணத் தீரும்.

## விகார சன்னிக்கு

நொச்சிவேர், நையாணிவேர், முள்ளிவேர், வேப்பம்பட்டை, நிலவேம்பு, வெள்வேலம்பட்டை, சுக்கு, வெள்வெங்காயம், பெருங்காயம், திப்பிலி இவைகளை அரைத்துப் பசு நெய் படி அரையும், வேப்பெண்ணெய் படி அரையும் சேர்த்து அதில் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி வீதம் சாப்பிட்டு மேலும் பூசத் தீரும்.

## தாந்திரிக சன்னிக்கு

கோஷ்டம், அக்கிராகாரம், வாய்விளங்கம், திப்பிலிமூலம், பூண்டு, திப்பிலி, மிளகு, கசகசா, இவைகளை அரைத்து வேப்பெண்ணெயிலிட்டுக் காய்ச்சிக் கொள்ளத் தீரும்.



## பிரலாப சன்னிக்கு

பசுவின்நெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய், விளக்கெண்ணெய் இவைகள் வகைக்குப் படி ஒன்றைக் கலந்து அதில் நீலிவேர், கொடிவேலிவேர், குமிழம்வேர், சிவதைவேர், புங்கம்வேர், கருவேம்புவேர், நீர்க்கடம்புவேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, சுக்கு, உள்ளி, கோரோசினை, அரத்தை, கசகசா, பெருங்காயம் இவைகள் வகைக்குக் கழஞ்சு கால் இவைகளை அரைத்துப் போட்டுக் காய்ச்சி ஒரு கரண்டி கொள்ளத் தீரும்.

## திரிமேக சன்னிக்கு

திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், கொடிவேலிவேர், சிறுதேக்கு, சுக்கு, மிளகு, குமிழம்வேர், உகாவேர், பேய்ப்புடல், குராய்வேர், குருவிச்சவேர், குதும்பைவேர் இவைகளை அரைத்து வேப்பெண்ணெயிலிட்டுக் காய்ச்சிக் கொள்ளவும். மேலும் பூசவுந் தீரும்.

## பைத்திய சன்னிக்கு

வேப்பம்பட்டை, நிலவேம்பு, சுக்கு, இஞ்சி, கோஷ்டம், சித்தாமுட்டி, பேராமுட்டி, உள்ளி இவைகளைக் குடிநீர் வைத்துக் கொள்ளத் தீரும்.

## சன்னியில் வாய்குளறுகிறதற்கு

சங்கம்வேர், குன்றிவேர், கொடிவேலிவேர், குருந்தொட்டிவேர், குருவிச்சவேர், திரிகடுகு, திப்பிலிமூலம். இவைகளைக் குடிநீர் வைத்துக் கொள்ளத் தீரும்.

## முக சன்னிக்கு

வசம்பு, சுக்கு, சங்கம்வேர், வெள்ளுள்ளி, பெருங்காயம் இவைகளைப் பொடித்து வேப்பெண்ணெயில் சுட்டுத்தைலம் இறக்கி, உள்ளுக்கு ஒரு கரண்டியளவு கொடுத்து, மேலுக்கும் பூசத்தீரும்.

## சுக சன்னிக்கு

மிளகு, திப்பிலி, தாமிரப்பொடி, வசம்பு, குப்பைமேனிவேர் மூட்டைப்பூச்சி, துவரம்பருப்பு இவைகளை வெற்றிலைச்சாற்றில் அரைத்து ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணுமாகக் கொண்டு அவர்களின் இரத்தத்தைச் சேர்த்து வெதுப்பிக்

கண்ணில் கலிக்கமிடவும். உள்ளுக்கு நலக்கமாத்திரை கொடுக்கவும். குன்றிச்சாறும், நொச்சிச்சாறும் சேர்த்து, அதில் வசம்பு, வெண்காரம், மூட்டைப்பூச்சி, குப்பைமேனிவேர் இவைகளை அரைத்துக் கலக்கி துவளையிடவும்.

## வாதங்களுக்கு

வேப்பெண்ணெயும், ஆறுமாதத்திய காடியும் வகைக்குப் படி நாலு, எலுமிச்சம்பழச்சாறு படி இரண்டு, குமரிச்சாறு படி ஒன்று இவைகளைக் கலந்து அதில் மயிலிறகும், பிரண்டை வேரும் வகைக்குப் பலம் ஒன்று, இவைகளைக் கரந்தைச்சாற்றால் ஆட்டிக் கலக்கி, அத்துடன் தேவதாரம், நறுக்குமூலம், திரிகடுகு, ஓமம், பெருங்காயம், இவைகள் வகைக்குப் பலம் கால் வீதம் முலைப்பாலில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சிப் பதம் வருவதற்கு முன்பே பசு நெய் படி ஒன்று விட்டு மெழுகுபதத்தில் இறக்கி மேலுக்கும் பூசித் தலைமுழுகியும், உள்ளுக்கும் அதனை ஒரு கரண்டி கொண்டு தேனுவது, சீனியாவது சேர்த்துச் சாப்பிட்டு வர, சகல வாதமுந் தீரும்.

## பாரிச வாதத்திற்கு

நெல்லிமுள்ளி, தைவேளை, கொடிவேலி, சிற்றுமணக்கிலை, கொத்தான், கொளிஞ்சி இவற்றை வகைக்குப் பலம் அரை கொண்டு பதக்கு நீரிலிட்டு, எட்டொன்றாய்க் காய்ச்சி அதில் திரிகடுகு, இந்துப்பு, சீனிக்காரம், கடுக்காய், தான்றிக்காய் இவைகள் வகைக்குப் பலம் இரண்டு, செவ்விளநீர் படி ஒன்று, விளாவரிசி, அரத்தை, கோஷ்டம், அத்திதிப்பிலி, மருக் கொழுந்து, சிவதைவேர், கொடிவேலிவேர், தேவதாரம், திப்பிலி மூலம் இவைகள் வகைக்கு கழஞ்சு ஒன்று இவற்றை அரைத்துக் கலக்கி இரண்டு படி வேப்பெண்ணெய் விட்டுக் காய்ச்சிப் பதத்திலிறக்கி, தலைமுழுகி வரத் தீரும்.

## திமிர் வாதத்திற்கு

செங்குறிஞ்சான்வேரும், குருந்தொட்டிவேரும் வகைக்குப் பலம் அறுபதை இருதூணி நீரிலிட்டு நாலு நாழியாகக் காய்ச்சி இறுத்து அதில், அகில், சந்தனம், வெண்சந்தனம், அரத்தை, திப்பிலி, மரமஞ்சள், இந்துப்பு, லவங்கம், தக்கோலம், இஞ்சி, அதிமதுரம், தேவதாரம், சதகுப்பை, அசமதாகம் இவைகள் வகைக்கு கழஞ்சு கால அரைத்துக் கலக்கி, வேப்



பெண்ணெய் படி இரண்டும், எலுமிச்சம்பழச்சாறு படி ஒன்றும், விட்டுச் சிறுகோதியிட்டுக் காய்ச்சி வடித்து மேலுக்குப் பூசவும்.

## கழல் வாதத்திற்கு

எருக்கம்பழுப்புச்சாறு, வேப்பந்தோல்சாறு, குந்திருக்கஞ் சாறு, கருகுச்சாறு, பனமட்டைச்சாறு, பங்கம்பாளைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, காடி, வேப்பெண்ணெய் இவைகள் வகைச்குப் படி ஒன்றைக் கலந்து அதில், முடக்கொத்தான்வேர், வாதமடக்கிவேர், நொச்சிவேர் இவைகள் வகைக்குக் கால் பலமும், கழற்சிப்பருப்பு, வேப்பம்விதை, உள்ளி, வசம்பு, தேங்காய் இவைகள் வகைக்கு மூன்று பலமும் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி வடித்து, மேலுக்குப் பூச முடக்கு நிமிரும், கழல்வாதம் போம்.

## கீல் வாதத்திற்கு

சுக்கு, உள்ளி, ஓமம், சதகுப்பை, வேப்பம்பிசின், புங்கம் விதை இவைகள் வகைக்கு ஐந்து பலம் அரைத்து குப்பை மேனி, நல்லவேளை, நொச்சி இவைகளின் சாறு, வேப்பெண்ணெய் இவைகள் வகைக்குப் படி ஒன்று விட்டுக் காய்ச்சி அதில், கொடி வேலி, வாதமடக்கி, நொச்சி, முடக்கொத்தான், நறுநொச்சி, புங்கு இவைகளின் வேர் வகைக்குக் கழஞ்சு ஒன்று அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிப்பூச சந்துவாதம், கீல்வாதம், திமிர்வாதம் முதலியன தீரும்.

## துடை வாதத்திற்கு

பசுநீர்குருணி ஒன்று, எருமைச்சாணிப்பால் படி இரண்டு, நஞ்சுண்டான்வேர் பலம் கால், தலைசுருளிவேர் பலம் கால், வாதமடக்கிவேர் பலம் கால் இவற்றை அரைத்துக் கலக்கி வேப்பெண்ணெய் படி ஒன்று விட்டு அதில், பூண்டு, வசம்பு, ஓமம், சிவதைவேர், தேவதாரம், குராசானி, வாய்விளங்கம், திப்பிலிமூலம், கடுக்காய் இவைகள் வகைக்குப் பலம் மாகாணி அரைத்துப் போட்டு, புங்கெண்ணெய் படி ஒன்று விட்டுக் காய்ச்சி வடித்துப் பூசவும். பத்தியம்: வாயு பதார்த்தம் நீக்கவும். துடைவாழை போம்.

## பாயச கிருதம்

எருமைச்சாணிப்பால், பசுவின் நெய், பசுவின் தயிர், கோசலம் இவைகள் வகைக்குப் படி கால் சேர்த்து அதில்

நாகணம், சிவதைவேர், சிறு கண்ணுகம், திரிபலை இவைகள் வகைக்கு அரைக்கால் பலத்தை அரைத்துப் போட்டு, கொடிக் கள்ளிப்பால் உழக்கு ஒன்று விட்டுக் காய்ச்சி, லேகியம்போல் கிளரி, புன்னைக்காயளவு இரண்டு நேரம் கொள்ள, பொருமல், சோம்பல், வீக்கம் இவைகள் தீரும். பத்தியம்: வெந்நீரும், சோறும் உண்ணவும்.

## மகோதரத்திற்கு

ரசம், நெல்லிக்காய், கந்தகம், தாம்பிரபஸ்பம், நாவி, மனோ சிலை இவைகள் வகைக்கு விராகனிடை மூன்றை நொச்சிச்சாற்றில் இரண்டு நாள் அரைத்துக் குன்றியளவு மாத்திரை செய்து உலர்த்தி அதில் ஒரு மாத்திரையும் திரிகடுகுச் சூரணம் வெருகடியளவும், தேனும் சேர்த்து, மாத்திரையும் கூட்டி இரண்டு நேரமும் பத்து நாள் கொள்ளவும். கடும்பத்தியம் காக்கவும்.

## வாத குன்மத்திற்கு

அப்பிரகபற்பம், இரசம், கந்தகம், அரிதாரம், நவச்சாரம், தாம்பிரபற்பம் இவைகள் வகைக்கு விராகனிடை இரட்டைக் கொடிவேலிச்சாற்றில் ஒரு நாள் அரைத்து, அதில் வாய்விளங்கம், இந்துப்பு, பெருங்காயம், ஏலம், வசம்பு இவைகள் சரியிடை சேர்த்து மாதுளம்பழச்சாற்றில் அரைத்துக் கழஞ்சு வீதம் கொள்ள, வாதகுன்மந் தீரும். பத்தியம்: வெந்நீரும் சோறும்.

## பித்த குன்மத்திற்கு

ரசமும், நாவியும் வகைக்கு விராகனிடை ஐந்தை, தேக்கிலைச்சாறு, தேக்கம்பூச்சாறு, சொடுப்பைச்சாறு இவைகளில் ஒவ்வொரு நாள் அரைத்து, வில்லை செய்து உலர்த்தி, ஓட்டிலிட்டுச் சீலைமண் செய்து, புடமிடவும். இப்படி ஐந்து புடமிட்டெடுத்து, சமனிடை நேர்வாளம்பருப்புச் சேர்த்து குன்றியிடை பசுவின் நெய்யில் மூன்றுநாள் ஆறு நேரம் கொடுக்கவும். பத்தியம்: வெந்நீரும் சோறும்.

## சேத்தும குன்மத்திற்கு

உலோகபற்பம், நாவி, ரசம், கந்தகம், வெண்காரம், திரிகடுகு, தாமிரபற்பம், ஏலம், லவங்கப்பட்டை, பொன்னூமத்தை, சங்கு, கஸ்தூரிமஞ்சள் இவைகள் வகைக்கு விராகனிடை மூன்று கொண்டு கலயத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாறும்,



கரிப்பான்சாறும் சமன்கூட்டி அதில் மூன்று நாள் அரைத்துக் குன்றியிடை மாத்திரை செய்து, நிழலிலுலர்த்தி ஒரு மாத்திரை தேனில், கொடுக்கவும். கடும்பத்தியம் காக்கவும்.

## சத்தி குன்மத்திற்கு

(1) புங்கம்பட்டை, மூக்கரைச்சாரணைவேர், ஆயில்பட்டை, திரிகடுகு இவைகள் வகைக்குப் பலம் கால். இவைகளைக் கஷாயமிட்டு ஆறு நேரம் கொடுக்கவும்.

(2) அரப்பொடி பலம் மூன்றும், கந்தகமும், மனோசிலையும் வகைக்கு ஒரு கழஞ்சும் கொண்டு குமரிச்சாற்றில் அரைத்து உலர்த்திய பின்பு, அதனிடைக்கு திரிகடுகும், கடுக்காய்ப்பொடியும் இரண்டு பங்கு சேர்த்து, கரிப்பான்சாற்றில் அரைத்துக் குன்றிப்பிரமாணம் மாத்திரை செய்து உலர்த்தி, ஒரு மாத் திரையை இஞ்சிச்சாற்றில் இரண்டு நேரம் கொடுக்கவும். பத்தியம்: வெந்நீரும் சோறும்.

## வலி குன்மத்திற்கு

(1) தாமிரபற்பம், உலோகபற்பம், காந்தபற்பம் இவைகள் வகைக்கு ஐந்து விராகனிடையை கள்ளிப்பால் விட்டு மூன்று சாமம் அரைத்துக் கடலையளவு மாத்திரை செய்து, உலர்த்தி வெல்லத்தில் கொடுக்கத் தீரும்.

(2) அமுக்கருக்கிழங்கு, ஓமம், இந்துப்பு, வசம்பு, நவச் சாரம் இவைகள் வகைக்கு விராகனிடை மூன்றைச் சூரணித்துப் பசு நெய்யில் லேகியமாகக் கிளரி புன்னைக்காயளவு கொள்ளவும். பத்தியம்: உப்புச் சேர்க்கலாம்.

(3) கழற்சிப்பருப்பு, உள்ளி, சுக்கு, பெருங்காயம், நவச் சாரம், காந்தம் இவைகளைச் சூரணித்து அவ்வளவு சர்க்கரையும் பசுவின் நெய்யும் கூட்டி லேகியம் செய்து அரை மண்டலம் கொள்ளத் தீரும்.

## பித்த குன்மத்திற்கு

(1) இஞ்சி, அப்பைக்கிழங்கு, பன்றிமோந்தான்கிழங்கு, கடுகு, வெந்தயம், சீரகம் இவைகள் வகைக்குப் பலம் காலை வறுத்துப் பொடித்துச் சேர்த்து நீர்விட்டு வேகவைத்துப் புன்னைக்காயளவில் தாமிரபஸ்பம் ஒரு அரிசியிடை சேர்த்து ஏழு நாள் கொள்ளவும். பத்தியம்: உப்பு, புளி நீக்கவும்.

(2) சீரகம் பலம் ஐந்தை பதக்கு நீரிலிட்டு இரண்டு படியாகக் காய்ச்சி அதில், நல்லெண்ணெய் படி ஒன்று சேர்த்து அதனோடு கார்போகரிசி பலம் மூன்றும், கருவேப்பிலை பலம் ஒன்றும் பொடித்திட்டுக் காய்ச்சி உள்ளுக்குக் கொடுத்துத் தலையும் முழுகத் தீரும்.

## பாண்டு குன்மத்திற்கு

வெண்காரம், நாவி, கந்தகம், காந்தபற்பம், தாம்பிரபஸ்பம் சீரகம், திரிபலை, திரிகடுகு, கடுகுரோகணி, சித்திரமூலம், நவச்சாரம், சத்திச்சாரம். பஞ்சலவணம், வாய்விளங்கம் இவைகள் வகைக்கு விராகனிடை இரண்டும், இவைகளின் கூட்டுத் தொகைக்குப் பாதி நேர்வாளம்பருப்பும், அதற்குப்பாதி எட்டி விதையும் சேர்த்துச் சூரணித்து, மாதுளம்பழச்சாறு விட்டு ஐந்து நாள் அரைத்துத் தூதுவிளங்காயளவு மாத்திரை செய்து, வெந்நீரில் அல்லது நெய்யில் கொடுக்கவும், பேதியாகும். பத்தியம் காக்கவும்.

## எரி குன்மத்திற்கு

கோசலம் கால் படியில் நூறு கடுக்காய்களை விதைநீக்கித் தட்டிப்போட்டு, அத்துடன் சுக்கு பலம் ஒன்று, திப்பிலி பலம் ஒன்று, பழைய சர்க்கரை பலம் இரண்டு இவைகளைச் சூரணித்துப் போட்டுக் காய்ச்சிக் குழம்புபதத்தில் இறக்கி, தானியபுடம் வைத்து. பத்து நாளுக்குப்பின் எடுத்து, ஒரு கடுக்காயளவு கொடுக்கவும்.

## சூடல்வாத குன்மம்

குமரிவேர், சாரணைவேர், மிளகரணைவேர் இவைகள் வகைக்குப் பலம் பத்து கூட்டித் தூணி நீரிலிட்டு காய்ச்சி வடித்த கஷாயம் படி இரண்டும், பசு நீர் படி இரண்டும் கலந்து அதில் பஞ்சலவணம், உள்ளி, திரிகடுகு, பெருங்காயம், சீரகம் இவைகள் வகைக்குப் பலம் இரண்டைச் சூரணித்துப் போட்டுப் பசுவின் நெய் படி இரண்டு சேர்த்துக் காய்ச்சி, மெழுகுபதமாகச் சுண்டி வரும்போது எடுத்துக் கொள்ளவும். இதில் ஒரு புன்னைக்காயளவு காலை மாலை சாப்பிடவும்.

## வாத வாந்திக்கு

திப்பிலி விராகனிடை ஐந்தை வறுத்துப் பொடிசெய்து தேனில் கொடுக்கவும்.



## பித்த வாந்திக்கு

பருத்திவிதைப்பருப்பையும், சர்க்கரையும் சூரணித்துக் கொள்ளவும்.

## சேத்தும வாந்திக்கு

நெற்பொரியைச் சூரணித்துத் தேனில் கொள்ளவும்.

## சகல வாந்திக்கும்

மாதுளைஓடு. சுக்கு, நெற்பொரி, திப்பிலி, சர்க்கரை இவைகளைச் சூரணித்துத் தேனில் கொள்ளவும்.

## மேகங்களுக்கு

துளசிச்சாறு படி இரண்டில், நாலு பலம் வெல்லத்தைக் கரைத்துக் காய்ச்சி குழம்புபதத்தில், திரிகடுகு, அதிமதுரம், ஓமம், கார்போகவரிசி, கந்தகம், கோஷ்டம், பரங்கிப்பட்டை, வாய்விளங்கம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை வறுத்து, சூரணித்துப் பாகிலிட்டுக் கிளறி, அதில் நெய் படி காலும், தேன் படி அரைக்காலும் விட்டு மெழுகுபதத்தில் இறக்கி, நெல்லிக்காயளவில் வங்கபற்பம் ஓர் அரிசியிடைச் சேர்த்துக் கொள்ளத் தீரும்.

## மேகத்திற்கு

வில்வவேரும், வெள்ளைச்சாரணைவேரும் வகைக்குப் பலம் எட்டை இடித்துப் பதக்கு நீரிலிட்டு இரண்டு படியாக்கி, அதில் எட்டு பலம் சர்க்கரையைக் கரைத்துக் காய்ச்சி பாகுபதத்தில், கொத்தமல்லி, முத்தக்காசு, நன்னாரிவேர், சீரகம், தேசாவாரம், சின்னலவங்கப்பட்டை, தாளிசப்பத்திரி, திரிகடுகு, சிறுதேக்கு இவைகள் வகைக்கு விராகனிடை மூன்றைச் சூரணித்திட்டு நெய், தேன் சேர்த்து லேகியம் கிளறி, புன்னைக்காயளவில் அப்பிரகச்செந்தூரம் பணவிடை சேர்த்துக் கொள்ளவும். பத்தியம் : பாலும் சோறும்.

**வேறு :**—விளக்கெண்ணெய், நெய், வேப்பெண்ணெய், தேங்காயெண்ணெய், குமரிச்சாறு, நல்லெண்ணெய், சந்தனத்தூள் இவைகள் வகைக்குப் படி ஒன்று, தேவதாரம் பலம் ஒன்று இவைகளை எல்லாம் அரைத்து எண்ணெய்களில் கலந்து அதில், ஓமம், சீரகம், அதிமதுரம், நறுக்குமூலம், கொத்தமல்லி, குங்குமப்பூ, நாகப்பூ, சண்பகப்பூ, மகிழம்பூ, பேய்ப்புடல்,

பேய்ப்பீர்க்கன் இவைகள் வகைக்கு விராகன் மூன்று கொண்டு எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக் கலக்கி, பசுவின் பால், பொன்னாங்கண்ணிச்சாறு, செவ்வல்லிநீர், எலுமிச்சம்பழச்சாறு, நொச்சிச்சாறு, மேனிச்சாறு, செறுப்படைச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு இவைகள் வகைக்குப் படி விட்டு, ஒன்றாய்க் கலந்து, அடுப்பேற்றிக் கமலாக்கினியாக எரித்து, மூன்று நாள் கொதியிட்டுப் பதம்பார்த்து, கற்பூரம், குங்குமப்பூ, சவ்வாது, கோரோசனை, கஸ்தூரி இவைகள் வகைக்கு விராகன் ஒன்று நுணுக்கிய பொடியைத்தூவி, எடுத்து வடித்து, தலைமுழுகி வரவும்.

## பித்த மேகத்திற்கு

கஞ்சா, சாதிக்காய், கடுக்காய், சுக்கு, வாய்விளங்கம், மிளகு, திப்பிலி, நறுக்குமூலம், மஞ்சள், சாதிப்பத்திரி, கிராம்பு, ஓமம், குராசானி, சித்திரமூலம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை சூரணித்து எடுத்த இடைக்குப் பாதி எள்ளு, பாதி சீனிகூட்டி, ஒன்றாய் இடித்து வைத்துக் கொண்டு, இரண்டு நேரம் கழற்சிக் காயளவு எடுத்து அத்துடன் குன்றிஎடை அப்பிரகசெந்தூரம் சேர்த்துக் கொள்ளத் தீரும். இச்சாபத்தியம்.

## சீத மேகத்திற்கு

சிற்றாமணக்குமுத்து பதக்கு ஒன்றை பூங்காடியிலூறப் போட்டுக் கழுவி, நிழலிலுலர்த்தி இடித்து, இளநீரிலாவது, காடியிலாவது போட்டுக் காய்ச்சி, எடுத்த எண்ணெயில், கொல்லங்கோவைக்கிழங்கு, நீர்பூண்டு இவற்றின் சாறுகள் வகைக்கு அரைப்படி இட்டு அதில் சங்கங்குப்பிவேர்ச்சாறு, கற்றாழைவேர்ச்சாறு, மூக்குத்தியிலைச்சாறு, வெண்ணொச்சிச் சாறு, கறுநொச்சிச்சாறு இவைகள் வகைக்குப படி கால் சேர்த்து அத்துடன் சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், கிராம்பு, கல்நார், பரங்கிப்பட்டை, கல்மதம், பிரப்பங்கிழங்கு, கருஞ்சீரகம், மெருகன்கிழங்கு இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, முதல் நாள் படி கால், இரண்டாம் நாள் படி அரைக்கால், மூன்றாம் நாள் படி வீசம் கொள்ளப் பேதியாகும். வெந்நீரும் சோறும் உண்ணவும். நாற்பது நாளைக்குப் பசுவின் பாலும், துவரம்பருப்பும் கூட்டிப் பத்தியமாக இருக்கவும்.



## ஆம சூலைக்கு

(1) சுக்குப் பலம் வீசம், வில்வவேர் பலம் வீசம் இவைகளைத் தட்டி மோரில் போட்டுக் காய்ச்சி ஆறு நேரம் கொள்ளவும்.

(2) அசமதாகம், சுக்கு, மோர், நெல்பொரி இவைகளைக் கூழ் செய்து, மோர் வார்த்து மூன்று நாள் உண்டு வரவும் நன்று.

## சூலைக்கு

அதிமதுரம், ஆடாதொடை, வில்வவேர், சுக்கு, ஏலம் இவைகள் ஒரு படியைப் பசுவின் மோரில் தட்டிப் போட்டுக் காய்ச்சி இரண்டு நேரம் கொள்ளத் தீரும்.

**வேறு:—**பசுவின் வெண்ணெயில், இந்துப்பு, ஏலம் இவற்றைச் சூரணித்து மத்தித்து சுக்குக் கஷாயத்தில் சாப்பிடத் தீரும்.

## பித்த சூலைக்கு

நெல்பொரி, சுக்கு, வில்வவேர் இவைகளை, கொள்ளை ஊற வைத்த நீரில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சிக் கொள்ளத் தீரும்.

## எரி குடலுக்கு

(1) சீந்தில்கொடி, சுக்கு, இலாமிச்சம்வேர், குருந்தொட்டி வேர், சந்தனம், பிராயன்வேர் இவைகளைத் தட்டி ஒரு படி நீரிலிட்டுக் காய்ச்சி மூன்று நேரம் கொள்ளவும்.

(2) நெல்பொரி, சுக்கு, திப்பிலி, மிளகு, அதிமதுரம் இவைகளை வறுத்துச் சூரணித்து, தேனில் கொள்ளவும். தீரும்.

## கெற்ப சுரோணிதக் கட்டிக்கு

சுக்கு, வெள்ளைப்பூண்டு, குராய்மடல், துத்தம், இந்துப்பு இவைகளை ஓர் அளவாகக் கொண்டு பொடித்து கழற்சிச்சாறு விட்டு அரைத்து நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சித் துட்டிடை, அந்தி சந்தி கொள்ளவும். நல்லெண்ணெயும், நெய்யும் கலந்து, ஊமத்தையிலையை வேகவைத்துக் கட்டவும். கட்டிகளும், வீக்கமும் கரைந்து தீரும்.

**வேறு:—**கந்தகமும், தாளகமும் வகைக்குக் கழஞ்சை தேங்காய்ப்பால் இரண்டரைப்படியில் அரைத்துக் கலக்கிக் காய்ச்சி மூன்று நாளைக்குச் சோறு உண்ட பின்பு கொள்ளவும். வாத

சூலை, பிடிப்பு, கூன் இவைகள் தீரும். பத்தியம் : வெந்நீரும் சோறும். மூன்றும் நாள், ஏழாம் நாள் தலைமுழுகி, உப்புக் கூட்டவும்.

## வாத சூலைக்கு

கால் படி புழுங்கலரிசிப் பொரிமாவை எலுமிச்சம்பழச்சாறு விட்டுப் பிசறி அதில் ரசம் கழஞ்சு விட்டு, இடித்து, அதன் பின் பழச்சாறும், வெற்றிலைச்சாறும், வேலிப்பருத்திச்சாறும் விட்டு இடித்துக் காயவைத்து, அந்தி சந்தி மூன்று நாள் ஆறு வேளை உண்ணவும். பத்தியம் : வெந்நீரும் சோறும் கொடுத்து வர, பித்த சூலை போம்.

## முடக்குச் சூலைக்கு

குருவைநெல்லரிசி படி ஐந்தை வெற்றிலைச்சாற்றில் ஊற வைத்து, மறுநாள் காயவைத்து, முசுமுசுக்கைச்சாற்றில் ஊற வைத்துக் காய்ந்தபின் அதில் ஐந்து கழஞ்சு ரசத்தைக் கலவத்தி லிட்டு நன்றாக அரைத்து அரிசியுடன் கூட்டி இடித்து, வைத்துக் கொண்டு, அதில் கொடிவேலிவேர் ஒரு பிடி, வெற்றிலை ஒரு பிடி, மொசுமொசுக்கை ஒரு பிடி இவற்றை அரைத்து முன் வகையில் கலந்து, புதுக்கலசத்தில் அடைத்து வைத்துக்கொண்டு, பசுவின் தயிரில் ஆறு நேரம் உண்டு வரவும். ஏழு நாள் உண்ணவும். பத்தியம் : வெந்நீரும் சோறும் உண்ணவும். வயிறாதல் கண்டால் பசுவின் தயிரும், வெல்லமும் உண்டு வரவும். பழைய விளக்கெண்ணெயிட்டு முழுகவும்.

## வாத மேக சூலைக்கு

திரிகடுகு, அரத்தை, சிறுதேக்கு, வாய்விளங்கம், சிவதை, செவ்வியம், சடாமாஞ்சி, கருஞ்சீரகம், திப்பிலிமூலம் இவைகள் வகைக்குப் பலம் கால், பரங்கிப்பட்டை பலம் நாலு, இதைச் சுத்திசெய்து பொடியாக்கி, முன் மருந்தை வறுத்து இடித்துச் சேர்த்து, இவற்றுடன், கொடிவேலிவேர், சங்கங்குப்பிவேர், தலைசுருளிவேர், சிவனார்வேம்புவேர், வெள்ளெருக்கு, நிலவாகை, கரிப்பான், தூதுவளை, கழற்சிக்கொழுந்து, கற்றாழைச்சருகு, மொருகங்கிழங்கு, பொடுதலை, பெரிய செருப்படையிலை, சிறு செருப்படை, சிறுகாஞ்சொறி, ஓமம் இவைகள் வகைக்கு இரண்டு கழஞ்சை நிழலிலுலர்த்திப் பொடிசெய்து, சலித்து முன் சூரணத்துடன் கலந்து, வெருகடியளவு தேனில் இரு



நேரம் கொண்டு, நான்கு நாளைக்கொரு தரம் நல்லெண்ணெய் தேய்த்து முழுகவும். பத்தியம் : புளி, புகை, காரமான பதார்த் தங்கள் நீக்கவும். வாதமேகசூலை, புண், கிரந்தி, வாயு எல்லாந் தீரும்.

## குன்ம சூலைக்கு

அரிதாரம், கந்தகம், திரிகடுகு, திரிபாலை இவை வகைக்குக் கழஞ்சு இரண்டைக் கரிப்பான்சாற்றில் ஒரு சாமம் ஆட்டிக் குன்றியளவு குளிகை உருட்டி, இஞ்சிச்சாற்றில் ஒரு குளிகை இடத்தீரும்.

## ஐயச் சூலைக்கு

நீர்ப்பூண்டுச்சாறு, ஊர்சுத்திச்சாறு சங்கங்குப்பிச்சாறு, சுடுதுருத்திச்சாறு, சங்கிலைச்சாறு, சிறுசெருப்படைச்சாறு, மஞ்சள்சாறு, வெள்ளெருக்கஞ்சாறு, துளசிச்சாறு இவை வகைக்குப் படி ஒன்றோடு விளக்கெண்ணெய் படி இரண்டு கலந்து, அதில் பரங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு, கழற்சிக் கொழுந்து, கொடிவேலிவேர், சிவனார்வேம்பு, நிலவேம்பு இவை களை வெதுப்பிப் பொடித்துச் சேர்த்துக் காய்ச்சும்போது, சாதிக்காய், கிராம்பு, ஓமம், கசகசா, மிளகு, சீரகம், கோரோசனை இவைகள் வகைக்குக் கழஞ்சு இரண்டைப் பொடித்துப் போட்டு பதமாய்க் காய்ச்சி, ஒரு கரண்டி வீதம் ஏழு நாள் கொள்ள, சூலைகள், கிரந்திகள், புண் புரைகள், வாத ரோக முதலானவை களும் தீரும்.

## வாய்ச் சூலைக்கு

வெள்வேலம்பட்டை, எருக்கம்பட்டை, கருவேலம்பட்டை துளசி, வேர் இவைகளைக் கஷாயமிட்டு, வாய் கொப்பளிக்கத் தீரும்.

## மேகக் கிரந்திக்கு

சங்கங்குப்பிச்சாறு படி ஒன்றில், பரங்கிப்பட்டை பலம் ஒன்றை நறுக்கி, மூன்று நாள் ஊறவைத்து, நிழலிலுலர்த்திச் சூரணித்து இரண்டு நேரம் மூன்று நாள் கொள்ளவும். மூன்று நாள் பத்தியம் இருக்கவும்.

## சடைக் கிரந்திக்கு

குக்கில், நெல்லிவற்றல், கந்தகம், வெள்ளைக்குங்கிலியம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை வேப்பஞ்சாறு விட்டு

அரைத்து ஒரு படி நெய்யில் போட்டுக் காய்ச்சி இரண்டு நேரம் ஐந்து நாள் கொள்ளவும். பத்தியம் : வெந்நீரும் சோறும்.

## உள்கிரந்தி புறகிரந்திக்கு

வெப்பாலைப்பட்டை பலம் முப்பதைத் தூணி நீரிலிட்டு இரு நாழி ஆக்கி, அதில் நெய் படி இரண்டும், பசுவின் பால் படி ஒன்றும் சேர்த்து; அத்துடன் அதிமதுரம், இலாமிச்சம் வேர், குங்கிலியம், வெப்பாலையரிசி, நன்னாரிவேர், கொட்டைப் பாக்கு, விளாங்காய்ச்சதை, முந்திரிப்பழம், ஏலம், வெள் ளெருக்கு, கொட்டிக்கிழங்கு இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்றைச் சூரணித்துப் போட்டு மூன்று நாள் சிறுதீயிட்டு நாலாம் நாள் வடித்து, இருகழஞ்சு வீதம் கொள்ள, உள்கிரந்தி, புறக்கிரந்தி, வசூரிப்புண், சூலை, அனல் சுட்டபுண், வீக்கம், கிரந்திப்புண், சோம்பல், மிகுதாக்கம் எல்லாந் தீரும். பத்தியம் காக்கவும்.

## கருங் கிரந்திக்கு

சாதிலிங்கம் கழஞ்சு ஒன்றும், பொரிகாரம் கழஞ்சு ஒன்றும் பெர்டித்து சுங்கானில் தணலிட்டு நாலு நாள் புகை பிடிக்கத் தீரும்.

## சகல கிரந்திக்கும்

பரங்கிப்பட்டை பலம் ஒன்று, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், தேசாவரம், சித்திரமூலம், ஓமம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, வாய்விளங்கம் இவைகள் வகைக்குப் பலம் அரைக்கால், இவற்றை வெதுப்பிச் சூரணித்து, வெருகடியளவு இருநேரம் ஐந்து நாட்கொள்ள, கண், கால், எரிவு சகல கிரந்திகள், நீர்க்கடுப்பு எல்லாந் தீரும். பத்தியம் ஐந்து நாள். பதினோரும் நாள் தலை முழுகவும்.

## க்ஷயத்திற்கு

அசுவகந்தி பலம ஒன்று, சாரணைவேர், பிரண்டைவேர், சங்கம்வேர், சிவதைவேர், வெள்ளைச்சாரணைவேர், பெருங் குமிழம்வேர், வாகைவேர், முன்னைவேர், வில்வவேர், பாதிரிவேர், பேராமல்லிவேர், நெல்லிவேர், கண்டங்கத்திரிவேர், வழுதலை வேர் இவைகள் வகைக்குப் பலம் பத்தை இடித்து பதினாறு மரக்கால் நீரிலிட்டுக் காய்ச்சி குருணியாக வடித்து. நெய் படி இரண்டு கூட்டியதில், அதிமதுரம், சாதிப்பத்திரி,



திரிகடுகு, திரிபலை, தேவதாரம், சித்தரத்தை, மஞ்சள், மர மஞ்சள், திப்பிலி, திப்பிலிமூலம், கொடிவேலிவேர், படமடக்கி வேர், வெட்பாலையரிசி, கடுகுரோகணி, எவச்சாரம், சத்திச்சாரம், பெருங்காயம், காச்சுப்பு இவைகள் வகைக்கு விராகன் நாலை, சூரணித்திட்டு நாலு நாள் சிறு தீயாகக் கொதியிட்டுப் பதத்தில் எடுத்து ஐந்தாம் நாள் பதமாய் வடித்து, அதில், காந்தமும், தாமிரபஸ்பமும் வகைக்குப் பலம் இரண்டு, திப்பிலிச் சூரணம் பலம் எட்டு, தேன் படி இரண்டு இவற்றைச் சேர்த்து சற்று அனலில் வைத்து ஒரு கரண்டி வீதம் இருநேரம் கொள்ள, சுவாசகாசம், சயம், இரத்தகாசம், மந்தாரகாசம், ஈளை, கோழை முதலியவை தீரும். பத்தியம்: ஒன்றும் ஆகாது. பால் சோறு கொடுக்கலாம்.

## சீதள இருமல்-ஈளைக்கு

குரும்பைச்சாறு, மேனிச்சாறு, கையான்தகரைச்சாறு இவைகள் வகைக்குப் படி அரை, திப்பிலியும், மிளகும் இவைகளை வகைக்குப் பலம் இரண்டு, கடுக்காய் பலம் மூன்று இவைகளை வெதுப்பிச் சூரணித்திட்டு. மூன்று நாள் ரவிபுடம் வைத்து, நாலாம் நாள் அடுப்பேற்றி லேகியமாகக் கிண்டி, தேன் படி அரை சேர்த்துக் கழற்சிக்காயளவு கொள்ளத் தீரும்.

## மூலத்திற்கு

நிலவேம்பு, வெப்பாலைப்பட்டை, நாயுருவிவேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றைக் குருணி நீரிலிட்டுக் காய்ச்சி பத்து நாள் கொள்ளத் தீரும்.

**வேறு :**—செந்நாயுருவி பலம் ஒன்றை இருதூணி நீரிலிட்டுக் காய்ச்சி குருணியாக்கி அதில் பசுவின் நெய் நாழிவிட்டதில்; கொடிவேலி, கருஞ்சூரைவித்து, வெட்டிவேர், முசுட்டைவேர், சிவதைவேர், திரிகடுகு, திரிபலை, நேர்வாளம், செங்கொட்டை, தான்றிப்பட்டை, அகில்பட்டை, புங்கம்பட்டை, முருங்கப் பட்டை, கஸ்தூரிமஞ்சள், சிறுபிரண்டைக்கிழங்கு, மருள் கிழங்கு, இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்றைப் பசுவின் பாலில் அரைத்துக் கூட்டியதுடன் பசுவின் பால் படி இரண்டு இட்டு, நாலு நாள் சிறு தீயால் எரித்து ஐந்தாம் நாள் வடித்து, மூன்று கழஞ்சளவு பத்து நாள் கொள்ள, ஆறு வகை மூலமுந் தீரும்.

## இரத்த மூலத்திற்கு

சின்னலவங்கப்பட்டை, விலாமிச்சம்வேர், செந்நாயுருவி வேர் இவைகளைக் கஷாயமிட்டு ஐந்து நாள் உண்ணத் தீரும்.

## வரண்ட மூலத்திற்கு

அதிமதுரம், கந்தகம், நிலவேம்பு, காஞ்சுரிவேர் இவைகளை ஓர் அளவாகக் கஷாயமிட்டு ஆறு நேரம் உண்ணத் தீரும்.

## உள் மூலத்திற்கு

அதிமதுரம், வெட்பாலை, சந்தனம், கந்தகம், கருடப்பச்சை, செங்கழுநீர்க்கிழங்கு, நிலவேம்பு இவைகளைக் கஷாயமிட்டு ஆறு நேரம் கொள்ளவும். பத்தியம் காக்கவும்.

## சீழ் மூலத்திற்கு

கடுக்காய் பலம் நூறை இடித்துத் தூணி நீரிலிட்டுக் காய்ச்சி எட்டொன்றாக்கி, அதில் நெய் நாழி சேர்த்து ; சிவதை, இஞ்சி, மிளகு, ஓமம், கடுக்காய், திப்பிலி, சர்க்கரை இவைகள் வகைக்குப் பலம் ஒன்றைச் சூரணித்திட்டு, லேகியமாய்க் கிண்டி புன்னைக்காயளவு கொள்ளத் தீரும்.

## மூல முளைக்கு

முருங்கை மஞ்சளைச் சுட்டு, கள்ளிப்பாலில் குழைத்து முளைக்குத் தடவச் சுருங்கிப் போகும்.

## கன்னக் கிரந்திக்கு

முள்ளிலவம்பட்டையை இடித்துப் பிழிந்த சாறையும், முலைப்பாலையும் விளக்கெண்ணெயில் மத்தித்துப் போடத் தீரும்.

## வெள்ளெழுத்திற்கு

மிளகு, அதிமதுரம் இவ்விரண்டையும் முலைப்பாலில் ஆட்டி உருட்டி முலைப்பாலில் உரைத்துக் கண்ணில், பத்துநாள் போடத் தீரும்.

## பித்தக் கிராணிக்கு

குராசானிஓமம், அபினி, கொம்பரக்கு, சுக்கு, குங்கிலியம், சாதிக்காய் இவைகளைச் சூரணித்து வெருகடியளவு நல்லெண்ணெயில் ஆறு நேரம் கொள்ளப் பொருமல், பேதி தீரும்.



## மூலக் கிராணிக்கு

துத்தமும், ரசமும் வகைக்கு விராகன் ஒன்று, நாகம, கந்தகம், மனோசிலை இவைகள் வகைக்கு விராகன் மூன்று இவைகளை வறுத்துப் பொடித்து, மஞ்சாடி அளவு மூன்று நாள் ஆறு வேளை சாப்பிடத் தீரும்.

**வேறு:**-ஒருகருஞ்சதைக்கோழியை முட்டையிடும்பருவத்தில் கால், குடல், சிறகு, மயிர் இவைகளை நீக்கி, ஓட்டிலிட்டுக் குன்றிச் சாறு படி அரை ஊற்றி வறுத்து அப்பால் தேங்காய்ப்பால் அரை படி ஊற்றிக் கருக வறுத்துச் சூரணித்து, அதில் கடுகு, உள்ளி, அஷ்டசூரணம் இவைகள் கூட்டி மீண்டும் வறுத்து எடுத்து சலித்து அதில் வெருகடியளவு மூன்று நாள் ஆறு வேளை கொண்டு, ஏழு நாள் பத்தியமாக வெந்நீருஞ் சோறும் சாப்பிடு, எட்டாம் நாள் தலை முழுகவும்.

## கபாட மாத்திரை

சாதிலிங்கம், கஞ்சா, சாதிக்காய், திப்பிலி, விளாம்பிசின் இவைகள் வகைக்குக் கழஞ்சு இரண்டு, ஏலம், லவங்கம், அதிவிடையம், கற்கடகசிங்கி, ஓமம், குராசானிஓமம், சாதிப் பத்திரி இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்று இவற்றை எலுமிச்சம்பழச்சாறு, எருமைத்தயிர் இவ்விரண்டும் தனித்தனி விட்டரைத்துக் குன்றியிடை குளிகைசெய்து, தேன் அல்லது சர்க்கரையில் கொடுக்கத் தீரும்.

## குழந்தைகள் கிராணிக்கு

புங்கந்தோல், அசமதாகம், பொடுதலை, வசுவாசி, சாதிக்காய், சீரகம் இவைகள் வகைக்கு விராகன் மூன்றை வெதுப்பிச் சூரணித்து அரைப்படி விளக்கெண்ணெயிலிட்டுப் பதமாய்க் காய்ச்சி துட்டிடை உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கும் பூசத் தீரும்.

## அதிசார பேதிக்கு

நெல்லிவற்றல், நெல்பொரி, அதிவிடையம் இவைகள் வகைக்கு விராகன் மூன்றைச் சூரணித்து தேங்காய்ப்பாலில் குழைத்துக் கொள்ளத் தீரும்.

## அதிசாரத்திற்கு

அரிதாரம், அசமதாகம், திப்பிலி, மிளகு, நற்சீரகம், கருஞ்சீரகம், கருவேப்பிலை, கழற்சிப்பருப்பு, கந்தகம், அப்பிரகம் இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்றை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து இஞ்சிச் சாற்றில் கொள்ளவும்: பத்தியம் : மோருஞ் சோறும்.

**வேறு :—**அதிவிடையம், அபினி, ஓமம், லிங்கம் இவைகள் வகைக்கு விராகன் ஐந்தை முலைப்பாலில் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து அவுரிக் கஷாயத்தில் கொள்ளத் தீரும்.

## வெள்ளைக் குட்டத்திற்கு

கருங்குருவை அரிசி படி ஒன்றைக் காராட்டுப் பாலில் ஊறவைத்து கொடிக்கள்ளிக்கொழுந்து ஒரு பிடி, கொட்டை மாம்பழவிதை பத்து இவற்றைக் கூட்டி இடித்து அத்துடன் இரண்டு பலம் பனைவெல்லம் போட்டு நன்ருய் இடித்து வைத்துக்கொண்டு அரை மண்டலம் தினவும், வெருகடி அளவாக இரண்டு நேரமும் சாப்பிட்டு வரவும். பத்தியமான உணவுகளைக் கொள்ளவும்.

## கருங் குட்டத்திற்கு

சிவனார்வேம்பு, விராளி இவைகளைச் சமன்கொண்டு, குழித்தைலம் வாங்கி அதில் ஒரு கழஞ்சும், குருவைநெல்லு மாவு ஒரு கழஞ்சும் கூட்டி அத்துடன் வங்கபற்பமும் அரை பணவிடை சேர்த்து அரை மண்டலம் உண்டு வரத்தீரும்.

## வயிற்றுக் கடுப்புக்கு

மாம்பட்டை, நாவல்தோல், இலுப்பைத்தோல் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை இடித்துப் பாண்டத்திலிட்டு அடிமட்டி எருமைமோர் விட்டுக் கலந்து அதில் ஓமம் வறுத்துப் பொடித்து மேல் இட்டு மூன்று தினம் காலையில் கொடுத்து வர வயிற்றுக்கடுப்பும், சீதக்கடுப்பும் தீரும்.

**வேறு :—**வெள்ளைப்பூலாவேர்ப்பட்டை, விடத்தலைவேர்ப் பட்டை, நீர்ப்பூலாவேர்ப்பட்டை, கஞ்சா, மஞ்சள் உலர்ந்தது இவைகள் சமன்கூட்டிப் பொடித்து வெருகடி ஆட்டுமோரில் மூன்று நாள் கொடுக்கவும் வயிற்றுள்க் கடுப்பு தீரும்.



**வேறு :—**அத்திப்பிஞ்சு, பூவரசம்பிஞ்சு, மாம்பட்டை இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, களிப்பாக்கு பலம் கால் இவைகளை இடித்து வாழைப்பூப் புட்டவியில் வைத்துப் பிழிந்த சாற்றில் கலந்து அரைத்துச் சாப்பிடவும் தீரும்.

**வேறு :—**சுக்கும், கடுக்காயும் வகைக்குப் பலம் ஒன்றை வறுத்துச் சூரணித்து, வெருகடி சூரணம், பசுவின் வெண் ணெயில் மூன்று நாள் ஆறு நேரம் உண்ணவும் தீரும்.

**வேறு :—**வெந்தயம், வெளிச்சிப்பிசின், அதிவிடையம், வசம்பு, சந்தனம் இவற்றைச் சமன்கொண்டு, தாழைவிழுதுச் சாற்ருல் அரைத்து, நல்லெண்ணெய் அரைப்படியில் வேகவைத் துத் துட்டிடை ஆறு நேரங்கொள்ளவும் வயிற்றுளைவுக் கடுப்பு நீங்கும்.

## வயிற்றுக் கடுப்புக் காய்ச்சலுக்கு

பீமரத்துப்பட்டை, வில்வம்பிஞ்சு, சுக்கு, மாதளம்பழம், மாம்பட்டை, ஓமம், அதிவிடையம் இவைகள் வகைக்குக் கழஞ்சு மூன்று, இடித்துக் கிளிக்கட்டி நீரிலிட்டு வேகவைத்து இறுத்து ஆறு நேரம் கொள்ளக் கடுப்பு, உளைச்சல், ரத்தக் கடுப்பு. காந்தல், சீதக்கடுப்பு இவைகள் தீரும். காரம் நீக்கவும்.

## சீதக் கடுப்புக்கு

(1) அசமதாகமும், சங்குபஸ்பமும், ஆவின்பாலில் அரைத்து ஆறு நேரம் கொள்ள, சீதக்கடுப்பு, வெக்கை. உளைச்சல் இவைகள் தீரும்.

(2) ஆலின் இளவிழுது ஒரு பிடியை எருமைத்தயிரில் அரைத்துக் கொடுக்கவும்.

(3) ஏலத்தை ஊமத்தைச்சாற்றில் அரைத்து கழற்சிக் காயளவு தயிரில் கொள்ளவும்.

(4) நாவல்த்தளிரையும், அதன் பிஞ்சையும் தயிரில் அரைத்துக் கொள்ளவும்.

(5) புளியம்விதைத்தோலையும், ஓமத்தையும் தயிரில் அரைத்துக் கொள்ளவும்.

(6) கோழிஅவரைவிரையையும், அதிவிடையத்தையும் எருமைத்தயிரில் அரைத்துக் கொள்ளவும்.

## இரத்தக் கடுப்புக்கு

(1) சுக்கு பலம் பத்தைத் தட்டி, நான்கு படி நீரிலிட்டு இரண்டு படி ஆக்கி அதில் ஐந்து பலம் பனைவெல்லம் கரைத்துக் காய்ச்சிக் குழம்புபதத்தில், ஓமமும், கருவேப்பிலையும் வகைக்குப் பலம் அரைக்கால் சூரணித்துப் போட்டுக் கிளரி, நெய்யும், தேனும் விட்டு லேகியமாக்கிப் புன்னைக்காயளவு கொள்ளவும்.

(2) சருள்ளியை விளக்கெண்ணெயில் வதக்கி மூன்று நாள் கொள்ளவும்.

(3) வெள்ளுள்ளியை ஆட்டுப்பாலில் வேகவைத்து புன்னைக் காயளவு கொள்ளவும்.

(4) அதிவிடையத்தையும், ஓமத்தையும் தயிரில் அரைத்துக் கொள்ளவும்.

## மூலக் கடுப்புக்கு

நாவல்ப்பட்டை, பிடத்தலையிலை, சின்னலவங்கப்பட்டை, ஓமம் இவைகளைப் பசுவின் பாலிலாவது, தயிரிலாவது அரைத்துக் கொள்ளத் தீரும்.

## சேத்துமக் கழிச்சலுக்கு

நெல்பொரி, நெல்லிவற்றல், அதிவிடையம் இவற்றை வெதுப்பிச் சூரணித்துத் தேங்காய்ப்பாலில் அரைத்துத் தேனில் கொள்ளத்தீரும்.

## பித்தக் கழிச்சலுக்கு

நாவல்ப்பட்டை, மாந்தளிர், பூலாவேர், ஆலமொக்கு இவைகளைக் கஷாயமிட்டுத் தேன் சேர்த்துக் கொள்ளவும்.

## அனல் கழிச்சலுக்கு

கோஷ்டம், நெல்லிமுள்ளி, அதிமதுரம், முத்தக்காசு, இலாமிச்சம்வேர், சந்தனம், இளநீர், நெற்பொரி இவைகளைக் கஷாயமிட்டுக் கொள்ள, அனல் கழிச்சல், வெப்புச்சுரம், அரோசகம், வாந்தி இவைகள் தீரும்.

## வாதக் கழிச்சலுக்கு

பெருமரத்துப்பட்டை, அத்திப்பிஞ்சு, வில்வப்பிஞ்சு, மாம்பட்டை, மாதுளம்பிஞ்சு, அதிவிடையம், சுக்கு, ஓமம் இவைகளைக் கஷாயமிட்டுக் கொள்ளத் தீரும்.



## பித்த வாயுவுக்கு

சுக்கு, வெள்ளருகு, பரங்கிப்பட்டை, சங்கம்வேர், சங்கங்குப்பிவேர், சித்திரமூலம் இவைகள் வகைக்குப் பலம் அரைக்காலைத் தட்டி அடைக்கஷாயம் வைத்துக். கொள்ள வாயு பிடிப்புத் தீரும். வெந்நீரும், சோறும் பத்தியம்.

## மந்தார வாயுவுக்கு

கொடிவேலிவேர் பலம் பத்தை இடித்து குருணி நீரிட்டு ஒரு படியாக்கி, நல்லெண்ணெய் ஒரு படி விட்டு, நற்சீரகம் பலம் இரண்டும், கருஞ்சீரகம், தாளிசப்பத்திரி, தான்றிக்காய் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றும் அரைத்துப் போட்டுக் காய்ச்சிப் பதத்தில் வடித்து, உள்ளுக்குச் சாப்பிட்டு, தலை முழுகியும் வரவும்.

**வேறு:**—வேப்பம்பட்டை, மிளகு, சுக்கு, திப்பிலிமூலம், சிறுதேக்கு, தலைசுருளிவேர் இவைகளைக் கஷாயமிட்டுக் கொள்ளத் தீரும்.

## வாயுவுக்கு

பெருங்காயம் பலம் ஒன்றைக் குருணி நீரிலிட்டு ஒரு படியாகக் காய்ச்சி அதில், சீர்கம், பலம் ஒன்றை அரைத்துக் கலக்கி, சுக்கு, கடுகு, உள்ளி, மிளகு, ஓமம், திப்பிலி, கோஷ்டம், சீரகம் இவை வகைக்கு விராகன் ஐந்தை வெதுப்பிச் சூரணித்துப் போட்டுக் கிளரி, ஒரு கழஞ்சு வீதம் கொள்ள, குன்ம முதலான சகல வாயுவுந் தீரும்.

**வேறு:**—ஏலம், கிராம்பு, அரத்தை, மிளகு, தாளிசப்பத்திரி, சாதிப்பத்திரி, கடுக்காய், கூகைநீறு, திப்பிலி இவைகள் வகைக்கு விராகன் ஒன்றைச் சேர்த்து, இதில் பாதி திப்பிலி கூட்டி வெய்யிலில் காயவைத்துப் பொடித்துச் சர்க்கரை சரிகலந்து, பசுவின்பால் விட்டுப் பிசைந்து, பால் சுடவைத்துப் பிட்டவியில் வைத்து உலர்த்தித் தினமும் ஒரு சிட்டிகை கொள்ளவும், வாயு, அரோசகம், மந்தம், பிடிப்பு, குத்துவலி, வாயிறாதல், உஷ்ணம், உஷ்ணவாயு இவைகள் தீரும். இச்சாபத்தியம்.

## வாயுத்திரட்சிக்கும் கட்டிவலிக்கும்

திரிகடுகு, கண்டங்கத்திரி, திப்பிலி, வெள்ளைப்பூண்டு, ஓமம், பெருங்காயம், கருப்புக்கட்டி இவைகள் வகைக்கு விரா

கன் ஒன்றைப் பொடிசெய்து அத்துடன் விழுதியிலைச்சாறும், நல்லெண்ணெயும் கொஞ்சம் விட்டுப் பிசைந்து சுண்டக் காய்ச்சி அதில் மேற்படி பொடியை இட்டுக்கிண்டி கருப்புக்கட்டி பலம் இரண்டு போட்டு லேகியபதத்தில் இறக்கி, புன்னைக்காயளவு திரிகடிகை சாப்பிட்டுவர வாயு தீரும்.

வேறு:—சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், வால்மிளகு, நற்சீரகம், வெள்ளுள்ளி, கடுகு, இந்துப்பு, கூகைநீர், வெந்தயம் இவைகள் வகைக்குப் பலம் கால், ஏலம், கருஞ்சீரகம், சாதிக்காய், அதிமதுரம், அதிவிடையம் இவைகள் வகைக்குப் பலம் முக்கால், இவற்றை வறுத்துச் சூரணித்து அதில், சீனி பலம் ஒன்றைச் சேர்த்து, தோல்போக்கி நறுக்கின இஞ்சி பலம் ஐந்தை நெய்யில் வறுத்துப் பொடிசெய்து கூட்டிக் கலந்து அந்தி சந்தி வெருகடி அளவு கொள்ள வாயுக்கள் எல்லாந் தீரும்.

## வாயுப் பிடிப்புக்கு

சுக்கு, திப்பிலி, மிளகு, சிறுதேக்கு, சிற்றரத்தை, வாய்விளங்கம், செவ்வியம், நற்சீரகம் இவைகள் வகைக்குப் பலம் கால், திப்பிலிமூலமும், சடாமாஞ்சியும், வகைக்குப் பலம் கால் இவற்றை வறுத்துச் சூரணித்துக் கொண்டு, அதில் பரங்கிப் பட்டை பலம் நாலைச் சுத்திசெய்து சூரணித்து, சூரணங்களை எல்லாம் ஒன்றுகச் சேர்த்து, மிளகு, சிவனார்வேம்பு, தலைசுருளிக் கொடிவேர், சங்கம்வேர், சங்கங்குப்பிவேர், வெள்ளெருக்கு, நிலவாகை, தூதுவளை, கழற்சிக்கொழுந்து, கற்றாழைச்சருகு, மெருகங்கிழங்கு, கரிப்பான், பொடுதலை இவைகளைக் காயவைத்து, சிறுசெருப்படை, முத்துருக்கன், சிறுகுருஞ்சான், பெருங்குருஞ்சான் இவைகள் வகைக்கு விராகன் ஐந்தை உலர்த்திப் பொடிசெய்து முன் சூரணமும் சேர்த்துக் கலக்கி அந்தி சந்தி வெருகடி. தேனில் அல்லது நெய்யில் கொள்ளவும். புளிப்பும் புகையிலையும் தள்ளி உண்டுவர, தாகம், வாதபித்தம், சர்வாங்கவாதம், மேகசூலை, வயிற்றில் உண்டாகும் நோய்கள். வாயு, சூசிகவாயு, ஆனந்தவாயு, குன்மவாயு, அசீரணவாயு, சூலை எரிவு இவைகள் எல்லாந் தீரும். பசுவின் மோர் கூட்டவும்.

## உஷ்ண வாயுவுக்கு

நற்சீரகம் பலம் ஒன்றை எடுத்து கரிப்பான்சாற்றில் ஊறவைத்து உலர்ந்த பின், முசுமுசுக்கைச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து உலர்ந்த பின் பொன்னாங்காணிச்சாறு, கண்டங்கத்திரிச்சாறு, தூதுவளைச்சாறு, ஆடாதொடைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு, இஞ்சிச்சாறு இவைகளிலும் ஒரு நாள் ஊறவைத்து, ஒரு நாள் உலர்த்தி பின்பு பொடிசெய்து சர்க்கரை சமன் கலந்து; தேன் அல்லது நெய் வெருகடி அந்தி சந்தி சாப்பிட்டுவர, உஷ்ணவாயு, சூடு, அரோசகம் இவைகள் எல்லாந் தீரும். இச்சாபத்தியம்.



## மேல்நோக்கும்வாயு, கெண்டை, பொருவயிறு இவைக்கு

பிரண்டைத்தூள் படி ஒன்று, சதுரக்கள்ளிப்பட்டைத் தூள் படி கால், பூலாவேர்த்தூள் படி கால், பொடித்த உப்புப் பொடி படி முக்கால் இவற்றை வஸ்திரகாயம், செய்து புது கலசத்தில் அடைத்து வைத்துக்கொண்டு, அந்தி சந்தி வெருகடி யளவு பத்து நாள் கொள்ளவும். புகையிலை தள்ளி பத்தியம் கொள்ளவும்.

## பாரிச வாயுவுக்கு

வெள்ளுள்ளியும், அசமதாகமும் வகைக்கு ஒரு சேரை நிலவாகைச்சாற்றில் வேகவைத்து, நல்லெண்ணெய் சேர்த்து அரைத்து புன்னைக்காயளவு மூன்று நாள் கொள்ளவும். உப்பு, புளி நீக்கவும்.

## பெரு மூத்திரத்திற்கு

அத்தியிலை, விளாயிலை, சின்னியிலை இவைகள் வகைக்குப் பிடி ஒன்று, நந்தியாவட்டைச்சாறும், பெரும்பூசணிச்சாறும், வகைக்குப் படி அரை, சீரகம், சாரணைவேர், ஏலம், வெள்ளுள்ளி இவைகள் வகைக்கு ஒருகழஞ்சு இவற்றை அரைத்தும் சேர்த்தும் அத்துடன், எண்ணெய் படி அரையுஞ் சேர்த்துக் காய்ச்சி, ஒரு கரண்டியளவு ஏழு நாள் கொள்ளவும். உப்பு, புளி நீக்கவும்.

## நீரடைப்பிற்கு

நன்னாரிவேர், சிறுபீளைவேர், பூலாவேர், நெருஞ்சிவேர், சிறுசீரைவேர், குமிழம்வேர் இவைகளைக் கஷாயமிட்டுக் கொள்ளத் தீரும்.

## பித்த பாண்டுவுக்கு

(1) அரப்பொடி விராகன் நாலு, கந்தகமும், ரசமும் வகைக்கு விராகன் இரண்டு இவைகளைக் கற்றாழம் பாலிலாட்டிக் கற்றாழம்

மடலில் வைத்துச் சீலை மண்செய்து, ஐம்பது எருவில் புடமிட்டு, எடுத்துக் கரிப்பான்சாற்றில் ஏழு நாள் பணவிடை கொண்டு, பத்தியமாய் இருக்கவும். தலைமுழுகி உப்புக் கூட்டவும்.

(2) கோசலம் நாலு படியில் விரைநீக்கிய கடுக்காய் நூறு, சுக்கு இருபது, திப்பிலி-கழஞ்சு. ஒன்று, பனஞ்சர்க்கரை பலம் இரண்டு இவற்றைப் பொடித்துப் போட்டு குழம்பாகக் காய்ச்சி, கடுக்காய் அளவு கொள்ளவும். பாண்டு, சோகை தீரும்.

(3) உகாவேர், தாழைவேர். மேனிவேர், கொழிஞ்சிவேர்; பிராய்வேர், பேராமுட்டிவேர், அகத்திவேர், பாவட்டைவேர், மாவிலிங்கம்வேர், தேவதாரம், வெள்ளுள்ளி, ஓமம், கரிப்பான் வேர், நொச்சிவேர், பிரண்டைவேர், பச்சைமஞ்சள், சாரணை வேர், தழுதாழைவேர், பொடுதலைவேர், கொடிவேலிவேர், எருக்கம்வேர், முருக்கம்வேர், கழற்சிக்கொழுந்து, தான்றிக்காய், குங்கிலியம் இவைகள் வகைக்குப் பலம் அரைக்கால், உப்பு படி அரைக்கால், இவைகளைக் குழம்புபோல் அரைத்துக் காய்ச்சி ஒரு கரண்டி கொள்ள, பித்தபாண்டு, சோகை, காமாலை, வீக்கம் இவைகள் தீரும். பத்தியம்: வெந்நீரும், சோறும். புளி, புகை, மீன், சுரைக்காய் இவற்றை நீக்கவும்,

## வாத பாண்டுவுக்கு

(1) சுக்கு பலம் இருபது, சந்தனம் பலம் இருபது இவற்றைக் குருணி நீரிலிட்டு இரண்டு படியாகக் காய்ச்சி இறுத்து அதில், தயிர் படி ஒன்று, நெய் படி ஒன்று இவற்றைச் சேர்த்து, திரிகடுகு, செவ்வியம், ஓமம், திப்பிலி, திப்பிலிமூலம், நவச்சாரம் இவைகள் வகைக்குக் கழஞ்சு இரண்டு அரைத்துக் கலக்கிக் காய்ச்சி பதத்தில் எடுத்து அதில் நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி அளவு பத்து நாள் கொள்ளவும்,

(2) கரிப்பன்சாறு படி ஒன்றில் மிளகு, அரத்தை, நவச்சாரம் இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்றை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி, நாள் ஒன்றுக்கு ஆறு முறையாகக் கொள்ளவும்.

(3) உகாவேர், கரிப்பான், அரத்தை இவைகளை அடை கஷாயம் வைத்து ஆறு நேரம் கொள்ளவும். பத்தியம் காக்கவும்,



## விஷபாண்டு சோகைக்கு

விளக்கெண்ணெய் படி நாலு, தேசிப்பால் படி கால், நீர்ப் பூண்டின்சாறு படி அரை, சாணைக்கிலை, கரந்தை, சின்னி, கரத் தொட்டி, நாய்வேளை, சங்கம், கொத்தான், சேம்பிலை, பிரமி, துளசி, விஷ்ணுகரந்தி, குப்பமேனி, வாதமடக்கி, தைவேளை, பருத்தியிலை, வெள்ளருகு இவைகளின் சாறு வகைக்குப் படி கால், இவற்றைச் சேர்த்து, அதில் சித்தவரைக்கிழங்கு, சிறு குரட்டைப்பழம், அப்பைக்கோவைக்கிழங்கு, நன்னாரிவேர், கேட்டான்வேர், களாவேர், பெருங்களாவேர், பாதிரிவேர், முன்னைவேர் இவைகள் வகைக்கு விராகனிடை இரண்டை அரைத்துப் போட்டு, கார்போகஅரிசி, அரத்தை, மஞ்சள், விளா வரிசி, லவங்கப்பட்டை, கிராம்பு, பூதகரப்பான்பட்டை, ஆவித் தோல், பெருமரப்பட்டை இவைகள் வகைக்கு கழஞ்சு ஒன்றை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி, மூன்று நாள் சிறு கொதியிட்டு நாலாம் நாள் வடித்து ஒரு கழஞ்சு விதம் மூன்று நாள் உட் கொண்டு மேலும் பூச, காமாலையும், வீக்கமும் போம். ஆறு நாள் பத்தியம் இருக்கவும்.

## ஊது காமாலைக்கு

சீலையொட்டிச்சாறு, நீலிச்சாறு. முசுமுசுக்கைச்சாறு, பெருமரப்பட்டைச்சாறு, அமுக்கரூச்சாறு, நீர்முள்ளிக்சாறு, முயல்செவிச்சாறு, சாரணைச்சாறு இவை வகைக்கு உழக்கு ஒன்றைச் சேர்த்து தலைசுருளிவேர், சித்தாமுட்டிவேர், பேரா முட்டிவேர், நஞ்சுண்டன்வேர், சத்திச்சாரணைவேர், பூதகரப்பன் வேர், ஆடாதொடைவேர் இவைகள் வகைக்குக் கால் பலத்தை அரைத்துப் போட்டு, அத்துடன் சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், சன்னலவங்கம், சிலவேர்ப்பு, பேய்ப்புடல், கோஷ்டம், அக்கரா காரம், கொத்தமல்லி இவைகள் வகைக்கு விராகனிடை இரண்டை வெதுப்பிப் பொடித்துத்தூவி பாகுபதத்தில் தேன் படி இரண்டும், நெய் படி அரையும் சேர்த்து லேகியம் செய்து, கழற்சிக்காயளவு இரண்டு நேரம் கொள்ளவும். புளி, புகை நீக்கிப் பத்தியமாக இருத்தல் வேண்டும்.

## சகல கிரந்திக்கும்

செங்கத்தாரிப்பட்டை, கிரந்திநாயகம்சமூலம், அமுக்கருக் கிழங்கு, இவைகள் வகைக்குப் பலம் பத்து, கருஞ்சூரைப்பட்டை.

புண்ணுக்குப்பூண்டுசமூலம்; செம்முள்ளிவேர் இவைகள் வகைக்
குப் பலம் இரண்டு, இவைகளை இடித்து நாலு மரக்கால்
நீரிலிட்டு இரண்டு படியாக்கி அதில், நீர்பூண்டு பலம் ஒன்று,
கஸ்தூரிமஞ்சள், சுக்கு, திப்பிலி, கார்போகவரிசி, கருஞ்சீரகம்,
திப்பிலிமூலம், குராசானிஓமம், சிவதைவேர், வசம்பு இவைகள்
வகைக்குப் பலம் அரைக்காலைப் பசுவின் பாலில் அரைத்துப்
போட்டு, சிற்றாமணக்கெண்ணெய் படி இரண்டு சேர்த்து ஒரு
நாள் ஊறவைத்து, மறுநாள் காய்ச்சிப் பதத்தில் வடித்து, நாள்
ஒன்றுக்கு ஒருமுறை துட்டிடை கொடுக்க, மேகப்புண்ணுகள்,
தடிப்புகள் 'முதலிய சகல மேகங்களும் தீரும். உப்பு, புளி
நீக்கவும்.

## கபாலசூலை, கன்னக்கிரந்தி, முக்குமாதேவி, பீனிசம் இவைக்கு

புலியின்டஞ்சாறு, ஆதானிச்சாறு, கருவேம்பின்சாறு,
மிளகரணைச்சாறு, மிளகு தக்காளிச்சாறு, ஆடாதொடைச்சாறு,
நொச்சிச்சாறு, கருநொச்சிச்சாறு, தழுதாழைச்சாறு, முயல்கண்
சாறு, தலைசுருளிச்சாறு, வேலிப்பருத்திச்சாறு, செங்கத்தாரிச்
சாறு, முரட்டிமாதுளைச்சாறு, அசுவகந்திச்சாறு, சங்கிலைச்சாறு,
மாதுளைச்சாறு, வில்வச்சாறு, புண்ணாக்கிலைச்சாறு இவைகள்
வகைக்குப் படி கால், விளக்கெண்ணெய் படி நாலு இவற்றை
சேர்த்து, அதில் நொச்சிவேர், சூரைவேர், செங்கத்தாரிவேர்,
வெப்பாலைவேர், ஆடாதொடைவேர், தவசிமுருங்கைவேர்,
கொடிவேலிவேர், சித்தாமல்லிவேர், ஊமத்தன்வேர், உத்தம
தாளிவேர், முடக்கொத்தான்வேர், பூலாவேர், மாதுளைவேர்,
தலைசுருளிவேர், மருதாணிவேர், வெள்ளைச்சாரணைவேர் இவை
கள் வகைக்குக் கால் பலத்தைப் பசுவின் பாலில் அரைத்துப்
போட்டு, கார்போகவரிசி, கருஞ்சீரகம், திரிகடுகு, திரிபலை,
நவச்சாரம், திப்பிலிமூலம், செவ்வியம், மகரப்பூ, வால்மிளகு,
கோஷ்டம், வலம்புரிக்காய், கடல்நுரை, கடுக்காய், சாதிக்காய்,
ஏலம், கிராம்பு, லவங்கம், ஆத்திப்பூ, செண்பகப்பூ, திப்பிலி,
கஸ்தூரிமஞ்சள் இவைகள் வகைக்குப் பலம் அரைக்கால்
பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி ஒரு நாள் ஊறவைத்து
மூன்று நாள் சிறு கொதியில் நான்காம் நாள் காயவைத்து,
வடித்து, காலையில் ஒரு துட்டிடை கொண்டும் மேலுக்குப் பூசி
யும் கால் மண்டலம் பத்தியமாயிருக்க, பக்கசூலை, கன்னப்புத்து,



காதுகேளாமை, கண்டமாலை, லிங்கப்புத்து; யோனிச்சூலை,
லிங்கசூலை, மேகப்புண், புரை, மண்டைக்குத்து, மண்டைச்சூலை,
தந்தசூலை, கன்னசூலை, யோனிப்புத்து, கிரந்தி, அரையாப்பு,
மேகவட்டை, தடிப்பு இவைகள் தீரும்.

## குதிரைவலிப்பு, முயல்வலிப்பு, வீச்சுகள் முதலியவற்றிற்கு

வெள்ளைப்பாஷாணம், சாதிலிங்கம், ஊசிக்காந்தம், நெல்
லிக்காய், கந்தகம், மனோசிலை, தாளகம் இவைகள் வகைக்குப்
பலம் அரைக்காலை எருக்கம்பால் விட்டு ஒரு சாமமரைத்து,
சுண்டைக்காயளவு குளிகைசெய்து உலர்த்தி அதில் பாதியை
எடுத்து, ஒரு தூணி வேப்பெண்ணெய் விட்டு அரைத்து சுடர்த்
தைலம் இறக்கி அந்த எண்ணெயில் ஒரு மாத்திரையை உரைத்து
மூன்று நேரம் கொடுக்கவும். மேற்படி எண்ணெயை மேலும்
பூசி பத்தியமாய் இருக்கவும்.

## க்ஷயம் காசத்திற்கு

தூதுவளை பலம் பத்தைப் பதக்கு நீரிலிட்டு இரண்டு படி
யாக்கி அதில், வெள்ளாட்டுப் பால் படி ஒன்று சேர்த்து, சுக்கு,
திப்பிலி, தேசாவாரம், அரத்தை, கோஷ்டம், அக்கிராகாரம்,
மிளகு, ஓமம், சன்னலவங்கம், சடாமாஞ்சி, நற்சீரகம், ஆனைத்
திப்பிலி, சாதிக்காய், கடுக்காய், தான்றிக்காய், கடுகுரோகணி,
திப்பிலிமூலம், செவ்வியம், கோரோசனை, அதிவிடையம், வால்
மிளகு இவைகள் வகைக்குக் கால் பலத்தை வெதுப்பிச்
சூரணித்துக் குழம்புபதமாகக் காய்ந்து வரும்போது, நெய் படி
காலும், தேன் படி அரையும் விட்டுக் கிளறி, எடுக்குமுன்
ஆனைத்திப்பிலியை வெதுப்பிப் பொடித்த சூரணம் படி கால்
சேர்த்து, லேகியம் செய்து இரண்டு நேரம் புன்னைக்காயளவு
கொள்ளவும். புளி, புகை நீக்கவும்.

## அந்தர வாயுவுக்கு

சுக்கு, மிளகு, திப்பிலி, கோஷ்டம், அக்கிராகாரம், திப்பிலி
மூலம், விதைநீக்கிய கடுக்காய், கடுகுரோகணி, அதிவிடையம்,
ஓமம், வெள்ளுள்ளி, பெருங்காயம் இவைகள் வகைக்குக் கால்
பலத்தை வெதுப்பிச் சூரணித்து, நிலவாகைச்சாறும், பசுவின்
பாலும் சரிகூட்டி அதில் சேர்த்து சீனி பலம் ஐந்தைக் கூட்டிப்
பிசைந்து கழற்சிக்காயளவு உருண்டை செய்து உலர்த்தி, ஒரு

உருண்டையைப் பசுவின் பாலில் ஊறவைத்து இரண்டு நேரமும் சாப்பிடவும்.

## உதர வாயுவுக்கு

சுக்கு, திப்பிலி, தேசாவாரம், ஓமம், அரத்தை, பெருங்காயம், கோஷ்டம், கூகைநீர், அதிமதுரம், மிளகு, அதிவிடையம் கடுகுரோகணி, திப்பிலிமூலம், இஞ்சி இவைகள் வகைக்குப் பலம் அரைக்கால் தூக்கி, வெதுப்பிச் சூரணித்து, வீழிச்சாறு விட்டுக் கிளறி, தேனும், நல்லெண்ணெயும் சேர்த்து, லேகியம் செய்து இரு நேரம் கொள்ளத் தீரும்.

## க்ஷயம், காசம், பீனிசத்திற்கு

செம்முள்ளிசமூலம் முப்பது பலத்தை தரித்திடித்து, தூணி நீரிலிட்டு இரண்டு படியாகக் காய்ச்சி, வெள்ளாட்டுப் பால் படி ஒன்றும், ஆடாதொடைச்சாறு படி ஒன்றும் கலந்து அத்துடன் வசம்பு, கோஷ்டம், வெள்ளுள்ளி, ஏலம், லவங்கம், மிளகு இவைகள் வகைக்குப் பலம், அரைத்துப் போட்டு, நல்லெண்ணெய் படி இரண்டு விட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து அதில் தலைமுழுகி வரத்தீரும்.

## பீனிசத்திற்கு

ரசமும், ஈயமும் வகைக்கு விராகனிடை ஒன்றை உருக்கி விளக்கெண்ணெய்க்குள்ளே சாய்த்து விளக்கெண்ணெய்த் தெரிமுகத்தில் வரும் புகையை மூக்கில் பிடிக்கவும். பத்தியம்: ஐந்தாம் நாள் இளநீர் விட்டுச் சாப்பிடவும்.

வேறு:—நல்லெண்ணெய் படி ஒன்று, வாதமடக்கிச்சாறு, நொச்சிச்சாறு, ஆதண்டைச்சாறு, துளசிச்சாறு இவைகள் வகைக்குப் படி ஒன்று, மிளகும், அரத்தையும் வகைக்குப் பலம் ஒன்று, மிளகரணைப்பட்டை, ஏலம் லவங்கம் இவைகள் வகைக்குப் பலம் அரை இவைகளை அரைத்துப் போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து, எட்டு நாளைக்கு இரண்டு முறை முழுக சகல பீனிசமும், தலைஇடி, வலி, நீரேற்றம் இவைகள் தீரும்.

## பிரமியம், நீர்க்கடுப்பு, வெள்ளை இவைக்கு

முன்னைவேர், நாவல்ப்பட்டை, பூலாவேர், முத்தக்காசு, நன்னாரிவேர், முல்லைவேர், சீந்தில்தண்டு, தாமரைவளையம்,



சிற்றுமுட்டிவேர், சகதேவிவேர், சிறுகீரைவேர், இலாமிச்சம்வேர், பொன்னாங்காணிவேர், பிராய்வேர் இவைகளை ஓர் அளவாகக் கொண்டு இடித்து அதன் அளவுக்கு எட்டு பங்கு இளநீரில் போட்டு மூன்றொன்றாய்க் காய்ச்சி அதில் ஒரு பங்கு நெய் சேர்த்துச் சுண்டி வரும்போது சீனிசர்க்கரை, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், கோஷ்டம் இவைகள் வகைக்குப் பலம் ஐந்து பொடித்திட்டுக் காய்ச்சும்போது, ஏலம், பச்சிலை, நாகப்பூ, கச்சோலம், செண்பகப்பூ, அதிமதுரம், நெல்லிவற்றல், சதகுப்பை, நற்சீரகம் இவைகள் வகைக்குப் பலம் அரை பொடித்துப் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் எடுத்து; இரண்டு நேரம் துட்டிடை கொண்டு, இச்சாபத்தியமாய் பத்து நாள் உண்டு, தலைமுழுகி வர, மேகம், கடுப்பு, வெள்ளை, கிரீச்சரம், துர்மாமிசம், புண், நீர்வழியும்புண், கசடு, மேல்தடிப்பு, நீர்த்தாரை, எரிவு இவைகள் தீரும.

## நீர்க்கடுப்பு வெள்ளைக்கு

இலந்தையிலையை முள்ளிக்காயளவு பசுவின் பாலில்

(1) இலந்தையிலையை முள்ளிக்காயளவு பிரமியம் முதலானதும் தீரும்.
அரைத்து மூன்று நாள் குடிக்க பிரமியம் முதலானதும் தீரும்.

(2) வெளிச்சிப்பிசினை அவித்துப் பிழிந்து சீனிசேர்த்து மூன்று நாள் உட்கொள்ள பிரமியமும், வெள்ளைக்கடுப்பும் தீரும்.

(3) ஏலம், சாரணைவேர் இவற்றை அரைத்து, வெள்ளரிப் பிஞ்சை அவித்த நீரில், மூன்று நாட்கொள்ள பிரமியந் தீரும்.

(4) தாழையிலையைப் பசுவின் பாலில் அரைத்துப் பத்து நாள் குடிக்க வெள்ளைச்சூடு தீரும்.

(5) தக்காளியிலையைப் பசுவின் பாலில் அரைத்து சீனி சேர்த்துக் குடிக்கவும்.

(6) நெருஞ்சிவேரைப் பசுவின் பாலிலாவது, சிறுநீரிலாவது அரைத்துப் பத்து நாள் குடிக்க நீரிழிவும், பிரமியமுந் தீரும்.

(7) எழுத்தாணிப்பூண்டையும், சீனியையும் பசுவின் பாலில் அரைத்துப் பத்து நாள் குடிக்க நீர்க்கடுப்பு, பிரமியம், வெள்ளை முதலியவை தீரும்.

## நீரிழிவுக்கு

வாழைப்பூவும் வாழைக்கிழங்கும் ஒரு துலாம் இடித்துப் பதக்கு நீரிலிட்டு நாலு படியாகக் காய்ச்சினதில், நெய் படி ஒன்று, கருப்புப்பால் படி ஒன்று, நெல்லிக்காய்ச்சாறு படி ஒன்று, நிலப்பனைக்கிழங்குச்சாறு படி ஒன்று, தண்ணீர் விட்டான்கிழங்குச்சாறு படி ஒன்று, இவற்றைக் கலந்து, ஏலம், லவங்கம், கந்தகம், சடாமாஞ்சி, திரிபலை, நெய்தற் கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு இவைகளை ஒவ்வோர் பலம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, ஒரு கரண்டி வீதம் கொள்ளத் தீரும்.

**வேறு:**—குளவிந்த மஞ்சள், கொசுமெழுகு, கருவேலம் பிசின், மரமஞ்சள், கடுகு இவைகளை நன்றாய் மெழுகுபோல் நாலு சாமம் அரைத்துத் தேனில் குழைத்துப் பத்து நாள் சாப்பிட்டு வர நீரிறக்கம் மாறி விடும். தேகம் புஷ்டி ஆகும். பத்தியம்: உப்புக் கூட்டவும்.

**வேறு:**—வேலிரண்டுவேர், பூலிரண்டுவேர், மரமஞ்சள், முத்தக்காசு, ஆவாரந்தோல், கொன்றைத்தோல், நெட்டி இவைகளை ஓர் அளவாகக் கொண்டு, முறைப்படி கஷாயமிட்டுக் குடிக்கவும்.

## நீர்ச்சுருக்குக்கு

கடுக்காய், கற்பூரவல்லி, நெரிஞ்சிவேர், கொன்றைப்பழம் இவைகள் வகைக்கு விராகன் இரண்டைக் கஷாயமிட்டு மூன்று நாள் குடிக்க நீர் விழும்.

**வேறு:**—வாகைவேர், பெருமுன்னைவேர், உளுந்துவேர், கண்டங்கத்திரிவேர், சிறுகீரைவேர், நெருஞ்சிவேர், வில்வவேர், சிறுபீளைவேர் இவைகள் வகைக்குப் பலம் அரையைக் கஷாய மிட்டு வடித்து அதில் வெங்காரத்தைப் பொடித்திட்டு மூன்று நாள் குடிக்க, நீர் இறங்கும். பத்தியம்: புளி, புகை தள்ளவும்.

## சூட்டுக்கடுப்பு, வெட்டை, அனல், உஷ்ணம் இவற்றிற்கு

அருகம்வேர் பலம் மூன்று, மிளகு பலம் கால் இவற்றை நாழிநீரில் தட்டிப்போட்டு கால் படியாக வற்றியதில் பசுவின் நெய், கூகைநீர், மாதுளைஓடு, ஏலம், அதிமதுரம் இவைகள் 



வகைக்கு விராகன் மூன்று கூட்டி நன்றாய்ப் பொடித்து, முன கஷாயத்தில், வெருகடி இட்டுக் காலையில் ஐந்து நாள் அருந்த, வெட்டை, அனல், நீர்க்கடுப்பு, உஷ்ணம் இவைகள் எல்லாந் தீரும். பத்தியம் இல்லை.

## வாதவெட்டை, எலும்புருக்கி, கால்கை வற்றிப் போதல், அத்திசுரம் இவற்றிற்கு

பசுவின் பால், செங்கழுநீர்ச்சாறு, இளநீர் இவைகள் வகைக்குப் படி ஒன்றும், வல்லாரைச்சாறு, பசுவின் நெய் இவைகள் வகைக்குப் படி இரண்டும் கலந்து; குன்றிவேர், ஓமம், மதுரம், செங்கழுநீர்க்கிழங்கு, கோஷ்டம், கோரோசனை, கற்பூரம், அவுரிஇலை இவைகள் வகைக்கு விராகனிடை இரண்டை அரைத்துக் கலக்கி, சிறு கொதியாக மூன்றும் நாள், எரியிட்டு வடித்து, காசிடை இரண்டு நேரம் கொள்ளவும். பத்தியம் காக்கவும்.

## நீர்க்கடுப்புக்கு

சீரகம், ஓரிலைத்தாமரை, செஞ்சந்தனம், நெருஞ்சிவேர், சிறுபீளைவேர், கோஷ்டம், வால்மிளகு, ஏலம் இவைகளைச் சூரணித்து நாலில் ஒரு பங்கு, சீனி சேர்த்துக் கலந்து, வெருகடி யளவு இரண்டு நேரமும் நெய்யில் கொள்ள, கைகால் எரிவு தீரும். தேகம் குளிர்ச்சி ஆகும். நீர்கடுப்பும் போம்.

## பீலிகைக்கு

சூதம், கந்தகம், நிமிளை, அரிதாரம், தாமிரபற்பம், மனோசிலை இவைகள் வகைக்கு விராகன் ஐந்தைத் திப்பிலிக் கஷாயத்தில் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி, தேன், எள், வெல்லம், திரிகடுகுச்சூரணம், சிறுதேக்குச்சூரணம் இவைகளில் ஒன்றில் ஏழு நாள் இரண்டு நேரம் கொள்ள, கவிச்சை, பாண்டு, பீலிகை இவைகள் தீரும். பத்தியம்: வெந் நீரும், சோறும். ஏழு நாள் இருந்து, தலை முழுகவும்.

**வேறு:**—கந்தகம், சூதம், தாளகம், மனோசிலை, தாமிர பற்பம், வெண்காரம், திரிபலை, திரிகடுகு இவைகள் வகைக்கு விராகன் இரண்டை திரிகடுகுச்சாற்றில் அரைத்து மிளகளவு மாத்திரை செய்து, இஞ்சிச்சாற்றில் ஆறு நாள் கொள்ள பாண்டும் வல்லைக்கட்டியும் தீரும். பத்தியம் இருந்து தலை கவிச்சையும், முழுகவும்.

## படர்தாமரைக்கும், பாததாமரைக்கும்

மருதாணி, நாகவல்லி, கந்தகம், எருக்கம்வேர், வச்சிர வல்லி, கருஞ்சீரகம், ஏலம், துருசு, வங்கபற்பம் இவைகள் வகைக்கு விராகன் மூன்றைச் சிறுநீரிலரைத்து, மிளகளவு மாத்திரை செய்து, காலை மாலை மூன்று நாளைக்கு இஞ்சிச் சாற்றிலாவது, நற்சீரகப்பொடியிலாவது, கொண்டு மேலுக்கும் பூச, சூலை, குஷ்டம், சில்விஷம் இவைகள் தீரும். பத்தியம் : வெந்நீரும், சோறும.

## பித்தப்படைக்கு

இங்கோலவேர்ப்பட்டை, மருக்காரைவேர்ப்பட்டை, மருக் காரைவிதை இவைகள் வகைக்குப் பலம் கால் கொண்டு, எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு சாமமரைத்து, சுண்டைக் காயளவு மாத்திரை செய்து உலர்த்தி, கார்போகரிசிச் சூரணத்தில் காலை மாலை ஐந்து நாள் உட்கொண்டு, மேலுக்கும் பூசி ஐந்து நாள் வெந்நீரும், சோறும் உண்ண, படர்தாமரை கருவங்கு, கருந்தேமல், சொரி, அரிப்பு முதலியவை தீரும்.

## கரப்பானுக்கு

சிந்தில்தண்டு, ஆடாதொடைவேர், பேய்ப்புடல், கண்டங் கத்திரிவேர், துத்திவேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை இடித்துப் பதக்குநீரில் ஒரு நாழியாகும் படி வற்றக்காய்ச்சி இருநேரமும், உழக்கு வீதம் பசுவின் நெய் கூட்டி மூன்று நாளைக்குச் சாப்பிட்டு வர, பித்தக்கரப்பான், வீக்கம், அரிப்பு இவைகள் தீரும். பத்தியம் : உப்பு மாத்திரம் கூட்டவும்.

## மூலக்கரப்பானுக்கு

கொட்டைக்கரந்தையிலை, கோவையிலை, பருத்தியிலை, குறிஞ்சான்இலை, வட்டத்துத்தியிலை, நெல்லிக்காய், வெற்றிலை இவைகளின் சாறு வகைக்குக் கழஞ்சு எடுத்து வற்றக் காய்ச்சி தினமும் சாப்பிட்டுவர, மூலக்கரப்பான் தீரும்.

## வாதக்கரப்பானுக்கு

சவரியிலை துன்னாம் ஒன்றை இடித்துத் தூணி நீரிலிட்டு வற்றிய இழிநாழி நீரில் கருஞ்சீரகம், அதிவிடையம், மரமஞ்சள் இவைகள் வகைக்குப் பலம் கால் அரைத்து நல்லெண்ணெய்



இரு நாழியில் கலந்து காய்ச்சி மெழுகுபதம் பார்த்து வடித்து தலை முழுகிவர, வாதக்கரப்பான், அனல், அனல்கட்டி, அரிப்பு, வீக்கம் இவைகள் தீரும். புளியும், புகையும் தலை முழுகின நாள்த் தள்ளி மறுநாள் கூட்டவும்.

## மேகக்கரப்பானுக்கு

சிறுகுருஞ்சான்வேர், நன்னாரிவேர், நிலவேம்பு, நெல்லி முள்ளி, குழித்தாமரை,கொழிஞ்சிவேர், தக்காளிவேர் இவைகளை ஆட்டுப் பாலில் அரைத்து ஆட்டுப்பாலும், நல்லெண்ணெயும் விட்டுக் கொதிக்க வைத்து தலை முழுகி வரவும். மேகக் கரப்பான், சொரி இவைகள் தீரும். பத்தியமாய் இருக்கவும்.

## பிள்ளை பெற்றவளுக்கு வயிற்றில் சீழ் பிடிப்பதற்கு

மூங்கில்இலை, அதன்புறணி, வெப்பாலைஅரிசி, முகில் மஞ்சள், சதகுப்பை, கண்டங்கத்திரிவேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை இடித்து நான்கு நாழிநீரிட்டு வற்றவைத்து ஒரு படியாகக் காய்ச்சி வைத்துக்கொண்டு தினமும் அரைக்கால் படியாக சாப்பிட்டுவர, சீழ், இரத்தம், வலி இவைகள் தீரும். பத்தியம் : உப்பு, புளி நீக்கவும்.

## லிங்கப்புற்று, யோனிப்புற்று, கால்புற்று இவைகளுக்கு

ரசகற்பூரம், சேங்கொட்டை, கொடிவேலி, முந்திரிப்பழம், சவ்வீரம் இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை எருக்கம் பாலில் அரைத்துப் பசுவின் நெய்யில் மத்தித்துப் பூச, லிங்கப் புற்று, யோனிப்புற்று, கால்புற்று இவைகள் தீரும்.

## ஆசனப்பவுத்திரம், கொடிப்பவுத்திரம் இவைக்கு

சூதம், வெள்ளைப்பாஷாணம், லிங்கம், தாரம், கந்தகம், காந்தம், கல்மதம், இலவங்கம், மிளகு, கோஷ்டம், மஞ்சள், கருஞ்சீரகம், கொடிவேலிவேர்ப்பட்டை இவைகள் வகைக்கு விராகன் ஒன்றைப் பொடித்துக்கூட்டி ஊமத்தஞ்சாற்றில் அரைத்து ஒன்பது உருண்டைகளாகச் செய்து உலர்த்தி மோரும் சோறும் உண்டபின், ஒரு குளிகை புளியமரத்தின் தோல் கொண்டு தீயிட்டு அதில் போட்டுப் புகை பிடித்து வர பவுத்திரங்களெல்லாந் தீரும். விளக்கெண்ணெயிலிட்டு தலை முழுகவும்.

## பவுத்திரங்களுக்கு

குப்பைமேனிவேர் பலம் பத்தை நிழலிலுலர்த்தி இடித்து வெருகடி நெய்யில், காலையும், மாலையுமாக இருபது நாள் சாப்பிட்டு வர கொடிபவுத்திரம், ஆசனபவுத்திரம், பக்க பவுத்திரம் இவைகள் தீரும். அரை மண்டலம் சாப்பிட்டு வரவும்.

**வேறு:**—ஆவாரங்கரி விராகன் நான்கு, லவங்கம் விராகன் மூன்று, குங்கிலியம் விராகன் இரண்டு, வீரம் விராகன் ஒன்று இவைகளை அரைத்துப் பன்னிரண்டு உருண்டையாகச் செய்து ஒரு படி புளியந்தணலில் ஒரு உருண்டையிட்டு மூன்றுநாள் புகை பிடிக்கவும். மோருஞ்சோறும் உண்ணவும்.

**வேறு:**-வேப்பம்பட்டை, கண்டங்கத்திரிவேர், பேய்ப்புடல், ஆடாதொடை, சீந்தில், விழுதி இவைகளின் வேர் வகைக்குப் பலம் பத்தை இடித்து இரண்டு தூணி நீரிலிட்டு வற்றக் காய்ச்சி இரு நாழியாக்கி, அதில் நெய் நாழிவிட்டு அதனோடு பொன் முசுட்டை, வாய்விளங்கம், செவ்வியம், தேவதாரம், ஆனைத் திப்பிலி, யவச்சாரம், சத்திச்சாரம், ஏலம், மஞ்சள், வெட்பாலை அரிசி, குக்கில்; வசம்பு, உள்ளி இவைகள் வகைக்குப் பலம் கால் அரைத்துக் கலக்கிப் பதத்தில் வடித்து, உள்ளுக்குங்கொண்டு, மூக்கிலுமிட்டு மேலுக்கும் பூசிவர, கொடிபவுத்திரம், ஆசனப் பவுத்திரம், புண், புரை இவைகள் தீரும். பத்தியமாக இருக்கவும்.

## சத்தி-விக்கலுக்கு

அதிமதுரம், அரத்தை, திப்பிலி இவற்றைச் சமன் கொண்டு வறுத்து நெய்யில் கொள்ள, சத்தி, விக்கல் தீரும்.

**வேறு:**—ஒரு படி எள்ளைப் பொரித்து நுணுக்கிப் பசுவின் நெய்யும், தேனும், சீனியும் கூட்டி கொள்ள, சத்தி, விக்கல் தீரும்.

**வேறு:**—நெல்பொரியும், வில்வவேரும் வகைக்குப் பலம் காலை ஒரு படி நீரிலிட்டு உழக்காக்கி, துட்டிடை தேன் விட்டுச் சாப்பிட விக்கல் தீரும்.

## மேலேப்பத்திற்கு

நாலு நண்டைப் பிடித்துக் கொழுப்பெடுத்து அத்துடன் உருக்கிய பசு நெய்யில் ஒரு துட்டிடையும் சீனி ஒரு காசிடையும் கூட்டிக் கலந்து காலை மாலை பத்து நாளைக்குச் சாப்பிட்டுவர, மேலேப்பம், வாயு, சுவையின்மை இவை யாவும் தீரும். பத்தியம்: புளி, புகை நீக்கி விடவும்.



## அரோசகத்திற்கு

பசுவின் நெய் படி கால், தேன் படி முக்கால், நீர்ப்பூண்டு பலம் வீசம், நற்சீரகம் பலம் இரண்டு இவைகளை வறுத்துப் பொடிசெய்து நெய்யில் மத்தித்து கொள்ள, அரோசகம் தீரும்.

## அரையாப்புக்கு

பொடுதலையை அரைத்து நல்லெண்ணெய் விட்டு, புழுங்கலரிசித் தவிட்டில் புரட்டி புன்னைக்காயளவு காலை மாலை மூன்று நாள் உண்ண அரையாப்புக் கட்டி தீரும்.

**வேறு:**—நத்தைச்சூரிவேர், தைவேளைவேர், வெள்ளுள்ளி இவைகள் வகைக்கு ஒரு பிடியைத்தட்டி நல்லெண்ணெய் கால் படியிலிட்டுச் சூரியபுடமிட்டு, மூன்று நாள் சாப்பிட அரையாப்புத் தீரும்.

**வேறு:**—நத்தைச்சதையையும், தேனையும், சுண்ணும்பையும் அரைத்து அரையாப்புக் கட்டிக்குப்பூசிக் காய்ந்தபின் இளவெந்நீரை மேலே மூன்று நாள் விட, கட்டி அமுங்கிப்போம்.

**வேறு:**-நத்தைச்சூரிவிரையைப் புன்னைக்காயளவு அரைத்து நல்லெண்ணெயில் குழப்பிச் சாப்பிட, கட்டி தெரிக்கும். பத்தியம்: உப்பு, புளி ஆகாது.

**வேறு:**—துருசு, சுட்டசங்கு, சீனிக்காரம் இவைகளை வேலிப் பருத்திச்சாறு விட்டு அரைத்து முலைப்பால் விட்டு மத்தித்துப் புண்ணிலிட உலரும்.

## பழுத்த அரையாப்புக்கு

வடிகட்டின சுண்ணும்பை மோரில் அரைத்துப் பத்துப் போடவும், அல்லது மஞ்சளைச்சுட்டு எருக்கம்பாலில் அரைத்துப் பத்துப் போடவும் அரையாப்புத் தெரிக்கும்.

## பெருவியாதியின் குணம்

சிற்சில தேகத்தில் தடிப்பும், அரிப்பும் கண்டு, மேலெங்கும் புண்ணும், சீயும் ரத்தமுமாகச் சொரியும். தோல் தடித்து

சட்டை தள்ளும், காலும் கையும் நாளுக்கு நாள் குறைந்து அழுகி வரும். புண் உலராமல் இருக்கும்.

## பெருவியாதிக்கு

கந்தகம், நாவி, அப்பிரகம், செந்தூரம் இவைகள் வகைக்குப் பலம் கால், ரசம் விராகன் ஒன்று, நற்சீரகம், சீந்தில் சர்க்கரை, வாய்விளங்கம், ஏலம், எவச்சாரம், நொச்சிவேர் இவைகள் வகைக்குப் பலம் அரை; இவைகளை நொச்சிச்சாற்றிலும், மாதுளம்பழச்சாற்றிலும் அரைத்து, குன்றி இடையாய் உருட்டி, நிழலிலுலர்த்தி, இஞ்சிச்சாற்றிலாவது, பஞ்சமூலக் கஷாயத்திலாவது, தசமூலக்கஷாயத்திலாவது இருநேரமும், பத்து நாள் கொள்ள, பெருவியாதி, அரிப்பு, சொரிபுண், கால் கை குறைவு முதலியன போம். பத்தியம்: வெந்நீரும், சோறும். காலுப்பு கூட்டலாம். தைரியமாய் இருந்தால் உப்புக் கூட்டாமலுண்டு வரவும்.

## அஷ்டசந்தன வகை

அகில்கட்டை, மலாசந்தனக்காய், கோஷ்டம், கஸ்தூரி மஞ்சள், குங்குமப்பூ, பச்சைகற்பூரம், சமுத்திராபச்சை இவை அஷ்டசந்தனங்களாம்.

## இடுப்புவலிக்கும், இடுப்புப்பிடிக்கும்

முடக்கொத்தானிலை முடி மூன்று, கருப்பட்டி பலம் ஒன்று இவைகளை இடித்து மூன்று பங்கிட்டு நல்லெண்ணெயில் பிசரி மூன்று நாள் சாப்பிட்டு, ஆறு நாள் பத்தியம் இருந்து, ஏழாம் நாள் தலை முழுகி, உப்பு, புளி கூட்டவும்.

## செத்த பிள்ளை விழ

முள்ளிலவம்பட்டை, வசம்பு, உள்ளி இவற்றைச் சரியிடை கூட்டி நல்லெண்ணெயில் துட்டிடையிட்டுக் கொடுக்க, வயிற்றில் செத்த பிள்ளை விழும்.

## கல்லடைப்பு, சதையடைப்பு, நீரடைப்பு, சீயடைப்பு இவைகளுக்கு

இரசம், கந்தகம், தாமிரபற்பம் இவைகள் விராகன் மூன்றை நொச்சிச்சாற்றில் அரைத்து உருட்டி வில்லை செய்து ஒரு தாளியில் குறுணி மணலிட்டு அதன்மேல் ஒரு சட்டிக்குள்



வில்லையை வைத்து மேல்சட்டிக்கு சீலை மண்செய்து ஒரு சாம மெரித்து எடுத்து மாதுளைவேரும் துளசிவேரும் வகைக்கு விராகன் இரண்டைக் கூட்டி மாதுளம்பழச்சாறு விட்டு அரைத்து குளிகை செய்து, மாதுளஞ்சாற்றில் மூன்று நேரம் கொள்ளக் கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பு எல்லாந் தீரும். பத்தியமாய் இருக்கவும்.

## ஊரல் வலிக்கு

கச்சநாரத்தம்பழச்சாற்றில், நவச்சாரத்தைப் பொங்க விட்டுக் கொடுக்கவும். வெள்ளாட்டு உப்புக்கண்டம் ரசம் செய்து கொடுக்கலாம்.

## பிள்ளை உண்டாக

கடுகு, மஞ்சள், நிலவாகை, கடுக்காய், தைவேளை, வீழி, உள்ளி, வெண்காரம், ஆமணக்கிலை இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை விளக்கெண்ணெய் படி இரண்டு விட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து, தினமும் ஒரு கரண்டி கொள்ள, சூதக வாயு, சூதகப்புழு இவைகள் தீரும். பத்தியம்: உப்பு கூட்டி வரவும்.

## காதில்சீழ் வழிதலுக்கு

கடுகுரோகணி, நொத்தமல்லி, கடுகு, மிளகு, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள் இவைகளைச் சமன்கொண்டு தட்டி நல்லெண ணெய் விட்டு அதில் பாதி தேங்காய் நெய் விட்டுக் காய்ச்சி காதில் விட்டு அடைக்கச் சீழ் மாறும். பத்து நாளைக்குச் செய்யவும்.

## காது மந்தத்திற்கு

ஆடுதின்னாப்பாளைவேர், புங்கம்பட்டை, வசம்பு இவைகளை இடித்து நல்லெண்ணெயில் விட்டு எரித்து, பதம் பார்த்து எடுத்துக் கொண்டு, அந்தி சந்தி, காதில் விட்டு அடைக்க, செவிடு, மந்தம் இவைகள் தீரும்.

## காதுக்குத்தல், இரைச்சலுக்கு

எருக்கு, உள்ளி, முருங்கை, நொச்சி, துளசி, பாகல்க்கிழங்கு இஞ்சி, கருவாழைக்கிழங்கு, கருஞ்சீரகம், முசுமுசுக்கை, நல்லெண்ணெய் இவற்றைக் கூட்டிக் காய்ச்சி, காதில் விட்டு அடைக்கவும்.

## சிலந்திபடுவன் மார்பில்ஆணி இவைகளுக்கு

ரசமும், கட்டிச்சூடமும் வகைக்கு விராகன் ஒன்றைப் பசுவின் நெய் படி அரைக்கால் விட்டு ஒரு சாமமரைத்து, சிற்றுமணக்கின் பருப்பும் சேர்த்து அரைத்து மத்தித்துப் பூசத் தீரும்

## கைப்பிளவை நகப்பிளவை பக்கப்பிளவை இவைகளுக்கு

(1) சங்கம்வேர், வசம்பு, உள்ளி, மிளகு இவைகளைத் தட்டி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சிப் புண்ணிலிட உலரும்.

(2) வீழிஇலையைப் பிட்டவித்துக் கட்டலாம்.

(3) கிழுவம்பாலையும், பொன்முசுட்டைவேரையும் நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சிப்போட, சகல பிளவைகளுந் தீரும்.

## மருந்திட்டிற்கு

(1) பசுவின் பாலில் வாழைப்பூவை பிட்டவித்துப் பிழிந்து மூன்று நாள் கொள்ள மருந்திட்டு மயக்கந் தீரும்.

(2) அரசங்கொழுந்தைப் பசுவின் பாலில் அரைத்து மூன்று நாள் கொள்ளலாம்.

(3) ஆவரையரிசி விராகன் ஒன்றைப் பசுவின் பாலில் அரைத்து மூன்று நாள் கொள்ளத் தீரும். பத்தியம் காக்கவும்.

## ரசகந்தி பாஷாணங்களுக்கு முறிவு

குன்றி, பூலா, பாகல், சிறுகீரை, நீலி, சங்கு, நன்னாரி, முசுமுசுக்கை இவைகளின் வேர், வெற்றிலைக்கொடி இவைகளைக் கூட்டி கஷாயமிட்டு மூன்றுநாள் கொடுத்து, வெற்றிலைக்கொடிச் சார், புண்ணாக்கிலை இவைகளைக் கொண்டு தோய்த்து மேலில் தளமிட்டு, வெய்யலில் நிறுத்திக் கால் கைகளை தட்டி வைத்து நீர்விட்டால் ரசம் இறங்கும்.

## மசக்கைக்கு

(1) சிறுகீரைச்சாற்றில் நற்சீரகமும், வெல்லமும் வகைக்கு ஒரு காசிடையை அரைத்துக் கலக்கி மூன்று நாள் குடிக்க மசக்கை தீரும்.



(2) நீலிவேர், குன்றிவேர், சீரகம் இவைகளைக் கஷாயமிட்டுக் கொள்ள, மசக்கை, மதிமயக்கம், பிரட்டு இவைகள் தீரும்.

## முயல் வலிப்புக்கு

மிளகையும், உள்ளியையும் அரைத்துக் கால் படி மிதிபாகல்சாற்றில் கலக்கிப் பத்து நாள் குடிக்கவும். கடும்பத்தியம் காக்கவும்.

## வலிப்புகளுக்கு

ரசம், வசம்பு, நாவி, சுக்கு, மிளகு, திப்பிலி, இலுப்பைப்பூ, இந்துப்பு, உத்திராக்கம், சமுத்திராப்பழம் இவைகள் வகைக்கு விராகன் மூன்றை அதற்குச் சரியிடை வெள்வெங்காயம் சேர்த்து அரைத்தபின், எருக்கம்பால் விட்டு அரைத்து, உலர வைத்து மேலும் வெள்ளாட்டுப்பால் விட்டு அரைத்து அதற்குப் பின் மீன்பித்துச் சேர்த்து அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து உலர்த்தித் தேனில் கொள்ள, சகல வலிப்புகளுந் தீரும். பத்தியம் காக்கவும்.

**வேறு :—**ரசம், லோகம், அரிதாரம், பூரம், வெள்ளைப்பாஷாணம் இவைகள் வகைக்கு விராகன் மூன்றும், தாமரைப்பூ, கஞ்சாயிலை, கள்ளிக்கொழுந்து இவைகள் வகைக்குப் பலம் ஒன்றும் கூட்டி, நொச்சிச்சாற்றில் அரைத்துப் பின்பு வாலுளுவைத் தைலத்தில் புரட்டி, மிளகளவு மாத்திரை செய்து உலர்த்தி, இஞ்சிச்சாற்றில் இரு வேளை ஏழு நாள் கொள்ள, சகல வலிப்புகளுந் தீரும். உப்புக்கூட்டி, புளிபுகை தள்ளவும்.

## பிரவிச்சு வலிப்புக்கு

தலைமண்டைஓடு, பசுவின் கொம்பு, வேப்பம்புண்ணாக்கு, நாய்மண்டைஓடு, எலுமிச்சம்விதை, தேவதாரம், புலித்தோல், பன்றிமலம், பாம்பின்சட்டை இவைகளை ஓர் அளவாகக் கொண்டு இடித்துப் பொடித்து, இரண்டு நேரம் புகை போடத் தீரும்.

## பிரவிச்சுக்கு

(1) சங்கம்வேர், எருக்கம்வேர், வெள்ளுள்ளி இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை அரைத்து வேப்பெண்ணெயும், நல்லெண்ணெயும் வகைக்குப் படி கால் சேர்த்துக் காய்ச்சி, உள்ளுக்குக் கொடுத்து மேலுக்குப் பூசியும் வர நோய் போம்.

(2) கரிப்பான்சாறு, சதிரக்கள்ளிச்சாறு, நொச்சிச்சாறு, வேலிப்பருத்திச்சாறு, தும்பைச்சாறு, முடக்கொத்தான்சாறு, வாதமடக்கிச்சாறு, வெள்ளுள்ளித்தைலம் இவைகள் வகைக்குப் படி அரைக்கால் நல்லெண்ணெயும், வேப்பெண்ணெயும் வகைக்குப் படி ஒன்றரை, திரிகடுகும், வசம்பும் வகைக்குப் பலம் ஒன்று இவற்றை அரைத்து மெழுகுபதத்தில் காய்ச்சி, உள்ளுக்குக் கொடுத்து, மேலுக்குப் பூசியும் வர சகல வலிப்புகளும் தீரும், உப்பு மாத்திரம் கூட்டிப் பத்தியம் இருக்கவும்.

## கபால பித்தத்திற்கு

நெல்லிக்காய்ச்சாறு, குமரிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, கொடும்பைச்சாறு, கரிப்பான்சாறு, சிறுகீரைச்சாறு, பசுவின் பால், நல்லெண்ணெய் இவைகள் வகைக்குப் படி ஒன்றரை சேர்த்து இதில் அதிமதுரமும், ஓமமும், வகைக்குப் பலம் ஒன்றை அரைத்துப் போட்டு, மெழுகுபதத்தில் காய்ச்சித் தலை முழுகிவர பித்தமயக்கம் தீரும்.

## மண்டை கிறுகிறுப்புக்கு

முசுமுசுக்கைச்சாறு படி அரையை மணலை வறுத்துக் கொட்டிவிட்ட சட்டியில் விட்டுப் பொங்கி அடங்கியபின் இறுத்துக் கொள்ளவும்.

## மண்டை இடிக்கு

அரத்தை, சுக்கு, திப்பிலி, மிளகு, சாம்பிராணி, குங்கிலியம், கஸ்தூரிமஞ்சள், கடுகு, சதகுப்பை, வெள்ளுள்ளி, ஓமம் இவைகளைக் கஞ்சாச்சாற்றில் அரைத்துத் துணியிலூற்றித் திரித்து உலர்த்தி வேப்பெண்ணெயில் துவைத்துத் தீயில் கொளுத்தி அவித்து புகையை மூக்கில் பிடிக்கத் தீரும்.

## ஒருதலைவலிக்கு

கொம்பேரிமூக்கன்சதை, மஞ்சள், எட்டிப்பட்டை இவைகளைப் பொடித்து வெள்ளைத்துணியில் தடவித் திரித்து நல்லெண்ணெயில் துவைத்து விளக்கில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்கத் தீரும்.

## மூலைப்பவுத்திரத்திற்கு

(1) ஆவரைவேரையும், வெல்லத்தையும் பாக்களவு அரைத்து நெய்யில் கொடுக்கவும்,



(2) ஆவரைக்கொழுந்தை வெல்லத்தில் அரைத்து நெய்யில் புரட்டிக் கொடுக்கலாம்.

## கெர்ப்பவிப்புருதிக்கு

முருங்கைவேர்ச்சாறு, நல்லெண்ணெய், பசுவின் பால் இவைகள் வகைக்குப் படி முக்கால் கலந்து, அதில், அதிமதுரம் பலம் ஒன்றை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி, காலை ஒருவேளை சாப்பிட, வலி, சீழ், இரத்தம் வடிதல் இவைகள் தீரும். பத்தியம்: வெந்நீருஞ் சோறும்.

## சொரிக்கு

கொன்றைத்துளிர், புளியந்துளிர், குளவிந்தமஞ்சள், இந்துப்பு, கடுக்காய், ஏலம் இவற்றை ஓர் எடையாகக் கொண்டு நிலவாகைச்சாறும், உணிஇலைச்சாறும் விட்டு அரைத்துப் பத்து நாள் பூச சொரி தீரும்.

## வாயிலும் மூக்கிலும் இரத்தம் விழுகிறதற்கு

சிற்றாமல்லி, கீழ்க்காய், நெல்லி, கண்டங்கத்திரி, வேப்பம் பட்டை, கோஷ்டம், கடுகுரோகணி, முந்திரிப்பழம், பேரீச்சம் பழம், திப்பிலி, முருங்கைப்பூ, நெல்விமுள்ளி, சிறுதேக்கு, இலாமிச்சம்வேர், அதிவிடையம் இவைகள் வகைக்கு விராகனிடை மூன்றை அரைத்து அத்துடன், நெய் படி ஒன்று கூட்டிக் காய்ச்சி வடித்து, காலை மாலை இரு வேளையும் சாப்பிடவும். குருதியமூல்நோய் என்னும் மூக்கு, கண், வாந்தி, கழிச்சல் இவைகளில் குருதி (இரத்தம்) வடிகின்ற நோய் தீரும்.

## கற்றாழை நாற்றத்திற்கு

(1) விளாவேர், இலாமிச்சம்வேர், கற்றாழைவேர், கஸ்தூரி மஞ்சள் இவைகளை ஒன்று கூட்டி அரைத்துப் பூசிக் குளிக்கவும்.

(2) துளசியிலை பிடி, சந்தனம் பலம் ஒன்று, சண்பகப்பூ பலம் அரை ஆக இவைகளை அரைத்து நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சி, உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலுக்கும் பூசத் தீரும்.

## சகல கட்டிகளுக்கும்

உணிஇலைச்சாறு, மேனிஇலைச்சாறு, கரிப்பான்சாறு இவை வகைக்கு ஒரு படி ஆழாக்கில், வளையலுப்பும், ஓமமும் வகைக்குப்

பலம் ஒன்றை அரைத்துக் காய்ச்சி உள்ளுக்குச் சாப்பிட்டு, மேலும் பூசி ; தேங்காய்ப்பாலும், கஞ்சியும் குடிக்கத் தீரும்.

### பீனிசம், சொரி, மயக்கம், தடிப்பு இவைகளுக்கு

வேப்பந்தோல், கடுகுரோகணி, கோஷ்டம், முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், முருங்கைப்பூ, நெல்லிப்பூ, ஆனைத்திப்பிலி இவைகளை அரைத்து முலைப்பாலில் நசியமிட்டு, மேலுக்கும்பூசி, உள்ளுக்கும் மூன்று நாள் குடிக்க வீக்கமும், பீனிசமும் தீரும்.

### வங்கு-தேமலுக்கு

சுண்ணும்பையும், மஞ்சளையும் நல்லெண்ணெயிலிட்டுக் காய்ச்சி மூன்று நாள் பூசவும்.

### சிறு சிரங்குகளுக்கு

கருஞ்சீரகம், கடுகு, துருசு இம்மூன்றையும் புங்கம்பால் விட்டு அரைத்து மூன்று நாள் பூசிக் குளிக்கத் தீரும்.

### பெருஞ்சிரங்குகளுக்கு

(1) குக்கில் பலம் கால், அவுரிஇலை பலம் ஒன்று இவற்றை விளக்கெண்ணெயில் அரைத்துக் காய்ச்சிப் பூசவும்.

(2) எருக்கிலை, புளிஇலை இரண்டையும் அவுரிச்சாற்றில் அரைத்து நல்லெண்ணெய் சேர்த்துக் குழப்பி, மூன்று நாளைக்குப்பூசத் தீரும்.

### மூக்கடைப்பிற்கு

நற்சீரகம், திப்பிலி, கடுகு, கொழிஞ்சியிலை, மிளகு, இந்துப்பு, உள்ளி இவைகளை அரைத்து நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சி மூக்கிலிட்டு உள்ளுக்கும் கொள்ளத் தீரும்.

### மயிர் வளர

ஆலமுகிழ், சௌரிஇலை, அவுரிஇலை, கரிப்பானிலை, உள்ளிப் பருப்பு இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை அரைத்து நல் லெண்ணெயிலிட்டுக் காய்ச்சித் தலைமுழுக மயிர் வளரும்.

### பல் வலிக்கு

(1) உத்தாமிவேரைத்தட்டி அவ்விடைக்கு மேற்படி இலைச்சாறு சேர்த்து முறைப்படி குடிநீரிட்டு, அக்குடிநீர் படி



அரைக்கு செம்மறி ஆட்டுப்பால் படி கால் விட்டுக் காய்ச்சி, மூன்று நாள் வாய் கொப்பளிக்கவும்.

(2) கண்டங்கத்திரிக்காயை நல்லெண்ணெயில் பிசரி தணலில் போட்டு அந்தி சந்தி புகை பிடிக்கவும்.

(3) வேலிப்பருத்திவேர், துளசிவேர், கருவேலம்வேர் இவைகளைக் கஷாயமிட்டது படி காலும், காராட்டுப்பால், வேலி பருத்திச்சாறு இவைகள் வகைக்கோர் உழக்கும் கலந்து வாய் கொப்புளிக்கவும் தீரும்.

### நசுவணிப் புண்ணுக்கு

சங்கிலை பிடி ஒன்று, காட்டுமிளகு பலம் கால், அதிமதுரம் பலம் கால் இவற்றை நல்லெண்ணெயில் அரைத்துப் போட்டுக் காய்ச்சித் தடவத் தீரும்.

### சூதகவாயு வலிக்கு

வேலிஅணைஞ்சானிலை பிடி ஒன்று, பிரண்டைக்கொழுந்து பிடி ஒன்று, வசம்பு, உள்ளி, சுக்கு, திப்பிலி இவைகள் வகைக்கு விராகன் மூன்று இவைகளை வெதுப்பிச் சூரணித்து வெள்ளுள்ளித் தைலத்தில் பிசைந்து, புன்னைக்காயளவு கொள்ளத் தீரும்.

### சூதக வாயுவுக்கு

கும்மட்டிக்காய்ச்சாறு படி காலில் சுக்கு, மிளகு, அதிமதுரம், சிறுதேக்கு, மூங்கில் குருத்து இவைகள் வகைக்குப் பலம் காலை அரைத்துக் கலக்கி நல்லெண்ணெய் உழக்கு ஒன்று சேர்த்துக் காய்ச்சி, அரைக்கரண்டியளவு, மூன்று நாள் குடிக்கவும். உப்பு, புளி நீக்கவும்.

### கடி விஷத்திற்கு

ஆதளம்வேர் விராகன் ஒன்றைப் பசுவின்பாலில் அரைத்து மூன்று நாள் குடிக்கவும். ஆறு நாள் பத்தியம் காக்கவும்.

### ஊமை பேச

முசுமுசுக்கைச்சாறும், பசுவின் பாலும் வகைக்குப் படி நாலு, பசுவின் வெண்ணெய் பலம் மூன்று, தேன் படி ஒன்று, தேசிப்பழச்சாறு படி அரை, இஞ்சிச்சாறு படி அரை இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி, பனைவெல்லம் பலம் ஐந்தைத் தட்டிப் போட்டு குழம்புபதத்தில், கடுக்காய்த்தூள் படி கால் போட்டுக்

கிண்டி பதத்தில் எடுத்து, நெல்லுக்குள் பத்து நாள் வைத்து எடுத்து, இரண்டு நேரம் நாலு கழஞ்சு வீதம் பதினைந்து நாள் சாப்பிட, வெறி, மயக்கம், பித்தமயக்கம், தலை கிறுகிறுப்பு இவைகள் தீரும். ஊமையும் பேசும். புளி, புகை நீக்கவும்.

## ஊமைக்கு

ஆதளை இலைச்சாறு, முத்துருக்கஞ்சாறு, ஆறுமாதத்து காடி, எருமை மோர் இவைகளைக் கலந்து துவாலையிட்டு வரவும்.

## மதி மயக்கத்திற்கு

இஞ்சிச்சாறு, கழுதைப்பால், சீனிசர்க்கரை இவற்றைச் சேர்த்து பத்து நாள் சாப்பிடத் தீரும்.

## பிள்ளைபெற்று மறுபடியும் பிள்ளை இல்லாமல் இருக்கிறவர்களுக்கு

கொல்லன்கோவைக்கிழங்கை பாக்களவு அரைத்து வாழைப் பழத்துக்குள் வைத்து, ஐந்து நாள் கொள்ள, பிள்ளை உண்டாகும்.

## சுக்கிரப்படுவானுக்கு

(1) திப்பிலி, சீனிக்காரம், சங்கு இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்று சாமமரைத்து நீண்ட மாத்திரைகளாகச் செய்து உலர்த்தியதை முலைப்பாலில் அரைத்துக் கண்ணிலிடத் தீரும்.

(2) பொன்னாங்காணிச்சாறு படி ஒன்றும், விளக்கெண்ணெய் படி ஒன்றும் கலந்து அதில் இலாமிச்சம்வேர், நெல்லிமுள்ளி, செண்பகப்பூ, வெட்டிவேர், நீர்ப்பூலாவேர், புளிப்புப் பிரண்டைக்கிழங்கு, கொத்தமல்லி கற்பூரம், கிராம்பு, ஏலம், கோஷ்டம், லவங்கம், லவங்கப்பத்திரி, செவ்வல்லிப்பூ, சிறுதேக்கு இவைகள் வகைக்கு விராகன் இரண்டு இவற்றை அரைத்துக் கலக்கிக் காய்ச்சி; பதத்தில் சிறுகீரைச்சாறு, நெல்லிக்காய்ச்சாறு, இளநீர், பசுவின்பால் இவைகள் வகைக்குப் படி ஒன்றும் முலைப்பால் படி காலும் சேர்த்து மூன்று நாள் சிறு தீயிட்டு எரித்து, நான்காம் நாள் ஒரு பலம் சந்தனம் அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து, நாலு நாளைக்கொரு முறை தலைமுழுகிப் பாசிப்பயறை அரைத்துத் தேய்த்து முழுக, கண்மேகம், படலம், கண்காசம், சுக்கிரப்படுவன் முதலியவை தீரும். பத்தியம்: காரம், புகை நீக்கவும்.



## சுழி கண்ணுக்கு

முலைப்பாலும், விளக்கெண்ணெயும் வகைக்குப் படி கால் மஞ்சள் பலம் ஒன்று, இண்டங்கொழுந்து பிடி ஒன்று, இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துப் போட்டுக் காய்ச்சி, காசிடை கொண்டு மேலும் பூசவும். ஏழு நாளைக்கு இவ்வாறு செய்யச் சுழிகண் போம்.

## இழி கண்ணுக்கு

சிறுபுள்ளடிஇலைச்சாறுடன் மிளகு சேர்த்து அரைத்து, சட்டியிலிட்டு வறுத்து சாம்பலாக்கி, அதை பசுவின் வெண்ணெயில் குழப்பிக் கண்ணிலிடத் தீரும்.

## கண்ணோய்களுக்கு

திரிகடுகு, திரிபலை, அதிமதுரம், பீதரோகணி, வெண்காரம், பொன்மெழுகு, வெள்ளைக்காக்கணம்வேர் இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை பசுவின்பால், கழுதைப்பால், முலைப்பால் இவைகளைச் சமமாய்க் கூட்டி, விட்டு அரைத்து, மாத்திரை செய்து, முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிட, காசம், குந்தம், வெள்ளைப்பூ இவைகள் தீரும். காரம், புகை நீக்கவும்.

**வேறு:**—மணிக்கொட்டைப்பாசியிலை, துத்தம், துருசு இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை சிறுநீர் விட்டு அரைத்து உருட்டி, முலைப்பாலில் உரைத்து இருபது நாளைக்குக் கண்ணிலிட, புகைச்சலும், விழி மயக்கமுந் தீரும்.

**வேறு:**—முயல் புழுக்கையைச் சுட்டு வெங்கலத்திலிட்டு இருப்புலக்கை கொண்டு சிறிது சிறிதாக பசுவின் வெண்ணெய் கூட்டி அரைத்து களிம்பாக்கி வைத்துக்கொண்டு, மாலையில் பத்து நாள் போடவும். தீரும்.

**வேறு:**—நாயுருவிவேர், எலுமிச்சம்பழச்சாறு, சீனக்காரம் இவற்றைக் கூட்டி, காய்ந்த இரும்புத்தகட்டின்மீது வைத்து இழைத்துக் களிம்புபோல் அரைத்து வழித்து, மூன்று நாள் புறவளையமிடத் தீரும்.

**வேறு:**—சங்கு, திப்பிலி, மிளகு, சுக்கு, தேவதாரம், அதிமதுரம், புங்குஓடு, பீதரோகணி, துத்தம், மனோசிலை இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்றை நந்தியாவட்டைப்பூச்சாறு

விட்டு அரைத்துக் குளிகைசெய்து, மேற்படி சாற்றில் உரைத்துக் கண்ணிலிடக் காசமும், படலமும் தீரும்.

**வேறு** :—சிவதைச்சாறும், குறுந்தொட்டிச்சாறும் வகைக்குப் படி ஒன்று, தேவதாரம் பலம் மூன்று, குருந்தொட்டிவேர் பலம் இரண்டு, சந்தனம் பலம் இரண்டு, நல்லெண்ணெய் படி இரண்டு. இவற்றுள் அரைத்த சரக்குகளை, சாற்றுடன் கலக்கிப் பசுவின் பால் படி இரண்டு சேர்த்துக் காய்ச்சி, வடித்து தலை முழுகி வரத்தீரும்.

**வேறு** :—கற்றுழஞ்சாறு, கரிப்பான்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பசுவின்பால் இவைகள் வகைக்குப் படி ஒன்றும், நல்லெண்ணெய் படி இரண்டும் சேர்த்து, அதில் நன்னாரிவேர், இலாமிச்சம் வேர், அதிமதுரம், சந்தனம் இவைகள் வகைக்கு விராகனிடை இரண்டை அரைத்துப் போட்டு, பதமாய்க் காய்ச்சி,. தலை முழுகிவர கண் வியாதிகள் எல்லாந்தீரும்.

**வேறு** :—எண்ணெய், நெய், தயிர், பன்னீர் இவைகள் வகைக்குக் கரண்டியளவு கொண்டு கட்டெறும்பு பத்தும், செந்நாயுருவி விராகன் ஒன்றும் சுட்டுக் கூட்டி, கடப்பைக் கல்லில் மேற்படி மருந்துகளைத் தேய்த்து அரைத்துக் குழப்பி, முலைப்பால் ஒரு கரண்டி விட்டு மத்தித்து கண்ணைச் சுற்றிப் புறவளையமிடக் கண்வலி தீரும்.

**வேறு** :—தாழைவிழுது, இந்துப்பு, தான்றிக்காய், கடுக்காய், நெல்விமுள்ளி, சுக்கு, திப்பிலி, மிளகு, பச்சைக்கற்பூரம் இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை தேனில் அரைத்து, வைத்துக் கொண்டு அதில் சிறிது மாலையில், முலைப்பால், தேன், பழச்சாறு, கரிப்பான்சாறு, நந்தியாவட்டைச்சாறு, முருங்கைப் பூச்சாறு இவைகளில் ஏதேனும் ஒன்றில் குழைத்துக் கண்ணிலிட, மாலைக்கண், காசம், படலம், திமிரம், ஆணி, மயக்கம் எல்லாம் தீரும்.

## பிள்ளைகளுக்குண்டாகும் மாந்தத்திற்கு

நறுநொச்சியிலை, மிளகு தக்காளி, சங்கிலை, குட்டித்தக்காளி இலை, துளசிஇலை, நாய்துளசிஇலை இவற்றைத் துவைத்து எடுத்த சாறு வகைக்குப் படி அரை, நீர்ப்பூண்டு பலம் காலே அரைக்கால், உள்ளி பலம் அரைக்கால் இவற்றை அரைத்துக்



கலக்கிக் காய்ச்சி, உள்ளுக்குக் கொடுத்து, மேலுக்கும் பூசிவர சகல மாந்தமும் தீரும். பத்தியம் காக்கவும்.

## சகல மாந்தத்திற்கும்

பெருந்தும்பைஇலை, கௌதும்பைஇலை, சிறுதும்பைஇலை, அவுரிஇலை, முருங்கைஇலை, செம்முள்ளிஇலை, துளசிஇலை, ஆடுதுவேளைஇலை, குட்டிவிளாஇலை, கோழியாவரைஇலை, கண்டங்கத்திரிஇலை, கோட்டைக்கிரந்திஇலை, மிளகுதக்காளிஇலை, ஆவரையிலை, நல்லவேளைஇலை, நாய்வேளைஇலை, புண்ணாக்கிலை இவைகளை வகைக்கு ஒரு பிடியாகக் கொண்டு இடித்துப் பிழிந்த சாறுகள் விளக்கெண்ணெய் படி கால், வெற்றிலைச்சாறு படி கால் இவற்றைக் கலந்து, அதில், வசம்பு, உள்ளி, கஸ்தூரிமஞ்சள், கரிமஞ்சள், நற்சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய், கடுகுரோகணி இவைகள் வகைக்கு விராகன் மூன்றை வறுத்து அரைத்துக் கலக்கி, அடுப்பேற்றிக் காய்ச்சி, மெழுகுபதம் பார்த்து இறக்கும்போது, அதில் பெருங்காயமும், ஆமையோடும் வகைக்கு விராகன் மூன்றை வறுத்துப் பொடித்துப் போட்டு சூரியபுடத்தில் வைத்து நீர்சுண்டியபின் எடுத்துக் காசிடை கொடுக்கவும். இப்படி மூன்று நாட்களுக்குக் கொடுத்து, உப்பில்லாப் பத்தியம் இருக்கவும். மாந்தம், கணைகள், வயிற்றுப்பொருமல், மேல்மூச்சு, நீர்ப்பில்லம், மயிர்ப்பில்லம், வாங்கிபேதி, கிராணி. சோகை, குட்டலேற்றம் முதலியவை தீரும்.

## தன்வந்திரி எண்ணெய்

பரங்கிப்பட்டை, மெருகங்கிழங்கு, பிரப்பங்கிழங்கு இவைகள் வகைக்குப் பலம் அரை, மிளகு, கருஞ்சீரகம், கார்போகரிசி, அதிமதுரம், சித்தரத்தை, திப்பிலி இவைகள் வகைக்கு விராகன் நான்கு, வாய்விளங்கமும், நெல்லிப்பருப்பும், வகைக்குப் பலம் அரை, விழும்பிச்சாறும், சங்கங்குப்பிச்சாறும், வட்டத்துத்திச் சாறும் வகைக்குப் படி ஒன்று, வெங்காயச்சாறும், ஆமணக்கெண்ணெயும் வகைக்குப் படி ஒன்று. சரக்குகளைப் பொடித்துச் சாறுகளுடன் கூட்டி, அடுப்பிலிட்டுக் காய்ச்சி மெழுகுபதமாய் வடித்து எடுக்கவும். இதனில் ஒரு கரண்டியளவு கொடுக்க, சகல கிரந்திகளும் தீரும். இதற்கு முறிவு. நீலிவேர்க்கஷாயம்.

## இருமலுக்கு

கொடிவேலிவேர், ஆடாதொடைவேர், பாதிரிவேர், சிறு வழுதலைவேர், தில்லைவேர், கண்டங்கத்திரிவேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை இடித்துப் பதக்கு நீரிலிட்டுப் படியாகக் காய்ச்சி வடித்து ; தேங்காய்ப்பால் படி ஒன்று கூட்டி அதில் கருப்புக்கட்டி பலம் ஆறு, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, தென்னம்பூ, சிறுதேக்கு, கோஷ்டம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றைச் சூரணித்துப் போட்டு, லேகியஞ்செய்து ஒரு விராகனிடை வீதம் கொள்ளத் தீரும்.

**வேறு :**—சுக்கு, திப்பிலி, மிளகு, விளாவரிசி, ஆயில்பட்டை, கொடிவேலிவேர், கூவிளைவேர் இவைகளைக் கஷாயமிட்டுக் கொடுக்கத் தீரும்.

## கிரந்திப் புண்ணுக்கு

வேப்பம்பட்டை, நெல்லிக்காய், கந்தகம், சுக்கு, காசுக்கட்டி, துத்தம், துருசு, வெள்ளைக்குங்கிலியம், பொன்னரிதாரம், மிருதார்சிங்கு இவைகளை வகைக்கு விராகனிடையாகக் கொண்டு நன்றாக அரைத்து வேப்பெண்ணெய் படி அரைக்காலும், ஈரவெங்காயச்சாறு படி ஒன்றும் கூட்டிக் கலந்து காய்ச்சி வடித்து மேல்பூச புண்கள் தீரும்.

## வாயுவுக்கு

மூங்கிலுப்பு, இந்துப்பு, வெடியுப்பு, வளையலுப்பு, கல்லுப்பு இவைகள் வகைக்குப் படி கால், ரசம், ரசகற்பூரம், மனோசிலை, பவளப்புத்து இவைகள் வகைக்குப் படி அரைக்கால், சாதிக்காயும், சாதிப்பத்திரியும் வகைக்கு விராகன் இரண்டு, மிளகு, கிராம்பு, வால்மிளகு இவைகள் வகைக்கு விராகன் இரண்டு, சீனிச்சர்க்கரை பலம் ஒன்று, தேன் படி கால், தேங்காய் ஒன்று இவைகளை மெழுகுபோல் அரைத்து, ஆறு மாதம் வரையில் நெற்புடத்தில் வைத்து எடுத்து அதில் உளுந்து அளவு பனைவெல்லத்தில் கொடுக்க, வாயு, பக்கவாதம் முதலிய வாத நோய்கள் எல்லாம் போம்.

## வாதத்திற்கு

சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, தேசாவாரம், கருஞ்சீரகம், தும்மராஷ்டம், ஓமம், வெள்ளைப்பூண்டு, திப்பிலி இவை



கள் வகைக்கு விராகன் ஒன்றை நிழலிலுலர்த்திச் சூரணஞ்செய்து நிலையாவரைச்சூரணம் விராகனிடை பன்னிரண்டு கூட்டிக் கலந்து நோய் வன்மைக்குத் தக்கவாறு சர்க்கரையும் சேர்த்து சாப்பிட, வாதநோய்கள் போம்.

## வாயுவுக்கு

ஐந்து காசிடை செம்பைப் புளியிலே கொண்டு சுத்தி செய்து, அத்துடன் கந்தகமும், வெடியுப்பும் விராகன் ஒன்று கூட்டி குமிதாமரைஇலைச்சாறு உழக்கு, எலுமிச்சம்பழச்சாறு உழக்கு இவை எல்லாங்கூட்டி, அரைத்து மூன்று நாள் வெய்யிலில் வைக்கப் பற்பமாகும். இப்பற்பம் விராகனிடை கருப்புக்கட்டியில் கொடுக்க, வாயு, குன்மம், சூலை இவைகள் தீரும்.

**குறிப்பு :—இம்முறை பச்சை வெட்டு மருந்துகளை ஒக்கும். ஆதலின் மிக்க சிறு அளவில் வழங்க வேண்டும். ஒரு கடுகு அளவு மூன்றும் நாளைக்கு மேல் கொடுத்தால் போதும்.**

## சூலைக்கட்டுக்கு

குக்கில், பரங்கிப்பட்டை, ரசம், துருசு, கூகைநீர் இவைகள் வகைக்கு விராகன் மூன்று, லவங்கப்பட்டை, கருங்குங்கிலியம், நாவி, கெவுரி, பச்சை நாவி, அரிதாரம், பனைவெல்லம், புளி, உப்பு இவைகள் வகைக்கு விராகன் ஒன்று, நொச்சிக்கொழுந்து பிடி ஒன்று இவைகளைக் கூட்டி மூன்று நாள் கைவிடாமல் அரைத்து எடுத்துக் கொள்ளவும். இதில் ஒரு குன்றி அளவு காலை மாலை கொள்ள, சூலை நோய்கள் எல்லாம் தீரும். பத்தியம் காக்கவும். இதன் நஞ்சுக்கு மிதிபாகல் சாறு முறிவாகும்.

## வயிற்றுப் பொருமலுக்கு

உப்பை நீர்ப்பூண்டில் அரைத்து உலர்த்திப் பொடித்துக் கொடுக்கத் தீரும்.

## வெப்புப் பாவைக்கு

(1) தேங்காய்ப்பாலில் சங்கம்வேரை அரைத்துக் கொடுக்கவும்.

(2) வீழிச்சாறு அரைத்துக் கொடுக்கவும் நிற்கும்.

(3) எருக்கனரும்பும், குப்பைமேனிவேரும் வகைக்கு ஒரு பிடியை எருமை வெண்ணெயில் காய்ச்சி வடித்துக் கொடுக்கவும்.

## திப்பிலிக் களிம்பு

திப்பிலியும், கோரோசனையும் வகைக்கு விராகன் மூன்று, பொன்னரிதாரமும், பச்சைக்கற்பூரமும் வகைக்கு விராகன் இரண்டு, எருக்கம்பஞ்சு பலம் கால் இவைகளை வெற்றிலைச் சாறு விட்டு அரைத்துக் குன்றி அளவு கொடுக்க இருமல் போம்.

## சூதக வலிக்கு

(1) வரிக்கும்மட்டிப்பழத்தைச் சுட்டு சாறு பிழந்து அதில் ஒரு கரண்டியளவு எடுத்து கருப்புக்கட்டியில் கலந்து கொடுக்கவும்.

(2) புங்கங்கொழுந்தை அரைத்துக் கருப்புக்கட்டியில் பிசைந்தும் கொடுக்கலாம்.

## வயிற்றுவலி வயிற்றுக்கடுப்புக்கு

(1) குளவிந்த மஞ்சளைச்சுட்டு, நல்லெண்ணெயில் குழப்பிக் கொள்ளத் தீரும்.

(2) முத்தின அரசம்பட்டையை துவைத்துப் புதுசட்டியில் இட்டு இரண்டு படி நீர் விட்டுக் காய்ச்சி வடித்து அதில் ஐந்து வாழைப்பழம் கூடப்போட்டுப் பிசைந்து இருத்துக் கொடுக்கத் தீரும். கைகண்டது.

## சுரத்தின்மேல் வயிற்றுக்கடுப்புக்கு

(1) சாதிக்காய், கிராம்பு, ஓமம், அதிவிடையம் இவைகளை வெதுப்பிச் சூரணித்து, தேனிலாவது, முறித்த மோரிலாவது கொள்ளவும்.

(2) விஷ்ணுகாந்தி, ஓமம், சுக்கு இவைகளைக் கஷாயமிட்டு அதில் சாதிக்காய், அதிவிடையம், கிராம்பு இவைகளைப் பொரித்துச் சூரணித்துச் சிறிது கூட்டி சூடோடு கொள்ளத் தீரும்.

(3) கோரைக்கிழங்கின் மாவும், காசுக்கட்டி சூரணமும் ஓர் அளவு கூட்டி வெந்நீரில் பிசைந்து குழப்பிச் சாப்பிடத் தீரும்.

## சகல வயிற்றுக்கடுப்புக்கும்

(1) சுக்கு, மிளகு, கடுகு, களிப்பாக்கு, அபின், நெல்லி வற்றல், புளியீர்க்கு, வேப்பீர்க்கு, இவைகளைச் சரியிடையாகக் கொண்டு நன்ருக அரைத்து எடுத்த இடைக்கு வெல்லஞ் சேர்த்து, சிறிது நல்லெண்ணெய் விட்டு லேகியபதமாகக் காய்ச்சி முள்ளிக்காயளவு கொள்ளவும்.



(2) சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, குராசாணிஓமம், அதிவிடையம் இவற்றை வெதுப்பிச் சூரணித்துத் தயிரில் கொள்ளத் தீரும்.

## சீதரத்தம் விழுதலுக்கு

நாவல்கொழுந்து, வெள்ளுள்ளிப்பருப்பு இவைகளை அரைத்து நல்லெண்ணெயிலிட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி கரண்டியளவு கொள்ளத் தீரும்.

## வயிற்றுக்கடுப்புக்கு

(1) தென்னம்பூ, மாதுளம்பூ, பாதிரிப்பூ, அதிவிடையம், திரிகடுகு இவைகளைச் சூரணித்து, தேனில் கொள்ளத் தீரும்.

(2) நற்சீரகத்தை வெதுப்பிச் சூரணித்து, சர்க்கரை கலந்து சிற்றுமணக்கெண்ணெயில் கூட்டிக் கொள்ளவும்.

(3) கஞ்சாயிலையையும், தும்பைஇலையையும் அரைத்து நல்லெண்ணெயில் குழப்பிக் கொள்ளவும். தாகமானால் புங்கங் கொழுந்து, வேப்பங்கொழுந்து, வாழைச்சருகு, வசம்பு, நெல் லரிசி இவற்றை வேகவைத்து இறுத்துக் கழஞ்சு கொடுக்கத் தீரும்.

(4) எருமைத்தயிரில், வெள்ளாட்டுப்பால் விட்டுக் கொள்ளவும்.

(5) முத்தின வாழைக்காயைப் பிளந்து நடுவே விராகனிடை கஞ்சாப் பொடியை வைத்துக் கயிறு சுற்றிக் கட்டி புடமிட்டு அரைத்துக் கொள்ளத் தீரும்.

(6) தென்னம்பிஞ்சு, வாழைப்பூ, சிவந்தபாதிரிப்பூ, மாதுளை ஓடு இவைகளை அரைத்துப் பிட்டவித்துக் கொள்ளத் தீரும்.

## வயிற்றுவலிக்கும் வயிற்றுக்கடுப்புக்கும்

(1) கடுக்காயை உழக்கரிசியில் இடித்துக் களிகிண்டி எண்ணெய் சேர்த்துக் கொள்ளத் தீரும்.

(2) விஷ்ணுகாந்திவேரை பொன்னிறமாய் வறுத்து ஒரு படி நீரிலிட்டு கால் படியாகக் காய்ச்சிக் கொள்ள உடனே நிற்கும்.

X

(3) இஞ்சி பலம் ஐம்பதும், பழங்கிட்டம் பலம் பத்தும் எடுத்துக் கையாந்தகரைச்சாறு விட்டு அரைத்து, இந்துப்பு, வெண்காரம், சீனிக்காரம், நவச்சாரம், காய்ச்சுப்பு, வளையலுப்பு இவைகள் வகைக்கு பணவிடை இரண்டு, சீரகம், வெந்தயம், கடுகு, சதகுப்பை, திரிகடுகு, சாதிக்காய், திப்பிலி, மாம்பருப்பு, காசுக்கட்டி, மஞ்சள், கடுக்காய், வெல்லம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, உள்ளி பலம் ஐந்து, இலவம்பிஞ்சு, களிப்பாக்கு, விளாம்பிசின் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, உதியம் பட்டைச்சாறு, மாம்பட்டைச்சாறு, கல்லுப்பு இவைகள் வகைக்கு உழக்கு ஒன்று, இவைகளை பதக்கு இரண்டு படியாகக் காய்ச்சி, அதில் தேன், நெய், நல்லெண்ணெய் இவைகள் வகைக்கு உழக்கு ஒன்று விட்டுக் காய்ச்சி எடுத்து, அதில் ஒரு கரண்டி வீதம் கொள்ளவும். பத்தியம்: உப்பு, புளி, நீக்கவும், தீராக் கழிச்சல், கிராணிகள் முதலியவை தீரும்.

## வயிற்றுக்கடுப்புக்கும் கிராணிக்கும்

கிராம்பு, காசுக்கட்டி, சாதிலிங்கம் இவைகள் வகைக்கு விராகன் ஒன்று, அபின் விராகன் நான்கு, சாதிக்காய் விராகன் பத்து இவைகளை ஊமத்தஞ்சாற்றில் ஒரு சாமம் அரைத்து மிளகளவு குளிகை செய்து, எலுமிச்சம்பழச்சாற்றில் கொள்ளவும். பத்தியம்: தயிரும் சோறும்.

## அதிசாரக்கடுப்பு, ஈளை, இருமல், ரத்தகிராணி இவைகளுக்கு

வாழைப்பூமடலில், கடுகு, வெள்ளுள்ளி, பெருங்காயம், மிளகு, சுக்கு, இந்துப்பு இவைகளை வைத்துமூடி மறுநாள் பிசைந்து, அரைத்து உருண்டை செய்து காசிடை கொள்ளத் தீரும்.

## சகல குன்மத்திற்கும்

காந்தம், கடல்நுரை, வெங்காரம், சீனிக்காரம், பெருங்காயம், திப்பிலி, கிராம்பு, கருஞ்சீரகம், நற்சீரகம், கடுக்காய்ப் பொடி, மிளகு இவைகள் வகைக்கு விராகன் இரண்டு, சுக்கும், காசுக்கட்டியும் வகைக்கு விராகன் நான்கு, உள்ளியும், ஓமமும் வகைக்கு விராகன் ஐந்து, வெளிச்சிப்பிசின் விராகன் இரண்டு, திருகுகள்ளிமடல் அரைத்தது, புளித்துடரிவேர்பட்டை அரைத்தது; சாரணைவேர் அரைத்தது இவைகள் வகைக்கு முள்ளிக்



காயளவு சட்டியிலிட்டு, வெள்ளாட்டுப்பால் படி ஒன்று, கோசலமும், குதிரை மூத்திரமும் வகைக்குப் படி அரை ஆகக் கொண்டு சரக்குகளை எல்லாம் கூட்டிக் காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கி வைத்துக்கொண்டு, முதல் நாள் பேதிக்குக் கொடுத்து, மறுநாள் மேற்படி மருந்தில் முள்ளிக்காயளவு கொள்ள, சகல குன்மநோய்களும் தீரும்.

**வேறு:**—வரகரிசி படி ஒன்றை, இரண்டு படி கையான் தகரைச்சாற்றில் வேகவைத்து, அதில், பெருங்காயம் கழஞ்சு நான்கு, கடுக்காய் ஐந்து, உள்ளிப்பருப்பு, சுக்கு, மிளகு, அசமதாகம், சீரகம் இவைகள் வகைக்கு ஒரு சேர், கருஞ்சீரகமும் கடுகும் வகைக்கோர் சேர், இந்துப்பு பலம் ஒன்று, திப்பிலி சேர் ஒன்று, கழற்சிப்பருப்பு, சாரணைவேர் இவை வகைக்கு சேர் இரண்டு, கொடிவேலி சேர் ஒன்று இவைகளை எல்லாம் தனித் தனியாகச் சூரணித்து சலித்து முன்வெந்த வரகரிசியில் போட்டுக்கடைந்து, வில்லைதட்டி வடகமாகச் செய்து உலர்த்திக் கொண்டு ஒரு வடகத்தை விளக்கெண்ணெயில் பொரித்துச் சாப்பிடத் தீரும்.

## எரி குன்மத்திற்கு

மொருகங்கிழங்கை வெட்டினால் வரும் பாலை ஒரு கரண்டி அளவு எட்டு நாள் கொள்ளத் தீரும்.

## சத்தி குன்மத்திற்கு

இந்துப்பைச் சூரணித்து, பசுவின் வெண்ணெயில் கொள்ளத் தீரும்.

**வேறு:**—இஞ்சி பலம் பத்தை மேற்றோல் சீவி, நறுக்கி இடித்து, அரைப்படி பசுவின் நெய் விட்டு, சிவக்க வறுத்து, அத்துடன் சுக்கு விராகன் ஐந்து, மிளகு விராகன் பன்னிரண்டு, திப்பிலிமூலம் விராகன் எட்டு, திப்பிலி விராகன் எட்டு இவைகளைச் சூரணித்துச் சர்க்கரை பலம் முப்பது சேர்த்து அந்தி சந்தி நாலு விராகனிடை வீதம் கொள்ளத் தீரும்.

**வேறு:**—உப்பையும், கையாந்தகரை இலையையும் அரைத்து பசுவின் வெண்ணெயில் கொண்டாலும், கையாந்தகரை, முருங்கைப்பூ, கடுக்காய், சுக்கு, சாரணைவேர், வசம்பு, வெள் வெங்காயம், மிளகு, ஏலம் இவைகள் வகைக்குப் பலம் கால்

கொண்டு இடித்துப் பசுவின் நெய்யிலிட்டுக் காய்ச்சி வடித்துப் பத்து நாள் கொண்டாலும் தீரும்.

## வயிற்றுக்கட்டி அருவைக்கட்டிக்கு

கந்தகமும், நிலவாகைச்சூரணமும் வகைக்குப் பலம் ஒன்றரையைச் சூரணித்து ஒரு விராகனிடை விதம் அரை மண்டலம் தேனில் கொள்ளத் தீரும்.

## குன்மம் 8-க்கு

சங்கம்வேர், காட்டுமுருங்கைவேர், கொடிவேலிவேர் இவைகளைச் சூரணித்து வெருகடியளவு பசுவின் நெய்யில் கொள்ளத் தீரும்.

## வயிற்றுவலிக்கும் குன்மத்திற்கும்

புளியஞ்சிராய், சாரணைவேர், நாயுருவிசமூலம் இவைகள் வகைக்குப் பலம் பத்தைப் புதுமொடாவிலிட்டு தீயிட்டு எரிக்கச் சாம்பலாகும். மேற்படி சாம்பலை சிறுநீரிலாவது, வெள்ளாட்டு மூத்திரத்திலாவது இரண்டு படி விட்டுக் கரைத்து வடித்து பாதியாகக் காய்ச்சி அதில் மிளகு, கருஞ்சீரகம் ஒவ்வொன்றும் பலம் ஒன்று, உள்ளிப்பருப்பு பலம் ஒன்று, திப்பிலி விராகனிடை இருபது, விதைபோக்கிய கடுக்காய் வீசை இருபத்துநாலு இவைகளை மோர் வார்த்து அரைத்துப் போட்டு அடிபற்றுமல் கிண்டி பாகுபதத்தில் இறக்கிக் கொட்டைப்பாக்களவு கொள்ளவும். பத்தியம் : உப்பு, புளி நீக்கவும்.

## நெற்பவிப்புருதிக்கும் 8-வகை குன்மத்திற்கும்

ஒருகுடை ஆடுதின்னாப்பாளையிலை கொண்டு வந்து பத்து படி கொள்ளக்கூடிய புதிய பானை ஒன்றின் அடியில் இரண்டு மூன்று சில்லிட்டு அதில் இலையை சிறிது போட்டு ஒரு படி ஓமமும், ஒரு படி கல்லுப்பும் கலந்ததைச் சிறிது தூவி அதற்கு மேல் ஆடுதிண்டாப்பாளை இலையைப் போட்டு, மறுபடியும் அந்த ஓமமும், கல்லுப்பும் கலந்ததைத் தூவி இப்படியாக அடுக்கடுக்காய் ஒன்றன்பின் ஒன்றாக பானை நிறையப் போட்டு மேல் சட்டிமூடி சீலை மண்செய்து குழிவெட்டி. குழிக்குள்—மற்றொரு சிறு—குழிவெட்டி அதில் ஒரு குடுவை வைத்து அதற்குமேல் சீலைச்செய்த பானையை வைத்து அதைச்சுற்றி எருவிட்டு, தீயிட்டு, குளிர்ந்தபின், சாம்பலை எடுத்து பானையையும் அதன் அடியில் உள்ள குடுவையையும் எடுக்கக் குடுவையில் குழித்தைலம் வடிந்து காணும். இத்தைலத்தில் காசிடை இருபது நாள் அரிசிமாவில் கொள்ள, கெற்பவிப்புருதி தீரும். பானையில் இருக்கும் மருந்தைப் பொடிசெய்து வெருகடி அளவு நெய்யில் கொள்ள, குன்மம் எட்டும் தீரும்.



## அஷ்ட குன்மத்திற்கு

ஒட்டகம், கழுதை, குதிரை, வெள்ளாடு இவைகளின் மூத்திரம் வகைக்குப் படி இரண்டு கொண்டு, அதில் கடுக்காய்ச் சூரணம் பலம் இரண்டு போட்டு, வற்றக் காய்ச்சி உலர்த்தி இடித்த சூரணத்துடன் பெருங்காயம், திரிகடுகு இந்துப்பு இவைகள் வகைக்குப் பலம் கால் கொண்டு பொடித்து முன் கடுக்காய்ப் பொடியுடன் கலந்து, நிருகுகள்ளிப்பால் வார்த்து அரைத்து கடலையளவு குளிகை செய்து, பசுவின் நெய்யில் கொள்ள, குன்மம் எட்டு, முறைக்காய்ச்சல், வாதம், பாண்டு, குட்டம், வைப்புப்பாவை இவைகள் தீரும்.

## வலிகுன்மத்திற்கும் சத்திகுன்மத்திற்கும்

(1) மருக்காரைவிரையும், வெள்வெங்காயமும், சமன் கூட்டி, அரைத்துக் கொள்ளவும்.

(2) முள்ளிவேர், முடக்கொத்தான்வேர், சாரணைவேர், வசம்பு, உள்ளி, மிளகு, சுக்கு, கடுகு இவைகளைச் சரிகூட்டி அரைத்து வெண்ணெயில் காய்ச்சி ஒரு கரண்டியளவு எட்டு நாள் கொள்ளவும் தீரும்.

## சகல வயிற்றுவலிக்கும்

ரசம், கந்தகம், அரப்பொடி இவைகள் வகைக்குக் கழஞ்சு ஐந்தைக் குமரிச்சாற்றில் அரைத்து, அடைதட்டி உலர்த்தி, சட்டியிலிட்டு மேற்சட்டிமூடி, சீலைமண் ஏழுசெய்து, கசபுடம் போடப் பற்பமாகும். இந்துப்பு, திப்பிலி, கடுகுரோகணி, ஓமம், கடுகு இவைகளின் சூரணம் வெருகடியில் மேற்படி பற்பம் ஒரு பணவிடைக் கூட்டி தேனில் பத்து நாள் கொள்ளத் தீரும்.

## வாந்திக்கு

கொத்தமல்லி, நெற்பொரி, சித்தாமுட்டிவேர், வில்வவேர், சுக்கு, கோரைக்கிழங்கு இவைகளைக் கஷாயமிட்டுக் கொண்டா

லும்; சிறுக நறுக்கி சிவக்க வறுத்த ஆமைஓட்டுச் சூரணமும், வெதுப்பிப் பொடித்த லவங்கமும் சரிகூட்டி அரை காசிடை இளவெந்நீரில் கொண்டாலும் தீரும்.

### விக்கல் வாந்திக்கு

துத்தித்தழையைத் துவைத்து மோரில் பிசைந்து கொடுத்தாலும், நெல்பொரி தின்றாலும், நீர்முள்ளிஇலையைப் பசுவின் பாலில் அரைத்து கரைத்து வடித்து இரண்டு காசிடை வெல்லம் போட்டு அதில் இரண்டு காசிடை நல்லெண்ணெய் விட்டுக் கொண்டாலும் தீரும்.

### நோய்களுக்குத் தகுந்த உணவுப் பொருள்கள்

(1) பசுவின் வெண்ணெய், மோர், சிறுகீரை, பொன்னாங்காணி, நெல்லிக்காய், முருங்கைஇலை, வாழைக்காய், காரையிலை, திராஇலை, விளாம்பழம், பழுபாகற்காய் இவைகள் நீர்ச்சுருக்கு நோய்க்கு உதவும்.

(2) விடத்தலையிலை, ஆலங்கொழுந்து, நல்ல புண்ணாக்கு இவற்றை அவித்து எண்ணெய் சேர்த்து உண்பதும், கட்டுக்கொடிஇலையும், புண்ணாக்கும் கூட்டி உண்பதும் நீரிழிவிற்கு நன்று.

(3) நீர்முள்ளிஇலையும், புண்ணாக்கும் கூட்டி உண்பது நீரெரிச்சலுக்காகும்.

(4) சுண்டைஇலையும், புண்ணாக்கும் கூட்டியுண்ண செரியாமை போம்.

(5) புண்ணாக்கும், எண்ணெயும் கூட்டியுண்ண உடல் வன்மை பெரும்.

(6) எருமைத்தயிரும், புண்ணாக்கும் கூட்ட பித்தம் தணியும்.

(7) பயற்றம்பருப்பு, வாழைக்காய், அத்திக்காய், பிலாக்காய், இந்தக்கறிகள் கழிச்சலைப் போக்கும்.

(8) உடம்பு நொந்தால் விடத்தலைஇலையைத் துவைத்து வேகவைத்து ஒத்தணங் கொடுக்கவும்.

(9) விடத்தலையிலை பிடி ஒன்று, ஆவரங்கொழுந்து பிடி ஒன்று இவற்றை வாழைஇலையால் சுருட்டி சீலை மண்செய்து



எருமுட்டையில் சுட்டு தயிரில் அரைத்துக் கொடுக்கவும். நீரிழிவு போம். இது கைகண்டது.

(10) பத்து விளாங்காயை உடைத்து ஒரு வள்ளந்தண்ணீரில் போட்டு வேகவைத்து வடித்து அதில் அரிசி போட்டு வேகவைத்து, அதில் விளாங்காய் ஊண் போட்டுக் கிளறி அந்தச் சோறுடன், ஆவரை இளங்காயாகக் கொண்டு எடுத்த குழம்பு வைத்து மிளகு பொடி சேர்த்து உப்புப் போடாமல் எண்ணெய் வார்த்து உண்ண உடல் ஊட்டம் பெரும். இதனை ஒரு நாள் உண்டால் ஒரு வருஷம் வரை தாங்கும். எட்டு நாள் உண்டால் எட்டு வருஷம் தாங்கும்.

(11) வெள்ளுள்ளி, மீன், மாமிசம், கடுகு தேங்காய்ப்பால், புளி, பெருங்காயம், லவணம், கசகசா சகல கழிச்சலுக்கும் ஆகாது. ஆதலால் நீக்கவும்.

### நீரிழிவுக்கு

(1) பூலாங்கொழுந்து, புண்ணாக்கு, வேலங்கொழுந்து, கையானிலை இவைகளை வேகவைத்து உண்ணவும்.

(2) அசனத்தில் நல்லெண்ணெய் வார்த்து உண்ணவும்.

(3) தேற்றான்வடவேரை விநாயகனைப் பூசித்து வெட்டி வந்து அரைத்ததை நல்ல சந்தனம் சிறிது கூட்டி முள்ளிக்காயளவு தண்ணீரில் அரைத்துக் கொள்ளத் தாகம் நிற்கும்.

(4) ஒரு மாதுளம்பழத்தைச் சிறுகவரிந்து நல்லெண்ணெய் விட்டுச் சிவக்க வறுத்து: சாதிக்காய், கிராம்பு, வசியம், விளாம்பிசின், இலவம்பிசின், அதிவிடையம், அபினி இவைகள் வகைக்கு விராகன் இரண்டை; தயிர் வார்த்து அரைத்துத் தேனில் கொள்ளவும்.

(5) மிளகு, மஞ்சள், வெள்ளுள்ளி, ஈரவேம்பு, புண்ணாக்கு இவைகளை இடித்துப் பிட்டுச்சுட்டு ஐந்து நாள் தின்னவும்.

(6) கோழிக்குழம்பு செய்து உண்ணவும்.

### ரணங்களுக்கு

கோரைக்கிழங்கும், ஏலமும் வகைக்குப் படி அரை, நெல்லிவற்றல், இலாமிச்சம்வேர், மாவிறகு, கொடிவேலிவேர் இவைகள் வகைக்குப் பிடி இரண்டு, சீந்தில்கொடி, செம்பருத்திவேர், சிறுகீரைவேர், மறைநாதர், முன்னைவேர், நெய்தல்கிழங்கு,

தண்ணீர்விட்டான்கிழங்கு, தாழைவிழுது, கற்றாழைவேர், சிறுபீளைவேர், சிற்றாமணக்குவேர், அமுதவெள்ளிக்கிழங்கு, நீர்பூலா, சிவனார்வேம்பு, நிலப்பனைக்கிழங்கு, ஆதண்டங்கிழங்கு, சங்கம்வேர் இவைகள் வகைக்குப் பலம் மூன்றை இடித்து இரண்டு வள்ளந்தண்ணீரில் ஊறப்போட்டு, மறுநாள் இறுத்துக் காய்ச்சி, காய்ச்சிய கஷாயம் படி ஒன்றில் சாதிக்காய், சாதிப்பத்திரி, சாஸ்திரபேதி, கோஷ்டம், செண்பகப்பூ, செவ்வியம், ஏலம், லவங்கம், கடுகுரோகணி, கல்நார், கஸ்தூரிமஞ்சள், நாகப்பூ, அதிமதுரம், கிராம்பு, திப்பிலி, மண்கட்டி, சந்தனம், உறணிகம், முந்திரிப்பழம், நாப்பாலை, மொகிழ் இவைகள் வகைக்குப் பலம் இரண்டை அரைத்துக் கஷாயத்தில் கலக்கி, எண்ணெய் படி இரண்டும், பசுவின் பால் படி நான்கும் சேர்த்து, மெழுகு பதமாய்க் காய்ச்சி வடித்து, தலைமுழுகிவர, தம்பனமாகும், உடம்பு குளிரும்.

## மேக வியாதிகளுக்கு

வெட்டிவேர், இலாமிச்சம்வேர், தாளிசப்பத்திரி, குங்குமப்பூ நாககேசரம், பாதகேசரம், பச்சைக்கற்பூரம், நல்ல சந்தனம், பழம்பேதி. அதிமதுரம், சுக்கு, திப்பிலி, மிளகு, அமுக்கரா, வேம்பு, தண்ணீர்விட்டான்கிழங்கு, நிலக்குமிழ்வேர். நெருஞ்சிவேர், கற்கடகசிங்கி, சாதிக்காய், சாதிப்பத்திரி, தக்கோலம், கிராம்பு இவைகள் வகைக்கு விராகன் ஒன்றைச் சூரணித்து அதற்குப்பாதி சீந்தில் சர்க்கரை சேர்த்துச் சுண்டைக்காயளவு பசுவின் பாலில் கொள்ள, சயம், கிருச்சிரம், வாந்தி, கண்ணெரிவு, பிரமேகம், கல்லடைப்பு, கைகால் உடம்பெரிவு, தலைசுற்றி வருதல் முதலியவை தீரும். மேற்படி சூரணத்துடன் வங்கபற்பம் அரை பணவிடை கூட்டிக் கொள்ள நன்று.

## மூத்திர கிருச்சிரத்திற்கு

நாயுருவிசமூலத்தை உலர்த்திப் புதுசட்டியிலிட்டு, பெருந்தீயில் வறுத்து எடுத்துச் சூரணித்து அதில் வெருகடியளவு எருமைத்தயிரில் கொள்ள, சிறுநீர் எரிச்சல், நீர்கடுப்பு, நீர்சுருக்கு முதலியன தீரும்.

## சகல கழிச்சலுக்கும்

அடிகனத்த சட்டியில் வேண்டிய காரியத்தைப் போட்டு வறுக்கும்போது, ஆவரைவேரை உலர்த்திப் பொடித்ததைப் போட்டு வறுக்கவும், பின்பு ஆவாரைமொட்டுப்பூவை உலர்த்திய பொடியைப் போட்டு நன்றாக வறுக்க வறுக்க வெளுக்கும், பிறகு மஞ்சள் நிறமாகும், பிறகு பழுப்பு நிறமாகும், அதன் பின்பு சிவந்து செந்தூரமாகும். ஆவரைவேர்ச்சூர்ணம் அத்திமரத்தின் புல்லுருவி இவைகளைச் சூர்ணம் செய்து மூன்று காசிடை எடுத்து அதில் ஒரு அரிசி மேற்படி காரியச் செந்தூரம் கூட்டிக் கலந்து வாழைப்பழத்திலாவது, சர்க்கரையிலாவது கலந்து ஏழு நாள் கொள்ள, இருபத்துநான்கு வகை கழிச்சலும் தீரும். தாகம் எடுத்தால் வில்வப்பழமும், ஆவரை வேரும் அரைத்துக் கொடுக்கவும். அல்லது நாமக்கட்டி நாலு விராகனிடை அரைத்து நல்லெண்ணெயில் கொடுக்கவும்.



## கழிச்சலுக்கு

அருகு, பூழை, கொடுப்பை, கையாந்தகரை, கீழாநெல்லி, முடக்கொத்தான், தலைசுருளி, உள்ளி, கருவேப்பிலை, ஊமத்தை இலை, எலுமிச்சம்இலை, பாலையிலை, முசுமுசுக்கைசமூலம், காரையிலை, பூசணிஇலை இவைகளின் சாறு வகைக்குப் படி ஒன்றை; சிற்றாமணக்கெண்ணெய் படி இரண்டுடன் கூட்டி, நார்த்தை, எலுமிச்சை, குருந்தொட்டி, எருக்கு, இலாமிச்சை, வெள்ளரி, சுரை, பூசணி இவைகளின் வேர், நீர்வள்ளிக்கிழங்கு, இலுப்பைப் பட்டை, அரசம்பட்டை, வேலம்பட்டை இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை இடித்து ஒரு படி தண்ணீர் விட்டு மறுநாள் சிறு தீயால் மூன்று நாள் எரித்துக் காய்ச்சிய கஷாயம் படி அரையும், ஆலம்மொட்டு பணவிடை நாலு, அதிமதுரம் பணவிடை மூன்று, சந்தனம் பணவிடை ஒன்று, பூலாங்கிழங்கு பணவிடை மூன்று, தேவதாரம் பணவிடை மூன்று, செவ்வெள்ளிக்கொடி பணவிடை மூன்று, சம்பாஅரிசி, கம்பரிசி, கார்போகரிசி, வெங்காயம், சுக்கு, மிளகு, வாலுளுவைஅரிசி, ஓமம், சதகுப்பை, கந்தகம், சாத்திரபேதி, பெருங்காயம் இவைகள் வகைக்குப் பணவிடை மூன்று கொண்டு மேற்கூறிய சாறுகளைக் கூட்டியதில் சிறிது எடுத்து, அதை விட்டு நன்றாக அரைத்து அதில் கலந்து நல்லெண்ணெய் ஒரு படியும், நெய் ஒரு படியும் கூட்டி மறுநாள் மெழுகுபதத்தில் காய்ச்சி வடித்து, மூன்று நாளைக்குக் கொடுக்கவும். மூன்று நாள் மருந்தை விட்டு விட்டு, நான்காம் நாள் முதற்கொண்டு, மூன்று நாளைக்கு ஒரு முறையாகத் தேய்த்து, சீயக்காயிட்டுத் தலைமுழுக, இருபத்து

நான்கு கழிச்சலும் தீரும். ஞாயிற்றுக்கிழமை சூரியனுக்குப் பொங்கலிட்டு எண்ணெய் வடிக்கவும்,

## நீரிழிவுக்கு

ரசம் பத்துக் காசிடை, கிருஷ்ணப்பிரக செந்தூரம் இரண்டு காசிடை, கந்தகம் ஐம்பது காசிடை, அரிதாரம் ஐம்பது காசிடை சிலாசத்து ஐந்து காசிடை, காரீயசெந்தூரம் முப்பது காசிடை இவற்றைக்கூட்டி பருத்திவிதைப்பருப்பு, தேற்றான்விதை, வெள்ளைக்குன்றிப்பருப்பு, புளியங்கொட்டைத்தோல், கற்கடக சிங்கி இவைகள் வகைக்கு விராகனிடை ஒன்று, நிலப்பனைக் கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், கொடிவேலி வேர்பட்டை இவைகள் வகைக்குப் பத்து காசிடை, வேப்பம் பிசின் ஐந்து காசிடை, வெள்வேல், கருவேல், விளா, கருங்காலி இவைகளின் வேர்பட்டை வகைக்குப் பத்து காசிடை, தென்னம் பாளைப்பொடி ஐம்பது காசிடை, திரிபலைப்பொடி இருபத் தொன்று காசிடை இவைகளை ஆவரைஇலைச்சாறு, மருதனிலைச் சாறு, இலந்தைஇலைச்சாறு இவைகளைக் கொண்டு, நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு சாறுகள் கொண்டு அரைத்து இலந்தைக் காய் பிரமாணம் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி நாள் ஒன்றுக்கு ஒரு உருண்டையாகக் காலை மாலை கொள்ளவும்.

## சுரத்தின் வரலாறு

நெற்றி, விழி(யிற்)பிளந்து நீண்ட புரமெரித்து
வெற்றியுடன் மீண்டானை மீண்டசுரம்—பற்றியுடல்
எல்லாம் பாற்றுயிரும் பெனைக் கொள்ளென்று
சொல்லால் பித்தசுரம் (?).

## வாத சுரத்திற்கு

வாதசுர முறக்கமில்லை யுருசியில்லை
வயிறு கனத்திருக்கு மலங் கழிந்திடாது.
தீதிலிஞ்சி காஞ்சோரி முத்தக்காசு
சிற்றுமுட்டி பற்படாகம் சீந்தில் சுக்கு.
ஓதுறுவில்வங் கொத்துமல்லி யொவ்வொன்
றொன்றரைக் காசளவு மிருநாழி நீரில்
ஆதரவாகக் காய்ச்சி யுள்ளே கொள்ளி
லறுவாத வெப்புளது மகலுந்தானே.



[ (பொ-ள்.) இஞ்சி, சிறுகாஞ்சொரி, கோரைக்கிழங்கு, சிற்றுமுட்டி, பற்படாகம், சீந்தில், சுக்கு, வில்வவேர், கொத்த மல்லி இவைகள் வகைக்கு அரை காசுயிடை, நீர் இரு நாழி ஆகக்கூட்டிக் குடி நீராக்கி தேன் கூட்டிக் கொடுக்க வாதசுரம் போம்.]

## பித்த சுரத்திற்கு

பற்படாகம், சிற்றுமுட்டிவேர், இலுப்பைப்பூ, நன்னாரி, முத்தக்காசு, இலாமிச்சம்வேர், முந்திரிப்பழம், சீந்தில்தண்டு, கொன்றைப்பழம், கடுகுரோகணி, கடுகு, சந்தனம், பெருங் குரும்மை, அதிமதுரம், வில்வஓடு இவற்றை சரிகூட்டி முறைப் படி நீரிலிட்டு காலாகக் காய்ச்சி மூன்று நேரம் கொள்ளத் தீரும்.

## சிலேட்டும சுரத்திற்கு

உத்தாமணி, தூதுவளை, சங்கு, கண்டங்கத்திரி இவைகளின் வேர், கையாந்தகரை, ஆடாதொடையிலை, கற்றுழஞ்சருகு, தேவதாரக்கொட்டை, ஈகைவேர்ப்பட்டை இவற்றைச் சரி கூட்டி எட்டு பங்கு நீர்விட்டு எட்டிலொன்ருய்க் காய்ச்சி மூன்று நேரம் கொள்ளத் தீரும்.

## வாத சிலேட்டும சன்னிக்கு

இருவேலி, சிறுதேக்கு, முத்தக்காசு, இலவங்கம், அதி மதுரம், பங்கம்பாளை, திப்பிலி, சுக்கு, ஏலம், சீந்தில்கொடி, மணத்தக்காளிவேர், நெருஞ்சி, கண்டங்கத்திரி, சிற்றுமல்லி, பேராமல்லி, பழையஅரிசி இவற்றைச் சரிகூட்டி, முறைப்படி காய்ச்சிக் கொள்ளத் தீரும்.

## குளிர் குலைப்புக்கு

குப்பைமேனிச்சாற்றில் மிளகையுரைத்து நசியஞ்செய்யத் தீரும்.

## விக்கலுக்கு

(1) நீர்முள்ளிஇலையை, எலுமிச்சங்காயளவு அரைத்துக் காடியில் கொள்ளவும்.

(2) ஈரவெங்காயத்தை விளக்கு மூக்கில் சுட்டுக்கொள்ளவும்.

(3) புத்துமண், பனைஓலை, நெல், வில்வவேர் இவைகள் வகைக்கு ஒரு பிடியைக் கருகவறுத்து, இரண்டு படி நீர் விட்டு அரைப்படியாகக் காய்ச்சிக் கொள்ளவும்.

(4) கஞ்சாசூரணம், மிளகு, ஓமம் இவ்றறை அரைத்து நல்லெண்ணெயில் கொள்ளவும் தீரும்.

### காய்ச்சலுக்கு

சாரணைச்சாற்றிலாவது, பூசணிச்சாற்றிலாவது, பேய்ப் பீர்க்கன்சாற்றிலாவது திப்பிலியை உரைத்துக் கலிக்கமிட காய்ச்சலும், காமாலையும் தீரும்.

### காமாலைக்கு

உசிலம்பட்டை, வேப்பம்பட்டை, பூவரசம்பட்டை, பெருமரத்துப்பட்டை இவைகள் வகைக்குப் பலம் பத்தாகக் கொட்டு தட்டி அதை வெள்ளாடு, பசு, குதிரை இவற்றின் மூத்திரம் வகைக்குப் படி இரண்டுடன், சேர்த்துக் கூட்டி புதிய பானையிலிட்டு, வாய்மூடி சீலைமண்செய்து குப்பையில் புதைத்து எடுத்து வடித்து அதில் கால் ஆழாக்காக காலையில் சாப்பிட்டு பத்தியங் காக்கத் தீரும்.

### சன்னி வகைக்கு

பாவட்டைவேரை நறுக்கி அதில் நாலு கடுக்காய், இரண்டு சுக்கு கூட்டி இரண்டு படி நீரிலிட்டு கால் படியாய்க் காய்ச்சிக் கொள்ள, சன்னி, நீர்வேட்கை, கைகால் குளிர்ந்துபோதல் முதலியன போம்.

### சுர வகைக்கு

**குளிகை** :—மிளகு, கோஷ்டம், கோரோசனை, அதிமதுரம், ஏலம், லவங்கம், திப்பிலி, அரத்தை, சீரகம், இவைகள் வகைக்குக் கழஞ்சு ஒன்று, சாத்திரபேதியும், சாதிலிங்கமும் வகைக்கு கழஞ்சு மூன்று, நேர்வாளம் கழஞ்சு ஐந்து இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில அரைத்து, மிளகளவு குளிகை செய்து, நிழலிலுலர்த்தி தாகசுரத்திற்கு முலைப்பாலிலும், குளிர்சுரத்திற்கு எலுமிச்சம்பழச்சாற்றிலும், சிலேத்துமசுரத்திற்கு இஞ்சிச் சாற்றிலும், வாதசுரத்திற்கு வெல்லத்திலும் கொள்ளத் தீரும்.

வேறு :—சுக்கு, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லி வற்றல், இந்துப்பு, கந்தகம், அரிதாரம் இவைகள் வகைக்கு விராகன் ஒன்று, சுத்திசெய்த நேர்வாளம் விராகன் எட்டு இவற்றை முலைப்பால் விட்டு, அரைத்துப் பின்பு ஒரு பலம் வெல்லங்கூட்டி அரைத்து, கடலைப்பிரமாணம் குளிகை செய்து,



எல்லா சுரத்திற்கும் வெல்லத்தில் கொள்ளவும். மிகுதியாகக் கழிச்சல் உண்டானால் மோருஞ்சோறும், சுண்டைவற்றலும், மிளகுநீரும் கூட்டவும்.

**வேறு** :-பசுவின்பாலில் ஊறவைத்து நஞ்சு வாங்கி உலர்த்திய நேர்வாளம் பலம் ஒன்றும், கற்றாழைமடல்சோறும், கடுக்காயும் வகைக்குப் பலம் ஒன்றும் கூட்டி நன்றாக அரைத்து பருத்தி விதைப் பிரமாணம் குளிகைசெய்து உலர்த்தி, கடுங்காய்ச்சலுக்கு இஞ்சிச்சாற்றிலும்; வாதசுரத்திற்கு முசுட்டை அல்லது ஆடாதொடை அல்லது பூசணிச்சாற்றிலும் அல்லது சிற்றுமுட்டிக் கஷாயத்திலும்; அதிகமான சுரத்துக்கு மாதுளம்பழச் சாற்றிலும், விரேசனமாவதற்கு இளவெந்நீரில் மிளகுபொடி கூட்டியும், கொள்ளவும். பத்தியம் : பாலும் சோறும்.

### வயிற்றுக்கடுப்பு, இடுப்புவலி, வாயு இவைகளுக்கு

சுக்கின்மேல் கல்லுப்பை அரைத்துப்பூசி புடமிடவும், இவ்வாறு மூன்றுமுறை செய்து உப்பைநீக்கி சுக்கை, அரைத்துப் பசுவின் வெண்ணெயில் பிசைந்து எலுமிச்சங்காயளவு மூன்று நேரம் கொள்ளத் தீரும்.

### சுரத்தில் காணும் விக்கத்திற்கு

(1) சுக்கு, கடுக்காய், சீரகம், மஞ்சள், கொத்தமல்லி, திப்பிலி மூலம், நீர்முள்ளித்தண்டு, சாரணை, கொடிவேலிவேர், சீந்தில் தண்டு, முத்தக்காசு, பூசணித்தண்டு, காட்டுமல்லிகை இவற்றைச் சரிகூட்டிக் கஷாயமிட்டுக் கொள்ளவும்.

(2) நிலிவேர், கண்டங்கத்திரிவேர், நீர்முள்ளிவேர், கழற்சி யிலை, சங்கிலை, நிலையாவரை இவைகளைக் கஷாயமிட்டுக் கொள்ளவும்.

(3) வெள்ளாட்டுக் கோமயத்தில் முத்தின உசிலம்பட்டைச்சாறு சேர்த்து உலர்த்திப் பொடித்து சிறிது கடுக்காய்தூள் சேர்த்துக் கொள்ளவும் தீரும்.

### சன்னிக்கு

மருக்காரையின்காய் சாரணைக்கொழுந்து இவற்றைத் தட்டி, சீலையிலிட்டு முலைப்பால் வார்த்து வலதுபுறம் திருப்பும் சன்னியானால் இடது நாசியிலும், இடதுபுறம் திருப்பும் சன்னியானால் வலது நாசியிலும், வலது காதிலும் பிழியத் தீரும்.

வேறு :-கோழிக்காரத்தைப் பொடித்து மிளகும், திப்பிலியும் கூட்டி அரைத்து கருப்புக்கட்டியில் கொள்ளத் தீரும்.

வேறு :—சுக்கு, திப்பிலி, மிளகு, வசம்பு, பெருங்காயம், இந்துப்பு இவற்றைப் பொடித்து எருக்கம்பழுப்பில் வைத்து நசியஞ் செய்யவும்.

வேறு :—திப்பிலி, இந்துப்பு இவற்றை சிறுநீரில் ஊற வைத்துக் கண்ணில் கலிக்கமிடவும்.

வேறு :-திப்பிலியையும், ஆமணக்கம்பருப்பையும் தும்பைச் சாற்றில் உரைத்துக் கண்ணிலிடவும்.

வேறு:-ஒட்டையின்மயிர், எருமைக்கொம்பு, பசுவின்கொம்பு இவற்றைப் பொடித்து வேப்பந்தணலில் புகை போடத் தீரும்.

## சன்னிக்காதடைப்பு, சன்னிப்பல்லுக்கிட்டல் இவைகளுக்கு

நல்லெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், பசுவின்நெய் இவைகள் வகைக்கு உழி ஒன்று, பொன்னாங்கண்ணிவேர், சிறுகீரைவேர், ஏலம், லவங்கம், கோஷ்டம், அதிமதுரம் இவைகள் வகைக்கு விராகன் இரண்டு இவற்றை அரைத்துப் போட்டுக் காய்ச்சி, மெழுகுபதத்தில் இறக்கி, நசியமிட்டு, உச்சியில் தேய்த்து ஆமணக்கிலையிலிட்டுக் கட்டவும். இப்படி மூன்று நாள் செய்யத்தீரும். சீயக்காய் இட்டு முழுகவும்.

## சன்னிக் காதடைப்புக்கு

வெளிச்சிப்பிசின், வலம்புரிக்காய், வசம்பு, சுக்கு, மிளகு, வெள்வெங்காயம், கடுகு, திப்பிலி, கிராம்பு, செண்பகப்பூ இவைகள் வகைக்கு விராகன் இரண்டை அரைத்து, நார்த்தங்காயளவு பசுவின் வெண்ணெயில் வேகவைத்து, கடுகுபதத்தில் இறக்கி பல் இடுக்கிலும், கடைவாயிலும், காதிலும் அடைக்கத் தீரும்.

## மேகசன்னி, எலிக்கடி, மந்தாரகாசம் இவைகளுக்கு

மிளகு, ஓமம், வெள்ளுள்ளி, அழிஞ்சிவடவேர்ப்பட்டை இவைகள் வகைக்கு விராகன் ஒன்றை அரைத்து ஒரு படி பசுவின் நெய்யில் கரைத்து நாய்க்காதை அறுத்து ரத்தம் துளி விட்டு வேகவைத்து, கரண்டி அளவு கொள்ளத் தீரும். உப்பு, புளி, கிரந்திப் பதார்த்தம் இவைகள் நீக்கவும்.



## சுக சன்னிக்கு

எருக்கம்பழுப்பு, முருங்கைப்பூ, மிளகு, வெள்ளுள்ளி, ஆவரை மொட்டாரும்பு இவைகள் வகைக்கு ஏழு எடுத்து அரைத்து மூன்று நாள் கொள்ளத் தீரும். துவரம்பருப்பும், மிளகுநீரும் கூட்டவும்.

## திருகு சன்னிக்கு

ஒரு கொட்டைப்பூண்டு, அகத்திப்பழுப்புச்சாறு, மிளகு, சுக்கு, வசம்பு இவற்றைத் தட்டி நசியஞ் செய்யத்தீரும்.

## வாத சன்னிக்கு

இஞ்சிச்சாறு ஒரு கரண்டியும், வெள்ளுள்ளித்தைலம் அரைக் கரண்டியும் சேர்த்து ஒரு காசிடை மிளகுபொடி தூவி மூன்று நாள் கொள்ளத் தீரும்.

## மேக சன்னிக்கு

திப்பிலியும், திப்பிலிமூலமும் வகைக்கு விராகன் முக்கால், அதிமதுரம், அக்கிராகாரம், ஏலம், கருஞ்சீரகம் இவைகள் வகைக்கு விராகன் கால், கடுக்காய் இரண்டு, தூதுவளைவேர் பலம் இரண்டு, கீழாநெல்லி, நாயுருவிவேர், கண்டங்கத்திரிவேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றேகால் இவற்றைச் சூரணித்து பாதி சூரணத்தை விளக்கெண்ணெயில் ஊறவைத்து, மற்றய பாதி சூரணத்தில் வெருகடியளவு காலையில் தேனில் கொள்ளவும். ஊறவைத்ததை மாலையில் கொள்ளவும். ஒரு மண்டலம் உப்பு, புளி நீக்கி சுக்கையும், திப்பிலியையும் சூரணித்து தேனில் குழைத்துக் கொள்ளவும்.

## ஐவகை சன்னி நோய்களுக்கு

பொடுதலை, வழுதலை, சாரணைசமூலம், ஆடாதொடை இலை, கண்டங்கத்திரிசமூலம் இவற்றை இடித்துப் பிட்டவித்துப் பிழிந்த சாறும், நல்லெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், வெள்ளாட்டு மூத்திரம் இவைகள் வகைக்கு படி ஒன்றும் சேர்த்து அதில், கொத்தமல்லி, வாய்விளங்கம், திப்பிலி, திப்பிலிமூலம், சுக்கு, மிளகு, கடுகு, ஓமம், பொட்டிலுப்பு இவைகள் வகைக்கு விராகன் இரண்டைச் சூரணித்துப் போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்துக் காசிடை காலை மாலை நாலு

நாள் கொள்ளவும். மேலுக்கு துவளையிடவும். பத்தியம்: ஊர்க்குருவி, காடை, சாரணை, துவரம்பருப்பு, கொதிகஞ்சி, வெள்வெங்காயம் இவைகள் கூட்டவும். இதனால் சந்திகம், அந்தகம், ருத்திரம், சுத்தி விப்பிரமம், சீதாஸ்கம் ஆகிய ஐந்து சன்னிகள் தீரும்.

## எட்டுவகை சன்னிக்கு

கண்டங்கத்திரிசமூலம், ஆடாதொடையிலை, தூதுவளை சமூலம், தும்பைசமூலம், குப்பைமேனிசமூலம், எருக்கம்பூ, பொடுதலை, சுண்டையிலை இவைகள் வகைக்குப் பலம் நான்கை இடித்துப் பிட்டவித்துப் பிழிந்த சாறு, வேப்பெண்ணெய், இலுப்பைஎண்ணெய், வெள்ளாட்டுக்கோமயம் இவைகள் வகைக்குப் படி ஒன்று, பால் படி ஒன்றரை, நல்லெண்ணெய் படி இரண்டு இவற்றைச் சேர்த்துக் கொத்தமல்லி, வாய் விளங்கம், திப்பிலிமூலம், கடுகுரோகணி, பெருங்காயம், சுக்கு, வசம்பு, உள்ளி, ஓமம், சதகுப்பை இவைகள் வகைக்கு விராகன் இரண்டைப் பொடித்திட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி ஒரு காசிடை உள்ளுக்குக் கொடுத்து மேலும் துவளையிடத் தீரும். பத்தியம் காக்கவும்.

## சன்னி 13-க்கு

பாதிரிவேர், குமிழம்வேர், சிற்றுமுட்டிவேர், பேராமுட்டி வேர், கொன்றைவேர், பாலைவேர், கொடிவேலிவேர், பேய்ப் புடல், கடுகுரோகணி, திப்பிலிமூலம், சிறுதேக்கு, தூதுவளை, கற்கடகசிங்கி, சடாமாஞ்சி, சிற்றரத்தை, பேரரத்தை, சாரணை, மூங்கிலிலை, வேலிப்பருத்தி, சுக்கு இவைகள் வகைக்கு விராகன் இரண்டைத் தட்டி இரண்டு படி நீர் விட்டு உழக்காகக் காய்ச்சிக் கொள்ளத் தீரும்.

## சன்னியில் நினைவில்லாததற்கு

சுக்கு, ஓமம் இவற்றை அரைத்துப் பிழிந்து முருங்கைப் பட்டைச்சாறில் திப்பிலிச் சூரணம் தூவி கொள்ளவும்.

## ஏந்தலுக்கு (வாத ரோகத்திற்கு)

பெருகுருஞ்சான், சிறுகுருஞ்சான், தூதுவளை, கண்டங் கத்திரி, அமுக்கரா, நீர்ப்பூலா, வரட்பூலா, துளசி, பொன்னாங் காணி, கத்திரி, வெள்ளைச்சுண்டை, எருக்கு, கருநொச்சி, வெட்டிவேர், காட்டுமுருங்கை, அத்தி, நெல்லி இவற்றின



பட்டை திப்பிலி, கருஞ்சீரகம், சமுத்திராப்பழம், எட்டிவிதை இவைகள் வகைக்கு விராகன் பத்து, குங்குமப்பூ விராகன் ஒன்று இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து வெற்றிலையில் சுருட்டித் தணலிலிட்டு மூன்று தரம் புடம்பண்ணி அரைத்து வில்லைசெய்து உலர்த்தி இளவெந்நீரில் கொள்ளத் தீரும்.

## 4-ம் முறை சுரத்திற்கு

பெருமரத்தை வலதுபுறமாகச் சுற்றி வந்து சாமிகும்பிட்டு மூன்று தழையைப் பரித்து வந்து துவைத்துப் பிழிந்து வடிகட்டி கோழிமுட்டை வெள்ளைக்கரு சேர்த்துக் கொள்ளவும். மேற்படி கருவில் கருப்புக்கட்டி கலந்து மாறல் வருகிறபோது கொள்ளவும் தீரும்.

வேறு:—அரிதாரம் விராகன் இரண்டை, ஊமத்தஞ்சாற்றில் முறித்து, துத்தம், கௌரிப்பாஷாணம் இவற்றை கையாந்த கரைச்சாற்றில் முறித்து; கையாந்தகரைச்சாற்றில் இரண்டு சாமமரைத்து குன்றியளவு மாத்திரை செய்து உலர்த்தி மாறல் வருகிறபோது வெற்றிலையில் குளிகையை மூன்று நாள் கொள்ளவும். மேற்படி குளிகையை இஞ்சிச்சாற்றில் கொள்ள, பைத்தியம் தீரும். வாதசுரத்திற்கு நொச்சிச்சாற்றில் கொள்ளவும். நொச்சியிலை, நாய்துளசியிலை, கண்டங்கத்திரியிலை இவற்றைப் பிட்டவித்துப் பிழிந்த சாற்றிலும் கொள்ளலாம். சேத்தும சுரத்துக்கு ஏலம், லவங்கம், சர்க்கரை இவற்றில் கொடுக்கவும். பத்தியம்: புளி, கசப்பு நீக்கவும்.

## உடம்பெல்லாம் உண்டாகும் திமிரலுக்கு

(1) வெய்யலில் இருந்து ஆறவிட்ட நாலு பானை தண்ணீரை தலையோடு விடவும்.

(2) குதிரைவாலிவேரை அரைத்து எண்ணெயில் கரைத்து சூரியபுடம் வைத்துக் கொண்டு மேல் துவளையிடவும் தீரும்.

## நாவுலர்ந்து போனதற்கு

(1) அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், ஏலம், லவங்கம், வெடியுப்பு, கோரோசனை இவைகள் வகைக்கு விராகன் இரண்டைச் சூரணித்து நாவில் தடவவும்.

(2) நாகப்பூச்சியைப் பிடித்து கரண்டியிலிட்டு கருகவறுத்து எடுத்ததூள் விராகன் இரண்டு, நீலிவேர், வெள்ளைச்சாரணைவேர்

இவற்றைக் கூட்டி அரைத்துத் தேனிலாவது, பாலிலாவது, விளக்கெண்ணெயிலாவது கலந்து நாவில் தடவத் தீரும்.

## பீனிசத்திற்கு

(1) நன்னாரிவேர், மிளகு இவை பலம் அரை, ஆதண்டஞ் சாறு படி அரை இவற்றை முலைப்பாலில் அரைத்துக் காய்ச்சி முழுகவும்.

(2) பசுவின் பால், நெய், தேங்காயெண்ணெய், நாய்துளசிச் சாறு இவற்றைச் சரிகூட்டி ரவிபுடம் வைத்து முழுகவும் தீரும்.

## மண்டை வியாதிக்கு

(1) சீந்தில்தண்டும், சிற்றாமுட்டிவேரும் வகைக்குப் பலம் ஐம்பதை, எட்டு மரக்கால் நீரிலிட்டுக் காய்ச்சி, நல்லெண்ணெயும், பசுவின் பாலும் வகைக்குப் படி ஒன்றேகால், சேர்த்து அதில் சுக்கு, மிளகு, மரமஞ்சள், சடாமாஞ்சி, தேவதாரகட்டை, குங்கிலியம், நல்ல சந்தனம், வாய்விளங்கம், கொத்தமல்லி, வெட்டிவேர், இலாமிச்சம்வேர், புனுகுசட்டம், நன்னாரிவேர், முத்தக்காசு, சாதிக்காய், கிராம்பு இவைகள் வகைக்கு விராகன் மூன்றை அரைத்துப் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்துத் தலைமுழுக பீனிசம், மண்டைநோவு, கண்நோய், வரட்சி இவைகள் தீரும்.

(2) பசுவின் நெய் படி இரண்டும், இலைக்கள்ளிச்சாறு படி ஒன்றும், சேர்த்து அதில் சுக்கு, ஓமம், சீரகம், வெந்தயம் இவைகள் வகைக்கு விராகன் நாலு, மாதேவிக்கிழங்கு பலம் இரண்டு இவற்றை அரைத்துப் போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து தலையில் தேய்த்து நாசியிலிட்டு உள்ளுக்கும் கொள்ளவும். உப்பு, புளி நீக்கவும்.

## மண்டை பீனிசத்திற்கு

நரியனூர்பொரி அரிசித்தழை பிடி ஒன்றை, ஞாயிற்றுக் கிழமை சூரியனைத் தொழுது பறித்து வந்து தட்டி பொட்டணங் கட்டி நாசியிலிடவும், விட்டபோது மண்டையைப் பிடிக்கும், நாசியில் ரத்தம் விழும், மஞ்சள் நீர் வரும். இப்படி மூன்று நாள் விட்டால் மண்டையிலிருந்து புழு விழும். மறுநாள் மேற்படி தழையை அரைத்து மூக்கின் மேல் தடவவும்.



## பீனிசம் 8-க்கு

(1) ஒரு கோழியை இறகு, குடல், கால், தலை இவைகள் நீக்கி வேலிப்பருத்திப்பாலில் துவைத்துத் துவைத்து ஆறு தரம் உலர்த்தி செங்கல்லைத் துளைத்து அதில் வைத்து செங்கல்லால் மூடி கசபுடம் போட்டு எடுத்த பற்பம் விராகன் ஒன்று, வால் மிளகு, திப்பிலி, சுக்கு இவைகள் வகைக்கு விராகன் இரண்டு இவற்றைச் சூரணித்து காலை மாலை பணவிடை நசியஞ் செய்யத் தீரும்.

(2) சிற்றாமணக்கெண்ணெய் படி அரை, மஞ்சள் பலம் ஒன்று, சாதிக்காய் விராகனிடை மூன்றேமுக்கால் சாதிப்பத்திரி விராகன் இரண்டு, கஸ்தூரிமஞ்சள் விராகன் முக்கால் இவற்றைப் பாலில் அரைத்து எண்ணெயிலிட்டுக் காய்ச்சி நாசியிலிடவும்.

(3) நல்லெண்ணெய் படி ஒன்றில், செண்பகப்பூ முந்நாறை அரைத்து கலக்கி வெற்றிலைச்சாறு படி முக்கால், பொன்னாங்கண்ணிச்சாறு ஒரு படி, கையாந்தகரைச்சாறு, சிற்ற கத்திச்சாறு இவைகள் வகைக்குப் படி அரைக்கால், பாலும், இளநீரும் வகைக்குப் படி கால் இவற்றைச் சேர்த்து ஒரு சேர் மிளகைத் தட்டிப் போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி மூன்று நாள் தானியபுடம் வைத்துத் தலையிலிட்டு ஒரு சாமத்துக்குப் பின் வெந்நீரில் முழுகவும். சகல பீனிசமும் தீரும்.

(4) பேய்ப்பீர்க்கன் கூட்டை முலைப்பால் விட்டு அரைத்து பஞ்சில் துவைத்து நாசியில் நசியமிட ஒரு தலைவலி தீரும்.

(5) குங்குமப்பூவையும், கோரோசனையையும் அரைத்துப் பசுவின் நெய்யிலிட்டுக் காய்ச்சி நசியமிட மேற்கண்ட ரோகங்கள் தீரும்.

## ரத்த பீனிசத்திற்கு

கஸ்தூரிமஞ்சள், மயில்இறகு, தலைமயிர் சுட்டசாம்பல் இவற்றைச் சூரணித்து சீலையிலிட்டு திரித்து நெய்யில் துவைத்து தீயில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்கத் தீரும்.

## ரசமுறிவு, கைஎரிப்பு, உண்டிபிடித்தல் நினைவு அறிவில்லாமை இவற்றிற்கு மாற்று

(1) கோவைத்தண்டைத் துவைத்துப் பிழிந்த சாறு படி அரையுடன் முலைப்பால் படி அரை கலந்து கொடுத்து, துவைத்ததை மேல் துவளையிட்டு வெய்யலில் இருத்தி, இரண்டு சாமம்

தலையில் எலுமிச்சம்பழம் தேய்த்து இருபது குடம்நீர் இரட்டைக் குடமாக மூன்று நாள் விட பாதரஸம், மயிர்க்காலில் இறங்கும்.

(2) எலுமிச்சம்விரையை அரைத்து வடிகட்டிய எருமைத் தயிரில் குழப்பிக் கொடுக்கவும் தீரும்.

(3) ரசம் உண்டை முறித்து உண்டியில் பிடித்தால் உருத்திராக்ஷம், கலைக்கொம்பு, சந்தனம், சிறுகீரைவேர், பொன்னாங்காணிவேர் இவற்றை முலைப்பால் வார்த்து அரைத்துக் கொள்ளவும் அல்லது சிறுகீரையையும், பொன்னாங்காணிவேரையும், எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து நல்லவெல்லம், பசுவின் வெண்ணெய் சேர்த்துக் குழப்பிக் கொள்ளவும். வாந்தி பண்ணினால் வில்வவேர்பட்டை, குளவிக்கூட்டுமண், பாசிப்பயறு இவற்றைத் தண்ணீர் விட்டுக் காய்ச்சிக் கொள்ளவும். நெற்பொரியும், தேனும் கொள்ளலாம்.

## இரசகந்தகபாஷாண முறிவுக்கு

வில்வவேர், அதிமதுரம், பாதிரிவேர், மிதிபாகல்கொடி, பிரமிவேர், சகாதேவிக்கிழங்கு, செங்கழுநீர்வேர், ஓரிலைத் தாமரைக்கிழங்கு, செந்தாமரைக்கிழங்கு சிற்றாமணக்கு, பச்சரிசி, கழுநீர், கருங்குங்கிலியம், விடத்தலைவேர், கருவேப்பம்பட்டை, பெருமரப்பட்டை, மிளகு, தக்காளிவேர், கற்றாழஞ்சாறு, சிறுகீரைச்சாறு, குங்கிலியம், சுரைவேர், பூசணிவேர், கோஷ்டம், கிட்டம் இவைகள் வகைக்குப் பலம் இரண்டு, வில்வப்பழம் நாலு, வெள்ளாட்டு மூத்திரம் வள்ளம் நாலு இவற்றை சேர்த்துக் காய்ச்சி, கால் படி வீதம் கொள்ளவும்.

## வாய்ச்சூலைக் கட்டுக்கு

அகத்திப்பட்டையை இடித்து நீரிலிட்டுக் காய்ச்சி வாய் கொப்பளிக்கவும், எருமைமோரில் கல்லுப்புப்போட்டுக் கொப்பளிக்கவுந் தீரும்.

## இரச முறிவுக்கு

கொம்புப்பாகலிலைச்சாறும், முசுமுசுக்கைச்சாறும் வகைக்கு படி கால், ஆமணக்கெண்ணெய் படி அரை, இவற்றைக் கலந்து உள்ளுக்குக் கொடுத்து, உச்சியில் தளமிட்டு, மாலையில் வெந்நீரில் மூன்று நாள் குளித்து, பின்பு நிலக்கத்திரிச்செடிசமூலம் கொண்டு வந்து அரைத்து தேனில் கொள்ள, எந்தக் குணமும் தீரும்.



## ரச செந்தூரம்

(1) ரசம் விராகன் பத்து, கந்தகம் விராகன் எட்டு, தாளகம் விராகன் இரண்டரை, இவற்றைச் சுத்திசெய்து கந்தகத்தை உருக்கி ரசத்தோடு சேர்த்து பின் தாளகம் கூட்டி காசிக்குப்பியில் அடைத்து சீலைமண்செய்து வாலுகயந்திரத்திலிட்டு மூன்று சாமம் கமலாக்கினியாய் எரித்தெடுக்க செந்தூரமாகும். அதில் சன்னி, சுரங்களுக்கு அரைப்பணவிடை வீதம் தக்க அனுபானங்களில் கொடுக்கவும்.

(2) சுத்திசெய்த ரசம் பலம் மூன்று, சுத்திசெய்த கந்தகம் பலம் ஒன்றரை இவற்றை குப்பைமேனி, கூத்தன்குதும்பை, பொன்னாங்காணி இவற்றின் சாற்றால் ஒவ்வொரு சாமமும், முள்ளியிலைச்சாற்றால் மூன்று சாமமும் அரைத்து உலர்த்தி, சூரணித்து காசிக்குப்பியிலிட்டு பலபக்கல் கொண்டு மூடி, கடுக்காய், களிப்பாக்கு, குளவிக்கூடு, உருக்குக்கிட்டம், கருவேம் பின்பிசின், பொன்னிமிளை, ஓட்டைக்கல்லுச் சுண்ணாம்பு, வெல்லம் இவற்றை கோழிமுட்டை மஞ்சட்கருவால் அரைத்துப் பின்பு எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துப் பிசின்பதத்தில் மேற்படி குப்பிக்கு நன்றாய்த்தடவி, குப்பிவாய்க்கு ஏழு சீலை மண்செய்து வெள்ளாவி அடுப்பிலே தாழியில் பதித்து அதில் நாலு விரக்கடை மணல் போட்டு அதன்மேல் குப்பியை வைத்து குப்பிக்கு கழுத்தளவு மணல் போட்டு இரண்டு சாமம் தீபாக்கினியாகவும், இரண்டு சாமம் காலாக்கினியாகவும், இரண்டு சாமம் காடாக்கினியாகவும் எரித்து குளிர விட்டு எடுக்கச் செந்தூரமாம். இத்துடன் வெதுப்பிப் பொடித்த திரிகடுகுச் சூரணமும், தேனும் சேர்த்து பத்து நாள் இரண்டு நேரம் கொள்ள, சூலை, வாயு, குன்மவாயு, இருமல், மந்தார காசம், எலிக்கடி விடம், காசசுவாசம், வாதசுவாசம் இவைகள் தீரும். பொன்முசுட்டைவேர், கடலிராஞ்சிப்பட்டை, கோரைக் கிழங்கு, விலாமிச்சம்வேர் இவற்றின் சூரணத்தில் தேன் சேர்த்து நாற்பது நாள் இரண்டு வேளை பணவிடை கொள்ள, தாதுவிர்த்தி உண்டாம். உடலூறும். யானைபலம் உண்டாம், அழகுண்டாம், சரீர நாற்றம் தீரும்.

(3) மேற்படி செந்தூரம் பணவிடை கோழிச்சாற்றில் இருபது நாள் கொள்ள, வயிற்று வியாதி அறுபத்தாறு, வாயுத் திரட்சி, பாரிசகுன்மம் எட்டு, சூலை, தீராப்புண் இவையுந்

தீரும். செந்தூரம் வைக்கும்போது விநாயக பூசையும், எடுக்கும் போது வைரவர் பூசையும் செய்ய வேண்டியது.

## உலோக செந்தூரம்

அரப்பொடி பலம் முக்காலே, மருதம்பட்டையை அரைத்தது எலுமிச்சங்காயளவுடன் கூட்டி சட்டியிலிட்டு வறுக்கச் செந்தூரமாகும். வீக்கங்களுக்கு மருதம்பட்டைச்சாறிலும், எலுமிச்சம்பழச்சாறிலும் அனுபானித்துக் கொள்ளவும்.

## வங்காரசஞ்சீவி அக்கினிகுமாரன்

(1) இரும்பு, அரப்பொடி, உருக்கரப்பொடி, செம்மரப் பொடி, பித்தளையரப்பொடி, வெண்கலஅரப்பொடி, இரசம் இவைகள் வகைக்கு பலம் ஒன்று, ஊசிக்காந்தம் பலம் இரண்டு, நெல்லிக்காய் கந்தகம் பலம் ஆறு, வெங்காரம், மனோசிலை, அரிதாரம், திப்பிலி இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, இவற்றைக் கற்றாழைவேர் நீரில் அரைத்து வில்லைதட்டி சட்டியிலிட்டு ஏழு சீலைமண் செய்து அடுப்பிலேற்றி மூன்று நாளிடைவிடாமல் தீயெரித்து நான்காம் நாள் செந்தூரமாய் இருப்பதை வைத்துக் கொண்டு, பச்சை நாவியைக் கோசலத்தில் மூன்று நாள் ஊற வைத்து உலர்த்தி பின்னும் மூன்று நாள் ஊறவைத்து உலர்த்தியது காசிடையும், திப்பிலிமூலம் பலம் இரண்டும் சேர்த்து வெள்வெங்காயத்தைலம் வார்த்து அரைத்துச் செந்தூரத்துடன் கலந்து பணவிடையளவு குளிகை செய்து கொள்ளவும்.

(2) வெள்ளுள்ளித்தைலத்தில் இக்குளிகையில்ஒன்று காலை மாலைகொள்ள, சிலந்திக்கண், புண், சூலை பதினெட்டு இவைகள் தீரும். மேற்படி தைலத்தில் ஒரு மாத்திரை கொள்ளக் கிருத்திருமவாதமும், வெதுப்பிப் பொடித்த திப்பிலிச்சூரணமும், தேனுங்கலந்து பத்து நாள் கொள்ள, பிரமியம் பதினெட்டு, இந்திரகண்டி ஐந்து, மந்தாரவாயு, பித்தம் முந்நூற்றுஇருபத்தெட்டு, சிலேட்டுமம், உஷ்ணரோகம் முந்நூற்றுஇருபத்தாறு, வயிற்றுவியாதி அறுபத்தாறு, வாயுத்திரட்சி முப்பத்தாறு, பெருவயிறு, விஷபாகம், சிலேட்டுமகாமாலை, பாண்டு இவையும் போம். திப்பிலி மிளகு இவற்றை வெதுப்பிச்சூரணித்து தேனும், இஞ்சிச்சாறும் கலந்து கொள்ள, சன்னி பதினெட்டு, வாதம் எண்பது வாயு இருபத்தாறு, சத்திகுன்மம், எரிகுன்மம், காமாலை, பயித்தியம் பதினாறு, வாயு, முகவாதம், மண்டைக்குலை,



பீனிசம் பதினெட்டு, நாசி, பிடர்வலி, செவிநோய், செந்தாளி, தொண்டைநோய், முயல்கண்டன், முடக்கம், அண்டவாதம், குடல்வாதம், ஆனந்தவாயு, அந்திரவாயு, உள்வலிப்பு, புறவலிப்பு, குதிரைவாதம், நடுக்குவாதம் முதலியவை தீரும்.

## தாமிர செந்தூரம்

ஐந்து விராகனிடை செம்புத்தகடு அடித்து தகட்டைச் சிறுகவெட்டி மூன்று விராகனிடை நெல்லிக்காய் கந்தகத்தை எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்துப்பூசி ஓட்டிலிட்டு சீலைமண் செய்து புடமிடப் பற்பமாகும். மேற்படி பற்பமும், ஒரு பலம் ரசசெந்தூரமும் சேர்த்து செருப்படை சாறு விட்டு மூன்று நாள் ஊறவைத்து அரைத்து குன்றியளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்திக் காசிக்குப்பியிலிட்டு, சில்லிட்டேழு சீலைமண்செய்து, பானையில் மணலிட்டு, குப்பியை வைத்து மேலும் மணல்கொட்டி மேல்சட்டிமூடி சந்துவாய்க்கு சீலைமண்செய்து தீபாக்கினியாக நாலு சாமமும், காடாக்கினியாக நாலு சாமமும், கமலாக்கினியாக நாலு சாமமும் எரித்து ஆறவிட்டு மேற்படி மருந்துக்கு கால் பங்கு நாவிகூட்டி அதற்கு இரட்டிப்பு மிளகு பொடிகூட்டி, வேலிக்கஷாயத்தில் மூன்று சாமமரைத்து நெல்லுப்பிரமாணமாகவும், குன்றிப்பிரமாணமாகவும் குளிகைசெய்து நிழலிலுலர்த்தி சன்னிவாத சுரத்திற்கு இஞ்சிச்சாற்றில் ஒரு திப்பிலி கூட்டி அரை குளிகை கொடுக்கவும்.

## ஆனந்தபைரவி

சாதிலிங்கம், நாவி, கந்தகம், சுக்கு, திப்பிலி, மிளகு, வெங்காயம் இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து, குன்றி அளவு குளிகைசெய்து, இஞ்சிச்சாற்றிலாவது, இளவெந்நீரிலாவது கொள்ள, பதின்மூன்று வகை சன்னியும் தீரும்.

## தாமிரபூபதி மாத்திரை

ரசம் விராகன் ஒன்பது, நாபி விராகன் எட்டு, வெங்காரம் விராகன் ஏழு, கந்தகம் விராகன் ஆறு, அரிதாரம் விராகன் ஐந்து, துத்தம் விராகன் நான்கு, துருசு விராகன் மூன்று, நேர்வாளம் விராகன் இரண்டு, தாமிரபஸ்பம் விராகன் ஐந்து, இவற்றைச் சுத்திசெய்ய வேண்டியவைகளை சுத்திசெய்து குப்பைமேனி, துளசி, தும்பை, கையாந்தகரை இவைகளின் சாற்றால்

ஒவ்வொரு சாமமரைத்து, குன்றியளவு குளிகைசெய்து, வெல்லத்திலாவது, இஞ்சிச்சாற்றிலாவது கொள்ள, திரிதோஷம், சுரம், விஷசுரம், தாபசுரம், சுவாசம், இருமல், சன்னிவாதம் இவைகள் தீரும்.

## நீலகண்ட மாத்திரை

(1) ரசம், கந்தகம், உலோகசெந்தூரம், நாவி, கொடிவேலி வேர், லவங்கப்பத்திரி, வாய்விளங்கம், அரேணுகம், முத்தக்காசு ஏலம், திப்பிலிமூலம், நாககேசரம், சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், நேர்வாளம், தாமிரபற்பம் இவற்றைச் சரிகூட்டி, கையாந்தகரைச்சாற்றால் அரைத்து கடலைப் பிரமாணம் குளிகைசெய்து, நிழலிலுலர்த்தி ஒரு மாத்திரை காலை மாலை திப்பிலிப் பொடியும், தேனுங்கூட்டிக் கொள்ள, சுவாசகாசமும், திப்பிலியும் ; அமுக்கராவேர்ப் பொடியும் வெந்நீருடன் கொள்ள, சயமும் ; திப்பிலி வெந்நீருடன் கொள்ள குன்மமும், திப்பிலி, கடுக்காய்ப்பொடியும் கூட்டிக் கொள்ள பிரமேகமும் ; சீரகம் வெந்நீருடன் கொள்ள மகோதரமும் ; ஆவரைப்பஞ்சாங்கத்தில் கொள்ள மூத்திரக்கிரிச்சிரமும் ; பஞ்சமூலகஷாயத்தில் கொள்ள, வாதமும், திப்பிலி தேனிற்கொள்ள, பெருஞ்சன்னியும், கருணைக்கிழங்குப்பொடி மோர்த்தெளிவில் கொள்ள சூலை மூலரோகம் ; குடப்பாலைப் பட்டை வெந்நீருடன் கொள்ள ரத்த கிராணியும் ; அசமதாகம், சுக்கு வெந்நீரில் கொள்ள வயிற்று நோயும் ; மாதுளம் பழச்சாற்றில் கொள்ள சுவாசமும் தீரும்.

(2) மருந்தை முறிக்க கோவைப்பூவை பசுவின் பாலில் அரைத்து ஏலரிசிப் பொடிகூட்டி கால் படி கொடுக்கவும்.

(3) முருங்கைப்பூவை வெந்நீரிலிட்டுப் பசுவின் பாலில் பிசைந்து ஏலரிசிப்பொடி சேர்த்து கால் படி கொடுக்கவும்.

(4) நிலக்கத்தரி இலைக் கஷாயமிட்டு வெங்காரம் பொரித்திட்டு கொள்ளவும்.

## வாத சன்னிக்கு

ரசமும், சாதிலிங்கமும் வகைக்கு விராகன் ஒன்று. கந்தகம், மனோசிலை, அரிதாரம், வெங்காரம், துத்தம் இவைகள் வகைக்கு விராகன் இரண்டு. இவற்றை எலுமிச்சம்பழச்சாற்றால் அரைத்து சீலையிலூற்றி, திரிசெய்து, நல்லெண்ணெய், விளக்கெண்ணெய்,



வேப்பெண்ணெய் இவற்றை விட்டு சுடர்த்தைலம் வாங்கிக் கொள்ளவும். இதில் இரண்டு முதல் நான்கு துளி வரையில் நாவில் தடவி மேலுக்கும் துவாலையிட சன்னிக்கூட்டம் ஒழியும்.

## கூஷ்பாண்ட ரசாயனம்

பெரும் பூசணிக்காயில் வெல்லம் போட்டுப் பிசைந்து எடுத்த நீர் நாலு மரக்கால், ஆடாதொடைஇலைச்சாறு படி ஒன்று. இவற்றில் பழைய வெல்லம் பலம் இருபத்தைந்து, பனைவெல்லம் பலம் இருபது, பொடித்துப் போட்டுக் காய்ச்சி குழம்புபதத்தில், திரிகடுகு, சாதிக்காய், சாதிப்பத்திரி, குராசாணி ஓமம், அதிவிடையம், கடுக்காய், தானிக்காய், நெல்லிப்பருப்பு, கருஞ்சீரகம், நற்சீரகம், வெந்தயம், கடுகுரோகணி, கூகைநீர், வாய்விளங்கம், கொத்தமல்லி, சதகுப்பை, கஸ்தூரிமஞ்சள், நாய் கடுகு, திப்பிலிமூலம், வெடியுப்பு, வளையலுப்பு, சவுக்காரம், ஓமம், சித்திரமூலம், லவங்கம், பச்சிலை, கச்சோலம், வெள்ளி லோத்திரம் இவைகள் வகைக்குப் பலம் மூன்று, அதிமதுரமும், கோஷ்டமும் வகைக்குப் பலம் ஒன்று, வெள்ளுள்ளி பலம் அரை, பெருங்காயம் பலம் ஒன்று இவற்றை வெதுப்பிப் பொடித்துப் போட்டுக் கிளறி, இரண்டு படி தேன் விட்டுக் காய்ச்சி, கம்பிபதத்தில் இறக்கி பழைய கலயத்தில் வைத்துக் கொண்டு, எலுமிச்சங்காயளவு இருநேரங்கொள்ள, உளமாந்தை எலும்புருக்கி, அத்திசுரம், குரல்கம்மல், காசநோய், கெற்ப நோய், குன்மம், நாய்ச்சூலை, பழஞ்சுரம், பிரமியம், தாகம், நாவறட்சி, ஈரலைப்பற்றிய நோய்கள், கைகால் எரிவு முதலியவை தீரும்.

## மகா ரசாயனம்

சுக்கு பலம் முப்பத்திரண்டு மேற்புறணி சீவியதை, கோசலம், நொச்சி, துளசி, கண்டங்கத்திரி, முடக்கொத்தான், ஆடாதொடை, எருக்கம்பழுப்பு, கையாந்தகரை இவற்றின் சாறுகள் ஒவ்வொன்றில் ஒவ்வொரு நாள் ஊறவைத்து உலர்த்தி பின்பு, பாகல், நிலக்குமிழ், தழுதாழை, சிறுகாஞ்சொறி, விஷ்ணுகரந்தை இவற்றின் வேர்களை இடித்து இரண்டு வள்ள நீரிலிட்டு ஒரு நாள் ஊறவைத்து உலர்த்திக் கொண்டு, தாளிசப்பத்திரி, திப்பிலி, தேசாவாரம், சீரகம் இவைகள் வகைக்குப் பலம் நாலு, சிறுநாகப்பூ பலம் மூன்று, வாய்விளங்கம், கோஷ்டம், அதிமதுரம், வெட்பாலைஅரிசி, கற்கடகசிங்கி, லவங்கப்பத்திரி,

சிறுதேக்கு, மிளகு இவைகள் வகைக்கு பலம் இரண்டு, இலாமிச்சம்வேர், ஆனைத்திப்பிலி, கச்சோலம், சடாமாஞ்சி இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, தேவதாரம் பலம் ஒன்று, ஏலம் பலம் மூன்று, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு இவைகள் வகைக்குப் பலம் ஒன்று ஆக இவைகளைச் சூரணித்து, இரண்டு படி பால் குறுகக்காய்ந்த பின்பு எண்பது பலம் சர்க்கரையும் கூட்டிக் காய்ச்சிப் பதத்தில் சூர்ணம் போட்டுக் கிளறி, நெய் படி அரையும், தேன் படி ஒன்றும் விட்டுக் கிளறி மேற்படி சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பைப் பொடித்திட்டுக் கிளறி, நெல்லிக்காயளவு கொள்ள, கிராணி, இருமல், க்ஷயம் இவைகள் யாவும் தீரும்.

## இஞ்சி ரசாயனம்

மேற்புறணி நீக்கிய இஞ்சி பலம் இருபதை ஒரு சட்டியில் பசுவின் நெய் விட்டு சிவக்க வறுத்துப் பொடித்து அத்துடன் சுக்கு, திப்பிலி, மிளகு, வாய்விளங்கம், அதிமதுரம், செங்கழுநீர், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அரத்தை, சீரகம், சிறுதேக்கு, கொத்தமல்லி, ஏலம், தாளிசப்பத்திரி, சடாமாஞ்சி, அரேணுகம், திரிபலை இவைகள் வகைக்குப் பலம் கால், முந்திரிப்பழமும், பேரீச்சம்பழமும் வகைக்கு விராகன் மூன்று இவற்றை இடித்துச் சூரணித்துக் கூட்டி இஞ்சிச்சாறு, பொன்னாங்காணிச்சாறு, நெல்லிக்காய்ச் சாறு, பசுவின் பால் இவைகள் வகைக்குப் படி ஒன்று சேர்த்து அதில் சர்க்கரையும், சூரணமும் போட்டுக் கிளறி ஒரு படி தேன் விட்டு அடி பற்றுமல் கிளறி, கொட்டைப்பாக்களவு இரு நேரங் கொள்ள, அரோசகம், அக்னிமந்தம், பித்தாதிக்கம், அதிசாரம் முதலியவை தீரும்.

## பூசணி ரசாயனம்

பூசணிப்பழத்தின் விரை பத்து, வெள்ளரி விரை பலம் ஒன்று, முள்ளங்கி விரை பலம் ஒன்று, அகத்தி விரையும், முருங்கை விரையும் வகைக்குப் பலம் ஒன்று, ஏலம், திப்பிலி, சீரகம், சிறுநாகப்பூ இவைகள் வகைக்குப்பலம் அரை, இவற்றைப் பசுவின் நெய்விட்டு இளவறுப்பாக வறுத்துக் கொண்டு, பொடி செய்து சாம்பிராணி பலம் ஒன்று, இலாமிச்சம்வேர்ப்பொடி பலம் ஒன்று பொடித்து இவைகளைக் கூட்டிக் கலந்து, சீனிகற்கண்டு பலம் இருபதைப் பொடிசெய்து கூடக்கலந்து, தேன்விட்டுப்



பிசைந்து, ஒவ்வொரு நேரத்துக்கும் கொட்டைப்பாக்களவு இருபது நாள் கொள்ள, சிழ்பிரமேகம், இரத்தப்பிரமேகம், மூத்திரக்கிரிச்சரம், நீரடைப்பு, சதைஅடைப்பு, கல்லடைப்பு, எலும்புருக்கி, பெரும்பாடு, மேகவிரணம், கைகாலெரிவு கெற்ப வாயு, மேகத்தில் பிறந்த வியாதிகள் எல்லாம் தீரும்.

## க்ஷயரோகத்திற்கு

ஏலம், திப்பிலி, சீரகம், சிறுநாகப்பூ இவைகள் வகைக்குப் பலம் அரை கூட்டிக் கொள்ளவும். கிராம்பு, லவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, சுக்கு, திப்பிலி, மிளகு, கொத்தமல்லி, தாளிசப்பத்திரி, கோரைக்கிழங்கு, அதிமதுரம், நெல்லிப்பருப்பு, நன்னாரிவேர், தாதுவேளைவேர், வில்வவேர், முசுட்டைவேர், அமுக்பருத்திப்பருப்பு, சடாமாஞ்சி, இந்துப்பு, கோஷ்டம், அமுக் கலாங்கிழங்கு, முந்திரிப்பழம், பேரீச்சம்பழம், கூகைநீர் கற்கடகசிங்கி, நெற்பொரி இவைகள் வகைக்குப் பலம் காலைச் சூரணித்துக் கொள்ளவும். வில்வப்பழம் பத்தை இடித்து அத்துடன் எல்லாவற்றையும் கூட்டி எட்டு படி நீரில் போட்டு ஒரு படியாகக் காய்ச்சி அதில் சர்க்கரை பலம் பத்து போட்டுக் கிளறி பதத்தில் இறக்கி, தேன்விட்டுப் பிசரி, கொட்டைப் பாக்களவு கொள்ள, பாண்டு, காமாலை, அக்கினிமந்தம், அசீரணம், அதிசாரம், கிராணி, சோகை, சுரம், இருமல், மூர்ச்சை, மயக்கம், க்ஷயரோகம், கைகால் உடம்பெரிவு, அஸ்தி சுரம், தலைவலி, தாகம், உஷ்ணவாயு, வாந்தி, நீரெரிவு, குன்மம், செரியாமை, அன்னத்துவேஷம், பித்தம், நீர்க்கடுப்பு, ஆசனக்கடுப்பு, எலும்புருக்கி, பீனிசம், காசம் முதலியவை தீரும்.

## பூஷணிக்காய் ரசாயனம்

ஒரு நீர்ப்பூஷணிப்பழம் கொண்டு வந்து மேற்றோல் நீக்கித் துவைத்துப் பிழிந்து, பின்பு சற்று வேகவைத்து மறுபடியும் பிழிந்து திப்பியை எடுத்து அத்துடன் அரைப் படி பசுவின் நெய் வார்த்து பொன்னிறமாய் வறுத்து ஏலம், லவங்கம், அதிமதுரம், திப்பிலி, சாத்திரபேதி, கல்நார், கல்மதம், சுக்கு, மிளகு இவைகள் வகைக்கு விராகன் மூன்றைப் பொடித்துச் சேர்த்து ; நெய்விட்டுக் கிளறி ஒரு படி மணப்பாகு விட்டு கிளறி மூன்று காசிடை நெய்யிலோ, இளநீரிலோ கொள்ள, எலும்புருக்கி, உள்ளுருக்கி, மூத்திரக்கிருச்சிரம், ரக்தப்பிரமேகம்

இவைகள் தீரும். நீர்ச்சோறும், தண்ணீரும் கொள்ளவும். சிறுகீரை, பொன்னாங்காணி, நீர்முள்ளிஇலை, பசுவின் நெய், பால் இவைகளையும் கூட்டவும்.

## காமாலைக்கு

அரப்பொடி பலம் ஐந்து, சுக்கு, திப்பிலி, மிளகு, சீரகம், கருஞ்சீரகம், கொத்தமல்லி, கார்போகரிசி, சாத்திரபேதி, கோட்டம், கந்தகம், ஓமம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், லவங்கம், தாளிசப்பத்திரி, வாய்விளங்கம், அதிமதுரம், இந்துப்பு, ஏலம், கடுகு, சதகுப்பை இவைகள் வகைக்குப் பலம் அரையைச் சூரணித்து, கையாந்தகரை, கீழாநெல்லி, அழிஞ்சி, வெற்றிலை இவற்றின் சாறு வகைக்கு படி அரையில், மூப்பது எலுமிச்சம்பழச்சாறு பிழிந்து அதில் ஊறவைத்து உலர்த்தி சூரணித்து தேனில் கொள்ளவும்.

## வில்வாதி லேகியம்

சீவிய வில்வவேர் பலம் நூறு, விலாமிச்சம்வேர், வெட்டிவேர், நன்னாரிவேர், சிற்றாமுட்டிவேர், பேராமுட்டிவேர், பாதிரிவேர், முன்னைவேர் இவைகள் வகைக்கு பலம் பத்து இவற்றை இடித்து பதினாறு வள்ளத்தண்ணீர் விட்டு, இரண்டு வள்ளமாய்க் காய்ச்சி வடித்து அதில், பசுவின் பால் படி இரண்டு சேர்த்து, சுக்கு, திப்பிலி, மிளகு, சிறுதேக்கு, திப்பிலிமூலம், கிராம்பு, சீரகம், கருஞ்சீரகம், தாளிசப்பத்திரி, செவ்வியம், செவ்வெள்ளிக்கொடி, சிற்றரத்தை, தேவதாரம், சிறுநாகப்பூ, லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, கண்டங்கத்திரி, தூதுவேளைவேர், அமுக்கருக்கிழங்கு, கொத்தமல்லி, வாய்விளங்கம், ஆரிணிகம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், கற்கடகசிங்கி இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, ஏலம், கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி இவைகள் வகைக்கு விராகன் ஐந்து, முந்திரிப்பழமும், பேரீச்சம்பழமும் வகைக்கு பலம் இரண்டு, பழையவெல்லம் பலம் நூறு, இவற்றை குமட்டி மாதுளம்பழச்சாறு, நார்த்தம்பழச்சாறு, இஞ்சிச்சாறு, சகதேவிக்கிழங்குச்சாறு இவைகள் வகைக்கு படி இரண்டாலானதில் முதலில் வெல்லத்தைப் போட்டு பாகுபதத்தில், சூரணங்களைப் போட்டுக் கிளறி பதத்தில் ஒரு படி நெய் விட்டுக் கிளறி, ஒரு படி தேன் விட்டுக் கிளறி கொட்டைப்பாக்களவு கொள்ள சகல ரோகமுந் தீரும்.



## கலிங்காதி லேகியம்

பருத்திச்சாறும், செருப்படைச்சாறும் வகைக்கு படி இரண்டு நெய்க்குமட்டிச்சாறு படி அரை இவற்றைக் கூட்டியதில் ஆறு பலம் பனைவெல்லம் போட்டு லேகியபதமாய்க் கிளறி கொட்டைப்பாக்களவு இருநேரங் கொள்ள வயிற்றுக்கழிச்சல் தீரும். இரைச்சல், உப்பிசம், மேற்சுவாசம், ஆமைவலி இவையும் தீரும்.

## காமாலை பிணிசத்திற்கு

பேய்ப்பீர்க்கன் வேரைத்தட்டிப் பொட்டணங்கட்டி நாசியில் பிழியவும்.

## சத்திகுன்மர், காமாலை, இருமல் இவைகளுக்கு

ஏலம், கிராம்பு, பச்சிலை, சிறுநாகப்பூ, திப்பிலி இவற்றைச் சூரணித்து வெருகடியளவு தேனில் கொள்ளவும்.

## சகல ரோகத்திற்கும்

ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, கடலிராஞ்சிப்பட்டை, சிறுநாகப்பூ, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், முத்தக்காசு, கொத்தமல்லி, பேரீச்சம்பழம், முந்திரிப்பழம், தாளிசப்பத்திரி, சாதிக்காய், சாதிப்பத்திரி, வெட்டிவேர், இலாமிச்சம்வேர், சந்தணம், காட்டெருமைப்பால், நன்னாரிவேர், நெருஞ்சிக்காய், சாரணைவேர், நிலப்பனைக்கிழங்கு, நிலவேம்பு, அமுக்கருவேர் இவற்றைச் சரிகூட்டிச் சூரணித்து, சீனிசர்க்கரை சரியிடை கூட்டி, திரிகடி அளவு நெய்யில் கொள்ள, படர்தாமரை, செவ்வட்டை, ஆனைச்சொரி, பெருந்தினவு, வண்டுகடி, மந்தாரம், அக்கினி பைத்தியம், காமாலை, பாண்டு. சோகை, சனை. இருமல், மருந்திட்டிருமல் முதலியவை தீரும்.

## பரங்கிப்பட்டை சூரணம்

பரங்கிப்பட்டை சேர் நாலைச் சூர்ணித்து கோதுமை மாவு சரியிடை கூட்டி சட்டியில் ஒரு வள்ளத்தண்ணீர் விட்டு அதில் சதுரக்கள்ளியைத் துண்டித்துப் போட்டு வேடுகட்டி அதன்மேல் மேற்படி சூரணத்தை வைத்து பிட்டவித்து இருநேரமும் கொள்ள, கிரந்தி. சூலை, கைகால் முடக்கம் இவை தீரும். பத்தியம் : வெந்நீரும் சோறும் ஒன்பது நாள் கொள்ளவும். பத்து நாள் இச்சாபத்தியம்.

## ஏலாதி சூரணம்

ஏலம் நாலு பங்கு, லவங்கம் ஒரு பங்கு, மிளகு எட்டு பங்கு, கருஞ்சீரகம் நாலு பங்கு, சுக்கு முப்பத்திரண்டு பங்கு, நாக கேசரம் எட்டு பங்கு, முறக்குறுந்து அறுபத்துநாலு பங்கு இவைகளைப் பொடித்து சர்க்கரை நூற்றுஇருபத்துஎட்டு பலம் கலந்து திரிகடிப் பிரமாணம் இளவெந்நீரில் இரண்டு நேரம் கொள்ள, அத்திசுரம் தீரும். பத்தியம் காக்கவும்.

## சந்திர சூரணம்

கருஞ்சீரகமும், நற்சீரகமும் வகைக்கு விராகன் நான்கு, திப்பிலி விராகன் பதினாறு, லவங்கம் பலம் ஒன்று, லவங்கப் பட்டை பலம் ஒன்றரை, இலாமிச்சம்வேர், தாளிசப்பத்திரி, சுக்கு, மிளகு, சாதிப்பத்திரி, ஏலம் இவைகள் வகைக்குப் பலம் ஒன்று இவற்றைச் சூரணித்து சரியிடை சர்க்கரைகூட்டி திரிகடி அளவு கொள்ள, அத்திசுரம், எலும்புருக்கி, ஈளை, இருமல், வறட்சி, அக்கினிமாந்தம் இவைகள் தீரும். பத்தியம் காக்கவும்.

## தாளிசப்பத்திரி சூரணம்

தாளிசப்பத்திரி பலம் இரண்டு, செவ்வியம் பலம் ஒன்று, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல் இவைகள் வகைக்குப் பலம் அரை, மிளகு, திப்பிலி, சுக்கு, கிராம்பு, கூகைநீர் இவை கள் வகைக்குப் பலம் கால், ஏலம் விராகன் இரண்டு, நற்சீரகம் பலம் அரை, நாககேசரம், கருஞ்சீரகம், திப்பிலிமூலம், சிற்றரத்தை இவைகள் வகைக்குப் பலம் கால், காட்டுச்சீரகம் பலம் அரை இவைகளைச் சூரணித்துக் கொள்ள, திரிதோஷம், மந்தவியாதிகள் எல்லாம் தீரும். பத்தியம் காக்கவும்.

## கூழ்மாண்ட சர்க்கரை

பெரும் பூசணிக்காயைக் குடல்நீக்கி, சிறிதாய் அரிந்து பிட்டுக்கட்டி வேகவைத்துப் பிசைந்து நெய் வார்த்து சிவக்க வறுத்து, சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு இவைகள் வகைக்குக் கழஞ்சு மூன்றைப் பொடித்துச் சேர்த்து வெள்ளைச்சர்க்கரை பலம் நாலும், தேன் படி ஒன்றும் கூட்டிப் பிசைந்து எலுமிச்சங் காயளவு கொள்ள, உடம்பெரிவு, கைகாலெரிவு, பிரமியம், வயிற்றெறிவு, அக்கினிமந்தம், அருசி முதலியவை தீரும்.



## கூழ்மாண்ட செந்தூரம்

விரைநீக்கித் தகடாக அறுத்து உலர்த்திப் பொடித்த, பெரும்பூசணிக்காய்ச் சூரணத்தை, பசுவின் நெய் படி ஒன்று கலந்து சிவக்க வறுத்து, சுக்கு, திப்பிலி, சீரகம், மிளகு, கொத்தமல்லி இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, பச்சிலை, அதிவிடையம், கோட்டம், தேவதாரம், நிலவேம்பு இவைகள் வகைக்குப் பலம் கால், ஏலமும், லவங்கப்பட்டையும் வகைக்குப் பலம் அரை இவற்றை மேற்படி சூரணத்துடன் போட்டுப் பொன்னிறமாய் வறுத்துச் சூரணித்து பத்து பலம் சர்க்கரையும் தேன் படி ஒன்றும் சேர்த்து இரண்டு நேரம் மூன்று விராக னிடை வீதம் கொள்ளவும். மேகம் போம்.

## இருமலுக்கு

ஆலம் விழுதைப் பசுவின் பாலில் அரைத்துத் தேனில் குழப்பிக் கொடுக்கவும்.

## பவுத்திரத்திற்கு

சீயக்காய்க்கொழுந்து, மிளகு, உள்ளி இவற்றைச் சேர்த்து அரைத்து புழுங்கலரிசித் தவிட்டில் புரட்டி இருபத்தோறு நாள் கொள்ள, உடம்பெரிவு, ஆராட்டம், இருமல், உளமாந்தை, வீக்கம், சுரம், இளைப்பு, காலை பைத்திய காமாலை, பாண்டு, மூலம், அக்கரம், உள்காய்ச்சல். மயக்கம், தலைவலி, குன்மம், அத்திசுரம், பைத்தியவியாதி, தாகம் முதலியன தீரும். இளைத்த உடம்பு பெருக்கும். கைகண்டது.

## வாயுவுக்கு

முத்தின பிரண்டையை சிறுக நறுக்கி சரியிடை கல்லுப்புச் சேர்த்து மோர்விட்டு சுண்ட வேகவைத்து உப்பை நீக்கி உலர்த்தி இடித்த சூரணம் படி முக்கால், மிளகு, திப்பிலி, ஓமம், இந்துப்பு, நற்சீரகம், கருஞ்சீரகம், கடுக்காய், தானிக்காய் இவை கள் வகைக்குப் பலம் அரை, பெருங்காயம் விராகன் ஒன்று, பழையவெல்லம் பலம் பத்து இவைகளைச் சூரணித்துக் கலந்து வெருகடியளவு கொண்டு மேலே வெந்நீர் சாப்பிடத் தீரும்.

## சகல வாதத்திற்கும்

பரங்கிப்பட்டை பலம் ஆறு, சுக்கு, திப்பிலி, மிளகு, செவ்வியம், வாய்விளங்கம், திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி

கிராம்பு, சீரகம், கருஞ்சீரகம், லவங்கப்பத்திரி, சாதிக்காய், கூகைநீர், சிறுதேக்கு, கண்டங்கத்திரி, நல்ல சந்தனம், தேவதாரம், வெள்ளருகு, சிவனார்வேம்பு, சந்தனப்பட்டை, புங்கம் பட்டை, ஆயில்பட்டை, வேப்பம்பட்டை, கழற்சிப்பருப்பு, பிரப்பங்கிழங்கு இவைகள் வகைக்குப் பலம் கால், கையாந்தகரையும், துளசியும் வகைக்குப் பலம் அரை இவைகளைச் சூரணித்து வெருகடியளவு கொள்ள, தனுர்வாதம், அண்டவாதம், அப்புதரவாதம், சுரோணிதவாதம், மேகவாயு, கபால சூலை, குன்மம், தழல்வாதம், மேகரோகம், பௌத்திரமூலம், வாதம், கபாலரோகம், சூதகவாயு, வாதசன்னி முதலியவை தீரும்.

## சகல ரோகத்திற்கும்

சுக்கு, திப்பிலி, திப்பிலிமூலம், செவ்வியம், சித்திரமூலம், திரிபலை, பெருங்காயம், மிளகு, இஞ்சி, வெள்வெங்காயம், அசமதாகம், வட்டத்திருப்பிவேர், பெருமரத்துப்பட்டை, ஆனைத்திப்பிலி, நேர்வாளம், கன்னிகட்டசாம்பல், முக்காவேளைவேர், சீரகம், கருஞ்சீரகம், சாரணைவேர், ஊசிமல்லிகைவேர், நொச்சிவேர், கையாந்தகரை, நிலவேப்பம்பட்டை, தாமரைவளையம், தேவதாரம், குராசாணிஓமம், பிரண்டைவேர், ஆரணிகம், கழற்கொடிவேர், மஞ்சள், கொத்தமல்லி, நவச்சாரம், எவச்சாரம், சத்திச்சாரம், சவுக்காரம், வெங்காரம், பஞ்சலவணம் இவற்றைச் சூரணித்து இவைகளின் கூட்டுத்தொகைக்கு மூன்றில் ஒரு பங்கு, சுத்திசெய்த சிவதைச்சூரணம் சேர்த்து வெருகடியளவு வெந்நீரில் கொள்ள, வயிற்றுவலி, குன்மம் எட்டு, வாதநோய்கள், பீலிகம், மலபந்தம், உதிராதிக்கம், அன்னத்வேஷம், பாண்டு, உதிரவீக்கம், சித்தப்பிரமை, சுவாசகாசம், விக்கல், சுரம், அசீரணம், வாந்தி, இருமல், பித்தம், சேத்துமக் கல்லெரிப்பு, க்ஷயம், பாரிசவாயு பொருமல், உளைமாந்தை முதலியவை தீரும்.

## கடுக்காய்ச் சூரணம்

விரைநீக்கிய கடுக்காய் பலம் நான்கை இஞ்சிச்சாற்றில் ஊறவைத்து உலர்த்தி சுக்கு, மிளகு, ஓமம், கடுகு, வாய் விளங்கம் இவைகள் வகைக்குப் பலம் அரை, ஏலம், திப்பிலி மூலம், சித்திரமூலம், அதிமதுரம், நெல்லிப்பருப்பு, சிவதைவேர், சாரணைவேர், லவங்கப்பட்டை, சீரகம் இவைகள் வகைக்கு



விராகன் மூன்று, சர்க்கரை பலம் ஆறு இவைகளைச் சூரணித்துப் போட்டு வெருகடியளவு கொள்ள, நெஞ்செரிவு, புளி ஏப்பம், மலபந்தம், கைகால் கடுப்பு, அக்கினிமாந்தம், சூசிகாவாதம், சூசிகாபித்தம், கபாலரோகம், வயிற்றுவலி முதலியவை தீரும். பத்தியம் காக்கவும்.

## பசியில்லாமைக்கு

மாவிலிங்கம்பட்டை, கூவளைவேர், எருக்கன்மொட்டு இம்மூன்றும் பச்சையாகவும், சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றைச் சூரணித்தும் திரிகடிப்பிரமாணம் கூட்டி வெருகடிப் பிரமாணம் நெய்விட்டு சோற்றுடன் பிசைந்து மூன்று கவளம் ஏழு நாள் கொள்ள பசியுண்டாம்.

## குட்டத்திற்கு

சித்திரமூலம், அதிவிடையம், கோஷ்டம், பெருங்காயம் சவ்வாசிலவணம், வளையலுப்பு, திப்பிலிமூலம், சிறுதேக்கு, ஓமம், சுக்கு, நவச்சாரம் இவற்றைக் கஷாயமிட்டுக் கொஞ்சம் பெருங்காயமும், பசுவின் நெய் கரண்டியும் விட்டு ஒன்பது நாள். கொள்ளத் தீரும்.

## சித்திரமூல கிருதம்

கொடிவேலிவேர்ப்பட்டை பலம் முப்பதை நாலு வள்ள நீரிலிட்டு இரண்டு படியாகக் காய்ச்சி இருப்புச் சட்டியில் இறுத்து, அத்துடன் திப்பிலி, கடுக்காய், தானிக்காய், நெல்லிவற்றல் முத்தக்காசு, வல்லாரி, அரிசி, திப்பிலிமூலம், நெரிஞ்சிவேர், குரும்பச்சிஇலை, தேவதாரம், கொத்தமல்லி, வசம்பு, சிறுதேக்கு,நன்னாரிவேர், ஆனைத்திப்பிலி, அசமதாகம், சீரகம், பெருங்காயம், இந்துப்பு, கடுகுரோகணி இவைகள் வகைக்கு விராகன் பத்தும், வாய்விளங்கம், மிளகு, புங்கம்வேர், எருக்கன்வேர் பட்டை இவற்றையும் சரிகூட்டிச் சூரணித்து வெருகடிப் பிரமாணம்வெந்நீரில் கொள்ள, செரியாக்குணம்,வயிற்றுத்தணல், கைகால் குளிர்ச்சி, கூட்டுவிப்புருதி, குடல்வாயு, கிராணி, இருவாய்க்கட்டு, விக்கல், உப்பிசம், பசியின்மை முதலியன தீரும்.

## மூலபேதிக்கு

திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, கொடிவேலிவேர், திப்பிலி, சடாமாஞ்சி, முந்திரிப்பழம், நவச்சாரம், ஓமம், இந்துப்பு,

அதிமதுரம், முள்ளிவேர், கண்டங்கத்திரிவேர் இவற்றைச் சரி கூட்டிச் சூரணித்து வெருகடியளவு வெந்நீரில் கொள்ள, மூலம் ஆறு, குன்மம் எட்டு, பிரமியம் எட்டு, கல்லடைப்பு, நீரடைப்பு, சதையடைப்பு, திமிர்வாதம், சிலேத்துமம், பாண்டு, கிராணி, பித்தம் முதலியவை தீரும்.

## முதியார்கூந்தல் தைலம்

முதியார் கூந்தல் பலம் நூறு, முன்னைவேர், பாதிரிவேர், வில்வவேர், பெருவாகைவேர் இவைகளை மேற்றோல் போக்கி, மிளகுதக்காளிவேர், சித்தாமுட்டிவேர், பேராமுட்டிவேர், சிறு வழுதலைவேர், கண்டங்கத்திரிவேர், நெருஞ்சிவேர், செம்முள்ளி வேர், சத்திச்சாரணைவேர், பெரியாமணக்குவேர், சிந்திற்கொடி, கொடிவேலிவேர், முக்காவளைவேர், மருதம்வேர், விழும்பிவேர், ஊமத்தம்வேர், அழிஞ்சில்வேர், விடத்தலைவேர், ஆடாதொடை வேர், பேய்ப்புடல், கொத்தமல்லி, கொள்ளு, உளுந்து, பூனைக் காலிவேர், செம்புழுஞ்சங்கட்டை, கொன்னைவேர், நொச்சி வேர், வேலிபருத்திவேர், முடக்கொத்தான்வேர், தூதுவளைவேர், அவுரிவேர், செங்கொட்டைவேர், கருங்காலிவேர், செண்பம் விரை, புங்கம்விதை இவைகள் வகைக்குப் பலம் பத்தைப் பதினாறு படி நீரிலிட்டு எட்டுப் படியாய்க் காய்ச்சி வடித்து அதில் எட்டு படி நல்லெண்ணெய் சேர்த்து, மூத்தக்காசு, ஏலம், செம்புழுஞ்சாங்கட்டை, நாவல்வேர், தகரம், குங்குமப்பூ, பாவட்டைவேர்பட்டை, அரேணுகம், கடுகு, அரத்தை, கோஷ்டம், வெங்கோட்டம், சாதிக்காய், வசம்பு, வெட்டிவேர், தக்கோலம், தாமரைவளையம், தாமரைப்பூ, கறிமஞ்சள், நல்ல சந்தனக்கட்டை, வெள்ளைக்கல், ஏலம், லவங்கப்பட்டை, லவங்கப்பத்திரி, சிறுநாகப்பூ, மரமஞ்சள், பொன்னாங்காணிவேர், சதகுப்பை, மருட்கிழங்கு, இலாமிச்சம்வேர், இந்துப்பு, அட்டுப்பு நெய்தல்கிழங்கு, சுக்கு, வட்டைத்திருப்பிவேர், திப்பிலிமூலம், ஆனைத்திப்பிலி, வாய்விளங்கம், கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், வாலுளுவைஅரிசி, மிளகு, சீரகம், வெந்தயம், கடுகுரோகணி, வெப்பாலை அரிசி, செவ்வியம், அதிவிடையம் இவைகள் வகைக்கு விராகனிடை எட்டை அரைத்துப் போட் டுக் காய்ச்சி, மெழுகுபதத்தில் வடித்து, உள்ளுக்குக் காசளவு கொண்டு, நசியமுஞ்செய்ய, வாதம் எண்பது, சன்னிவாதம், பைத்தியம், சயம், காசம், நீர்நோய் முதலியன தீரும். தாளித்த



தேகம் சிறுக்கும், இளைத்த தேகம் பருக்கும். புத்திர பாக்கியம் உண்டாகும்.

## சன்னி 13-க்கு:

நல்லெண்ணெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், புங்கெண்ணெய், இலுப்பெண்ணெய், எலுமிச்சம்பழச்சாறு, ஊமத்திலைச்சாறு, மாவிலிங்கஞ்சாறு, நொச்சிச்சாறு, கள்ளிச் சாறு, திருகுகள்ளிச்சாறு, இலைக்கள்ளிச்சாறு, அமுக்கலாஞ்சாறு வாதமடக்கிச்சாறு, அழிஞ்சிச்சாறு, நிலவுகாய்ச்சாறு, வாகைச் சாறு, உகாச்சாறு இவைகள் வகைக்குப் படி ஒன்றைச் சிறு தீயிட்டு மூன்று நாள் காய்ச்சி அதில், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, அபினி, ஏலம், சீரகம், வெள்வெங்காயம், தேவதாரம், அதிமதுரம், கோஷ்டம், இந்துப்பு, சதகுப்பை, கொத்தமல்லி, திப்பிலி, திப்பிலிமூலம், சந்தனம், லவங்கப்பட்டை, கச்சோலம், அரத்தை, முந்திரிப்பழம், பேரிச்சம்பழம், பூதகரப்பன்பட்டை, சாத்திரபேதி, மரமஞ்சள், நிலவேம்பு, அக்ராகாரம், வாய் விளங்கம், வசம்பு, பம்முகம், அரேணுகம், பெருங்குரும்பை, செஞ்செந்தனம், சிறுதேக்கு, செவ்வியம், செவ்வள்ளிக்கொடி, வெப்பாலையரிசி, வாலுளுவைஅரிசி, கருஞ்சீரகம், விளிச்சிப் பிசின், சித்தரத்தை, பேரரத்தை, கூகைநீர், கற்கடகசிங்சி, மலை மஞ்சள், மஞ்சிட்டி, கலையுருவி, சமுத்திராப்பழவிதை, கொடி வேலிவேர், தகரைவிதை, புலித்துடக்கிவேர், குமுலாதண்டை வேர், குணுப்பாலைவேர், கழற்சிப்பருப்பு, தேற்றான்விதை, ஓமம், கடுக்காய், தான்றிக்காய், பேய்ப்புடல், எட்டிவிதை இவைகள் வகைக்கு விராகனிடை ஆரை, சூரணித்துப் போட்டு கமலாக்கினியாக எரித்து, மெழுகுபதத்தில் வடித்து, தானிய புடம் மூன்று நாள் வைத்து, காசிடை உள்ளுக்குக் கொடுத்து, கண்ணுக்குக் கலிக்கமிட்டு உச்சி சந்து உள்ளங்கால் முதலிய இடங்களில் தேய்க்க சன்னி பதிமூன்று, வலிப்பு, தோஷம் முதலியன தீரும்.

## குட்டம் 18-க்கு

எட்டிவிதையைச் சூரணித்து: சிறுபீளை, நாயுருவிசமூலம் இவற்றை ஊறவைத்த தண்ணீரில் வேகவைத்து, சூரணித்துப் பிசைந்து பிழியத் தைலம் வரும். மேற்படி தைலத்தில் கார்போகரிசிச் சூரணங்கூட்டி உடம்பில்பூசி, நசியஞ்செய்யக் குட்டம் பதினெட்டும் தீரும். கோரோசனை கூட்டித் திலதமிட

சருவவசியம், மேற்படி தைலத்தைத் தண்டில்பூசிப் புணரத் தம்பனம் உண்டாம்.

## சந்நிரதித் தைலம்

நல்லெண்ணெய் படி ஒன்றோடு சந்தனம், ஓலைப்பூ, அதிமதுரம், மகிழம்பூ, நன்னாரிவேர், இலாமிச்சம்வேர், வெட்டிவேர் கஸ்தூரிமஞ்சள், செண்பகப்பூ, கோரைக்கிழங்கு, நெல்லிப்பருப்பு இவைகள் வகைக்குப் பலம் இரண்டை இடித்து எட்டு படி தண்ணீரில் இட்டு, ஆறு படியாய்க் காய்ச்சியதைச் சேர்த்து அத்துடன் பசுவின் பால் படி நாலும் கூட்டி, அஞ்சனக்கல், இலாமிச்சம்வேர், நன்னாரிவேர், நற்சீரகம், கருஞ்சீரகம், ஏலம், லவங்கம், பச்சை, சடாமாஞ்சி, செங்கழுநீர், கோஷ்டம், அதிமதுரம், வெட்டிவேர், தாமரைவளையம், சாதிக்காய், தக்கோலம், கடுகுரோகணி, நாககேசரம், ஓமம், தகரம், புனுகு, தண்ணீர் விட்டான்கிழங்கு, காட்டுமஞ்சள், முத்தக்காசு, கஸ்தூரி, சந்தனம், சாதிப்பத்திரி, கிராம்பு, கற்பூரம், அகில், வெள்ளைக்கல், தாமரைப்பூ, இலுப்பைப்பூ, முந்திரிப்பழம், நெய்தல்கிழங்கு, செவ்வழிஞ்சி, குங்குமப்பூ, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய், கிலுகிலுப்பைவேர், சிந்தில்தண்டு இவைகள் வகைக்குக் காசிடை ஒன்றைச் சூரணித்து மேற்படி எண்ணெயிலிட்டு, மெழுகுபதமாய்க் காய்ச்சி, இறக்கி, தலைமுழுக நாற்பது வகை பித்தம், சர்வாங்க எரிவு இவைகள் தீரும். பத்தியம் காக்கவும்.

## மேல்நோக்கிய வியாதிக்கு

வெள்ளாட்டுக்குடலை வெதுப்பிப் பிழிந்த சாறு படி ஒன்று, மஞ்சள் பொடி குருணி, விடத்தலையிலையும், வேரும் அரைத்தது தேங்காயளவு, கோழிப்பீ நார்த்தங்காயளவு, நல்லெண்ணெயும், விளக்கெண்ணெயும் வகைக்கு படி ஒன்று இவைகளைக் கூட்டி இளம்பதமாய்க் காய்ச்சி வடித்து உடம்பில்பூசி, இலுப்பைப் பிண்ணாக்கு இட்டு வெந்நீரில் முழுகவும், கருங்கம்பளியில் எலுமிச்சங்காயளவு கருப்புக் கட்டியில் வைத்துச் சுற்றிக்கட்டித் தீயிலிட்டு எரித்த கரியை இளவெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும் தீரும்.

## சகல வாதத்திற்கும்

இரசம், கந்தகம், வெங்காரம், சவுக்காரம், அரிதாரம், துத்தம், துரிசு, கருங்குங்கிலியம், கெவுரி, கருஞ்சீரகம், காரபோகரிசி,



காந்தம் இவைகள் வகைக்கு விராகன் மூன்று; எருக்கன் பட்டை பலம் ஒன்று இவற்றை எருக்கம்பால் விட்டு அரைத்து சீலையில் தடவி உலர்த்திச் சுருட்டி கத்தியில் கோத்து வேப்பெண்ணெய் படி ஒன்று விட்டு வாங்கிய சுடர்த்தைலம், வெள்வெங்காயத்தைலம், கோழிமுட்டைத்தைலம் இவற்றைச் சேர்த்து, துவளையிடவும். இடதுபுறம் நொந்தால் எருக்கன்வேர் பட்டை மேற்படி நிறை சீவியது பலம் ஐந்தை ஒரு படி பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி கால் படி கொடுக்கவும். வலதுபுறம் நொந்தால் சதுரக்கள்ளிவேர்பட்டை பலம் நான்கைப் பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி கால் படி கொடுக்கவும். இதைக் கொடுத்துப்பின் மயிரும் குடலும் நீக்கின ஒரு கோழியை வேக வைத்து வெல்லமும், தேங்காய்த்துருவலிலும் சேர்த்துப் பிசைந்து கொள்ள, உஷ்ணம் தீரும்.

## அண்ட வாதத்திற்கு

வடக்கே போகின்ற குமிழன்வேரைக் கொண்டு வந்து வெள்ளாட்டுப் பாலிலாவது, பசுவின் பாலிலாவது எலுமிச்சங்காயளவு அரைத்து மூன்று நாள் கொடுத்து, விதை வீக்கத்திலும் பூசவும்.

## ஓரண்ட வாதத்திற்கு

(1) உள்ளி, வசம்பு, கருங்கம்பளி, ஆட்டுச்சாணி ஊர் சுத்தி இவற்றை சிறுநீர்விட்டு வறுத்துக் கீழ்வயிற்றிலிருந்து ஒற்றிடங்கொடுத்து, எருக்கன்மொட்டுப்பூவை அரைத்து மிளகளவு வெற்றிலைப்பாக்குடன் மூன்று நாள் கொள்ளவும்.

(2) இண்டிலைச்சாறு இரண்டு பங்கும், காராட்டுப்பால் ஒரு பங்கும் சேர்த்து பனைவெல்லம் கழற்சிக்காயளவு கூட்டிக் கொடுக்கவும் தீரும். கடும்பத்தியம் காக்க வேண்டும்.

## முழங்கால் வாதத்திற்கு

(1) நரியனூர்பொரியில் அரிசித்தண்ணீரைக்கட்டி, உள்முளை நீக்கிய வெள்வெங்காயம் சேர்த்து அரைத்து நல்லெண்ணெயில் கொதிக்க வைத்து மூன்று நாள் கொள்ளவும்.

(2) கோழிமுட்டை வெள்ளைக்கருவில் கழற்சிப்பருப்புச் சூரணம் போட்டுக் கொடுக்க தீரும். உப்பு புளி நீக்கவும்.

(3) திருகுகள்ளிவேரை வெள்ளாட்டுப்பாலில் வேகவைத்து உலர்த்தி வேண்டியபோது வெற்றிலைப்பாக்குடன் *புளியங் கொட்டையளவு சாப்பிடவும்.

**மாற்று** :—தண்ணீரும் மோருஞ்சோறும்.

(4) நேர்வாளம்பருப்பை அரைத்து எருமைப்பாலில் கலக்கி ஊறவைத்துக் கடைந்து எடுத்த வெண்ணெயை எட்டு நாள் மண்ணில் புதைத்து எடுத்து உள்ளங்கை, உள்ளங்காலில் தேய்க்கவும் பேதியாகும்.

**மாற்று** :—வெந்நீரில் கழுவவும். முழங்கால் வாதம் தீரும்.

... படி ஊறல புளியடி எலுமிச்சங் காயளவும், கள்ளிப்பாலில் சுத்திசெய்த நேர்வாளம் பதினைந்தும் பொடித்து உழக்கு சிற்றாமணக்கெண்ணெயில் போட்டுக் காய்ச்சி இரண்டு துளி இஞ்சிச்சாற்றில் பனைவெல்லங் கலந்து அதில் கொடுக்கவும் பேதியாகும்.

**மாற்று** :—மோருஞ்சோறும். இதில் நிற்காவிட்டால் சீலையில் செம்மண்தடவி சீரகம் வைத்துக் கட்டிப் புடம்போட்டு இளவெந்நீரில் அரைத்துக் கொடுக்கவும். அதற்கும் நிற்காவிடில் எருமைத்தயிர், எருமைச்சாணிப்பால், இளநீர் இவற்றில் மிளகு விராகனிடை ஒன்று, சீரகம் விராகன் ஒன்று, [illegible] இவற்றைக் கூட்டி அரைத்துக் கொடுக்கவும்.

**வேறு** :—நிலஆவரைசமூலம், வெள்ளைச்சாரணை [illegible]லம், முடக்கொத்தான்வேர் இவற்றைக் கோமூத்திரத்தில் [illegible] வேகவைத்து உலர்த்தினதும் சிவதைவேர், கடுகுரோகணி இவைகள் வகைக்குப் பலம் ஒன்று, கருஞ்சீரகம் பலம் [illegible] இவற்றை எல்லாம் சூரணித்து வெருகடியளவு [illegible]ல் கொள்ளவும் பேதியாகும்.

**மாற்று** :—மோருஞ்சோறும்.

## வயிற்று நோவுக்கு

நேர்வாளம், இந்துப்பு, வெங்காரம், கடுகுரோகணி இவற்றைச் சரிகூட்டி எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்துக்

* புளியங்கொட்டை அளவு சாப்பிடக் கூறியிருப்பினும் மிக்க பேதியாகுமாகையால் அளவைக் குறைக்க வேண்டும்.



குன்றியளவு குளிகைசெய்து வெல்லத்தில் கொள்ள, குன்மவாயு, மலசல அடைப்பு, வரட்டுப்புழு இவைகள் போம்.

## நீரடைப்புக்கு

சுத்திசெய்த நேர்வாளம், கந்தகம், ரசம், வெங்காரம், மிளகு இவற்றை ஒரு சாமமரைத்து குன்றியளவு குளிகைசெய்து கருப்புக்கட்டியில் கொள்ள பேதியாகும். வெந்நீரில் கைகால் கழுவ நிற்கும்.

## மலசல அடைப்புக்கு

பேய்குமட்டிவேரை எலுமிச்சங்காயளவு அரைத்து எருமை மோரில் கலக்கிக் கொள்ளவும்.

**மாற்று**:—மோருஞ்சோறும்.

## விரேசனத்திற்கு

**குளிகை** :—வறுத்து முளைநீக்கிய நேர்வாளமும், பொரித்த வெண்காரமும் ஓர் அளவாகக் கொண்டு சாரணைச்சாற்றால் அரைத்துக் குன்றியளவு குளிகைசெய்து கருப்புக்கட்டியில் கொள்ளவும்.

**மாற்று** :—முருங்கையீர்க்குக் கஷாயமும், புளிச்சாறுஞ் சோறும் கொடுக்கவும்.

**கஷாயம்** :—நெல்லியீர்க்கும், பிரமிஇலையும் வகைக்கு பிடி. கற்றாழஞ்சோறு, களிப்பாக்கு இரண்டு, கடுக்காய் நாலு, காசுக்கட்டி விராகன் ஒன்று இவற்றை இரண்டு படி தண்ணீரில் போட்டு கால் படியாகக் காய்ச்சி, கருப்புக்கட்டி சேர்த்துக் கொள்ளப் பேதியாகும்.

**குடிநீர்** :-பேய்க்குமட்டிச்சாறும், எருமைத்தயிரும் வகைக்குப் படி ஒன்று, கல்லுப்பு படி அரை இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி நீர்வற்றிய பின்பு பொடித்து எடுத்து வெந்நீர், மோர் இவற்றில் ஒரு விராகன் உப்பைக் கரைத்துக் கொடுக்கவும். இருபது நாழிகைக்கு மேல் புளி ரசமும், சோறும் சாப்பிடலாம்.

**எண்ணெய்** :—வரிகுமட்டிச்சாறு, சதுரக்கள்ளிப்பால், பிரமி இலைச்சாறு, பொடுதலைச்சாறு, காட்டாமணக்கின்சாறு இவை கள் வகைக்குப் படி ஒன்று, வெள்ளைச்சாரணைவேர், வாய் விளங்கம், நிலையாவரைவேர், வெள்வெங்காயம் இவைகள் வகைக்குப் பலம் இரண்டு, எண்ணெய் படி ஒன்று இவற்றைச் சேர்த்துக் காய்ச்சி காசிடை எண்ணெய் கொள்ளப் பேதியாகும்.

குன்மம் எட்டு, பீலிகை ஆறு, நீர்க்கோவை, பெருவயிறு, வாதம் எண்பது இவையாவும் தீரும். உப்பில்லாக் கஞ்சி கொள்ளவும்.

வேறு :—கற்றுழைச்சருகு, கவிப்பாக்கு, கடுக்காய், கரிசே... பீர்க்கு இவைகள் வகைக்குப் பலம் அரைக்காலே இரண்டு படி தண்ணீரில் போட்டு அரைக்காலாய்க் காய்ச்சி, வடித்து அரை படி நல்லெண்ணெய் விட்டுக் கலக்கிக் கொடுக்கக் கழியும். பருத்தவுடல் சிறுக்கும், சீதக்கட்டு, குன்மம், இருமம் இவைகள் தீரும்.

## கண் ரோகங்களுக்கு

பளிங்குப்பொடி, பொன்பொடி, வெள்ளிப்பொடி, அரிதாரம், இந்துப்பு, சந்தனம், சிவப்புச்சந்தனம், நீலாஞ்சனம், துத்தம், துருசு, திப்பிலி, அதிமதுரம், செங்கழுநீர், கோஷ்டம், கடுகுரோகணி, கடல்நுரை, சுக்கு, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், வெள்ளிலோத்திரம் இவற்றைச் சரிகூட்டி நந்தியாவட்டைப்பூச்சாறு, முருக்கம்பூச்சாறு, கையாந்தகரைச் சாறு முலைப்பால் இவற்றைச் சரி சேர்த்து கூட்டி அரைத்து பின் இரண்டு சாமம் வெண்கல வட்டிலில் போட்டு, தேன் விட்டு, செம்புக்குழவியால் ஒரு சாமம் மத்தித்து, செம்புச்சிமிழில் வைத்துக் கொண்டு பயறளவு முலைப்பாலில் குழைத்துக் கண்ணிலிட அனுமாமிசம், துன்மாமிசம், படலம், புழுவெட்டு முதலியவை தீரும். கைகண்டது. புளியும், மாமிசமும் நீக்கவும்.

வேறு :-பழந்தின்னும் வெளவால் புழுக்கையை எலுமிச்சம் பழச்சாறும், முலைப்பாலும் சரிகூட்டி அதில் உரைத்து நெல் லிடை கண்ணிலிடத் தீரும்.

வேறு :—குதிரைக்குளம்பைத் தேனில் உரைத்து எள்ளிடை கண்ணிலிடக் கண்பூ தீரும்.

வேறு :—மருதம்பூவை கோமூத்திரத்தில் அவித்து மரத் திரை செய்து தேனில் உரைத்து நெல்லிடை, கண்ணிலிட நீர் வடிதலை போக்கும்.

வேறு :—நல்லெண்ணெய் படி இரண்டு, விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், பசுவின் நெய், புங்கெண்ணெய் இவைகள் வகைக்குப் படி அரை, நொச்சிஇலைச்சாறு, கழுதர்மைச்சாறு, முடக்கொத்தான்சாறு இவைகள் வகைக்குப் படி ஒன்று



இவற்றைக் கலந்து, அதில் செங்கழுநீர், கோஷ்டம், அதிமதுரம், கடுகுரோகணி இவைகள் வகைக்கு விராகன் ஐந்தைச் சூரணித் துப் போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி மூன்று நாள் தானிய புடம் வைத்து, எட்டு நாள் அல்லது நாலு நாளைக்கொரு கால் தலைமுழுகிவர கண்ரோகந் தீரும். பூசணிக்காயும், தேங்காயும் நாற்பது நாளைக்கு நீக்கவும்.

வேறு :-அருகம்புல்சாறும், நெய்யும் வகைக்குப் படி ஒன்றில் அதிமதுரம் விராகன் பத்து, நாற்பாலைமுகிழ் விராகன் எட்டு இவற்றை அரைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சி விராக னிடை ஒன்று கொள்ள கண் உஷ்ணம் தீரும்.

வேறு :—பொன்னாங்கண்ணி, சிறுகீரை, ஓரிலைத்தாமரை, நாய்க்கோவை, கறுங்கோவை, பற்படாகம், சீந்தில்தண்டு, முடக்கொத்தான், செங்கழுநீர், ஓலைப்பூ, இலுப்பைப்பூ, கோவைக்கிழங்கு, நீர்முள்ளி இவற்றின் சாறு வகைக்குப் படி ஒன்றில், அதிமதுரம், தக்கோலம், காசுக்கட்டி, மிளகு, தான்றிக் காய், மஞ்சள், இஞ்சி, செஞ்சந்தனம், சிறுதேக்கு, சருள்ளி, விளாமிச்சம்வேர், சவுக்காரம், கோஷ்டம், கஸ்தூரி, புனுகு சட்டம், கோரோசனை இவைகள் வகைக்கு விராகன் இரண்டை அரைத்துப் போட்டு நல்லெண்ணெய் படி ஒன்றரை விட்டு சிறு தீயால் எரித்து மெழுகுபதத்தில் வடித்து தலை முழுக கண் ரோகங்கள் எல்லாந் தீரும்.

வேறு :—படிகாரம், கடல்நுரை, நவச்சாரம், துத்தம், துருசு இவற்றை நிறங்கெடாது வறுத்துப் பசுவின் வெண்ணெய் சேர்த்து வெண்கலவட்டிலில் போட்டு செம்புக்குழவியால் அரைத்துக் கண்ணிலிட கண்வாயு தீரும்.

வேறு :—நல்லெண்ணெயில் விளக்கேற்றி வெற்றிலையில் நல்லெண்ணெய் தடவி வாட்டி பிழிந்த சாறு, துத்தம், துரிசு இவற்றை ஓர் அளவு கூட்டி மேற்படி சாற்றால் அரைத்துக் கண்ணிலிடப் புழு வெட்டு தீரும்.

வேறு :—கற்பூரமும், மிளகும் சரிகூட்டி, பனைமட்டைச் சாறு வார்த்து ஒரு சாமமரைத்து நிழலிலுலர்த்தி, பூ விழுந்த கண்ணுக்கு முலைப்பாலிலும், படலத்திற்கு நந்தியாவட்டைச் சாற்றிலும், காசத்துக்கு சிறுகீரைச்சாற்றிலும், மாலைக்

கண்ணுக்குத் தேள்கொடுக்குச்சாற்றிலும், வெடிகாசத்திற்குப் பிரமிஇலைச்சாற்றிலும். மற்ற கண் ரோகங்களுக்குப் பனை மட்டைச்சாற்றிலும் உரைத்துப் போடத் தீரும்.

வேறு :—துத்தம், துருசு, நெல்லிவற்றல், கடுக்காய், புளியம்பூ, வெந்ததலைஓடு, முத்து, பவழம், வெண்கலம், இரும்பு, பொன், வெள்ளி, செம்பு இவற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் அரைத்து நிழலிலுலர்த்தி முலைப்பாலில் உரைத்துக் கண்ணிலிடக் கண்படலம் தீரும்.

வேறு :—சிதேவியார் செங்கழுநீரைப் பிடிங்கிக் காதில் கட்டக் கண் நோவு தீரும்.

வேறு :—கடுக்காயை இரண்டாய் வெட்டி உள் விதையை நீக்கி அதில் பணவிடை இரண்டு, சுகுளப்பருப்பு பிளவை ஒன்று, மிளகு இரண்டு இவைகளைக் கடுக்காய்க்குள் வைத்து சீலை சுற்றி மண் சீலைசெய்து ஓட்டிலிட்டு ஒரு விறகால் நாலு நாழிகை எரித்து வேகவிட்டு அந்தக்கரியை வெண்கலத்தட்டில், இட்டு செப்புக் குழவியால் பொடித்து மேற்படி பொடியுடன் எலுமிச்சங்காயளவு பசுவின் வெண்ணெய் சேர்த்து அத்துடன் பொன்னுங்கண்ணிச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, சடைப்பூண்டுச் சாறு, உகாய்த்தழைச்சாறு, புண்ணுக்குத்தழைச்சாறு, நாயுருவிச் சாறு, மைப்பூண்டுச்சாறு, அத்தித்தழைச்சாறு முலைப்பால் இவற்றையும் சரிசமன் கூட்டி சேர்த்துக் காய்ச்சி மீண்டும் வெண்கலத்தட்டில் செப்புக்குழவியால் ஒரு சாமமரைத்து வெந்தயப்பிரமாணம், கண்ணிமை, நடுக்கண், கடைக்கண் இவைகளில் போடவும். சுக்கு, மிளகு, சீரகம் இவைகளைத் தட்டி முலைப்பாலில் சேர்த்து நசியமிட்டுப் பொட்டணங்கட்டி முகந்தும் பார்க்கவும்.

## நாலாம்முறைக் காய்ச்சலுக்கு

சுக்கும், மிளகும் பலம் அரைக்கால், திப்பிலி பலம் கால், கிராம்பு பலம் ஒன்று, ரசம் பலம் அரை இவற்றைப் பொட்டணங்கட்டி ஒரு மண் சட்டியில் நான்கு படி நீர்விட்டு நான்கு செடி அளவு கொழிஞ்சிவேரைத் தட்டிப் போட்டு அதில் மேற்படிப் பொட்டணத்தையும் போட்டு ஒரு படியாகக் காய்ச்சி சிறங்கை அளவு கொடுக்கவும்.



## சிறுநாக்குக் கரைவதற்கு

நவச்சாரம் விராகனிடை ஒன்று, வெண்காரம், இந்துப்பு, கொடிவேலிவேர் இவைகள் வகைக்கு விராகன் ஐந்து இவற்றை அரைத்து பணவிடை தேனில் குழைத்து சிறு நாக்கில் தடவக் கரைந்து போகும்.

## இருமலுக்கு

கொத்தமல்லி, சுக்கு, திப்பிலி, தேசாவாரம், திப்பிலிமூலம், செவியம், அரத்தை, அதிமதுரம், சீரகம், மிளகு, வெங்காரம், தாளிசப்பத்திரி, ஓமம், கற்கடகசிங்கி, பூலாங்கிழங்கு இவைகள் வகைக்கு விராகன ஐந்தைச் சூரணித்து, தாளிசப்பத்திரி விராகன் இரண்டு, லவங்கம் விராகன் இருபத்தைந்து இவற்றையும் சூரணித்துச் சேர்த்து, மிளகுதக்காளி, துளசி, முருங்கை, கண்டங்கத்திரி, தூதுவளை, நாராயணஞ்சுள்ளி, சங்கு, கையாந்தகரை இவற்றின் இலைச்சாறு வகைக்கு அரைக்கால் ஆழாக்கைச் சட்டியிலிட்டுப் பனைவெல்லம் பலம் ஆறு போட்டுப் பாகு பதத்தில் சூரணத்தையும் போட்டுக் கிண்டி கால் படி தேன் விட்டு இறக்கிப் பிசைந்து புன்னைக்காயளவு இரண்டு நேரம் கொள்ளத் தீரும்.

வேறு :—ஆடாதொடைச்சாறு கண்டங்கத்தரிச்சாறு, பிரண்டைச்சாறு இவைகள் வகைக்குப் படி ஒன்று, கருநொச்சிச்சாறு படி அரை, வெங்காரம் கழஞ்சு நான்கு இவற்றுடன் பொரித்த மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் இரண்டை வெதுப்பிப் பொடித்துச் சேர்த்து மணப்பாகு ஒரு படியும், தேன் ஒரு படியும் இறக்கும்போது போட்டு நெல்லிக்காயளவு இரண்டு நேரங்கொள்ள, மருந்தீட்டுஇருமல், வறட்சிஇருமல் முதலியவை தீரும். உப்பு, புளி நீக்கவும்.

வேறு :—நெல்லிப்பருப்பு, திப்பிலி, நெற்பொரி, சர்க்கரை இவற்றைச் சரிகூட்டி நெய்யில் குழைத்துக் கொள்ளத் தீரும்.

வேறு :—செங்கங்குப்பிச்சாறு, ஈரவெங்காயம், சீரகம், உப்பு இவற்றை ஓர் அளவு கூட்டிக் கொடுக்கவும்.

வேறு :—ஏலம், கிராம்பு, சிறுநாகப்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி இவற்றை ஓர் அளவு கூட்டிச் சூரணித்து அவ்வளவு சர்க்கரை கலந்து கொள்ளவும்.

**வேறு** :—சுக்கு, திப்பிலி, கருப்புக்கட்டி இவைகள் வகைக்குப் பலம் ஒன்றைச் சூரணித்துப் பசுவின் மோரில் கலக்கி ஒரு நாள் ஊறவைத்து மறுநாள் காய்ச்சி சுண்டவிட்டு இறக்கி கொள்ளவும்.

**வேறு** :—ஆடாதொடை, கண்டங்கத்திரி, பிரண்டை, கருநொச்சி இவற்றின் சாறு வகைக்குப் படி ஒன்றைச் சேர்த்துக் காய்ச்சி, பொரித்த வெங்காரம் பலம் நான்கு, மிளகு பலம் இரண்டு, அரத்தை பலம் இரண்டு, திப்பிலி பலம் இரண்டு. இவற்றைச் சூரணித்துப் போட்டுக் காய்ச்சி மெழுகுபதத்தில் மணப்பாகும், தேனும் வகைக்குப் படி ஒன்று சேர்த்துக் கிண்டி இறக்கி நெல்லிக்காயளவு கொள்ளவும். பசுவின் பாலும், நெய்யும் கூட்டி உப்பும், புளியும் நீக்கவும்.

**வேறு** :—சுக்கு, திப்பிலி, கண்டங்கத்திரிவிதை, கடுக்காய், தான்றிக்காய், நெல்லிவற்றல், சிறுதேக்கு, சிற்றரத்தை, சடாமாஞ்சி, வளையலுப்பு, இந்துப்பு, கல்லுப்பு, அட்டுப்பு இவற்றைச் சரியிடை சூரணித்துச் சேர்த்து வெருகடியளவு தேனில் கொள்ளவும்.

**வேறு** :—வெதுப்பிய படிகாரம் விராகன் இரண்டு, மஞ்சள் விராகன் நாலு, வெல்லம் பலம் ஒன்று இவற்றைச் சேர்த்துச் சூரணித்து நல்லெண்ணெய் விட்டு பிசரி கொள்ளவும.

**வேறு** :—தும்மராட்டத்தைப் பஞ்சுபோல் தட்டி, வெந்நீர் விட்டுப் பிசரிப்பிழிந்த ரசத்துக்குச் சமன் இஞ்சிச்சாறு கூட்டி ஒரு விராகன் திப்பிலியையும், இரண்டு பணவிடை பொரித்த வெங்காரத்தையும் சூரணித்துத் தூவிக் கலக்கிக் கொடுக்கவும்.

**வேறு** :—மிளகு தக்காளிச்சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து நிழலில் உலர்த்திய வெள்ளைத் துணியில், எலுமிச்சஞ்சாற்றில் அரைத்து நிழலில் உலர்த்திய பொன்னரிதாரச்சூரணம் விராகன் ஒன்றை வைத்துத் திரித்து உலர்த்தி அதை தீயைப்பற்ற வைத்து பழஞ்சோறு உண்டு, புகை வாங்கவும்.

**வேறு** :—மூன்று நாள் சீரகமும், ஈரவெங்காயமும் மென்று விழுங்கவும்.

**வேறு** :—பனைமட்டைச் சாம்பலை சிறுநீரில் குழப்பி தேகத்தில் பூசவும் உடனே நிற்கும்.



## மந்தாரகாசத்திற்கு

சாரணைக்கிழங்கு, சதாவேரிக்கிழங்கு, சீந்தில்தண்டு, ஆடாதொடை, பிரமி, தூதுவளை, மஞ்சள், அமுக்கிருவேர் இவைகள் வகைக்குப் பலம் ஒன்றை இடித்து இரண்டு வள்ள நீரிலிட்டு இரண்டு படியாய்க் காய்ச்சி இறுத்து, நல்லெண்ணெய் படி இரண்டு சேர்த்து, அத்துடன் சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, சீரகம், கற்கடகசிங்கி, வெள்ளுள்ளி, கடுகுரோகணி இவைகள் வகைக்கு விராகன் மூன்றை அரைத்துப் போட்டுக் காய்ச்சி வடித்து இரண்டு விராகன் வீதம் கொள்ளத் தீரும்.

**வேறு** :-எள்பிடி ஒன்று, மிளகு விராகன் இரண்டு இவற்றைப் பொரித்துக் காராட்டுப் பாலில் அரைத்து கருப்பூரந்தஞ்சாறு துளி மூன்று விட்டுக் கொடுக்கவும்.

**வேறு** :—கோமூத்திரத்தில் சீயக்காயைத் தட்டிப் போட்டுக் காய்ச்சி மூக்கு, காது, உச்சி இவற்றிலிட்டு மாலையில் நூறு குடம் தண்ணீர் விடவும்.

**வேறு** :—வெள்ளாட்டுக் கொழுப்பு, நெய் படி அரைக்காலில் மிளகு பலம் இரண்டைச் சூரணித்துப் போட்டுக் காய்ச்சி ஒரு கொதியான உடனே இறக்கிக் கரண்டியளவு கொள்ளவும்.

## உன்மாந்தை, உள்மூச்சு, உடம்புநோய் இவைகளுக்கு

குருவைநெல்லரிசியில் குருஞ்சான் இலையைப் போட்டு இடித்துக் களிகிண்டி எண்ணெய் வார்த்துச் சாப்பிடவும்.

**வேறு** :—வேங்கைமரத்துத்தோலையும், குருவை அரிசியையும் இடித்துக் களிக்கிண்டி எண்ணெய் சேர்த்துக் கொள்ளவும் தீரும். பத்தியம் : வெந்நீரும் சோறும்.

## நெஞ்சுக்கட்டு இருமலுக்கு

கொத்தான்விதை உழக்கைப் பசுவின் கோமயத்தில் முப்பது நாழிகை ஊறவைத்து எடுத்து அரைத்து அரைப்படி நெய்யில் கொதிக்க வைத்து மெழுகுபதத்தில் இறக்கி வைத்துக் கொண்டு புன்னைக்காயளவு கொள்ளத் தீரும். மணப்பாகுங் தேனுங் கூட்டிக் கொள்ளவும்.

## உப்பிசத்திற்கு

முந்திரிப்பழம், கஞ்சாவிதை, சுக்கு இவைகள் வகைக்கு விராகன் ஒன்றைக் கையாந்தகரையைப் பிட்டவித்துப் பிழிந்த சாற்றில் அரைத்துத் தேன் சேர்த்துக் கொள்ளவும்.

## இரத்த காசத்திற்கு

தூதுவளை, கண்டங்கத்திரி, சிறுகீரை, பொன்னாங்கண்ணி, கையாந்தகரை இவைகள் வகைக்கு எலுமிச்சங்காயளவை எடுத்துப் பசுவின் பாலில் அரைத்து நெய்யில் வேகவைத்து இருநேரம் சுண்டைக்காயளவு கொள்ளவும்.

## இருமல், ஈளை, சுவாசம், சிலேட்டுமம், நெஞ்சுநோவு, சளியிடு, அத்திசுரம் இவைகளுக்கு

முயல் சதை பலம் பதினைறை இடித்து ஐந்து மரக்கால் நீரி விட்டு நாலொன்றாய்க் காய்ச்சி வடித்து, ஆடாதொடைச்சாறும், பசுவின் பாலும் வகைக்கு இரு படி, ஆறு நாழி கரத்தொட்டிச் சாறும், கையாந்தகரைச்சாறும் படி ஒன்று, நெய் படி இரண்டு இவற்றைச் சேர்த்து அத்துடன் திப்பிலி, திப்பிலிமூலம், செவியம், சித்திரமூலம், சுக்கு கற்கடசிங்கி, சிறுதேக்கு, லவங்கப் பட்டை இவைகள் வகைக்கு விராகன் இரண்டைப் பசுவின் பாலில் அரைத்துக் கலக்கி மெழுகுபதமாய்க் காய்ச்சி வடித்து இருநேரம் மூன்று காசிடை கொள்ளவும். இச்சாபத்தியம்.

## தலைவலிகளுக்குச் சஞ்சீவித்தைலம்

நல்லெண்ணெய் படி அரைக்காலில் கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், பால் சாம்பிராணி, பச்சிலை, பூலாங்கிழங்கு இவற்றைச் சமனிடை சூரணித்து வைத்துக் கொண்டு; மிளகாய் ஏழும் போட்டுக் காய்ச்சி அதில் வெள்ளெருக்கம் மொட்டுப்பூ ஏழு போட்டு பூ வெடிக்கும் பதத்தில் இறுத்து தலை முழுகும்போது, இந்த எண்ணெயை சூடாக்கி, அதில் மேற்படி சூரணத்தில் திரிகடியளவு போட்டுச் சூடாயிருக்கும் போது தலைக்குத் தேய்த்து அதிகாலையில் இரண்டு அல்லது மூன்று முழுக்கு முழுக ஒருதலைவலி முதலிய சகலமும் தீரும்.

## தேள் கடிக்கு

நல்லகௌளி (பல்லி)யை வாலையும், தலையையும், குடலையும் நீக்கி வைத்துக் கட்டத் தீரும்.



## ஈளை, இருமல், வெள்ளைக்காசம் இவைகளுக்கு

சிறுகாஞ்சொறி, கண்டங்கத்திரி, பழுபாகல் இவைகள் சமூலத்தின் சூரணம் வகைக்கு படி கால், ஊஞ்சல்பட்டைச் சூரணம் படி அரைக்கால் இவைகளை இரண்டு படி தண்ணீரி விட்டு முக்கால் படியாகக் காய்ச்சி அதில் சுக்கு, கடுக்காய், ஓமம், மிளகு இவைகள் வகைக்கு விராகன் நாலு, வெள்வெங்காயம் விராகன் ஆறு இவற்றைச் சூரணித்து வெல்லம் விராகன் இருபது சேர்த்து போட்டு காய்ச்சி அடி பற்றுமல் கிளறி பாகு பதத்தில் முறத்தில் கொட்டி சுண்டைக்காயளவு உருட்டி உலர்த்திக் கொள்ளவும். இச்சாபத்தியம்.

## அக்கிக்கு

ஆவாரம்பட்டையை அரைத்துப் பசு வெண்ணெயில் குழப்பிப் பூசவும். கைகண்டது.

## நரைநோவு, மூக்கால்ரத்தம் விழுதல் இவைகளுக்கு

வில்வஇலைச்சாற்றைத் தலையில் தேய்த்து மேற்படி இலையைத் தலையில் வைத்துக் கட்டவும், அல்லது தேற்றும் பட்டையை அரைத்து புன்னைக்காயளவு பசுவின் பாலில் கரைத்துக் கொள்ளவும், அல்லது முட்டைச்சாம்பலை நீரிலே தப்பி சீலைகொண்டு சுத்திக்கட்டவும், மேலுக்குப் பூசவும் தீரும்.

## விக்கலுக்கு

வில்வவேர், சுக்கு, திப்பிலி, மயிலிறகுக்கருக்கு இவற்றைச் சூரணித்துத் தேனில் முலைப்பால் சேர்த்துக் குழப்பிச் சாப்பிடவும்.

## வாயிலும் மூக்கிலும் ரத்தம் விழுதலுக்கு

மிளகை மென்று, கொப்பளிக்கவும். ஆவாரங்கரியை இளவெந்நீரில் கொள்ளவும். சீலைசுட்ட சாம்பலை நெய்யில் குழைத்துக் கொள்ளவும். அருகு, சமூலசூரணமும், முட்டைச் சாம்பலும் கலந்து அழுத்தி தலையில் தேய்த்து ஆமணக்கிலை பொத்தி ஒன்று விட்டு ஒரு நாள் மூன்று முறை கட்டவும். ஊணாங்கிலைச்சாறும், எலுமிச்சம்பழச்சாறும் கலந்து அதில் முட்டைச்சாம்பல் போட்டுக் குழப்பித் தலையில் தேய்த்துக் கட்டவும் தீரும்.

## இரத்தாதிசாரம், கடுப்பு, கிராணி, [illegible], இருமல் இவைகளுக்கு

முற்றிய வாழைப்பூமடலுக்குள் கடுகு, பெருங்காயம், மிளகு, சுக்கு, இந்துப்பு இவற்றைச் சரியிடை சேர்த்து வைத்து மூடி பிசைந்து அரைத்து உருண்டை செய்து, தினம் காசிடை ஏழு நாள் இரண்டு நேரம் கொள்ளவும்.

## வாயால் ரத்தம் விழுதலுக்கு

அருகம்வேர், வெல்லம், திருநீறு இவற்றைச் சரிகூட்டி அரைத்து பசுவெண்ணெயில் குழப்பி மூன்று நாள் கொள்ளவும்.

**வேறு:**—ஓரிலைப்பூண்டு ஒரு பிடி, வெங்காயத்தைக் குறுக வெட்டி எடுத்தது ஒரு பிடி இவற்றைத் துவைத்து இரண்டு படி பசுவின் பாலில் வேகவைத்து குழம்பாகக் காய்ச்சியதில் ஒரு எலுமிச்சங்காயளவு காலையில் எட்டு நாள் கொள்ளவும் தீரும். பத்தியம்: உப்பு, புளி, பால், மோர், மாமிசம், கைப்பு இவைகள் நீக்கவும்.

## நீர்க்கட்டு, துர்மாமிசக்கட்டு, கல்லுக்கட்டு இவைகளுக்கு

ஒரு பிடி தும்பைவேரை காட்டுக்கம்புச் சோற்றுப் பழந் தண்ணீர் விட்டுத் துவைத்துப் பிழிந்து, அத்துடன் கல்லுப்புப் போட்டுக் குடிக்கவும். இம்மருந்தை நீரில் இரத்தம் விழுதலுக்கும் கொடுக்கலாம்.

## பாண்டு, சோகை, விஷபாகம் இவைகளுக்கு

முக்கொழிஞ்சிச் சூரணம் வெருகடியளவை உழக்கு பசுவின் பாலில் கொள்ளவும். உப்பு, புளி நீக்கவும்.

## காமாலைக்கு

சங்கம்வேர்பட்டை, தும்பைஇலை, நீலிஇலை, பேய்ப்பீர்க்கம் விதை, சுக்கு இவைகளைத் தட்டிக் கா[illegible]யவும்.

பசுவின் கோமயம் பிடித்து காலை மாலை நா[illegible] வீதம் கொள்ள, வீக்கம், நீர்க்கட்டு இவைகள் தீரும்.

**அநுபவ வைத்தியம் முற்றும்**

101993